# மொழிபெயர்ப்பு ஒரு கவின்கலை

வீ. சந்திரன்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES

# மொழிபெயர்ப்பு ஒரு கவின்கலை

முனைவர் வீ. சந்திரன்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவன
INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES
இரண்டாம் முதன்மைச் சாலை
மையத் தொழில்நுட்பப் பயிலக வளாகம்

உ. த. நி.
எண் 92945
நூலகம்
32945

பதிப்புச்செம்மல் பேராசிரியர் ச. மெய்யப்பன் அறக்கட்டளைச் சொற்பொழிவு
(அறக்கட்டளை நிறுவியவர் : பேரா. ச. மெய்யப்பன்)

வரிசை எண் : 3

**BIBLIOGRAPHICAL DATA**

| | | |
|---|---|---|
| Title of the Book | : | Mo<u>l</u>ipeyarppu oru kavi<u>n</u>kalai |
| Author | : | Dr. V. Chandran<br>Former Director, Tamil Division, Dept. of Law &<br>Member Secretary, Personal & Administrative<br>Reforms Commission, Govt. of TamilNadu. |
| General Editor | : | Dr. M. Valarmathi<br>Associate Professor<br>Faculty of Overseas Tamil<br>International Institute of Tamil Studies<br>Tharamani, Chennai-600 113 |
| Publisher & © | : | International Institute of Tamil Studies<br>II Main Road, C.I.T. Campus,<br>Chennai-600 113<br>Ph: 22542992 |
| Publication No. | : | 668 |
| Language | : | Tamil |
| Edition | : | First |
| Year of Publication | : | 2010 |
| Paper Used | : | 18.6 Kg TNPL Maplitho |
| Size of the Book | : | 1/8 Demy |
| Printing type used | : | 10 Point |
| No. of Pages | : | vi+170 |
| No. of Copies | : | 1200 |
| Price | : | Rs. 75/- (Rupees Seventy five only) |
| Printed by | : | United Bind Graphics<br>43/95, Millers Road<br>Kilpauk, Chennai - 600 010. |
| Subject | : | Translation - An Art |

அறக்கட்டளைச் சொற்பொழிவாளர் கருத்துக்கு நிறுவனம் பொறுப்பன்று.

## ஆசிரியர் குறிப்பு



தமிழ் சிலருக்கு மருந்து. பலருக்கு வணிகப் பொருள். மிகப் பலருக்கு ஏணி. அதிலும் வழக்குரைஞர்களில் மிகமிகச் சிலரே சட்டத் தமிழ்த் துறையைத் திருப்பணிக் களமாக ஆக்கிக் கொண்டுள்ளனர். அவர்களுள் இந் நூலாசிரியரும் சட்டத்தமிழ்ப் பணியில் கடந்த கால் நூற்றாண்டிற்கும் மேலாகத் தொடர்பவர். பயிற்சியால் வழக்குரைஞராய், பணியால் ஆட்சிமொழிக் காவலராயிருந்த கீ. இராமலிங்கனாரின் தொண்டராய் விளங்குபவர். இவரின் தமிழ்த் தொண்டினை ஆட்சி மொழி ஆணையமும் சட்டத்துறையும் ஈர்த்துக் கொண்டுள்ளன. இவர் அரசின் தமிழ் ஆட்சிமொழிக் கொள்கைச் செயற்பாட்டினைச் சட்டத்துறையில் அதன் வெற்றி நடைக்கு உறுதுணையாக உள்ளார். இவர் அரசின் இருமொழிக் கொள்கையில் பற்றுள்ளம் கொண்டவர். இவர் எம்.எல். சட்டத்தை ஆங்கிலத்தில் பயின்றுள்ளார். சட்டத்தில் முதுகலைப் பட்டம் பெற்றவர். தமிழ் ஆட்சி மொழித் திட்டத்தில் நன்கு பட்டறிவு கொண்டதால் சட்ட மொழிபெயர்ப்பில் பிஎச்.டி. வரை பயின்று ஆய்வு நடத்தியவர். இவர் தலைமைச் செயலக அலுவலர்களுக்கு ஆட்சித் தமிழ்ப் பயிற்சி வகுப்பு எடுத்துள்ளார். நீதித்துறை நடுவர்களுக்குத் தமிழில் தீர்ப்பு எழுதுவது பற்றியும் தமிழ்நாடு ஆட்சிமொழிச் சட்டம், இந்திய அரசியலமைப்புச் சட்டத்திலுள்ள ஆட்சிமொழிப் பிரிவுகள் பற்றியும் பல வகுப்புகள் எடுத்துள்ளார். இவர் சட்ட நூல்களையும் தமிழ் இலக்கிய நூல்களையும் நுட்பமாக ஆராய்ந்து பார்ப்பதில் வல்லவர். இவரது ஆராய்ச்சிஆர்வத்தைக் கண்ட முனைவர் ம.ரா.போ. குருசாமி அவர்கள் சட்டமொழிபெயர்ப்பில் ஆய்வு நடத்திடப் பெரிதும் ஊக்கப்படுத்தினார். அதன் பயனாய் இவர் பல மொழிபெயர்ப்பு நூல்களை அளித்துள்ளார்.

அண்மையில் எம்.ஏ., மொழியியல் பட்டமும் மனவளக் கலை ஆலோசனையில் எம்.எஸ்சி. பட்டமும் பெற்று மனவளக் கலை ஆலோசகராகவும் செயல்படுபவர். அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் இந்திய விடுதலைக்குப் பின் தமிழ் ஆட்சி மொழியாக வளர்ந்த நிலை பற்றி இரண்டாவது பிஎச்.டி. ஆய்வுப் பட்டத்திற்காக ஆய்வு செய்து வருகிறார்.

# பொருளடக்கம்


| | பக்கம் |
| --- | --- |
| முன்னுரை | 1 |
| 1. மொழிபெயர்ப்பு - ஓர் அறிமுகம் | 3 |
| 2. மொழிபெயர்ப்பு வளர்ச்சி வரலாறு | 30 |
| 3. மொழிபெயர்ப்பின் இருதிற வகைகள் | 39 |
| 4. மொழிபெயர்ப்பில் கலைச் சொல்லாக்கம் | 120 |
| துணைநூல்கள் | 169 |

பேரா. முனைவர் கரு. அழ. குணசேகரன்
இயக்குநர்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை-600 113

# அணிந்துரை

**மொழிபெயர்ப்பு ஒரு கவின்கலை** எனும் தலைப்பில் உள்ள இந்த நூல் முனைவர் வீ. சந்திரன் அவர்களால் தன் 33 ஆண்டுக்காலப் பணி அனுபவத்தின் ஊடாக உருவாக்கப்பட்டுள்ளது. மொழிபெயர்ப்பிற்கான கொள்கைகளை முறையே அறிந்த நிலையில்,

1. **காட்ஃபோர்ட்டின் கொள்கைகள்**
2. **தியோடர் சேவரியின் கொள்கைகள்**
3. **யூ.ஜி. நிதாவின் கொள்கைகள்**
4. **நியூமார்க்கின் கொள்கைகள்**

என இந்நூலாசிரியர் தன் அனுபவத்தின் அடிப்படையில் பல அரிய கருத்துகளை முன்வைத்துள்ளார். மொழிபெயர்ப்பாளர்க்கான அடிப்படைத் தகுதிகள் எனப் பின்வருமாறு தந்துள்ளமை மொழிபெயர்ப்புக் கலையைப் பலரும் எளிதில் கைவரப்பெற வழிவகை காட்டுவதாக அமைகிறது.

1. **மொழித்திறன் வேண்டும்**
2. **சொற்களஞ்சிய அறிவு வேண்டும்**
3. **இலக்கண அறிவு வேண்டும்**
4. **சொற்பொருளியல் அறிவு வேண்டும்**
5. **சமூகப் பண்பாட்டு உணர்வு வேண்டும்**
6. **மொழிபெயர்ப்பாளருக்கு இலக்குமொழி மரபுகளை ஒட்டியே மொழிபெயர்ப்புச் செய்யும் ஆற்றல் வேண்டும்**

எனுமாறு மொழிபெயர்ப்பாளர் கொள்ளவேண்டிய தகுதிகளைக் குறிப்பிட்டுள்ள நூலாசிரியர் சிக்கல்கள் குறித்தும் விளக்கியுள்ளமை சிறப்புக்குரியதாகும். மொழிபெயர்ப்பின் வகைகள் என இந்நூலாசிரியர் வகைப்படுத்தியிருப்பது பயன்தரத்தக்கதாக அமைகிறது.

1. சொல்லுக்குச் சொல் பெயர்ப்பு
2. விரிவான மொழிபெயர்ப்பு
3. முழுமையான அல்லது சரியான மொழிபெயர்ப்பு
4. சுருக்கமான மொழிபெயர்ப்பு
5. தழுவல் மொழிபெயர்ப்பு
6. மொழியாக்கம்

மேற்குறிப்பிட்டவாறு மொழிபெயர்ப்புக் கலையோடுதொடர்புடைய பன்முகக் கூறுகளை இந்நூலாசிரியர் விளக்கியுள்ளார். 'மொழிபெயர்ப்பில் கலைச்சொல்லாக்கம்' எனும் இயல் இவரின் கடின உழைப்பைக் காட்டி மொழிபெயர்ப்புக் குறித்த ஆர்வத்தினைத் தூண்டத்தக்க வகையில் பயனளிக்கத்தக்க ஒன்றாகும். பல்வேறு துறைகளில் நூல்கள் தமிழில் வெளிவர வேண்டியுள்ளன. இந்நூல் அறிவியல் தொழில்நுட்பம் சார்ந்த மொழிபெயர்ப்புக் கலைக்குத் துணை செய்யும் என்பதில் ஐயமில்லை. இந்நூலை இந்நிறுவனம் வெளியிடுவதல் மகிழ்ச்சியடைகிறது. ஆசிரியருக்குப் பாராட்டுக்கள்.

இந்நிறுவன வளர்ச்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்து வருவதோடு தம் தனிப்பட்ட அக்கறையைக் காட்டிவரும் நிறுவனத் தலைவரும் தமிழக அரசின் முதல்வருமான மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்களுக்குத் தமிழுலகம் என்றும் நன்றிக் கடன்பட்டுள்ளது.

தமிழ்ப்பணிகளுக்கு ஆற்றுப்படுத்தி வரும் மாண்புமிகு தமிழக நிதியமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன் அவர்களுக்கு எம் நன்றி என்றும் உரியது.

நிறுவனச் செயல்பாட்டுக்கு உறுதுணையாக இருந்துவரும் தமிழ் வளர்ச்சி, அறநிலையம் மற்றும் செய்தித் துறை அரசுச் செயலாளர் திரு. இரா. சிவக்குமார் இ.ஆ.ப. அவர்களுக்கும் நன்றி.

இச்சொற்பொழிவின் எழுத்துருவை மெய்ப்புத் திருத்தம் செய்த முனைவர் ஆ. தசரதன் அவர்களுக்கும், இச்சொற்பொழிவு மற்றும் நூல் வெளியீடு தொடர்பான அனைத்து ஏற்பாடுகளையும் செய்த நிறுவனப் பணியாளர்கள் மற்றும் கணிப்பொறியாளர் திருமதி எ.ம. லட்சுமி ஆகியோருக்கும் எம் நன்றிகள் என்றுமுண்டு. இந்நூலை அழகுற அச்சிட்டுத் தந்த யுனைடட் பைண்ட் கிராபிக்ஸ் அச்சகத்தாருக்கு எம் பாராட்டுகள்.

இயக்குநர்

# முன்னுரை

மொழிபெயர்ப்பின் தேவையானது நாளுக்கு நாள் பெருகி வருகின்றது. ஒரு மொழிச் சூழலில் மக்கள் சிக்கித் தவித்த காலம் மலை ஏறிவிட்டது. உலகமயமாதல் சூழல் உருவாகி உலகம் ஒரு கிராமம் போல ஆகிவிட்டது. இருப்பினும் அவரவர் பண்பாடு, இனம், மொழி, நாடு முதலியவற்றை எவரும் மறப்பது இல்லை.

தொழில்நுட்ப வளர்ச்சியால் கல்வி, தொழில், அன்றாட வாழ்வு என அனைத்தும் பாதிப்புறுகின்றன. இதனால் பன்மொழித் தேர்ச்சியும் பரிமாற்றங்களும் மனிதனின் இன்றைய இன்றியமையாத கூறுகள் ஆகின்றன. இத்தகையதொரு நிலையிலே மொழிபெயர்ப்பின் முக்கியத்துவமும் விரிந்து பரந்து ஆலமரம் போன்று பல்துறைகளில் விழுதுகளைப் பரப்பிச் செழித்தோங்கி வளர்ந்து வருகின்றது.

இந்நிலையை உணர்ந்த நம் நாட்டில் உள்ள கல்வி நிறுவனங்களும் பல்கலைக் கழகங்களும் மத்திய மாநில அரசுகளும் பிற நிறுவனங்களும் கூட மொழி வளர்ச்சிக்கும் மொழிபெயர்ப்புத் திறன் பயற்சிக்கும் ஊக்கம் தரத் தொடங்கி யுள்ளன என்றால் உண்மை. இன்று இந்தியப் பல்கலைக்கழகங்கள் தங்கள் துறைகளினால் மொழிபெயர்ப்புப் பற்றிய நெறிமுறைகளைப் பாடத்திட்டத்தில் பல ஆண்டுகளாக நடத்தி வருகின்றன. அந்த உந்துதலினால் ஆக்கப்பெற்றதே 'மொழிபெயர்ப்பு ஒரு கவின்கலை' என்ற இந்நூல்.

இந்நூல் நான்கு இயல்களைக் கொண்டது. இந்நூலில் எடுத்தோதப்படும் நுட்பங்களிற் பெரும்பாலானவை 33 ஆண்டுகளின் பல பதவிப் படிநிலைகளில் சட்ட மொழிபெயர்ப்புத் துறை அனுபவத்தில் 13 ஆண்டுகளாகச் சட்டத்துறையில் தமிழாக்கப் பணியினை மேற்கொண்டுள்ள 'தமிழ்ப்பிரிவு' என்று தலைமைச் செயலகத்தில் உள்ள சட்ட மொழிபெயர்ப்புப் பிரிவின் இயக்குநராகப் பணியாற்றிப் பெற்ற அனுபவம் மூலம் யான் நேரடியாகக் கற்றதும் கற்பித்ததும் ஆகும்.

தலைமைச் செயலகத்தில் உள்ள பல்வேறு துறையிடைப் பெற்ற சட்டமாக்கும் முயற்சியில் பல்வேறு கலைச்சொல்லாக்கங் களைச் சட்டமொழிபெயர்ப்பில் மேற்கொண்டுள்ளேன். ஆட்சித் தமிழில் துறை போகிய ஆட்சிமொழிக் காவலர் கீ. இராமலிங்கனாரின் வாழ்க்கைக் குறிப்பை முதன்முறை எழுதியதோடு அவருடனும் தமிழ்த்தொண்டர் கோ. முத்துப் பிள்ளை அவர்களுடன் உடன் பணியாற்றும் பேற்றினைப் பெற்று, இத்துறை மொழிபெயர்ப்புகளில் ஈர்க்கப் பெற்றேன். டாக்டர் ம.ரா.போ. குருசாமி இவரை இத்துறையில் வளர ஊக்குவிப்பவர்.

சட்டத் தமிழறிஞர்களான நீதிபதிகள் சு. மகராசன், ஆ. சிதம்பரம், மா. சண்முக சுப்பிரமணியன் ஆகியவர்களுடன் பணியாற்றிச் சட்டமொழிபெயர்ப்பில் 32 நூல்களைத் தனிப்பட எழுதி உள்ளேன். தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் ஆயிரத்திற்கும் மேலான சட்டமுன்வடிவுகளைத் தமிழாக்கி அறிமுகம் செய்த வாய்ப்பும் பெற்றேன்.

எனக்கு வாய்ப்பளித்த உலகத் தமிழ் ஆய்வு நிறுவனத்திற்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**வீ. சந்திரன்**

# 1. மொழிபெயர்ப்பு - ஓர் அறிமுகம்

## 1. மொழிபெயர்ப்பும் அதன் பொருள்வரையறையும் பிறவும்

பொதுவாக மொழிபெயர்ப்பு என்பது இருவேறு மொழிகளுக்கிடையில் நிகழும் ஒரு செயற்பாடாகும். இதைவிட அடிப்படையான ஒன்று என்னவென்றால் மொழிபெயர்ப்பானது ஒருவரின் ஆளுமையுடன் மிக நெருக்கமான தொடர்புடையது. இன்று மொழிபெயர்ப்பானது நம் சமூக வாழ்விலே பொதுப் பணிகளிலே திரைப்படத் தொழிலிலே மக்களோடு நெருக்கமாக நிறைந்துள்ள ஒன்று. நுட்பமாகப் பார்த்தால் பலமொழி பேசுவோரும் கேட்போரும் எழுதுவோரும் வாசிப்போரும் உள்ள சூழலிலேதான் மொழிபெயர்ப்பு என்பது இன்றியமையாத ஒன்று. ஒருமொழியில் உள்ள வாசகத்தை மற்றொரு மொழியில் எடுத்து விளங்க வைப்பதுதான் மொழி பெயர்ப்பு. மொழிபெயர்ப்பிற்கு இதுவே முதல்வரையறையாகும்.

மொழிபெயர்ப்பை எவ்வாறு செய்வது? குறிக்கோள் குறித்த நிலையில் பல்வேறு மொழிபெயர்ப்புக் கொள்கைகளை ஆய்வாளர்கள் தொகுத்துள்ளனர். நடைமுறைச் செயல்பாட்டில் கொள்கைகளும் செயல்முறைகளும் அப்படியே பின்பற்றப் படுவதில்லை. கொள்கைகளும் செயல்முறைகளும் ஒன்றோடு ஒன்று இடையூறின்றிப் பாதித்துக் கொண்டிருக்கின்றன. குறிக்கோள், கொள்கையில்லாத செயல்பாடு பயனற்றது. செயற்பாடு இல்லாத கொள்கை வழக்கொழிந்துவிடும்.

“சொல்லித்தெரிவதில்லை மன்மதக்கலை'' என்பது பாரதியாரின் பாட்டு வரி. மன்மதக்கலை மாத்திரம் அல்ல மொழி பெயர்ப்புக் கலையுந்தான். இந்த நுண்கலைகூட, கவின்கலைகூட, சொல்லித் தெரிவிக்கப்பட இயலாத நிலையில்தான் உள்ளது. மீண்டும் மீண்டும் இடைவிடாது தொடர்ந்து செய்யும் பழக்கத்தால், பயிற்சியால்தான் வர வேண்டும். இதற்குப் பயிற்சியும் முயற்சியும் தேவை.

தமிழைப்போலச் சொல் வளமுள்ள மொழி உலகத்தில் எதுவுமில்லை. ஆனாலும் ஆங்கில அறிவியல், சட்டநூல்களை மொழிபெயர்க்கப் போதிய சொற்கள் இன்றைய தமிழில் இல்லை

என நான் உறுதியாகச் சொல்வேன். ஆங்கிலம் தற்காலத் தேவைக் கேற்ப நாள்தோறும் வளர்ச்சியுற்று வரும் மொழி. ஆங்கிலம் உலக மொழிகள் பலவற்றில் இருந்து சொற்களைக் கடன்கொண்டு உலகில் பல நாடுகளில் பரவியுள்ளது. தேவைக்கேற்பப் பல நூல்கள் ஆண்டுதோறும் வெளிவந்த வண்ணம் உள்ளன. பலநாடுகளில் ஆட்சி மொழியாகவும் உள்ளது.

தமிழோ பழமையான மொழி என்றாலும் கடந்த சில நூற்றாண்டுகளாக வளர்ச்சி அடையாது உள்ளது. தமிழின் ஆட்சிப் பரப்பு வரவரக் குறுகி வருகின்றது. குறுகிய எல்லைப் பரப்பைக் கொண்ட தமிழ் நாட்டிலும் உட்பூசல் பெருகிக் கொண்டுள்ளது. தம் மக்களால் தமிழ் தள்ளி ஒதுக்கப்படுகிறது. ஆங்கிலம் ஆட்சிமொழி என்ற அங்கீகாரம் பெற்றிருப்பதால் தமிழர் அதைப் போற்றவும் தமிழைத் தூற்றவும் செய்கின்றனர். இவர்கள் சொல்லாக்கத் திறனாளர்களை அரசுத் துறைகளில் தண்டிக்கவும் துணை போகிறார்கள். அதே நேரம் வழக்கற்ற தமிழ்ச் சொற்களைப் புதுப்பித்து ஆளவிடாது தடை செய்யும் உள்பகையும் மொழி கெடுக்கும் உட்குழுவாகவும் ஒருங்கே கைகோர்த்துச் செயல்படு கின்றனர். தமிழாட்சி நீங்கி நெடுங்காலத்திற்குப் பின் இக்காலச் சூழலுக்கேற்பச் சொற்களும் சொற்றொடர்களும் தமிழில் ஏராளமாகக் கண்டறியப்பட்டுள்ளன. பல தமிழ்ச் சொற்கள் வழக்கற்றுப் போனதுக்குக் காரணம் அயலாரால் புகுத்தப் பெற்ற ஏமாற்று வித்தைகளே. அவற்றைப் புத்துயிர் அளித்துத் தமிழில் ஆட்சிக்குக் கொண்டு வந்த பெருமை தமிழகத்தில் திராவிடப் பாரம்பரிய கட்சிகளின் அரிய முயற்சியாகும்.

## ஆங்கிலம்

இன்றைய சூழலில் தமிழ் மொழியுடன் மிகவும் நெருங்கிய தொடர்புடைய பிறமொழிகள் இரண்டு. அவை ஆங்கிலமும், சமஸ்கிருதமுமாகும். இந்தியப் பண்பாட்டை முன்னர்ச் சமஸ்கிருதமும் தமிழும் நமக்கு உணர்த்தின. தற்போது உலகப் பண்பாட்டை ஆங்கிலம் நமக்கு அறிவுறுத்திக் கொண்டுள்ளது.

ஆங்கிலமும் காலந்தோறும் பல மாற்றங்களுக்கு உட்பட்டது தான். ஆயினும் இத்தகைய மாற்றங்கள் மிகவேகமாக நிறைவேறி யுள்ளன. பண்டைய ஆங்கிலம், ஆங்கிலோ சாக்சன் என்று அழைக்கப் பட்டது. சாசர் காலத்து ஆங்கிலம் மத்திய கால ஆங்கிலம் எனப்பட்டது. அந்த இடைக்காலம் தாண்டிதான், இன்றைய ஆங்கிலம் வளர்ச்சி கண்டுள்ளது. அஃது இலத்தீன், கிரேக்கம், பிரெஞ்சு உட்பட்ட

தொன்மொழிக் கூறுகளை உட்கொண்டு, உலகிற்கென இன்று தேவைப் படும் அனைத்துத் துறைகளிலும் ஆட்சி பரப்பி மாட்சிமை பெற்றுள்ளது.

இந்நூலில் ஆங்கிலத்தில் இருந்து தமிழுக்கும் தமிழில் இருந்து ஆங்கிலத்திற்கும் மொழிபெயர்ப்பு மேற்கொள்ளப் படுவதையே திறனாய்வு செய்கிறோம். மொழியானது காலந்தோறும் வெவ்வேரு வேறுபாடுகளாலும் மாறுபாடுகளாலும் மாறிக்கொண்டு வந்துள்ளது.

தமிழைப் பொறுத்த வரையில் மிகப் பழமையான நிலையில் செய்யுள் வடிவிலுள்ள நூல்கள் மட்டுமே பேணப்பட்டு வந்தன. சொற்களஞ்சியத்திலும் தொடரமைப்பு நெறியிலும் இடையறாது மாறிமாறி வந்துள்ளன.

சொற்களின் கருத்தை வேறு சில சொற்களின் துணையுடன் வரையறை செய்வதுதான் அகராதி. தமிழில் ஏழாம் நூற்றாண்டிற்கும் 20ஆம் நூற்றாண்டிற்கு முன்பும் விரிவான அகராதி காண்பது அரிதாக உள்ளது. ஆதலின் இதற்கு முன் வழக்கில் சிறந்த சொற்கள் எல்லாம் மீளா இருளில் மறைந்துவிட்டன. மக்கள் இன்று பல நாகரீகப் போக்கால் தாக்கமுறுகிறார்கள். நாள்தோறும் புதுப்புதுக் கருத்தும் தோன்றி வரவே, அதற்கு உடனுக்குடன் புதிய சொற்கள் தேவைப்படுகின்றன. ஆங்கிலத்தில் அப்பணி மிகவேகமாக நடைபெற்று வருகிறது. ஆனால், தமிழில் அவ்வாறு இல்லை. அதோடு தமிழில் செய்யுள் அல்லது நூல் வழக்கிலும், நூல் வழக்கில் இருந்து சொற்கள், அகராதியிலும் இடம்பெறலாம். அவைபோக எஞ்சிய சொற்களில் பலவும் அழிந்துவிட்டன. அவை வழக்கற்றமைக்குக் காரணம் அவற்றை மக்கள் எடுத்தாளாமல் விட்டுவிட்டதே. வழக்கற்ற சொற்கள் பொருளை எளிதில் உணர்த்தாததே காரணம். அவற்றின் வழக்கற்ற தன்மையே யன்றி, அவற்றின் குறையன்று. நீண்ட காலமாக உறவினரோடு பழகாத மக்கள் அயலார் போன்று நடத்தப்படுவது போல், நீண்டகாலமாக வழக்கில் இடம்பெறாச் சொற்களும் அரிய சொற்களாகவே காணப்படும். ஆகவே தமிழை அழியாது காக்கவேண்டும் என்றால், அந்த வழக்கற்ற சொற்களை எல்லாம் மொழிபெயர்பாளர்தான் மீண்டும் வழக்கத்தில் கொணர்தல் வேண்டும். இது அவர்தம் கடமையாகும்.

## தழுவல்/விலகல் மொழிபெயர்ப்பு

தமிழில் இன்று பல அறிஞர்கள் மொழிபெயர்ப்புப் பணியை மேற்கொண்டுள்ளனர். இந்தப் பெயர்ப்புகளில் பெரும்பாலானவை

விலகல் மொழிபெயர்ப்புக் கொள்கைக்குச் சான்றுகளாகும். தமிழில் பெருங்காப்பியங்கள் ஆக்க முனைந்த பலரும் வடமொழிக் காப்பியங்களிலும் புராணங்களிலும் நிலவிய கதைகளைத் தமது தலை நூலாகக் கொண்டனர். அவற்றைத் தமிழாக்கும்போதும் சிற்சில பகுதிகளைத் தேர்ந்தெடுத்து அவற்றைத் தமிழில் அமைத்துக் கொண்டனர். தமிழில் கம்பர் இயற்றிய இராமாயணம் கூட இந்த வகையதே. உண்மையில் மொழிபெயர்ப்பு விலகல் கொள்கைக்குச் சான்றான, கம்பர் மூலத்தைவிட்டு விலகிய இடைவெளியில் தமது கல்விப் பெருக்கைக் காட்டக் களம் அமைத்துக் கொண்டார் என்றே அறிஞர் கருதுவர். புகழேந்திப் புலவரின் நளவெண்பா, பாரதியாரின் பாஞ்சாலி சபதம் ஆகியவை மறுபடைப்புகளே. மேலும் கம்பர் கச்சியப்ப சிவாச்சாரியார் முதலானோர் செய்த தமிழாக்கங்கள் மூலத்தினை விட்டு விலகிச் சென்றவைதாம்.

### வரையறை: தொல்காப்பியர்

டாக்டர் ம.ரா.போ. குருசாமி, மொழிபெயர்ப்பு நூல்களைப் பற்றிக் குறிப்பிடும்போது "மொழிபெயர்த்து யாத்தல்'' என்று மட்டும் கூறாமல் "மொழிபெயர்த்து அதர்ப்படயாத்தல்'' என்று விளக்கினார் தொல்காப்பியர் என்று கூறி விளக்குகிறார். டாக்டர் குருசாமி மொழிபெயர்ப்பினை இலக்கு மொழியின் மரபுக்கேற்பச் சமைக்க வேண்டும் என்பது அதன் குறிப்பு. பேராசிரியர் சுந்தரனார் மேலை நாட்டுக் கதையைத் தமிழாக்கிய போது முதலிலேயே ஏடும் எழுத்தாணியுமாக அமர்ந்து கண்டபடி கிறுக்கித் தள்ளவில்லை. வடமொழி, ஆங்கிலம் ஆகிய மொழிகளில் உள்ள நடைவழக்குகளை அறிந்து கொண்டு தமிழ் மரபுக்கும் தத்துவச் சூழலுக்கும் இயையுமாறு யாத்துள்ள பான்மை இங்கே கூறத்தக்கது. மேலும் அவருக்கு நாடகப்பணியின் தேவை புலப்பட்டது. ஆதலின் அவ் வகையிலும் மொழிபெயர்த்து அதர்ப்பட யாத்தார் என்கிறார் குருசாமி.

'மொழிபெயர்ப்பு' என்பது ஒரு நுண்கவின்கலை. ஓவியம் தீட்டுவதுபோல் ஓர் அரிய கலை. நடனப்பள்ளிகளில் நட்டுவனார் பயிற்றுவிக்கும் பயிற்சிமுறையில் நடனக்கலை வளர்ச்சி பெறுவதைப் போல மொழிபெயர்ப்புக் கலையும் ஒரு கவின்கலை. மொழிப் பெயர்ப்பாளரின் திறனுக்கேற்ப மொழிபெயர்ப்புத் திறனும் அமையும்.

### சிறந்த மொழிபெயர்ப்பு எது ?

மூலமொழியில் படைக்கப்பெற்ற முதன் நூலைப் போல இயல்பாக ஆற்றொழுக்கான நடையில் தெளிவான சிந்தனை

வெளிப்பாடாக அமைவதே சிறந்த மொழிபெயர்ப்பாகும். மோசமான மொழிபெயர்ப்பு எது என்றால், பொருத்தமற்ற சொற்களால் மூலத்திற்கு முரணாக அமைந்துள்ளதுதான். இதற்கு மொழிபெயர்ப்பாளரின் தகுதி மிகவும் இன்றியமையாததாகும்.

## மொழிபெயர்ப்புக் கொள்கைகள்

இன்றைய உலகில் அதிகமாகப் பேசப்படுவனவும் வரைமுறையற்றனவாகவும் உள்ள சிலதுறைகளில் மொழிபெயர்ப்புக் கலையும் அடங்கும். வில்லியம் வெர்க்மெயஸ்டர் என்பவர் மொழிபெயர்ப்புப் பற்றிக் கூறும்போது, "மொழிபெயர்ப்பு என்பது, ஒரு கருத்தை விளக்கிச் சொல்வது" என்கிறார். மொழிபெயர்ப்பு என்பது ஒரு கவின்கலை. மற்ற கலையைப் போலவே இதையும் தனிக்கவனம் எடுத்தே பயின்றாக வேண்டும். ஆங்கில மொழிச் சொற்களுக்குப் பதிலாகச் சொற்களை இட்டு நிரப்புவதில் மொழிபெயர்ப்புக் கலை கைவந்து விடாது. ஆனால், ஆங்கில மூலத்திலுள்ள கருத்துகளை இலக்கண இலக்கிய மரபுக் கேற்பத் தூய தமிழில் தெளிவாகவும், துல்லியமாகவும் கூறுவதில்தான் மொழிபெயர்ப்பின் சிறப்பு உள்ளது எனச் சட்டமன்றப் பேரவை முன்னாள் செயலாளர் சண்முகசுப்பிரமணியம் கூறுகின்றார்.

## நான்கு வகையான செயல்முறை வினாக்கள்

1. பொதுவாக ஒருபொருளை மொழிபெயர்க்க வேண்டும் என்றால், சொல்லுக்குச் சொல் மொழிபெயர்ப்பதா அல்லது அடிப்படைக் கருத்தை மொழிபெயர்ப்பதா?
2. மூலஆசிரியரின் நடையைப் பின்பற்றி மொழிபெயர்ப்பு அமையவேண்டுமா? அல்லது மொழிபெயர்ப்பாளரின் நடையில் மொழிபெயர்க்கலாமா?
3. மொழிபெயர்க்கும்போது கருத்துகளை விளக்கும் வகையில் கூட்டவோ அல்லது குறைக்கவோ செய்யலாமா? அல்லது அப்படியே எழுத வேண்டுமா?
4. செய்யுளை மொழிபெயர்க்கும்போது கவிதையை உரைநடையில் மொழிபெயர்க்கலாமா? அல்லது செய்யுளாகவேதான் மொழி பெயர்க்க வேண்டுமா?

மேற்கண்ட வினாக்கட்கு மொழிபெயர்ப்புத்துறை ஏதாவது ஒன்றில் அனுபவம் இல்லாதவர்கள் விடையளிப்பது கடினம். பலவகையான மொழிபெயர்ப்பு முறைகள் இருப்பதால், குழப்பமின்றி அவரவரின் அறிவாற்றலுக்கு ஏற்ப மொழிபெயர்த்து அறிஞர்

பெருமக்கள் பலதுறைகளில் மக்களின் தேவைகளை முன்னிட்டும் வணிக நோக்கத்திலும் நூல்களை வெளியிட்டு வருகிறார்கள். திருக்குறள் உலக மொழிகள் பலவற்றிலும் வெளியிடப்பட்டுள்ளது. ஆங்கிலத்தில் மட்டும், பலர் திருக்குறளை மொழிபெயர்த்துள்ளனர். ஆங்கில மொழி பெயர்ப்புகள் யாவும் தரத்தாலும் திறத்தாலும் எப்படி அமைந்துள்ளன என்று ஒப்புநோக்கித்தான் கூற வேண்டும். இதுபோலத்தான் விவிலிய நூலும் குர்ஆனும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன.

மொழிபெயர்ப்பியலில் படிப்பதற்கேற்றவாறு எளிய தெளிவான மொழிபெயர்ப்பு நடையை நன்கு பழுத்த அனுபவத்தால் தான் பெறமுடியும். ஆளுக்கு ஆள் மொழிபெயர்ப்பு மாறுபடுவதற்குக் காரணம், அவரவர் வைத்துக் கொள்ளும் மொழிபெயர்ப்புக் கொள்கைதான். இனிக் கொள்கைகள் சிலவற்றைப் பின்வருமாறு காணலாம்.

## 2 மொழிபெயர்ப்புக் கொள்கைகள்

உலக அளவில் பலராலும் ஒப்புக்கொள்ளப்பட்ட மொழி பெயர்ப்புக் கொள்கைகள் எவையும் இல்லை. காரணம் அவற்றை உருவாக்கும் அறிஞர் பெருமக்களுக்கிடையே கருத்தொற்றுமை இல்லை.

மொழிபெயர்ப்புத்திறன் மொழிபெயர்ப்பாளரின் திறனைப் பொறுத்து அமைவதால் மொழிபெயர்ப்புக் கொள்கையிலும் ஒற்றுமையின்றி ஒவ்வொரு மொழிபெயர்ப்பாளரும் தமக்கெனச் சில கொள்கைகளைப் பின்பற்றி வருகிறார்கள். இவற்றை ஆய்வு செய்து, தொகுத்து மொழிபெயர்ப்புக் கொள்கையாளர்களின் உதவியால், மொழிபெயர்ப்புச் செயலாக்க முறைகளையும் (methods) பல்வேறு மொழிபெயர்ப்புக் கொள்கைகளையும் நாம் அறிய முடிகின்றது. இங்குச் சில மொழிபெயர்ப்பாளர்கள் தம் அனுபவத்தால் கண்டறிந்த பல மொழிபெயர்ப்புக் கொள்கைகளை முதலில் காண்போம்.

1950ஆம் ஆண்டுவரை, மொழிபெயர்ப்பியலானது பெரிய படிப்பாளிகளுக்கு மட்டுமே உரிய துறையாகக் கருதப்பட்டது. அதன்பின்னர் மொழிபெயர்ப்பியலில் ஆய்வு தொடங்கிய தொழில் வகையிலான மொழியியலாளர்களும் மொழிபெயர்ப்பாளர்களும் தம் கவனத்தை மொழிபெயர்ப்புக் கொள்கை உருவாக்கத்தில் ஈடுபடுத்தினர். புளூம்பீல்டு வழிவந்த மொழி இயலாளர் செல்வாக்குக் குறைந்த பின்னர் மொழிபெயர்ப்பில் முழுக்கவனம் செலுத்தப்பட்டது. 19ஆம் நூற்றாண்டில் மொழிபெயர்ப்பில் தொன்மையைப் புதுப்பிக்க முனைந்த மொழிபெயர்ப்பு வரலாற்றறிஞர்களோடு 20ஆம்

நூற்றாண்டில் தொழில் நுட்ப அடிப்படையில் மொழிபெயர்ப்புக் கொள்கைகளிலும் பெருத்த மாற்றம் ஏற்பட்டது.

மொழிபெயர்ப்புக் கொள்கைகளை வகுத்தவர்களில், ஜே.சி. காட்ஃபோர்ட், தியோடர் சேவரி, ஜார்ஜ் ஸ்டெயினர், யூஜின் ஏ.நிதா, ஏ.டி. பூத், ஆண்ட்ரிலீஃவர் ஜரிலெவி, பீற்றர் நியூமார்க் முதலானோர் குறிப்பிடத்தகுந்தவர்கள். இவர்களில் காட்ஃபோர்ட், சேவரி, நிதா, நியூமாாக் ஆகியோர்களின் மொழிபெயர்ப்புக் கொள்கைகளில் பொதுவானவற்றை இங்கு நாம் காணலாம். அவை பின்வருமாறு:

### 1. காட்ஃபோர்ட்டின் கொள்கைகள்[1]

இவரது "A Linguistic Theory of Translation" என்ற நூலில் மொழிபெயர்ப்பு என்றால் "ஒரு மொழியிலுள்ள வாசகத்தை மற்றொரு மொழியில் மாற்றியமைப்பது" என்று பொருள்வரையறை செய்கிறார். காட்போர்ட்டு பொருள் (Meaning) என்பது மிக முக்கியமான ஒன்று என்று கூறி, அதன் அடிப்படையில் பொருள் காண் கொள்கை (Theory of Meaning) ஒன்றை வலியுறுத்துகிறார். இவர் பொருள்காண்பதில் ஒருவாக்கியத்தை மொத்தமாக எடுத்துக் கொள்ள வேண்டும் என்கிறார்.

### 2. தியோடர் சேவரியின்[2] கொள்கைகள்

The Art of Translation (1951) என்ற இவரது நூலில் நல்ல சில கொள்கைகளைக் கண்டு கூறுகிறார். மூல நூலாசிரியரின் பணியைவிட மொழிபெயர்ப்பாளரின் கடமை கடினமானது என்கிறார். மொழிபெயர்ப்பு மூல நூலைப் போன்று எளிதாகவும் நன்றாகவும் இருக்க வேண்டும் என்று கூறும் இவர், வெறுமனே மொழி, இலக்கியத்திறன் மட்டும் கொண்டு பலரும் பாராட்டும் மொழிபெயர்ப்பைச் செய்ய இயலாது. அதற்கு மொழிபெயர்க்கப்படும் துறையில் தோய்ந்த பட்டறிவும் தேவை என வலியுறுத்துகிறார். மொழிபெயர்ப்பின் அடிப்படைக் கோட்பாடுகளைப் பற்றிப் பல்வேறுபட்ட கருத்துகள் நிலவுவதால், மொழிபெயர்ப்புக் கொள்கைகளைப் பட்டியலிட்டுக் கூறுவது சாத்தியமில்லை என்கிறார். இவர் மொழி பெயர்ப்புக் கொள்கையாளர்களின் ஆறுவகையான கருத்துரைகளைக் கீழ்க்கண்டவாறு கூறுகிறார்.

---

1. Catford, J.C., Linguistic Theory of Translation, Oxford University Press, London, 1965.
2. Theodore Savory, The Art of Translation, Jonathan Cape. London, 1957.

1. a. ஒரு மொழிபெயர்ப்பு மூலச் சொற்களைத் தருதல் வேண்டும்.
   b. ஒரு மொழிபெயர்ப்பு மூலத்தின் கருத்துகளைத் தருதல் வேண்டும்.
2. a. ஒரு மொழிபெயர்ப்பு மூலநூலைப் போலிருக்க வேண்டும்.
   b. ஒரு மொழிபெயர்ப்பு மொழிபெயர்ப்பைப்போலவே இருக்க வேண்டும்.
3. a. ஒரு மொழிபெயர்ப்பு மூலநூலின் நடையை எதிரொலிக்க வேண்டும்.
   b. ஒரு மொழிபெயர்ப்பு மொழிபெயர்ப்பாளரின் நடையைக் கொண்டதாய் இருக்க வேண்டும்.
4. a. ஒரு மொழிபெயர்ப்பு மூலநூலின் காலத்தையொட்டி இருக்க வேண்டும்.
   b. ஒரு மொழிபெயர்ப்பு மொழிபெயர்ப்பாளரின் சமகாலத்ததாய் இருக்க வேண்டியதில்லை.
5. a. ஒரு மொழிபெயர்ப்பில் எதையும் மூல வாசகத்தோடு சேர்க்கவோ/விட்டுவிடவோ செய்யலாம்.
   b. ஒரு மொழிபெயர்ப்பு எதையும் மூலவாக்கத்தோடு சேர்க்கவோ/விட்டுவிடவோ கூடாது.
6. a. ஒரு மொழிபெயர்ப்பு கவிதையாயின், அது உரைநடையிலும் இருக்கலாம்.
   b. ஒரு மொழிபெயர்ப்பு கவிதையாயின், அது கவிதையாகத் தான் இருக்க வேண்டும்.

### 3. யூ.ஜி. நிதாவின் கொள்கை[3]

இவர் மொழிபெயர்ப்பாளரின் அடிப்படைத் தகுதிகள் பற்றிப் பின்வருமாறு கூறுகிறார்.

1. மொழிபெயர்ப்பாளர் மூலமொழி (Source Language) இலக்கு மொழி (Target Language) இரண்டிலும் தேர்ச்சி பெற்றவராக இருத்தல் வேண்டும்.
2. மொழிபெயர்ப்பாளர், தாம் மொழிபெயர்ப்பு மேற்கொள்ள விருக்கும் பொருட்பாட்டில் (Subject-matter) போதிய தேர்ச்சி பெற்றிருக்கவேண்டும்.

---

3. E.A. Nida, Language Structure and translation, Stanford University Press, California - 1975.

3. இவர் மூல நூலாசிரியரிடம் மரியாதை கொண்டவராக, நூலின் பொருளையும் நன்கு அறிந்திருக்க வேண்டும்.

4. இலக்கு மொழியில் புலமையை வளர்க்க இவருக்குப் போதிய வசதி செய்து தருதல் வேண்டும்.

இவை அனைத்தும் கொண்ட திறமையாளர்கள் கிடைப்பது அரிது என்கிறார் நிதா (நிதா: 1965)

மொழிபெயர்ப்பில் உள்ள வேறுபாடுகள் கீழ்க்கண்ட காரணங்களின் அடிப்படையில் ஏற்றுக் கொள்ளப்படலாம்.

1. செய்தியின் தன்மை பற்றி
2. நூலாசிரியரின் நோக்கமும் மொழிபெயர்ப்பாளரின் செயலும்
3. வாசகர்களின் வகை

## நிதாவின் மொழிபெயர்ப்புக் கொள்கைகள்

1. பொருளுணர்ந்து செய்தல்
2. மூலநூலின் சாரமும் பாங்கும் கொணர்தல்
3. இயல்பான எளிதான சொற்களை எடுத்தாளுதல்
4. மூலமொழியில் உள்ள அதே உத்வேகத்தை, உட்பொருளை மொழிபெயர்ப்பின் வாயிலாக இலக்கு மொழியிலும் வெளிக் கொணர்தல்.

## நிதாவின் கூற்று

பொதுவாக ஒரு நூலை ஆங்கிலத்திலிருந்து தமிழில் மொழிபெயர்க்கும்போது, தமிழில் அதிகப் பக்கங்கள் ஏன் வருகின்றன என்று சிலர் கேட்பதுண்டு. அதற்கு நிதா விடை கூறும் முகத்தான், கீழ்க்கண்டவாறு கூறுகிறார்.

> **நன்றாக அமைந்துள்ள எல்லா மொழிபெயர்ப்பு களுமே மூலநூலைவிட அதிகப்பக்கங்களையுடையதாயிருக்கின்றன. காரணம் மொழிபெயர்ப்பாளர், மூலநூலில் உள்ள அனைத்தையும் கூறுவதோடு, மூலநூலில் மறைபொருளை வெளிப்படையாக விளக்கமாக எடுத்துக்கூறுகிறார்**

என்கிறார்.

### 4. நியூமார்க்கின் கொள்கைகள்[4]

இவருடைய அணுகுமுறையில் மொழிபெயர்ப்பானது இருதுறையிடையீடுள்ளது. மொழிபெயர்ப்பைக் கைத்திறம் வாய்ந்தது என்கிறார். மொழிபெயர்ப்பைப் பொருள்வரையறை செய்யும்போது, மூலமொழியில் உள்ள ஒருவாசகத்தை இலக்குமொழியில் மாற்றிக் கூறுவதாகும் என்கிறார். மொழிபெயர்ப்புக் கொள்கை, முக்கியமாக எல்லாவகையான நூல்களையும் மொழிபெயர்ப்பதற்கேற்ற உரிய செய்முறை (methods) களைத் தீர்மானிப்பதாகும். இவர் இரண்டு முக்கியச் செய்முறைகளைக் கூறுகிறார். ஒன்று comprehension எனப்படும் பதப்பொருள் காணும்நிலை. மற்றொன்ற Formulation எனப்படும் முறைப்படுத்தும் முறை.

இதுவரை மொழிபெயர்ப்புப் பற்றிய கொள்கைகளைக் கண்டோம்.

## 3. மொழிபெயர்ப்பாளரின் தகுதிகள்

மொழிபெயர்ப்பு, கற்பிக்கும் கலைக்கு நேரிணையான ஒன்று. ஆசிரியர்களுக்கெனச் சில தகுதிகள் தேவைப்படுகின்றன. அதுபோல ஒரு மொழிபெயர்ப்பாளரும் கற்பிக்கும் ஆசிரியருக்கு நிகரானவர் எனப் பல்கலைச் சட்டதிருத்தம் கொணர்தல் வேண்டும். அஞ்சல்வழிக் கல்வி உலக நெடுவிலும் பெருகிவரும் இந்நாளில் ஒரு மொழிபெயர்ப்பாளர் எவ்வளவுதான் கல்வித்தகுதிகள் பெற்றிருந்தாலும் அவருக்குப் பெரிய பதவிகளை வழங்குவதில் ஏட்டுக்கல்வி(Academic) யாளர்களும் அதிகாரிகளும் குறுக்கே நிற்கிறார்கள். தருமொழி, பெருமொழி ஆகிய இரண்டிலும் மொழிபெயர்ப்பாளர் போதிய தகுதி பெற்றிருத்தல் அவசியம். அவருக்குப் பொது அறிவும் வலியுறுத்தப்படுகிறது. அவர் கற்பனை வளம் மிக்கவராகவும் இருத்தல் வேண்டும். அவர் எந்தப் பாட நூலை மொழிபெயர்க்க முயல்கிறாரோ அதில் தனியே கல்வித் தகுதி பெற்றிருத்தல் மிகவும் வேண்டப்படுவதாகும். சமூக, மொழி மரபுகளை அறிந்திருத்தல் வேண்டற்பாலது.

1. வாசகர்களுக்குக் கற்பிக்கும் பணியை மேற்கொள்ளும் நோக்கம் கொண்டவர் மொழிபெயர்ப்பாளர் (எ.டு.) மக்கள் தொடர்பு சாதன மொழிபெயர்ப்பாளர்.
2. ஆட்சிமொழி வளர்ச்சி நோக்கம் கொண்டவர் அரசு மொழிபெயர்ப்பாளர்.

---

4. Newmark, Peter - Approaches to Translation - 1981, Oxford - Pergaman Press, New York Prentice Hall, 1988.

3. அவரின் பணி கல்வி நிலையப் பாடப்புத்தகங்களை உருவாக்கும் நோக்கம் கொண்டது.
4. அலுவலகத்தில் ஆட்சிமொழி வளர உதவிக்கரம் வழங்குபவர். அலுவலகத்தில் தற்போது தவிர்க்க இயலாத செயலாக மொழிபெயர்ப்பு விளங்குகிறது.
5. ஆகவே மொழிபெயர்ப்பாளருக்கெனச் சில தகுதிகள் தேவைப்படும்.

## 3.1 மொழிபெயர்ப்பாளரின் ஆளுமை

ஒவ்வொருவரிடமும் ஆளும் தன்மை உண்டு. ஒருசிலர் அதை வளர்க்கின்றனர். வேறுசிலர் அதை வளர்க்கவில்லை. ஆளுமையை வளர்த்தவர்கள் திண்மையானவர்கள். உறுதிப்பாடு உடையவர்கள். ஒவ்வோர் ஆளிடமும் ஆளுமை, அதாவது ஆளும், கையாளும் தன்மை உண்டு. ஆனால் ஆளுமைகளின் தரம், அளவு வேறுபட்டிருப்பதுதான் ஓர் ஆளை வேறோர் ஆளிடமிருந்தும் பிரித்துக் காட்டுகிறது. ஆளுமை என்பதை ஆண்மை என்பர். ஆண்மை என்றால் ஆள்+மை எனப் பொருள். இதுவே ஒருவரை மற்றவரிடமிருந்து பிரித்துக்காட்டுகிறது, ஆண்மை என்பது ஆண்பாலரிடம் உள்ள ஆற்றலை, சக்தியை மட்டும் குறிக்கும் ஒரு சொல்லாக, காலப்போக்கில் மாறிவிட்டது. எக்காலத்தில் ஆயிற்றோ தெரியாது. அக்குறுகிய பொருளுக்குரியதாக 'ஆண்மை' மாறியதற்கு நாம் வருந்த வேண்டியதே. ஆட்சி மொழியாகத் தமிழ் அறிமுகமாகிய போழ்து Corporation, Municipality என்ற ஆங்கிலச் சொற்களைத் தமிழாக்கம் செய்தவர்சிலர், தொடக்க நிலையில் அவற்றுக்கு மாநகராண்மை, நகராண்மை என்ற சொற்களால் மொழிபெயர்த்தனர். மொழிபெயர்ப்பை அறுதி செய்யும் ஆய்வுக் குழுவினரில் சிலர் 'ஆண்மை' என்ற சொல்லாட்சி குறுகிய பொருள் தருவது. எனவே Corporation மாநகராட்சி, Municipality நகராட்சி என முடிவு செய்ததாக ஆட்சிமொழிக்காவலர் கீ. இராமலிங்கனார் ஒருமுறை கூறினார். ஆண், பெண் இருபாலரிடமும் ஆளும் சக்தி எனும் ஆண்மை குடிகொண்டுள்ளது. ஆண்மையும் திண்மையும் ஒன்றே.

மொழிபெயர்ப்பு ஆற்றல் மொழிபெயர்ப்பாளர்களிடையே பல்வேறு அளவில் வேறுபட்டிருப்பதைக் காணலாம். மொழிபெயர்ப்புத் திறன் எல்லோரிடமும் ஒன்றுபோல் சிறந்து தோன்றவில்லை ஏன்? திறன் வளரவில்லை. வளர்க்கப்படவில்லை என்பது பொருந்தும். மொழிபெயர்ப்புத்திறனை எப்படி வளர்ப்பது? நீந்தத் தெரிய வேண்டுமெனில் தண்ணீரில் நீந்தித்தான் தெரிந்துகொள்ள

வேண்டும். அதுபோலவே மொழிபெயர்ப்புத்திறனை வளர்ப்பது, அதனை மேற்கொள்வதன் மூலமாகத்தான் முடியும். அதை வளர்க்க நாம் தக்கமுறையைக் கையாள வேண்டும். இது கல்விக் கூடங்களில் தொடங்கிப் பல்வேறு அலுவலகங்களில் துறைதோறும் பயன் தருவதாகும். இன்று உலகப் பல்கலைக் கழகங்கள் தோறும் பாடத்திட்டத்தில் இதன் இன்றியமை யாமையைப் பொறுத்துப்பாடமாகக் கற்பிக்கப்படுகிறது.

மொழிபெயர்ப்புத் திறனில் குறைவு என்றால், அதைக் கற்பதில் குறைவு என்றுதான் பொருள். கல்வித் துறைக்குச் சிறப்பாக மொழிபெயர்ப்போடு இணை பிரியாத தொடர்பு உள்ளது. மொழிபெயர்ப்பு, கல்வி அறிவை வளர்க்கும் நோக்கம் கொண்டது. கல்வி சிறப்பான பயனை இந்தியாவில் அளிப்பதற்கு மொழிபெயர்ப்பு பெரிதும் துணைபுரிந்துள்ளது. மொழிபெயர்ப்பால் கல்வியும் கல்வியால் மொழிபெயர்ப்பும் சிறக்கும். மொழிபெயர்ப்பாளர் தன் கல்வித் தகுதியறிந்து ஆற்றலை வெளியிட வேண்டும். அதுவே ஒரு தனிக் கலை. மொழிபெயர்ப்பாளர் தன்னிலையோடு பிறர்நிலையையும் அறிந்து உணர்ந்து அதைக் கற்பது சிறப்பு.

### 3:2 மொழிபெயர்ப்பு நோக்கமும் முறையும்

ஒரு மொழிபெயர்ப்பாளர், நோக்கத்திற்கேற்ப மொழிபெயர்க்கும் கட்டாயத்திற்கு ஆட்பட்டவர். நூல்களை மாணவர்களுக்காக மொழி பெயர்த்து எழுதும்போது ஒருமுறையில் மொழிபெயர்க்க வேண்டும். அதே நூலைப் பொதுமக்களுக்காக மொழிபெயர்க்கும்போது அதன் நடை மக்கள் தமிழாக, பழகுதமிழாக இருக்கும். பொதுமக்கள், மாணவர்கள், அதிகாரிகள் என்று மொழிபெயர்ப்பு, வாசகர்களின் நோக்கும் போக்கும் பொறுத்து மொழிநடையில் வேறுபாடுண்டு. மாணவர்களுக்கான புதிய நூலில் தனித்தமிழ்ச் சொல்லாக்க முறைகளைப் பின்பற்றிக் கூட மொழிபெயர்க்கலாம். ஆனால் பொது மக்கள், அதிகாரிகள் ஆகியவர்களுக்கு மக்கள் மொழிபெயர்ப்பு எனும் Popular Translation முறையையே பின்பற்றவேண்டும். ஆகவே மொழிபெயர்ப்பின் நோக்கம், வாசகர்களின் தரத்தையும் திறத்தையும் வைத்து மாறுபடும். மொழிபெயர்ப்பாளர் விழிப்பாக இருக்கவேண்டும்.

### 3.3 மொழிபெயர்ப்பாளரை மதித்தல்

மொழிபெயர்ப்பாளருக்கு உரிய தனிமரியாதையைச் சமூகம் அளிக்க வேண்டும். அனைத்துத்துறைகளிலும் இன்று மொழி

பெயர்ப்பு தவிர்க்க இயலாத தொழிலாக உள்ளது. ஆனால் எவரும் ஒரு மொழிபெயர்ப்பாளரை ஒரு பொருட்டாக மதிப்பதில்லை. மொழிபெயர்ப்புத்துறை எதுவாயினும் பிற துறைகளைப் போல் பதவி உயர்வுக்கும் உயர்ந்த ஊதிய விகிதத்திற்கும் அரசும் தனியாரும் வழிவகை செய்தல் வேண்டும். பல வேலைகளில் சிறந்தது மொழியாக்க வேலை. மொழிபெயர்ப்பால் பல நற்பயன்கள் உண்டு. புலன் ஐந்தும் ஒருமுகமாக வேலைசெய்யச் செய்வது மொழிபெயர்ப்புக் கலை. மனத்தின் மூன்று பகுதிகளாகக் கருதப்படும் அறிவு, ஆற்றல் உணர்ச்சி ஆகிய மூன்றும் பயன்படும் தொழில் மொழிபெயர்ப்பு. ''ஒத்தது அறிவான் மொழிபெயர்ப்பாளன்'' ஆதலால் அதன் மூலம் ஏற்படும் தொழில் நிறைவு, மற்ற துறைகளில் ஏற்படும் பணி நிறைவைப் போன்றதே. ஆகவே மொழிபெயர்ப்பாளர்களையும் பிற துறையினரைப் போன்றே மக்கள் மதிக்கவேண்டும். தமிழ் வளர்ச்சியில் பெரிதும் பயன்படுவது ''மொழிபெயர்ப்பு'' என்று டாக்டர் உ.வே.சா. தமது உரை நடைநூலில் குறிப்பிட்டுள்ளது இங்கு மனங்கொளத்தக்கது.[5]

### 3.4 கூட்டுத்தவம் : கூட்டு முயற்சி[6]

மொழிபெயர்ப்பில் கூட்டு முயற்சிப் பெரும்பங்கு வகிக்கின்றது. எனவே மொழிபெயர்ப்பை அகராதிகளின் துணை கொண்டும் மூல ஆதாரங்களின் துணை கொண்டும் அனுபவமிக்க மொழிபெயர்ப்பாளர்களுடனும் கூடியே முயற்சித்தல் நலம். இக் கூட்டு முயற்சி மொழிபெயர்ப்பில் நல்ல பயன் விளைவிக்கும். இதையே நீதிபதி மகராசன் கூட்டுத்தவம் என்பார். சில நேரங்களில் ஒரு சொல் பல பொருளையும் பல சொற்கள் ஒரு பொருளையும் மொழிபெயர்ப்பின்போது குறித்துப் பொருளில் சிதைவு ஏற்படாது தவிர்க்கக் கூட்டுத்தவ மொழிபெயர்ப்பு முயற்சி உதவுகின்றது. மொழிபெயர்ப்பாளர்கள் முதலில் தன்னால் இயன்ற வகையில் மொழிபெயர்ப்பினை முடித்துவிட்டு, பின்பு தன்னால் இயலாததைத் தனக்கு இன்றியமையாத பகுதி என்பதைக் கூட்டுத்தவ முயற்சியில் பிறர்தரும் ஆலோசனையை, பொருளைப் பலமுறை சிந்தித்துப் பொருத்தமானதைத் தக்க நோக்கத்தில் ஏற்பது தவறில்லை.

---

5. டாக்டர் உ.வே.சா.வின் முதல் தொகுதி உரைநடை நூல், ப. 242. உ.வே.சா. நூலகம், பெசன்ட் நகர், சென்னை.

6. மொழிபெயர்ப்பது எப்படி? நீதிபதி சு. மகராசன், இதயஒலி காலாண்டுக்கு ஒருமுறை 1979–80, ப. 11.

தனியொருவரும் மொழிபெயர்ப்பை நன்கு அறிந்திருக்க வேண்டும்; அதை வளர்க்கக் கூட்டுமுயற்சியை மேற்கொள்ள வேண்டும். ஆனால், இன்று கூட்டுறவு முயற்சி சமூக நிலையில் குறைந்து வருவதால், மொழிபெயர்ப்பிலும் கூட்டுறவு முயற்சியைச் செயற்படுத்துவது சிக்கலாகிறது.

ஆட்சித்துறைகளில் கண்காணிப்பாளர்கள் இல்லாமல், மொழி பெயர்ப்புப்பணிகள் சிறப்பாக நடைபெறுவதில்லை. ஒருவகையான ஊழியர்களின் இயற்கைக் கவர்ச்சிக்கும் மனப்போக்கிற்கும் ஏற்ப மொழிபெயர்க்கும் சூழல் கூட்டுமுயற்சியில் ஏற்பட்டால் நல்ல விளைவைப் பெறலாம். சோர்வில்லாது பணி நன்கு நடைபெறும்.

## 3:5 மொழிபெயர்ப்பாளர் தகுதிகள்

விடுதலைபெற்று ஐம்பது ஆண்டுகள் ஆகியும் தற்போதைய நிலைவரை, அரசு ஊழியர்கள் தாமே தமிழில் குறிப்பெழுதும் பணி முற்றிலும் எய்த இயலவில்லை. இன்றைய முதல்வர் தமிழில் கோப்புகளை வரைய ஊக்கமூட்டுகிறார். ஆங்கிலேயர் ஆட்சியில் தொடங்கிய மொழிபெயர்ப்புப்பணி இன்னும் அதிக அளவில், அரசுத்துறைகளில் குறிப்பாகத் தலைமைச் செயலகத்தில் வளர்ந்து விரிந்துள்ளது. மும்மொழிக் கொள்கையை விடுத்து இருமொழிக் கொள்கையில் நடைபெறும் நிருவாகத்தில் முழுக்க முழுக்க மொழிபெயர்ப்புத் துறைப்பிரிவுகளையே அரசு ஊழியர்கள் சார்ந்து பணி செய்கிறார்கள். ஆங்கிலத்திலிருந்து அரசு ஆணைகளையும் அறிக்கை, அறிவிக்கைகளைத் தமிழில் மொழிபெயர்க்கவும் மொழிபெயர்ப்புத்துறைகளின் உதவியை அரசு ஊழியர்கள் நாடுகிறார்கள். தலைமைச் செயலகத்திலுள்ள சட்டத்துறைத் தமிழ்ப் பிரிவு ஆங்கிலத்தில் வரையப்படும் சட்ட முன்வடிவுகளைக் கடந்த கால் நூற்றாண்டுக்கும் மேலாகத் தமிழாக்கி, ஆங்கிலத்தோடு தமிழ் வரைவுச் சட்ட முன்வடிவும் ஆயிரத்திற்கும்மேல் சட்டமன்றப் பேரவையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. விவாதங்களும் தமிழில் நடைபெறுகின்றன. மாவட்ட அளவில் நீதி மன்றங்களில் தமிழ் நீதிமன்ற மொழியாகச் செயற்பட்டு வருகின்றது. சென்னை உயர்நீதி மன்றத்திலிருந்து வெளியாகும் ‘தீர்ப்புத்திரட்டு’ என்ற சட்டத்தமிழ் மாத இதழ் தீர்ப்புகளைத் தமிழில் மொழிபெயர்த்து வெளியிட்டு வருகின்றது. இந்நிலை 1980 முதல் தொடங்கப்பட்டது. ஆக அரசு இயந்திரத்தில் ஆட்சித்துறை (Executive) சட்டத்துறை (Legislative) நீதித்துறை (Judiciary) ஆகிய மூன்று பிரிவுகளிலும் தமிழ் ஆட்சி மொழியாகவும் மற்றும் கல்வித்துறையிலும் மொழிபெயர்ப்பு முக்கியப்

பங்கு வகிக்கின்றது. இத்துறைகளுக்கான மொழிபெயர்ப்பாளர் தகுதிகள் எவை என அறியலாம்.

வாசகர்களுக்குக் கற்பிக்கும் பணியை மொழிபெயர்ப்பாளர் செய்து வருகிறார். எனவே இவரும் ஒருவகையில் இராஜகுருவாகக் கற்பிக்கும் ஆசிரியர். இ.ஆ.ப., இ.கா.ப., உள்ளிட்ட அரசு ஊழியர்களுக்கும் மொழிப்பயிற்சி வகுப்புகள் நடத்தப்பெறுகின்றன.[7] மொழிபெயர்ப்பு இன்று கல்வி நிலையங்களில் இடம்பெறுகிறது. ஆகவே மொழிபெயர்ப்பாளர்க்கெனச் சில தனித்தகுதிகள் தேவைப்படு கின்றன. மொழிபெயர்ப்பாளர் அன்று மூலமொழி, இலக்குமொழி இரண்டிலும் புலமை பெற்றிருத்தல் வேண்டும். ஆனால், இன்று அவருக்கு மூலமொழி, இலக்குமொழிப் புலமைமட்டும் போதாது. மொழிபெயர்ப்புக்குரிய துறையிலும் அறிமுகமும் திறனும் தேவை. கலைச் சொல்லாக்கத்திற்குச் சொற் பிறப்பியல் அறிவு வேண்டும். மொழிபெயர்ப்பாளருக்குத் திறனாய்வுத் திறனும் தனித்து முடிவெடுக்கும் அனுபவமும் கட்டாயம் தேவை. இன்னும் பின்வரும் அடிப்படைத் தகுதிகளும் தேவை.

1. மொழித்திறன் வேண்டும்
2. சொற்களஞ்சிய அறிவு வேண்டும்
3. இலக்கண அறிவு வேண்டும்
4. சொற்பொருளியல் அறிவு வேண்டும்
5. தறுவாய்க்கேற்பச் சமூகப் பண்பாட்டு உணர்வு வேண்டும்
6. மொழிபெயர்ப்பாளருக்கு இலக்குமொழி மரபுகளை ஒட்டியே மொழிபெயர்ப்புச் செய்யும் ஆற்றல் வேண்டும்.

## 4. மொழிபெயர்ப்புச் சிக்கல்களும் தீர்வுகளும்

ஷெல்லி கவிதை மொழிபெயர்ப்பை மாயை (vanity) என்றார். குரோஸ் மற்றும் ஐ.ஏ. ரிச்சர்ட்ஸ் ஆகியோர் கவிதை மொழிபெயர்ப்பு வீண்முயற்சி என்றார்கள். ஆனால் ஐரோப்பாவின் மறுமலர்ச்சிக்குக் காரணமான பண்டைய செவ்வியல் இலக்கியங்களின் மொழி பெயர்ப்பு விளங்கியது என்பதை எவரும் மறுக்க இயலாது. ஆங்கில மொழியில் தாகூரின் கீதாஞ்சலி பெயர்க்கப்பட்டிருந்ததால் தான் யீட்ஸ் (Yeats) அதனை ஆய்வு செய்யத் தாகூர் நோபெல் பரிசு பெற்றதாகக் கூறுகிறார். வங்கமொழியில் எழுதப்பட்ட படைப்புகளைத் தாமே ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தபோது தாகூர் தாம் சந்தித்த இடர்ப்பாடுகளை ஒரு கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

7. தமிழ்நாடு அல்லாத பிற மாநிலங்களைச் சேர்ந்த I.A.S., I.P.S. அதிகாரிகளாக இங்குள்ளவர்கள்.

தொல்காப்பியர் வழிநூல் வகைகளைக் குறிக்கும் நூற்பா (643)வில், "மொழிபெயர்த்து", "அதர்ப்படயாத்தல்" என்று கூறியுள்ளார். இங்கு 'அதர்ப்பட' என்பதற்கு 'நெறிப்பட' என்றே பொருள். 'மொழிபெயர்த்து' என்பது பிறமொழியிலுள்ள கருத்தினைத் தமிழ்நூலாகப் படைப்பது' எனப் பேராசிரியர், இந் நூற்பாவிற்கு நுட்பமாக உரை எழுதியுள்ளார் என்பதைச் சான்றோர் அறிவர். பண்டைக்காலத்தில் மூலத்தில் காணும் சொற்களின் நயம் அவற்றின் சூழல் சொற்றொடர்களுக்கு இடையே நிலவும் தொடர்பு காரணமாகக் கவிதைப் பொருளை நாம் உணர்ந்து இன்புற, மொழிபெயர்ப்புச் செயல்முறையில் இக்கட்டுப்பாடுகள் பெருந் தடைகளாக இருந்ததாகக் கருதப்பட்டது.

மொழிபெயர்ப்புச் சிக்கல்களை, ஆய்வாளர்கள் மொழியியல் சிக்கல், பழக்கவழக்கப் பண்பாடு, சமூகச் சிக்கல், மறுபடைப்புச் சிக்கல் என்று பலவாறு வகைப்படுத்தி உள்ளனர். ஒரு மொழிபெயர்ப்பு அதன் பண்பாட்டுச் சூழல் வரலாற்றுக் காலம் மொழிக் குடும்பங்கள் ஆகியவற்றோடு பிணைக்கப்பட்டுள்ளது.

மொழிபெயர்ப்பு வல்லுனர்கள் ஒரே மொழிக் குடும்பத்திற்குள் மேற்கொள்ளப்படும் மொழிபெயர்ப்பில் சிக்கல்கள் குறைவு என்று கருதுகிறார்கள். இன்னும் சிலர், சமயப்பண்பாடு தொடர்புடைய சமூக மொழிகளுக்கு இடையே மேற்கொள்ளப்படும் மொழி பெயர்ப்பில் சிக்கல்கள் குறைவு என்று கருதுகின்றனர். இதற்குக் காரணம் மொழியியல் பகுதிகளோடு பொருட்கூறுகள் அல்லது நம்பிக்கை, பழக்கவழக்கங்கள் போன்று பலவும் ஒத்திருத்தலால் இம்மொழிபெயர்ப்பில் சிக்கல்கள் குறைவாக இருக்கும்.

## இருவேறு மொழியமைப்பு

மொழிபெயர்ப்பில் இருவேறுபட்ட மொழிக் குடும்பத்தின் பண்புகள் சிக்கல்களைத் தருகின்றன. சான்றாக, ''தூவெண்மதி'', என்ற தொடரினை மொழி பெயர்த்தறியலாம். சிவபெருமான் தூய வெள்ளை நிறமுடைய நிலவினை அணிந்திருக்கிறார். இச் சொற்றொடர் சந்திரனை வருணிக்கும் வருணனைத் தொடராகும். நிலவு, 'மதி' எனக் கூறப்பட்டுள்ளது. மதியின் மாண்பினைத் தனித்தனிச் சொற்களால் விளக்காமல், சொல்லின் பகுதிகள் மட்டும் முழுமையாகச் சேர்க்கப்பட்டுள்ளன. இந்த இணைப்புகள், இயைபுக்குத் தமிழ் மொழித்திறன் பயன்படுகிறது.

மொழிபெயர்க்கப்பட்ட ஆங்கில வாசகத்தில் தூ, வெண் ஆகிய இரு அடை தனித்தனிச் சொற்களால் ஆனவை. ''தூவெண்மதி

சூடி'' என்ற சொற்றொடர் ''The Wearer of a pure white moon on his locks '' என்று அமையலாம். இதில் 'தூ'– pure, வெண் – white என அமைக்கப்பட்டுள்ளது. 'மதி' என்பது moon என்றும் சூடி என்பது 'The wearer' என்றும் அமைக்கப்பட்டுள்ளன. மொழிபெயர்ப்பாளர் மதியைச் சூடியுள்ள உறுப்பினை உணர்த்த, 'on his lock' என்று ஆண்டுள்ளார். சொற்களைத் தனித்தனியே சேர்த்து மூலத்தில் கண்ட செறிவை மொழிபெயர்ப்பில் காண இயலவில்லை. சொற்றொகுதிகள் நெகிழ்ச்சியுடையவை.

மொழிபெயர்ப்பு அது இலக்கிய வகையாயினும் பிறவாயினும் மூலத்துக்கு உண்மையாக இருக்க வேண்டும். மொழிபெயர்ப்பு என்பதற்கும் தழுவல் என்பதற்கும் பெருத்த வேறுபாடுண்டு. 'காளிதாசரின்' சாகுந்தலத்தை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்த கலிபோர்னியா பல்கலைக்கழகப் பேராசிரியர் A.W. ரைடர் என்பவர் ஒரு மொழிபெயர்ப்பாளரைப்போல் ஒரு கவிதை மொழிபெயர்ப்பிலுள்ள சிக்கலை வேறு எவரும் அறிய இயலாது என்றார். வில்லியம் ஜோன்ஸ் என்பவரும் இந்தியப் பண்பாடு மிளிர வடமொழி இலக்கியங்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துள்ளார். இவர்களின் மொழிபெயர்ப்பு இலக்கிய அனுபவம் கவிதை மொழிபெயர்ப்பின் சிக்கலை ஒருவாறு உணர்த்தும். கீதாஞ்சலியை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்த கவிஞர் தாகூர் தம்மொழியோடு சில சமரசங்களைச் செய்து கொண்டு ஆங்கிலமொழி வாசகரின் போக்கிற்கேற்பச் சிலவிதிகளை வகுக்க நேரிட்டதாகக் கூறுகிறார். அதனால்தான் இலக்கியங்களை அவ்வவற்றின் மூலமொழியில் கற்க வேண்டும் என்று சான்றோர் கூறுவர். காவியங்களையும் மெய்ஞான தத்துவங்களையும் மொழிபெயர்க்கும்போது பல வகையான சிக்கல்கள் எழுவதுண்டு. இவற்றில் கையாளப்பெறும் சொற்கள் 'வெறும் அடையாளங்களே' என்பதை உணரலாம்.

### 4:1 மொழிபெயர்ப்பில் எழும் சொற்சிக்கல்கள்

மொழிகள் பலவற்றிலும் 'மொழிபெயர்க்க இயலாத சொற்கள்' இருக்கின்றன. இவற்றின் பொருளை விளக்க இலக்கு மொழியிலிருந்து இரண்டு அல்லது மூன்று சொற்களைச் சேர்த்துச் சொற்றொடராகவும் அமைக்கலாம். சான்றாக, 'கற்புநிலை' என்ற வாசகத்தை 'The Wedded Faith' எனப் பாரதியார் மொழிமாற்றம் செய்துள்ளதைக் கூறலாம். பலசொற்கள் மொழியியல் சூழ்நிலை மற்றும் பண்பாட்டுச் சமூகச் சூழல்களால் பிணைக்கப்பட்டிருப்பதனை மொழிபெயர்ப்பில் தனித்தனியே நிகரி (Equivalent) அமைத்து

மேற்கொள்ள இயலாது. அதாவது சொல்லுக்குச் சொல் மொழி பெயர்க்காமல் மூலத்தின் உள்ளுணர்வைத் தமிழில் கொண்டு வரச் சில இடங்களில் மூலத்திலுள்ள சில சொற்களை மொழிபெயர்ப்பில் விட்டுவிட நேரிடும். மொழிபெயர்ப்பு மரபுப்படி இவ்வாறு செய்தல் கூடாது என்று பழநி அரங்கசாமி கூறுகிறார்.[8] மொழிபெயர்ப்புத் துறையில் பாட, வாசகமொழியியல் (Text Linguistics) உருவாக்கியுள்ள தாக்குறவு (influence) மொத்த மூலத்தையும் மொழிபெயர்ப்பு அலகலகாக ஏற்றுக்கொள்ள வேண்டும் என்ற கருத்தை உருவாக்கியுள்ளது. இக்கருத்தினைக் காட்ரியாணோ பிக்கென் மறுக்கிறார். அவர் கருத்துப்படி மொழிபெயர்ப்பில் பல சொற்கள் சமூகச் சுற்றுபுறச் சூழலால் கட்டுப் படாமல் விடுதலைச் சூழலில் (context free) செயல்படுவனவாக உள்ளன. இந்நேர்வில் ஒரு மொழிபெயர்ப்பு மூலத்தின் உட்கருத்தை உணராது மேற்போக்காக இருந்தால் மூலத்தைவிட்டு விலகியதாகி விடும். மூலத்தின் உயிர்த்துடிப்பும் செயல்வடிவம் கொண்டதாக இருக்க வேண்டும். சான்றாக,

"ஆளன்றென்று வாளின் தப்பார்", (புறம்.74) என்ற வரியை A.K. இராமானுஜன், 'To give the thin the warrior's Death' என்ற உட்கருத்தை விளக்கி மொழிபெயர்த்துள்ளார். இவர் மொழி பெயர்ப்பின் அடிக்குறிப்பு உத்தியை விரும்பாது, மூலத்தின் உட்கருத்தை மொழிபெயர்ப்பினுள் வாசகரை மனதில் வைத்து மூலத்தினின்று செய்தியைக் கூடுதலாகச் சேர்த்து விளக்கியுள்ளார்.

ஷெல்லி கவிதையின் உள்ளடக்கத்திலும் உருவத்திலும் அக்கறை கொண்டிருந்தார். கவிதை ஒலி பெயர்ப்புகளில் அவர் நாட்டங் கொண்டிருந்தார். ஷெல்லியைப் பொறுத்தமட்டில் ஒரு பொருளைத் தெரிவிப்பதற்குச் சிந்தனை எந்த அளவிற்கு முக்கியமோ அந்த அளவிற்குச் சத்தங்களும் முக்கிய இடம்பெறும் எனக் கருதினார். நூலின் தரத்தை மொழிபெயர்ப்பில் பேணாவிட்டால் மூலத்தின் உயிர்த்துடிப்பிராது. ஆனால் செய்யுள், கவிதை மொழிபெயர்ப்புகளில் மிகச் சிக்கலான நிலை அவற்றின் சொற்பொருளையும் கருத்தாழத்தையும் வெளிக்கொணர்வதில் எழுகிறது. இந்நிலையில் வேறுபட்ட மொழியமைப்பினுடைய மொழிகளுக்கு இடையில் மூலமொழியின் இலக்கண அமைப்பிற்கு ஏற்ப அதன் தாள பாவங்களை இலக்கு மொழிச் செய்யுள் நடை மொழிபெயர்ப்பில் மாற்றிப் பேணுவது பெருஞ்சிக்கலாகும்.

---

8. ஷேக்ஸ்பியரின் நாடகங்கள் பற்றிய தமிழ் மொழிபெயர்ப்புகள், தினமணி சுடர், 1989, ப. 7.

ஜார்ஜ் ஸ்டெய்னரின் கருத்து என்னவெனில் நல்ல கவிதை மொழிபெயர்ப்பு நல்ல திறனாய்வாக அமையும் என்பதுதான். ஒரு திறனாய்வில் அவரவர் சொந்தக் கருத்துகளும் கருத்து விளக்கங் களும் இடம்பெறுதல் வழக்கமாகும். இது மொழிபெயர்ப்பிற்குத் தேவையில்லை. ஆகவேதான் சரஸ்வதி ராம்நாத் மொழிபெயர்ப்புக் கலை பற்றிக் கூறவந்தபோது,

> ஜெயகாந்தனின் கதையை மொழிபெயர்த்தால் அதில் ஜெயகாந்தனின் வீச்சு ஓட்டம், உயிர் இருக்க வேண்டும், தான் இருக்கக் கூடாது. . . . மொழி பெயர்ப்பாளர் மூல ஆசிரியரின் படைப்பை உள்வாங்கி வெளிப்படுத்த வேண்டும். அந்த ஜீவனைக் கொண்டுவர வேண்டும். கூட்டியோ குறைத்தோ எழுதக் கூடாது. மூலமொழியின் படைப்பாளி சரியாக எழுதவில்லை; தாம் நன்றாக எழுதிவிட்டோம் என்று சொன்னால் தவறு. அந்த இடத்தில் மொழிபெயர்ப்பாளன் துரோகியாகி விடுகிறான்

என்று குறிப்பிட்டுள்ளார். இது, நீதிபதி சு. மகராசன் ''மொழிபெயர்ப்பது எப்படி?'' என்ற கட்டுரையில் கூறிய கருத்தின் எதிரொலியாக உள்ளது.[9] அவர் ''மொழிபெயர்ப்பாளர் தம் கருத்தை மொழிபெயர்ப்பில் திணிக்கக்கூடாது. மூலநூலை விட்டுவிலகாது உள்ளதை உள்ளவாறு மொழிபெயர்ப்பதே அவரின் கடமையாகும். சில மொழிபெயர்ப்பாளர்கள் மூலத்தைவிட்டு விலகுவதால்தான் மொழிபெயர்ப்பையே ''மூலத்திற்கு இழைக்கும் துரோகம்'' என்கிறார்.

## 4:2 செய்யுள் மொழிபெயர்ப்பில் சிக்கல்கள்

செய்யுளை மொழிபெயர்ப்பதில் ஏற்படும் சிக்கல்களை ஒரு மூலமொழிச் செய்யுளையும் அதன் மொழிபெயர்ப்பையும் எடுத்து ஆய்வு செய்வதால் உணரலாம். ஜீரிலோத்மன் என்பவர் செய்யுள் மொழிபெயர்ப்பை, ''ஒரு நிலத்துப் பயிரை வேரோடு பறித்து வேறொரு நிலத்தில் நடுவதைப் போன்றது'' என்று கூறுகிறார். மொழிமரபு வழிப்பட்ட செய்யுளைச் செய்யுளில் மொழிபெயர்ப்பதா? அல்லது உரை நடையில் மொழிபெயர்ப்பதா? என்ற சிக்கலைப்பற்றிப் பலர் பலவாறு கருத்துத் தெரிவித்துள்ளார்கள். செய்யுளைச் செய்யுளாக மொழிபெயர்க்கவேண்டும் என்ற கருத்தை வலியுறுத்தும்

9. ஷேக்ஸ்பியரின் நாடகங்கள் பற்றிய தமிழ் மொழிபெயர்ப்புகள், தினமணி சுடர், 1989, ப. 11.

ஆய்வாளர்களில் நீதிபதி சு. மகராசனும் ஒருவர். வடிவம் பற்றிப் பேசுகையில், ''ஒரு பாரசீகத்து ரோஜாபூவை அம்மிக் குழவியில் வைத்துத் துவையலாக அரைத்துவிட்டால் அதன் சுவை மாறாமல் இருந்தாலும் அதற்கு மிக முக்கியமாக இருந்த வடிவம் அழிந்துவிடுகிறது'' என்று கூறுகிறார். தியோடர் சேவரியும் ''செய்யுளைச் செய்யுளாக மொழிபெயர்ப்பதே அது மூலத்துடன் தொடர்புடையதாகும்'' என்கிறார். செய்யுளை உரைநடையில் மொழிபெயர்ப்பதால் மூலத்தின் உணர்ச்சியையும் ஆற்றலையும் இழக்க நேரிடுகிறது என்பது அவர் வாதம். செய்யுள் தம் சொற்செறிவினாலும் உணர்ச்சிப்பெருக்கான கட்டுக்கோப்பினாலும் பல்மொழி, பண்பாட்டு, சமூக இயல்புகள் கொண்டதாகும். இப்பண்புகளை உரைநடையில் கொண்டுவர இயலாது. சான்றாக, புறநானூற்றின் 356 பாடலின் 1–4 வரிகளைக் காட்டலாம்.

**களரி பரந்து கள்ளி போகிப்**
**பகலும் கூவும் கூகையோட பிறன்வாய்**
**ஈம விளக்கிற் போய் மகளிரோடு**
**அஞ்சவ தன்றியும் மஞ்சுபடு முதுகாடு**

இவற்றை

Wild vegetation has spread, the tree spurge has grown, even in the day time. with hooting owl and demonesses that resort to the commentry-camp, this dark graveyard looks terrible - kadu is the graveyard

என்று பி.டி. சீனிவாச ஐயங்கார் உரைநடையில் மொழிபெயர்ப்புச் செய்ததை A.K. ராமானுஜன்,

**The Jungle spreads,**
**cast uses grow**
**owls hoot even by day**
**and haunted by she - demons**
**caping in the light of crematory fires**
**This ancient smouldering cremation ground**
**looks fearful . . . . .**

என்று மேற்கூறிய புறநானூற்று நான்கு அடிகளைச் செய்யுளில் மொழிபெயர்த்துள்ளார். மேற்கண்ட அறிஞர் பெருமக்களின் இருவகை மொழிபெயர்ப்புகளையும் ஒப்பிட்டு ஆய்வு செய்தால் செய்யுள் மொழிபெயர்ப்பின் சிறப்புப் பண்பு நன்கு புலப்படும். எனவே

செய்யுளைச் செய்யுளாக மொழிபெயர்க்கவேண்டும். உரைநடையை உரைநடையாக மொழிபெயர்க்க வேண்டும். இக்கருத்தினைப் பாஸ்ட்நட் ஆர்ச்செர், லெனார்டு போன்றோர் செய்யுள் மொழிபெயர்ப்பே துல்லியமாகவும் செறிவாகவும் இருக்குமெனக் கருதுகின்றனர்.

**4:3 கருத்தமைவு நிகரிகளின் சிக்கல்**

ஒரு மொழியில் சொல்லப்படும்/வழங்கும் கருத்தமைவுகளை (concepts) வேற்றுமொழியில் அதே உயிரோட்டத்துடன் வெளிப்படுத்த இயலாது. இருப்பினும் அறிஞர் பலராலும் பரவலாக ஒப்புக்கொள்ளப்பட்ட கருத்தமைவுகளுக்கான நிகரிகளைச் செய்யுள் மொழிபெயர்ப்பாயினும் சரி, பிறவாயினும் சரி, அம்மொழி பெயர்ப்பு, மூலத்தைவிட்டு விலகாது, அதற்கு உண்மையாக இருக்க நிகரித் தெரிவு, பயன்படும். ஆகவே தான், மொழி பெயர்ப்பியலின் நிகரித்தேர்வைப் பற்றி மொழிபெயர்ப்பியல், மொழியியல் வல்லுநர்கள் பல வழிகளில் ஆய்வு நடத்தியுள்ளனர்.

தியோடர் சேவரி, ஜே.சி. காட்ஃபோர்டு, யூஜீன் ஏ.நிதா, சூசன் பாஸ்நெட் – மெக்கையர், போப்போவிக் எனும் ஐந்து அறிஞர் பெருமக்கள் மொழிபெயர்ப்பில் நிகரிக் கொள்கை பற்றி ஆய்வு செய்துள்ளனர். இதில் பல வகைகளும் உள்ளன.

**கருத்தமைவுச் சொல் நிகரி** : செய்யுளின் கருத்தமைவு களாக இடம்பெறும் சொற்களைத் தமிழிலிருந்து ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கையில் அறிஞர் பெருமக்கள் சிக்கல்கள் பலவற்றை எதிர்கொண்டுள்ளனர். சான்றாக, தமிழில் 22 சொற்களால் அமைந்த பின்வரும் குறுந்தொகைச் செய்யுளை, ஏ.கே.இராமானுஜனும், ஜீ.எல். ஹார்ட்டும், சண்முகம் பிள்ளையும் லட்டெனும், அண்ணாமலையும் ஷிஃப்மேனும், ஜேசுதாசனும், கமில் சுவலபில்லும், பன்னீர்செல்வமும் ஆங்கிலத்தில் ஆளுக்குச் சராசரி நாற்பது சொற்களில் மொழிபெயர்த்துள்ளனர். இத்தகைய சொற்பெருக்கத்திற்குக் காரணம் இரு மொழிகளும் வெவ்வேறு குடும்பத்தவை.

**யாரு மில்லை தானே கள்வன்**
**தானது பொய்ப்பின் யானெவன் செய்கோ**
**தினைத்தா ளன்ன சிறுபசுங் கால**
**ஒழுகுநீர் ஆரல் பார்க்கும்**
**குருகும் உண்டு தான்மணந்த ஞான்றே!**

மேற்குறித்த பாடலை மொழிபெயர்த்த ஏழு நபர்களும் 'கள்வன்', 'பொய்ப்பின்' 'மணந்த', என்ற மூன்று கருத்தமைவுச் சொற்களை (words of concept) ஒவ்வொருவரும் ஒவ்வொரு

சொற்களைச் சொல்லுக்குச் சொல் தேடி நிகரிகளையிட்டு நிரப்பி உள்ளனர். பெருமையை விளக்குவதற்கு இலக்கிய இலக்கண ஆசிரியர்களின் வரையறைகளைப் படித்து மொழிபெயர்ப்பது விரிவான மொழிபெயர்ப்பிற்கு நல்ல சான்றாகும்.

'கள்வன்' என்பதை like a thief என்று பேராசிரியர் சண்முகம் பிள்ளையும் cheat என்று பன்னீர்செல்வமும் கையாண்டிருக்க மற்றவர்கள் 'கள்வன்' என்பதற்கு 'thief' என்றே மொழிபெயர்த்துள்ளனர். 'பொய்ப்பின்' என்றதை 'Lie' என ஏ.கே. இராமானுஜன், ஜீ.எல். ஹார்ட், சண்முகம் பிள்ளையும் லட்டினும் மொழிபெயர்க்க, இவர்களுடன் பன்னீர்செல்வமும் கைகோர்த்துள்ளார். மற்ற சிலர் leaves, false denies என்று மொழிபெயர்த்துள்ளனர். 'கள்வன்', 'பொய்ப்பின்', 'மணந்த' ஆகிய இலக்கிய மரபில் தமிழ் கூறும் 'அறம்' என்பதையும் அறத்தொடு நிற்றலையும் இராதாகிருஷ்ணன் இதே கருத்தோடுதான் கீதையில் வரும 'தர்மம்' என்ற சொல்லை ஆங்கிலத்தில் மொழி பெயர்க்காது, 'தர்மா' என்றே ஒலிபெயர்த்தார். யு.என். ஆனந்த மூர்த்தியின் 'சமஸ்காரா' என்ற நாவலை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவர் கூட, இச்சொல்லை அப்படியே ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தாரே தவிர அதற்கு நிகரி (Equivalent) தேடவில்லை.

இலக்கிய மொழிபெயாப்புகளில் சொற்களின் ஆற்றலுக்கு அகராதி துணை நிற்பதைவிட அனுபவத்தின் துணையே பெரிதும் வரவேற்கப்படுகிறது. மொழிபெயர்ப்பாளரின் சமூகப்பண்பாட்டுப் பட்டறிவு இலக்குமொழியில் இலக்கிய நயத்தை உணர்த்த அவர் ஆளும் நிகரிகளே புலப்படுத்தும். மூலத்தின் சொற்களைச் சொல்லுக்குச் சொல்லிட்டு மொழிபெயர்ப்பது பயனற்றது என்று பல சான்றுகள் கூறமுடியும். இக்குறையை ஓரளவு விளக்க, போக்க, மொழிபெயர்ப்பு உதவும் எனினும் அது இலக்கியச் செறிவிற்கு இடையூறாய் இருப்பின் தவிர்ப்பது நலம்.

இலக்குமொழி வாசகர், மூலபாடம் உணர்த்தும் காலத்தையும் சூழலையும் மனதளவில் போற்றும் இயல்பும் கற்பனை வளமும் பெற்றிருத்தல் நலம். எடுத்துக்காட்டாகப் பாரதியாரின் விடுதலை இயக்கப் பாடல்களைக் கூறலாம். பாரதியார் உணர்ச்சிவயப்பட அன்று எழுதிய சூழலை இன்று பலர் உணரவில்லை. காலமும் நடையும் மொழிபெயர்ப்பில் பெரும் சிறப்புப் பற்றிக் கூறவந்த ரூபன் பிரௌவர்,

> ஒரு மொழிபெயர்ப்பு நிறைவு பெறவேண்டுமானால் அந்நூல் மொழிபெயர்க்கப்படும் காலத்திற்குரியதாக இருக்க வேண்டும் என்பதோடு, காலத்திற்குரிய

> நடையோடு தமக்கென்ற தனிநடையும் பெற்று ஒரு
> மொழிபெயர்ப்பு இலக்கியச் சிறப்புப்பெற வேண்டும்.

என்று கூறுகிறார். அறிஞர் லெவி, மொழிபெயர்ப்பாளர் தன் நடையிலும் வடிவத்திலும் அக்கறை செலுத்த வேண்டும் என்கிறார். சங்க இலக்கியத்தின் உள்ளுறை உவமத்தை இலக்கு மொழி வாசகர் உணரச் செய்வது மொழிபெயர்ப்பின் நம்பகத் தன்மையை அதிகரிக்கும். இவ்வாறு செய்வது மிக மிகச் சிக்கலான செயல் என்கிறார் டாக்டர் ம.ரா.போ. குருசாமி அவர்கள்.

## 4.4 பெயர்களை மொழிபெயர்க்கையில் எழும் சிக்கல்கள்

பொருட்கள், மனிதர்கள், இடங்கள் ஆகியவற்றின் பெயர்கள் சமூக அங்கீகாரமும் தனிச்சிறப்பும் பெற உதவுகின்றன. மொழியின் தன்மையும் பெயர் வழங்குவதில் இன்றியமையாச் சிறப்பிற்குரியது. தமிழ் இலக்கியம் பொருட்கள், இடங்களை ஆங்கிலத்திலும், ஆங்கிலத் திலிருந்து தமிழிலும் மொழிபெயர்த்த மொழிபெயர்ப்பாளர்கள் பெயர்களைப் பலவகைகளில் மொழிபெயர்த்தளித்தனர். ஒலிபெயர்ப்பு முறைகள் பற்றி டாக்டர் கா.மீனாட்சி சுந்தரம் அவர்கள் தமிழாய்வில் எழுதிய கட்டுரை குறிப்பிட்டுள்ளது.[10] மொழிபெயர்ப்பாளர்கள் பெயர்களை மொழிபெயர்ப்பதற்குப் பல செயல்முறைகளைப் பின்பற்றியுள்ளனர். இம்முறைகளில் வரையறுக்கப்பட்டமுறை ஏதுமில்லை. மொழிபெயர்ப்பாளர் ஒவ்வொரு துறையிலும் தனித்தனியுத்திகளைப் பின்பற்றியுள்ளனர். இச்சிக்கல் ஏற்படுத்துவதற்கான பல காரணங்களில் சிலவற்றை மட்டும் இங்கே நாம் குறிப்பிடலாம்.

1. சமூகமும் பண்பாடும்
2. நிலமும் மொழியும்
3. காலமும் நாகரிகமும்
4. தாவரங்களின் பெயர்கள்
5. வேதியியற், தட்டுமுட்டுச் சாமான்கள் பெயர்கள்

### 1. சமூகமும் பண்பாடும்

தொல்காப்பியப் பெயர் பற்றிக் கூறும் நூற்பாவில் நிலப்பெயரை முதலாவதாகக் குறிப்பிட்டுள்ளார். சமூகத்தில் சோழ நாட்டவரைச் 'சோழியன்' எனவும் பாண்டிய நாட்டவரைப் 'பாண்டியன்' எனவும் வழங்கும் மரபுத்தமிழ் இலக்கியத்தில் உள்ளது. சங்ககால இலக்கிய

10. சென்னைப் பல்கலைக்கழக வெளியீடு, 1978–79.

மொழிபெயர்ப்புகளில் காணப்படும் பெயர்களை மொழிபெயர்ப்பதில் சிக்கல்களைச் சந்தித்துள்ளனர். சமூகத்தில் வாழும் மனிதர்களின் பண்பாடு பிரிக்க முடியாதது. நிலத்தால் மனித இனத்திற்கு ஒரு பிணைப்பு ஏற்பட்டது.

முல்லைபாட்டு மொழிபெயர்ப்பில் 'யவனர்' என்பதைப் பலரும் பலமுறைகளில் பெயர்த்துள்ளனர். இச்சொல்லை J.V. செல்லையா, 'Yavanas' என்றும், N. ரகுநாதன் Jonians என்றும் ர.வி. சுப்பிரமணியம் Greeks என்றும் மொழிபெயர்த்துள்ளனர். இவற்றுள்ள முதல் பெயர்ப்பிரிவு 'yavanas' என்பது ஒலிபெயர்ப்பு வகை. 'யவனர் வாழும் Jona தீவின் பெயரைக் கொண்டு உருவானது. Greeks என்பது கிரேக்கர்கள் என்ற பொது வழக்கு. மேற்கண்டவற்றுள் Jonians என்பது ஏற்புடைய நிலப்பெயர் நிகரியாகும். காரணம் தீவின் பெயரால் Jonians என்ற சொல் வழங்குவது யவனரை இலக்குமொழி வாசகர்களுக்குத் தக்கவாறு அடையாளம் காட்டுகிறது.

## 2. நிலமும் மொழியும்

நிலத்தையொட்டித் தலை மக்கள் பெயர்களும் இடம் பெற்றன. ஓரிடத்தில் வாழும் மக்கள் இடத்திற்கு ஏற்பச் சாரல் நாடன், மலை நாடன் என்றும் செய்தொழிலை வைத்து வலைஞன், கலைஞன், வேடன் எனவும் பெயர்கள் வழங்கப்பட்டன.

## 3. காலமும் நாகரிகமும்

சங்ககாலப் பழந்தமிழர் நாகரிகமும் பண்பாடும் பெயர்களில் தனி முத்திரைபெற்றுள்ளன. குறிப்பாகப் பொருட்பெயர்களை எபிரேயம், சமஸ்கிருதம் போன்ற மொழிகளில் செயற்கையாகச் சுட்டப்பட்டிருக்க, தமிழில் அவ்வாறல்லாது மனிதர், விலங்கு மற்றும் பறவையினங்களின் பெயர்களை மட்டும் இயல்பான முறையில் பால்வகைப் பெயர்களைப் பெற்றிருப்பது தமிழின் வளத்தைக் காட்டுகிறது.

சங்க இலக்கியங்களில் கணவன், மனைவி, தாய், குழந்தை உறவுகள் உள்ளன. திருவாசகம், திருவெம்பாவை போன்ற பக்தி இலக்கியங்களில் தாய், சேய் உறவு மற்றும் நாயக, நாயகி பாவம் ஆகியன செறிந்துள்ளன. மணிமேகலை, பெரியபுராணம் போன்ற காப்பியங்களில் உறவுமுறைப் பெயர்கள் காணப்படுகின்றன. முல்லைப்பாட்டில் இடம்பெறும் தாயார் (mother) என்றும் குறுந் தொகையிலுள்ள 'யாய்' ஆகியன My mother My father என்றும் உறவுமுறைப் பெயர்கள் சிக்கலின்றி மொழிபெயர்க்கப்பட்டுள்ளன.

### 4. தாவரங்களின் பெயர்கள்

விலங்கு தாவரம் போன்றவற்றின் பெயர்களை 1. ஒலிபெயர்ப்பு 2. மொழிபெயர்ப்பு 3. விளக்கமுறை எனப் பலமுறைகளில் இலக்கு மொழியில் வருணித்துள்ளனர். ஒலிபெயர்ப்பு முறையில் சான்றாக முல்லை– Mullai, கொன்றை–Konrai, காந்தள்–Kanthal, வள்ளி– Valli எனப் பல தாவரப் பெயர்களை மொழிபெயர்த்துள்ளனர். A.K. இராமானுஜன் தாவரங்களின் பெயர்களுக்கெனப் பின்னிணைப்பில் இலத்தீன் நிகரிகளைக் கொடுத்துள்ளார்.

### 5. வேதியியல் தட்டுமுட்டுச் சாமான் பெயர்கள்

வேதியியல் தட்டுமுட்டுச் சாமான் பெயர்களை இலக்கு மொழியாளர் அறியாத விடத்து ஒலிபெயர்ப்புச் செய்வதும் அறியுமிடத்து இலக்குமொழி நிகரி கொடுப்பதும் உண்டு. சில நேர்வுகளில் இவ்விரு முறைகளும் கலந்து இடம் பெறுவதுண்டு. சான்றாக 1. Foxgram - நரிப்பயறு, Foxgram - மோத்பீன், gum - கோந்து, Mats - தடுக்குகள், Ribbon - நாடாக்கள், Ice Jelly - ஐஸ்ஜெல்லி, Ventilators - காலதர்கள், Cigars - சுருட்டு, Jet Fuel - ஜெட் எரிவாயு, Hair Foods - தலைமுடிச் சத்துணவுகள் மொழியிலுள்ள கலைச்சொல்லாக்கம் அதன் சொற்'களஞ்சியத்திற்குச் சிறப்புச் சேர்க்கின்றது. சமூக வளர்ச்சியின் காரணமாக மொழியில் புதிய புதிய சொற்கள் தேவைப்படும். ஆங்கிலத்திலிருந்து தமிழுக்கு மொழிபெயர்க்கச் சமூக, சமய, அரசியல் பின்னணியை அறிந்திருத்தல் அவசியமாகும். இப்பின்னணி தமிழில் நிகரிகள் கிடைக்காததால் சிக்கலை விளக்கும்.

### 4:5 தீர்வுகள்

இக்கட்டுரையில் நடத்திய ஆய்வில் கண்ட சிக்கல்களுக்குச் சில தீர்வுகள் கீழே தரப்பட்டுள்ளன. சிக்கல்கள் சொல், கருத்து அளவிலும் பொருள் அளவிலும் இலக்குமொழி வாசகரின் பொருள் கொள்ளும் காரணத்தின் பேரிலும் ஏற்படலாம். இதுகாறும் ஆய்வு செய்ததில் சிக்கல்கள் மொழியியல் பயன்பாடு, சமூக வழியும் எழுந்துள்ளன. நிகரிதேடும் செயலாலும் சிக்கல் எழுந்துள்ளது. எப்போதும் மொழிபெயர்க்க இயலாத சில மொழிக்கூறுகளும் சிக்கல் விளைவிப்பன. இக்கருத்துப் பற்றி நீதிபதி சு.மகராசன் மொழி பெயர்ப்பது எப்படி? என்ற கட்டுரையில் விளக்கியுள்ளார்.[11]

---

11. சென்னைப் பல்கலைக்கழக வெளியீடு, 1978–79, ப. 11.

### 1. ஒருசீர்மை (Uniformity) ஒரு தீர்வு

ஒரே பொருளுடைய ஒரு சொல் வடிவம் வருமிடங்களி லெல்லாம் அச்சொல்லைத் தரப்படுத்தி (Standardise) ஒரு சீர்மையான நிகரியைத் தெரிவு செய்தல் ஒரு முறையான தீர்வாகும். இம்முறையினைக் கிருத்துவத் திருமறை மொழிபெயர்ப்புகளில் ஜி.யு. போப் பின்பற்றியுள்ளார். சான்றாக, திருமேனி– The Sacred Ash, திருமுகம்–The sacred face, திருவடி–The Sacred Feet, திருப்பதிகம் –The Sacred Song. 'திரு' என்ற அடைமொழி பக்தி இலக்கியங்களில் காணப்படுகின்றது. ஒரு சீர்மை முறையைப் பின்பற்றியே மொழி பெயர்ப்பதனால் மூலத்தின் சொற்செறிவை இலக்குமொழி வாசகரால் குழப்பமின்றி எளிதாக மூலப்பொருளை அறிந்துகொள்ள உதவும்.

### 2. அடிக்குறிப்பு/விளக்கக் குறிப்பு – ஒருவகைத்தீர்வு

மொழிபெயர்ப்பால் வாசகருக்கு உண்டாகும் மருட்சியையும் அயன்மையையும் போக்க இம்முறை உதவுகிறது. சங்க இலக்கியங்களில் அமைந்திருக்கும் உள்ளுறை உவமங்களைத் துணைக் குறிப்புகள் மூலம் விளக்குவது வாசகருக்கு உதவியாய் இருக்கும். குறுந்தொகையை மொழிபெயர்த்த பேராசிரியர் முத்துச் சண்முகமும் ஜான் லெட்டெனும் உள்ளுறை உவமத்தை மொழிபெயர்ப்பதில் இவ்வுத்தியைக் கையாண்டுள்ளார் (எ.டு.) குறுந்தொகை (152).

### 3. வாசகர் நயம் பேணுதல்

மொழிபெயர்ப்பில் வாசகர் புரிதிறனுக்கேற்ப மொழி பெயர்ப்பை அமைப்பது ஒரு தீர்வு. இதில் ஒரு சில நெளிவு சுளிவுகள் உண்டு. சூழலுக்கேற்ப வாசகத்தை அமைத்தல். இம் முறை பாரதியார் பாடல்களின் மொழிபெயர்ப்பில் 'கற்பு' என்பது ஆணும், பெண்ணும் ஒருவர் மீதும் மற்றவர் கொள்ளும் வெறும் நம்பிக்கை மட்டுமன்று திருமண வாழ்வு சம்மந்தப்பட்ட உறவுமுறை நம்பிக்கை என்பதனை உணர்த்த இராஜாஜி 'Conjugal fidelity' எனப் பெயர்ப்பு செய்ததனை இதற்குச் சான்றாகக் கூறலாம். இவ்விடத்தில் Conjugal fidelity என்றால் fidelityயின் பிரிவுகளுள் ஒருவகை.

### 4. சாரம் குறித்தல்

கலீல் கிப்ரான் பாடலை மொழிபெயர்த்த அ.மா. ஜகதீசன் பாடல் பகுதியின் சாரத்தை முதலில் ஓரிரு வாக்கியங்களில் குறித்துள்ளது மூலத்தை வாசகர் உணர உதவியது எனலாம்.

### 5. ஒன்றுக்குப் பல நிரிகளை அமைத்தல்

மொழிபெயர்ப்பு அது இலக்கியமாயினும் சரி அலுவலகக் குறிப்பாயினும் சரி, வாசகர் குழப்பமின்றிப் பொருள் கொள்ள அந்தந்த வாசகரின் மொழித்திறனை ஒட்டி ஒன்றுக்கு மேற்பட்ட நிகரிகளை ஆளுவதுண்டு. வாசகருக்குப் புரியாதோ என்று ஐயம் எழும்போது இம்முறையைப் பயன்படுத்தலாம். சண்முகம்பிள்ளையும், லட்டெனும் இவ்வுத்தியைக் குறுந்தொகை மொழிபெயர்ப்பில் பயன்படுத்தியுள்ளனர். 'அரியன்' என்னும் சொல்லிற்கு அவர்கள் Rare and difficult என்ற நிகரிகளை ஆண்டனர். 'Rare' என்பது 'அரிய' என்னும் பொருளை உணர்த்தினாலும் 'difficult' என்ற மற்றொரு நிகரியைப் பயன்படுத்தினர். மூலத்தின் கருத்தைத் தெளிவாக வெளிக்கொணர இவ்வுத்தி அமைக்கப்படுகிறது. அ.மா. ஜகதீசன் கலீல் கிப்ரான் பாடல்மொழிபெயர்ப்பில் இவ்வுத்தியைப் பயன்படுத்தி யுள்ளனர். ''காதலோகாதல்'' (Song of Love) என்ற பாடலில் பல நிகரியைக் கையாண்டுள்ளார்.

மேற்சுட்டிய தீர்வுகள் பலவும் மொழிபெயர்ப்பியலில் வழிகாட்டும் நெறி படைத்தவை : இவை மூலத்தின் கருத்தை இலக்கு மொழி வாசகர் செவ்வனே புரிய உதவுகின்றன.

### முடிவுரை

இந்த இயலில் மொழிபெயர்ப்பின் அறிமுக நிலையில் அது தொடர்பான செய்திகள் விளக்கப்பட்டன.

# 2. மொழிபெயர்ப்பு வளர்ச்சி வரலாறு

## மொழிபெயர்ப்பு – பொருள்வரையறை

மொழிபெயர்ப்புப் பற்றிய வரலாற்றை நாம் சுருக்கமாகக் காணலாம். ரேண்டம் ஹவுஸ் அகராதி மொழிபெயர்ப்பினை "ஒரு மொழியிலுள்ள ஒன்றை வேறொரு மொழியில் மாற்றுவது" எனப் பொருள் வரையறுக்கிறது. மொழிபெயர்ப்புக் குறித்து ஆய்வு செய்கின்ற அல்லது செய்து வந்திருக்கின்ற பிற அறிஞர்கள் பொருள் வரையறுத்துள்ளவற்றோடு ஒப்பிடும்போது இது மிகவும் சுருக்கமானதாகும். அவர்கள் மொழிபெயர்ப்பினை ஒரு மொழியிலிருந்து மற்றொரு மொழிக்கு அல்லது மற்றொரு மொழியிலான "மீள உருவாதல்" (நிதா 1947, 76) (பதிலமைவு செய்தல்/ மீள அமைத்தல்) (காட்ஃபோர்டு 1 & 2) "மாற்றுதல்" (பிரில்லியூ 1976, 1) "உருமாற்றம்" (ட்வேணி ஷோமேன் 1976, 138) "மீள அமைத்தல்/மாற்றுதல்" (பிஞ்சூக் 1977 : 30 & 35) "ஆக்குதல்" (நியூமார்க்) எனப் பலவாறாகப் பொருள் வரையறுத்துள்ளனர்.

## 5. மொழிபெயர்ப்புப் பற்றிய சுருக்கமான வரலாறு

சுருங்கக் கூறின் மொழிபெயர்ப்பு ஆய்வுகளைப் பற்றி நாம் விவரித்துக் கூறுவதற்கு முன்னர், மொழிபெயர்ப்பு ஆய்வுகளைப் பற்றிய வரலாறு மிக விரிவான கருப்பொருள் என்கிற காரணத்தினால் போதுமான அளவுக்கு அதைப்பற்றிச் சொல்வது. எந்த வகையிலும் அறிவியலில் காரணகாரியம் வகுத்துச் சொல்வது போல் அதனை விரிவுபடுத்திக் காட்டமுடியாது. அது தொடர்ச்சியாக விடுபடாமல் சொல்லக் கூடியதொன்றல்ல. எனவே இந்த ஆய்வுப் பகுதியில் மொழிபெயர்ப்புப் பற்றிய நீண்ட நெடிய வரலாற்றில் ஒருசில முக்கியச் செய்திகளை மட்டுமே குறிப்பிட்டுக் கூற இயலும் (அமோஸ் 1920 ஒஃபின்லே 1971: 18 ஸ்டேய்னர் 1975: 236 பேஸ்நெட் மேக்னகர் 1980: 39). மேலும் பொதுவாக நன்குதெரிந்த / அடையாளம் காட்டக் கூடியவையுமான வரலாற்றுக் காலக்கட்டங்களைப் பின்பற்றுவதன் மூலம் வரலாற்றுக் கால அளவுகளைத் திட்டவட்டமாகப் பிரிப்பதில் நாம் சிக்கல்களைச் சந்திக்க வேண்டியதாக உள்ளது. எனினும் "வரலாறு" மற்றும் மொழிபெயர்ப்பு என மேலே விவாதிக்கப்பட்ட

1. Susan Bassnett, McGuire - Translation Studies, Methuen and Co. Ltd., 1985.

கருத்துக்களை ஒருபுறமும் மொழிபெயர்ப்புக் கொள்கை மற்றும் செய்முறை வளர்ச்சி வரலாறு சார்ந்த முறையிலான பகுப்பாய்வினை மறுபுறமும் வழிகாட்டு நெறிகளாகக் கொண்டு இதனை நாம் விவாதித்துச் செல்லுதல் வேண்டும்.

## 5.1. பண்டையகாலம்

கி.மு. ஐந்தாம் நூற்றாண்டில் நெஹிமியா எனும் யூதத் தலைவர் அரபுமொழி பேசுகின்ற யூதர்களுக்காக ஈப்ரு மொழியிலிருந்து திருநூலை அரபு மொழியில் மொழிபெயர்த்தார். கி.மு. 210ஆம் ஆண்டில் ஹமுராபி அரசன் அரசவை அதிகாரமுறை அறிவிப்புகள் அனைத்தையும் குடிமக்கள் பேசிவந்த பல்வேறு மொழிகளில் மொழிபெயர்த்தளித்தார். கி.மு. 240 ஆம் ஆண்டில் அதிக எண்ணிக்கையில் கிரேக்க இலக்கியங்கள் இலத்தீனில் மொழிபெயர்க்கப்பட்டன. கி.மு. முதலாம் நூற்றாண்டில் கேட்டூலஸ், பல கிரேக்க நூல்களை இலத்தீனில் மொழிபெயர்த்துள்ளார். கி.பி. முதலாம் நூற்றாண்டில் பிளினி இலக்கிய நுணுக்கத்துடன் மொழிபெயர்ப்புச் செய்வதைப் பயின்று அம்முறையைப் பரப்பிவந்தார்.

பிளினி மொழிபெயர்ப்பின் தத்துவத்தை வலியுறுத்தியுள்ள போதிலும் சிசோரோவைப் போலல்லாமல், "பொருளுக்குப் பொருள்" என்பதான மொழிபெயர்ப்பு முறைக்கே ஆதரவு அளித்தார்.

## 5.2. இடைக்காலம்

கி.பி. எட்டாம் மற்றும் ஒன்பதாம் நூற்றாண்டுகளில் (கி.பி. 64 கி.பி. 636இன்போது) ரோமப்பேரரசின் ஒரு பகுதியான சிரியாவிலிருந்து அறிஞர்கள் பாக்தாத் நகருக்கு வந்து மருத்துவயியல் அறிஞர் ஹிப்போக்ரேட்ஸ் என்பவரும் (கி.மு. 460–360) தத்துவ அறிஞர்கள் பிளாட்டோ (கி.மு. 427–327) மற்றும் அரிஸ்டாட்டில் என்பவர்களும் இயற்றியுள்ள கிரேக்க நூல்களை அரபு மொழியில் மொழிபெயர்த்தனர் (ஃபின்லே 1971, 19). இந்நகரம் கி.பி. இருபதாம் நூற்றாண்டிலும் கூடக் கிரேக்க இலக்கியங்களை அரபுமொழியில் மொழிபெயர்க்கின்ற ஒருமையாக விளங்கி வந்திருக்கின்றது.

கி.பி. எட்டாம் நூற்றாண்டின் போதான "மூரிஷ்' படையெடுப்பு அரபு மற்றும் சிரிய மொழிகளிலிருந்து இலத்தீன் மொழியில் மொழிபெயர்ப்புச் செய்யப்படுவதைத் தோற்றுவித்தது. இந்தப் போக்கு கி.பி. பதினோராம் மற்றும் பன்னிரண்டாம் நூற்றாண்டுகள் முழுவதும் தொடர்ந்தது.

செர்மானியக் கொள்கையாளரும் எழுத்தாளரும் சீர்திருத்தத் தலைவருமான மார்டின் லூதர் கிங் என்பவர் (கி.பி. 1483–1546)

பேச்சு வழக்கிலுள்ள வட்டார வழக்குகளையும், மரபுத் தொடர்களையும் மொழிபெயர்ப்பு நடையில் பயன்படுத்தி மக்களுக்குச் சமய விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தியதால் இப்பதினாறாம் நூற்றாண்டு "சீர்திருத்தக் காலம்' என வழங்கப்பட்டது.

மேலும் வேறு சில ஐரோப்பிய நாடுகளிலிருந்து இந் நூற்றாண்டில் இன்னும் சில எடுத்துக் காட்டுகளை மொழிபெயர்ப்பு தொடர்பாக ஆராயலாம். இங்கிலாந்தில் கி.பி. 1525இல் விலியம் திண்டேல் (கி.பி. 1492–1536) என்பவர் "புதிய ஏற்பாட்டைக்" கிரேக்கத்திலிருந்தும், "பழைய ஏற்பாட்டை" ஈப்ருவிலிருந்தும் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துக் கி.பி. 1525ஆம் ஆண்டில் வெளியிட்டார். திண்டேல் அம்மத வேதங்களை மொழிபெயர்த்த முறையை விரும்பாத தேவாலய அதிகார அமைப்புகள் (அம்மொழிபெயர்ப்புகளைக் கி.பி. 1526ஆம் ஆண்டில் தீயிலிட்டுக் கொளுத்தினர். அத்துடன் அல்லாமல் மொழிபெயர்ப்பாளர் திண்டேலையும் 1536ஆம் ஆண்டில் உயிரோடு தீயிலிட்டுக் கொளுத்தினர். இதே போன்று பிரான்சு நாட்டு எட்டினி தோலட் (1509–46) என்ற மனித நேய உரிமையாளர் பிளாட்டோவின் வசனங்களில் (Dialogues) ஒன்றை மொழிபெயர்த்தார். இம்மொழி பெயர்ப்பு ஆத்திக மக்களிடையே, நாத்திக உணர்வைத் தூண்டுவதாகக் குற்றம் சாட்டி அவரைத் துன்புறுத்தி அவரது முப்பத்தேழாவது வயதில் அவரைத் தூக்கிலிட்டுக் கொன்று அவர் சடலத்தோடு அவர் மொழிபெயர்த்த நூல்களையும் வைத்துக் கொளுத்தினர் (நிதா: 1964 பேஸ்நெட் : மேக்கைர் 1980: 48–54).

## மொழிபெயர்ப்பு முறை

தோலட், திண்டேல் ஆகியோர் எரிக்கப்பட்ட இச்சூழ்நிலையில் லெஃபவேர் எனும் மொழிபெயர்ப்பு ஆய்வாளர் தரும் விளக்கத்தைக் காணலாம். மொழிபெயர்ப்பாளர்கள் விவிலிய நூலை மொழிபெயர்த்த போது கிரேக்கமொழி தெரியாமல் இருந்தார்கள் என்ற காரணத்தினால் எரிக்கப்படவில்லை. அவர்கள் எரிக்கப்பட்டதற்கான காரணம் அவர்கள் பைபிளை மொழிபெயர்த்த முறை தேவாலய அதிகார அமைப்பின் பொறுப்பிலிருந்தவர்களை அச்சுறுத்தியதே யாகும். இவ்வளவு கொடுமையாக மொழிபெயர்ப்பாளர்கள் தண்டிக்கப்பட்ட போதிலும், பதினாறாம் நூற்றாண்டின் இறுதியில் சார்ச் சேப்மேன் (கி.பி. 1559–1634) ஆங்கிலக் கவியும் நாடக ஆசிரியரும் மொழிபெயர்ப்பாளருமான எட்டினி தோலட்டின் (கி.பி. 1509–46) மொழிபெயர்ப்பு நெறிமுறைகளை எடுத்து விளக்குகிறார்.

ஒரு மொழியிலிருந்து மற்றொரு மொழிக்கு மாற்றும்போது மொழிபெயர்ப்பாளர் பின்பற்றவேண்டுமெனத் தோலட் கூறிய நெறிமுறைகள் பின்வருமாறு:

1. மூல ஆசிரியரின் குறிப்பையும் பொருளையும் புரிந்து கொள்ளுதல் வேண்டும்.
2. மூலமொழி, இலக்குமொழி ஆகியவற்றில் முழுமையான அறிவு பெற்றிருத்தல் வேண்டும்.
3. சொல்லுக்குச் சொல் மொழிமாற்றத்தினைத் தவிர்த்தல் வேண்டும்.
4. மக்கள் வழக்கிலுள்ள பேச்சு வழக்குச் சொற்களையே கண்டிப்பாகப் பயன்படுத்துதல் வேண்டும்.
5. மூலத்தின் சரியான தொனிப்பொருளை வெளிக்கொணரும் வகையில் பொருத்தமான உரிய சொற்களைத் தெரிவு செய்து அவற்றை முறைப்படுத்திப் பயன்படுத்தவேண்டும் (பேஸ்நெட் மேக்கைர் 1980, 54).

இந்நூற்றாண்டில் திண்டேல், தோலட், முன்ஜர், லூதர்கிங் போன்றோர் மொழிபெயர்ப்பினைச் சமுதாய–சமய விழிப்புணர்ச்சிக்கான ஆயுதமாக, தன்னியல்பாக, அறிவார்ந்த செயலாகப் பயன்படுத்தியதை நாம் அறியலாம். தோலட் அன்று சொன்ன மொழிபெயர்ப்பு நெறிகள் இன்றும் பொருந்தும்.

பதினேழாம் நூற்றாண்டில் கிரேக்க, இலத்தீன், பிரஞ்சு ஆகிய மொழிகளில் பல நூல்கள் மொழிபெயர்க்கப்பட்டன. இந்நிலை ஆங்கில மொழியிலும் இலக்கியத்திலும் அதிக தாக்கத்தை ஏற்படுத்தியது. இம்மொழிபெயர்ப்பு இலக்கியங்களில் தரப்பட்டிருந்த அறிமுக உரைகள் மொழிபெயர்ப்பு உத்திகள் சில ஆய்வு நோக்குப் பற்றியதாய் அமைந்தன. அவை முறையே:

1. சொல்லுக்குச் சொல் (Meta phrase) உத்தி
2. சுருக்குமுறை (Paraphrase) உத்தி
3. போலச்செய்தல் (Imitation) உத்தி ஆகியவை.

இம்மூன்றும் ஆங்கிலக் கவிஞரும் மொழிபெயர்ப்பாளருமான ஜான்திரைடன் (கி.பி. 1631–1700) என்பவரால் முன்மொழியப்பட்டன. இவரது சமகாலத்தவரான ஆப்ரகாம் கௌலி (கி.பி. 1618–67) என்பவர் மொழிபெயர்ப்புச் செய்முறையில் சுதந்திரமான போக்கினர். இவர் சொல்லுக்குச் சொல் மொழிபெயர்ப்பு முறையானது ஒருபித்தன் மற்றொரு பித்தனை மொழிபெயர்ப்பதாகும் என்று கருதினார்.

பதினெட்டாம் நூற்றாண்டில் அலெக்சாண்டர் ஃபிராசர் டைட்லரின் மொழிபெயர்ப்புக் கொள்கைகள் (1791) என்னும் நூல் மொழிபெயர்ப்பு ஆய்வுகளில் குறிப்பிடத்தக்கதாகும். டைட்லர் கருத்து

(ideal), நடை (style) மற்றும் எழுத்தின் முறை (Manner of writing) மூலத்தின் எளிமை (Ease of the original work) ஆகியவற்றைத் துல்லியமாக வெளிக்கொணர்வதை வலியுறுத்தினார்.

## 5.3. தற்காலம்

பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதியில் கிழக்கிந்திய கம்பெனி நிருவாகிகள் இந்தியமொழி, இலக்கியம், பண்பாடு முதலியவற்றில் ஆர்வங்கொண்டு இந்திய மொழிகளில் இருந்து ஆங்கிலத்திற்கு மொழிபெயர்த்தனர். இவ்வகை மொழிபெயர்ப்புகளைச் செய்வோரை ஊக்கப்படுத்தினர். இந்தியா வந்த ஆங்கில நிருவாகிகளில் பலர் கல்வியாளர்களாக இருந்ததால் அவர்களே நேரடி மொழிபெயர்ப்புப் பணிகளையும் மேற்கொண்டனர். எடுத்துக் காட்டாக 1776ஆம் ஆண்டில் என்.பி.ஹால்ஹெட் வடமொழியில் இருந்து இந்துச் சட்டங்களை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தார். 1785ஆம் ஆண்டில் சார்லஸ் வில்கின்ஸ் "கீதை'யை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார். வில்லியம் ஜோன்ஸ் வடமொழிச் 'சாகுந்தலம்', நாடகத்தை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார்.

பத்தொன்பதாம் நூற்றாண்டு சமயக் குழுவின் காலமாகும். இக்காலத்தில் பைபிள் உலகமொழிகள் பலவற்றில் மொழிபெயர்க்கப் பட்டது. தமிழகம் வந்த கிருஸ்தவ சமயக் குரவர்களான பெர்சீவல், ஜி.யு.போப், கால்டுவெல், வீரமாமுனிவர் போன்ற கிருஸ்தவ சமயப் பாதிரிமார்கள் தமிழ் இலக்கிய நூல்களை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்ததோடு பல மூலமொழி ஆய்வுகளையும் நடத்தி தமிழ்மொழி இலக்கிய வளர்ச்சிக்கு வழிவகுத்தனர். இவர்கள் தமிழ்நாட்டுப் பண்பாடு, கலை முதலியவற்றை மேலைநாட்டவரை அறியச் செய்தனர்.

இருபதாம் நூற்றாண்டில், "மொழிபெயர்ப்பு" ஒரு சமூக நடவடிக்கையாகத் தீவிரம் அடைந்ததால் இதைச் சமய அரசியல் சக்திகள் கருவியாகப் பயன்படுத்தின.

தற்காலத்தில்தான் மொழிபெயர்ப்பு பொருளாதாரம், அரசியல், பண்பாடு, சமயம் முதலியவற்றோடு தொடர்புடைய சமூக விழிப்புணர்ச்சியூட்டும் மிகவும் இன்றியமையாத நிலையை எய்தியது.

## 5.4 இந்திய மொழிபெயர்ப்பு

பதினோராம் நூற்றாண்டு வாக்கில்தான் பல இந்திய மொழிகளில் மொழிபெயர்ப்புகள் அதிக அளவில் வெளிவரத் தொடங்கின. தெலுங்கில் மகாபாரதத்தை மொழிபெயர்த்து நிறைவு செய்ததில் நன்னையாவைப் பின்பற்றித் திக்கண்ணா, எரானா

ஆகியோர் செய்த இலக்கிய வழி மரபிலான தெலுங்குக் கவிதையே தெலுங்கு மொழி பேசுகிற சமுதாயத்தில் முதல்மொழிபெயர்ப்புப் பணியாகும். இதில் நன்னையாவின் மொழிபெயர்ப்பில் அதிக அளவில் சமஸ்கிருதச் சொற்கள் பயன்படுத்தப்பட்டுள்ள அணுகுமுறையை அவர்தம் மொழி நடையாகக் கொண்டார். ஆனால், இதற்கு மாறாகத் திக்கண்ணாவோ நாட்டு வழக்கிலுள்ள சொற்களைக் கையாளும் அணுகுமுறையை அதிகம் பின்பற்றினார்.

இந்தியாவில் கி.பி. 1300–1500 காலக்கட்டத்தில் வங்காளத்தை ஆண்ட முகமதிய அரசர்கள் இந்துக்களின் சமய வாழ்க்கையினையும் குடும்ப வாழ்க்கையையும் திருத்திச் செம்மையுற அமைப்பதில் "இராமாயணத்திற்கும்" "மகாபாரதத்திற்கும்" இருந்த வியத்தகு பங்கினை உணர்ந்தனர். அவர்கள் வடமொழி அறிந்த வங்காள அறிஞர்களைக் கொண்டு அவற்றை வங்காள மொழியில் மொழிபெயர்க்கச் செய்தனர் (செங்குப்தா, எஸ். 1993). அத்தகைய மொழிபெயர்ப்புகள் முகமதிய ஆட்சியாளர்கள் தங்கள் குடிமக்களைப் புரிந்து கொள்வதற்கும் அவர்களைக் கட்டுபாடு செய்து வருவதற்கும் மிகவும் உதவியாக இருந்தன.

பதினாறாம் நூற்றாண்டின்போது வடமொழி இலக்கியங்களும், பகவத் கீதையும் அவை போன்ற பிற சமய நூல்களும் அசாமி, வங்காளம், மலையாளம், தமிழ், தெலுங்கு, மராத்தி, ஒரியா போன்ற இந்திய மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டன (சோப்ரா, 1984–64–78). இத்தகைய மொழிபெயர்ப்புகளை இந்து முகமதிய மன்னர்கள் தாங்கள் ஆண்ட மக்களோடு பழகும் மற்றும் அவர்களைக் கட்டுப்பாட்டில் வைக்கும் நோக்கில் மேற்கொண்டனர்.

மொழிபெயர்ப்பைப் பொறுத்த வரையில் தமிழ் மொழிபெயர்ப்பு வரலாற்றில் "தழுவல்" தான் தொடக்கக் காலத்தில் செல்வாக்குப் பெற்றிருந்தது என்று சிலர் கூறுவர்.[2] மொழிபெயர்ப்பின் வரலாற்று வளர்ச்சியில் "சொல்" என்பதை வைத்தே முதலில் மொழிபெயர்ப்பு தோன்றியிருக்க வேண்டும் என எண்ணுவது, இரண்டின் வளர்ச்சி வரலாறு வெவ்வேறாயிருக்குமென்ற குழப்பத்தைக் காட்டுகிறது. ஆனால் மொழிபெயர்ப்புத் தழுவலும் ஒரு நாணயத்தின் இருபக்கம் முட்டையும் கோழியும் போன்றது. அதன் தோற்ற வரலாறு என்ற கூற்றை அந்நாள் சட்டத் தமிழ்ப் பிரிவு இயக்குநர் இந்நூலாசிரியர்

2. 'தழுவல்' பற்றி இந்நூலாசிரியர் எழுதிய 'மொழிபெயர்ப்பு மரபுகள்' என்ற நூலில், 1990 பயோனியர் புத்தக வெளியீடு, சென்னை – 5இல் காண்க.

போன்றோர் ஏற்பதில்லை. "மொழிபெயர்ப்பியலில்" "மொழிபெயர்ப்பு" எனும்போதே அது முழுமையான அல்லது சரியான மொழிபெயர்ப்பு என்றே பொருள்படுகின்றது. முழுமையான அல்லது சரியான மொழிபெயர்ப்பு என்றால் ஒரு மொழியில் அமைந்துள்ள கருத்தினை முழுமையாகவோ அல்லது சரியாகவோ இன்னொரு மொழியில் மாற்றி அமைக்காவிட்டால் அது தழுவல் என்றே தொனிக்கிறது.

## தமிழில் மொழிபெயர்ப்பு

சங்கம் மருவிய காலத்தில் தோன்றிய நூல்களில் வடமொழிச் சார்பு அளவிறந்து காணப்படுகிறது என்று இலங்கைத் தமிழ்ப் பேராசிரியர் க.வேலுப்பிள்ளை தமது நூலான "காலமும் கருத்தும்" என்ற நூலில் கூறுவதால் வடமொழித் தழுவல் தமிழ் இலக்கியத்தில் உள்ளதை உணரலாம்.

தொல்காப்பியர் காலத்தில் சொல் நிலையிலும் சங்க காலத்தில் சொல் "கதை" நிலையிலும் மொழிபெயர்ப்பு இடம்பெறு கின்றது. கி.பி. ஐந்தாம் நூற்றாண்டிலே வடமொழியின் செல்வாக்கும் தமிழகத்தில் ஓங்கியது. ஆனால் கி.பி. ஏழாம் நூற்றாண்டு முதல் வடமொழி நூல்களைத் தழுவித் தமிழில் நூல்களை இயற்றுவது தொடங்கப் பெற்றது என்றார் டாக்டர் மு.வரதராசனார்.[3] சங்க காலத்திலும் அதன்பின்னும் கருத்து முறையிலும் எட்டாம் நூற்றாண்டிற்கு பின் வடமொழி இலக்கியங்களையும் சமய நூல்களையும் பத்தொன்பதாம் இருபதாம் நூற்றாண்டுகளில் ஐரோப்பிய இலக்கியங் களையும் தழுவிப் புதுவகை மேம்பாடு அடையச் செய்தனர். மொழிபெயர்ப்பும் மூலவாசகம் போன்று மிகவும் பழமையானது.

## தமிழில் மொழிபெயர்ப்பு வரலாறு

தமிழ் மொழிபெயர்ப்பு வரலாற்றில் தொல்காப்பியர் காலந் தொட்டுச் சொற்றொடர் அளவிலும் சங்க காலத்திலும் அதற்குப் பின்னரும் கருத்து முறையிலும் எட்டாம் நூற்றாண்டிற்குப் பின் வடமொழி இலக்கியங்களையும் சமய நூல்களையும் 19ஆம் நூற்றாண்டு 20ஆம் நூற்றாண்டுகளில் ஐரோப்பிய மொழிகளில் இலக்கியங்களையும் தமிழில் வளர்க்கத் தொடங்கினர். இதில் ஒரு கூறு இலக்கிய மொழிபெயர்ப்பையும் மறுகூறு தழுவல் இலக்கியங் களையும் சாரும் என்றால் மிகையாகாது. மொழிபெயர்ப்பைப் பொறுத்த வரையில் தமிழ்மொழி வரலாற்றில் 'தழுவல்'தான் செல்வாக்குப் பெற்றிருந்தது என்று கூறும் சிலர் மொழிபெயர்ப்பின் வரலாற்று வளர்ச்சியில் 'சொல்' என்பதை வைத்தே முதலில்

---

3. 'மொழிநூல்' டாக்டர் மு.வ., பாரிநிலையம், சென்னை – 108.

மொழிபெயர்ப்பு தோன்றியிருக்க வேண்டும் என எண்ணுகின்றனர். ஆனால் மொழி பெயர்ப்பும் தழுவலும் ஒரு நாணயத்தின் இருபக்கம் என்பதை நாம் அறிவோம்.

வால்மீகி இயற்றிய ஆதிகாவியத்தை ஒட்டியே கம்பர் தம் காப்பியத்தை எழுதியபோதிலும் கம்பராமாயணம் மொழிபெயர்ப்பும் அல்ல; வெறுந்தழுவலுமல்ல என்கிறார் டாக்டர் மு.வ. அவர்கள். ஒரு புதுக்காப்பியம் போல் விளங்குமாறு கம்பர் தம் கற்பனைத் திறனால் படைத்துத் தந்துள்ளார். கம்பருக்குப் பிறகே இந்தியா முழுவதும் இராமவழிபாடு பெருகியது என்பர். வால்மீகி இராமாயணத்தில் உள்ள பலவற்றைத் தம் காவியத்தில் கம்பர் அவ்வாறே தந்துள்ளார். சிலவற்றை விரிவாக்கி எழுதியுள்ளார். வால்மீகி சொல்லாத சிலவற்றைத் தாமே படைத்துத் தந்துள்ளார். கம்பரின் ''மாயா சனகப் படலம்'' வால்மீகி நூலில் இல்லாதது. கணவனை இழந்த பின் தாரை மங்கல அணி துறந்து மலர் புனைதல் முதலியவை இல்லாமல் துயரமே வடிவாய் விதவை வாழ்வை நடத்துவதாகத் தமிழ் மகளிர் போற்றத்தக்க வகையில் கம்பர் காட்டியுள்ளார். வால்மீகி இராமாயணத்தில் இரணியன் பற்றிய விளக்கம் இல்லை. திருமணத்துக்கு முன்பு இராமனும் சீதையும் ஒருவரையொருவர் கண்டுகொண்டதாக வால்மீகி கூற வில்லை. கம்பர் அவர்களின் திருமணத்தைக் காதல் திருமணமாக அமைத்துக் காட்டியுள்ளார். இது தழுவல் படைப்பிற்குச் சிறந்த எடுத்துக்காட்டு. அறிஞர் அண்ணா மொழிபெயர்ப்பில் பங்காற்றினார். புதுமைப்பித்தன் முதலானோர் பங்கும் கதை உலகில் அதிகம்தான்.

## தொல்காப்பியத்தில் மொழிபெயர்ப்புக் கொள்கை

முதல்நூல், வழிநூல் என நூல் இருவகைப்படும் என்பார் தொல்காப்பியர் (கி.மு. 3ஆம் நூற்றாண்டு). வழிநூல்கள், நான்கு வகை என அவர் பகுத்துக் கூறியுள்ளார்.

**மரபு நிலை திரியா மாட்சியவாகி**
**உரைபடு நூல்தாம் இருவகை இயல**
**முதலும் வழியும் என நுதலிய நெறியின**

– தொல் – பொருள் – மரபியல் – 92

என்பது நூல்கள் முதல்நூல், வழி என இருவகைப்படும் என்பதைக் குறிக்கின்ற நூற்பாவாகும்.

**வழியெனப்படுவது அதன் வழித்தாகும்**

– மேற்படி – 95

என்பதும்,

**வழியின் நெறியே நால்வகைத்தாகும்**

**– மேற்படி – 95**

என்பதும் வழிநூல் பற்றிய பொதுவிளக்கம் தருவன.

**தொகுத்தல் வகுத்தல் தொகைவிரி மொழிபெயர்த்து**
**அதர்ப்பட யாத்தலோடு அன்னமரபினவே**

– மேற்படி – 97

என்பது வழிநூல்களின் வகைகளைப் பெயரிட்டுக் கூறும் சூத்திர மாகும். 'மொழிபெயர்த்து அதர்ப்படயாத்தல்', என்று சுட்டுவதில் இருந்து மொழிபெயர்ப்பு நூல்களைப் பற்றித் தொல்காப்பியர் அறிந்திருந்தார் என்பது தெளிவு. 'மொழிபெயர்ப்பு' என்பதில் மூல மொழி நூலைப் பெயர்க்கும்போது இலக்குமொழிக்குரிய மரபு கட்டாயம் பேணப்பட வேண்டும். அதர்ப்படயாத்தல் என்ற சொற்றொடர் இதனை உணர்த்தும். சொல்லுக்குச் சொல் மொழி பெயர்த்தால், பொருள் விளங்காது. காரணம் அந்தந்த மொழிக்குரிய நடை மரபு உண்டு என்பதேயாகும். எ–டு. 'He has a pen' 'அவன் உடையன் ஒரு பேனா' என்பது சொல்லுக்குச் சொல் பெயர்த்த முறை. 'அவன் ஒரு பேனா வைத்திருக்கிறான்' என்றோ, 'அவனிடம் ஒரு பேனா இருக்கிறது' என்றோ மொழிபெயர்ப்பதே தமிழ் நடை மற்றும் தமிழ் மரபின்பாற்பட்டதாகும். வடமொழியில் சொல்லிறுதி எழுத்தைக் கொண்டு பால் வேற்றுமைகொள்வர். தமிழில் பொருள் பற்றியே பால் வேறுபாடு சுட்டுவர். பார்யா–ஆண்பால், களத்ரம்–அலிப்பால். இவை வாழ்க்கைத் துணையாகிய மனைவியைக் குறிக்கின்ற வடமொழிச் சொற்கள். பொருள் குறித்த பால்பாகுபாடு இல்லா வடமொழியும் பொருளின் அடிப்படை கொண்டே பால் வகுக்கும் தமிழ் மரபும் ஒன்றாக முடியாது. இந்தப் பின்னணியில் சொல்லுக்குச் சொல் மொழிபெயர்த்தால் (அதர்) வழி மாறிவிடும் என்பது தெளிவு.

பின்னே தோன்றிய நன்னூலும் (கி.பி. 12ஆம் நூற்றாண்டு) நூல் வகைகளைச் சொல்லுகிறது. முதல்நூல், வழிநூல், சார்பு நூல் என நூல்களை மூவகைப்படுத்திய பவணந்தியார், மொழிபெயர்ப்பு நூலை விதந்தோதவில்லை.

'மொழிபெயர்த்து அதர்ப்படயாத்தல்' என்பதற்கு 'வடமொழிப் பனுவலை மொழிபெயர்த்துத் தமிழ்மொழியாற் செய்தல்' எனப் பொருள்படும்.

# 3. மொழிபெயர்ப்பின் இருதிற வகைகள்

மொழிபெயர்ப்பினைத் துறை வகையாகவும் செய்முறை வகையாகவும் என இரு திறத்தினால் பகுக்கலாம். செய்முறையில் கீழ்க்காணும் வகைகளாக மொழிபெயர்ப்பினை அடக்கலாம். அவையாவன முறையே,

1. சொல்லுக்குச் சொல் பெயர்ப்பு
2. விரிவான மொழிபெயர்ப்பு
3. முழுமையான அல்லது சரியான மொழிபெயர்ப்பு
4. சுருக்கமான மொழிபெயர்ப்பு
5. தழுவல் மொழிபெயர்ப்பு
6. மொழியாக்கம்

மொழிபெயர்ப்பை வகைப்படுத்துகின்ற நிலையில் ஒவ்வொருவரும் அவரவரின் கருத்திற்கிணங்கச் செயல்படுகின்ற தன்மையினைக் காண்கிறோம்.

## 6. மொழியும் மொழிபெயர்ப்பில் அதன் பங்கும்

மனிதன் தன் கருத்துகளைத் தெரிவிக்க விரும்பிய போதும் எண்ணங்களைப் பகிர்ந்துகொள்ளக் கருதிய போதும் மொழி உருவாயிற்று. அதனால்தான் மொழி என்பது கருத்துப் பரிமாணத்திற்கான கருவி எனப்பட்டது. தமிழின் முதல் இலக்கண நூலான தொல்காப்பியம் மொழியின் தோற்றம் பற்றிப் பேசுகின்றது. இலக்கிய நூல்களுக்கு இலக்கணம் வகுத்தது தொல்காப்பியம். தமிழ் சிறப்பான இலக்கியங்களைப் பெற்றுள்ளது. அதே தொல்காப்பியத்தில் நூல் வகைகள் பற்றிக் கூறும்போது மொழிபெயர்ப்பு நூலும் சுட்டப்பட்டுள்ளது. இதனால் தொல்காப்பியர் மொழிபெயர்ப்பினைக் கூறியது பற்றி நாம் நன்கு அறியலாம்.

## சுருக்கவகை (Abridgement) மொழிபெயர்ப்பும் தழுவல் (Adaptation) மொழிபெயர்ப்பும்

மூலநூலிலுள்ள தகவல்களை முற்றிலும் விடுபடாமல் மொழிபெயர்க்காமல், அதைச் சாரம்ச வகையில் தருகின்ற (Paraphrase or abridgement) நிலையைச் சுருக்க மொழிபெயர்ப்பு (அ) சாராம்ச

மொழிபெயர்ப்பு என்று அழைப்பர். தழுவல் (Adaptation) மொழிபெயர்ப்பு என்பது மூலத்தைத் தேவைக்கேற்பக் கூட்டிக் குறைத்துக் கையாளுதல் இதன் இயல்பாகும். அதாவது மூல நூலின் செய்தியை உள்வாங்கிக் கொண்டு மொழிபெயர்ப்பாளர், தம் மனம்போன போக்கில் மாற்றிப் பெயர்ப்பது.

சரியான மொழிபெயர்ப்பு (Close or Accurate Translation) சரியான (அ) துல்லியமான மொழிபெயர்ப்பு என்பது, ஒருமொழியில் உள்ள செய்தியினை முழுமையாக மற்றொருமொழியில் மாற்றி அமைக்கும் செயலைத்தான் குறிக்கும். இங்குக் கருத்திற்கு முக்கியத்துவம் கொடுப்பதே தலையாய பணியாகும். மொழிபெயர்ப்புக் கலை என்றாலே அது முழுமையான (அ) துல்லியமான மொழிபெயர்ப்பு என்றே பொருள் கொள்வர்.

## கணிப்பொறி வகை மொழிபெயர்ப்பு (Computer Translation)

இன்றைய கணினியுகத்தில் இயந்திர மொழிபெயர்ப்பு மிக இன்றியமையாததாகக் கருதப்படுகிறது. கணினி மொழிபெயர்ப்பு இன்றுள்ள நடைமுறையில் நன்கு வளர்ந்து வருகின்றது. இணையத் தளத்தில் அதிகமான தகவல்கள் தமிழிலும் பிற மொழிகளிலும் உள்ளன. ஆங்கிலத் தகவல்களை உடனடியாகத் தமிழில் மொழிபெயர்ப்புச் செய்ய இயலுமானால் அது நம் வளர்ச்சிக்கு உதவும். ஆனால் அதில் சிக்கலும் உள்ளது. எனவே மனித உதவியும் மிக அவசியம்.

மொழிபெயர்ப்பில் மொழியியல் தாக்கம், மொழியியல் பயன்பாடு, நாளுக்குநாள் அதிகத் திறனுள்ளதாக வளர்ந்து வருவது. ஆகவே மொழிபெயர்ப்பில் இது இடம்பெறுகிறது. மொழியியல் இலக்கணம் முக்கிய இடத்தை வகிக்கின்றது.

## மொழியியலும் மொழிபெயர்ப்பும்

ஜே.சி. காட்ஃபோர்டு ''மொழியியல் மொழிபெயர்ப்புக் கொள்கை'' (Linguistics Theory of Translation) என்ற இவரது புகழ் பெற்ற நூலில் மொழிபெயர்ப்புச் செய்யும்முறை (Process) பற்றிய பகுப்பாய்வினையும் விளக்கத்தினையும் மேற்கொண்டுள்ளார்.

## மொழி அமைப்பும் மொழிபெயர்ப்பும்

அனுபவத்தின் வாயிலாகத்தான் மொழி தோன்றியது என்பதைப் பலர் மறந்துவிட்டனர். உள்ளம் உணர்ந்ததை, அறிந்ததை, கைசெய்ததை வெளியிட வேண்டிய அவசர – அவசியச் சூழல்

மொழி தோன்றக் காரணமாகியது. அறிந்ததை விளக்கவும் உணர்ந்ததை வெளியிடவும் செயலை விளக்கி எடுத்தியம்பவும் மொழி இன்றியமையாதது. அறிந்ததை மொழிந்தபோது நுண்மாண் நுழைபுலம் மிக்க அறிவு விளக்கமுற்றது. முதலிற் கூறியது விளங்காத போது அனுபவத்தின் மூலமாகத் திருத்தி இன்னொரு வகையாகக் கூறப்பெறுகிறது. இவ்வாறே அனுபவத்தின் மூலம் மொழிபிறந்து, வளர்ந்து சிறக்கிறது. ஆயினும், பின்னர் அனுபவ அடிப்படையின்றியே மொழியின் உதவியால் கருத்தை, உணர்ச்சியை அல்லது செயலைத் தெரிவிக்கிற நிலை வந்துற்றது. அந்நிலையிலேயே அஞ்சல்வழிக் கல்விக்கு அடிக்கல் நாட்டப்பெற்றது. அனுபவமே மொழியின் தோற்றுவாய். அனுபவ முதிர்ச்சி மொழி வளாச்சிக்குக் காரணமாகிறது. மொழி எவ்வாறு தோன்றி வளர்கிறதோ, அதை மனத்திற் கொண்டே மொழியைத் துவக்க நிலையில் கற்பிப்பவர்கள் கற்பிக்கவேண்டும். மொழியின் வரலாறு மொழியைக் கற்பிக்கும் வழியையும் விளக்கும்.

## மொழிபெயர்ப்பு

மொழிபெயர்ப்பில் சொல்லின் பொருளை அறிதல் ஒருநிலை. அதற்குப் பொருள் கோடல் மற்றொரு நிலை. இச்செயல் ஒரு மூல பாடத்தை வைத்து ஒரு மொழிபெயர்ப்பாளர் செயல்படுவதாகப் பலர் கருதுவர். இது மொழி பெயர்ப்பில் ஒருவகை. அதனால் ‘பால் மணம் மாறாத பாலர்களின் மழலையில் ஒரு சொல்லே வெளிவந்தாலும் – ‘அம்மா’ அல்லது ‘ம்மா’ என்று வெளிவந்தாலும் அவ்வொலியின் அளவு, தன்மை இவற்றிற் கேற்பப் பல கருத்துகளை நாம் தெரிந்து விளங்கிக் கொள்கிறோம். அவ்வொலி வெளிப்படும் தன்மைக்கேற்ப அவ்வொலியின் மூலம் அக்குழந்தை அம்மாவை அழைப்பதாகவோ ‘பால்கொடு’ என்பதாகவோ அல்லது இவற்றைத் தெரிவிப்பதாகவோ பொருள்கொள்கிறோம். அவ்வாறு குழந்தையின் மழலையின் பொருள் அன்னை மொழிபெயர்த்துப் பொருள் கோடல் செய்வதும் ஒருவகை மொழிபெயர்ப்பே.

இன்று திரைப்படப் பாடலாசிரியர்கள் பலர் ஒலிப்பேழையில் பதிவாகியுள்ள ஒலிக்கேற்ப வரிகளை இடங்களைப் பாடல்களாக மொழிபெயர்த்து, அவ்வொலிக்கு வரிவடிவில் உருவம் கொடுப்பதும் ஒருவகை மொழிபெயர்ப்பே.

## மொழிபெயர்ப்பைக் கற்பித்தல்

நம் நாட்டில் விடுதலைக்குப்பின் ஆங்கிலம் முதலிய மொழிகளின் துணைகொண்டு மொழிபெயர்ப்பு கற்பிக்கப்படுகின்றது.

பெரும்பான்மையாக ஆங்கிலத்தில் பிறர் எழுதியும் தொகுத்தும் வெளியாகும் பாடப் புத்தகங்களைப் பயன்படுத்தியே மொழிபெயர்ப்பு கற்பிக்கப்படுகின்றது. சிறந்த மொழிபெயர்ப்பு என்பது நல்ல அனுபவம் வழியேதான் கிடைக்கும். மொழிபெயர்ப்பைக் கற்போரில் துவக்க நிலை மொழிபெயர்ப்பாளர்களுக்கு அவர்களின் உள்ளம் எந்தப் பாடப்பிரிவில் ஈடுபாடு கொள்கிறதோ அதன்படி அனுபவம் அமைந்திருக்கும். மொழியின் வளர்ச்சி நிலையை மனத்திற்கொண்டு மொழிபெயர்ப்பையும் துவக்க நிலையில் உள்ளோர் கற்க வேண்டும்.

**பயன்கள்**

1. மொழிபெயர்ப்பு அறிவு விளக்கமுறப் பயன்படுமாறு அமைவதாகும்.
2. மொழிபெயர்ப்பு சிறப்புற அமைய நிகரிக் கொள்கை முதுகெலும்பாகும்.
3. மொழிபெயர்ப்பு சிறப்புற அமைய வழி காட்டுவன மொழிபெயர்ப்பு விதிகள்.

**மொழிபெயர்ப்பு : மூலமொழி – இலக்குமொழி**

1. மூலமொழியை (Source Language) நிலைமொழி எனவும் பெயர்ப்பு மொழியை இலக்குமொழி (Target Language) எனவும் அழைப்பர்.

2. ஒருமொழியில் உள்ள வாசகத்தை மற்றொரு மொழியில் பெயர்க்கும் பொழுது வாசகமொழி, மூலமொழி. எம்மொழியில் அதைப் பெயர்க்கிறோமோ, அது பெயர்ப்புமொழி அல்லது இலக்குமொழி ஆகும்.

3. மூலமொழி அமைப்பும் இலக்குமொழி அமைப்பும் வெவ்வேறாக இருப்பது இயல்பு. ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஒரு மொழியிலிருந்து அதே குடும்பத்தைச் சேர்ந்த மற்றொரு மொழிக்குப் பெயர்ப்பது எளிது. ஆனால் ஆங்கிலமும் தமிழும் வெவ்வேறு இலக்கண அமைப்புடையன. ஆகவே மொழிபெயர்ப்பில் மிகுந்த கவனம் தேவை. மொழிபெயர்ப்பானது மூலநூலினைப் படிக்கத் தூண்டும் வகையில் அமையவேண்டும். மொழியாலும் மரபாலும் முற்றிலும் மாறுபட்டவை தமிழும் ஆங்கிலமும். ஒவ்வொரு மொழியும் சொற்களாலும் சொற்றொடர்களாலும் வாக்கிய அமைப்பு களாலும் தனித்தன்மையைக் கொண்டுள்ளன. ஆங்கில மொழியிலுள்ள "Don't wash your dirty linen in the public" என்பதைச் சொல்லுக்குச்

சொல் மொழிபெயர்த்தால், 'உங்கள் அழுக்கு லினன் உடைகளைப் பொது இடத்தில் துவைக்க வேண்டாம்" என்றுதான் கத்துக்குட்டி மொழிபெயர்ப்பாளர், மொழிபெயர்ப்புச் செய்வார். ஆனால் திறன் வாய்ந்த மொழிபெயர்ப்பாளர், மூலத்தின் உட்பொருளை மொழிபெயர்ப்பார்.'' உங்கள் ஊழல்களை வெளிப்படுத்த வேண்டாம் என்பதே மேற்கூறிய மூல ஆங்கில வாசகத்தின் பொருள்.

அடுத்து ஓர் எடுத்துக்காட்டு,

"He kicked the bucket" என்பதற்குக் கத்துக்குட்டி மொழி பெயர்ப்பாளர், 'அவன் வாளியை உதைத்தான்' என்று பெயர்த்தால், எவ்வளவு நகைச்சுவையாக உள்ளது. ஆனால் அனுபவம் வாய்ந்த ஒரு மொழிபெயர்ப்பாளர், ''அவன் மரணம் அடைந்தான் அல்லது அவன் இயற்கை எய்தினான்'' என்றே மொழிபெயர்ப்பார். இதே செய்தியை இறந்த நபரின் ஆளுமை, சமூகப் பொருளாதார, சமய நிலை காரணமாகப் பலவாறு கூறுவர். சாதாரண மனிதன் மரணமடைந்தால், 'அவன் செத்துவிட்டான்' என்பார்கள். சமய நோக்கில் 'அவன் இறைவன் திருவடி அடைந்தான்' என்பர். சமூகப் பொருளாதார நிலையில் நன்கு உயர்ந்தவரை, 'அவர் இயற்கை எய்தினார்' என்பர். ஆக 'அவன் இறந்தான்' என்பதைப் பல்வேறு நிலைகளில் பலவாறு மொழிபெயர்க்கலாம். ஆங்கில மொழியிலுள்ள மேலே கண்ட இருவாசகங்களும், அவை ஆங்கிலேயருக்குரிய சில தனிப்பட்ட கருத்துகளைச் சொல் அடையாளங்கள் மூலம் ஆங்கில இலக்கண விதிகளுக்குட்பட்டுத் தெரிவிப்பதைக் காண்கிறோம். 'He kicked the bucket' என்ற அந்த ஆங்கில வாக்கியத்தைத் தமிழ்ப் படுத்தும்போது மூலத்திலுள்ள கருத்தை ஆங்கிலத்திலிருந்து முற்றிலும் மாறுபட்ட தமிழ்ச் சொற்களால் மொழிபெயர்க்கிறோம். ஆனால் இருமொழி அமைப்புகளுக்கும் இடையே உள்ள வேறுபாடு நன்கு புலனாவதைப் பார்க்கிறோம். தமிழும் ஆங்கிலமும் ஒலியினாலும் ஆட்சியினாலும் வேறுபட்டவை.

உள்ளத்திலுள்ள கருத்துக்களையும் உணர்ச்சிகளையும் உலகிலுள்ளவர்களுக்கு வெளியிடுவதற்கான கருவிகளே சொற்கள். ஆனால், ஒருமொழிபேசும் சமூகத்தாரைச் சென்று தாக்கும் ஒரு சில வாசகங்கள் வேற்றுமொழி பேசும் சமூகத்தாரை அவ்வளவாகப் பாதிப்பதில்லை. எடுத்துக்காட்டாகத் தமிழ்த்தாய், தன் குழந்தையைக் கண்டவுடன், ''என் கண்ணே, மணியே'', என்று கொஞ்சிக் கொண்டாடுகின்றாள். தாய்மையின் நீண்டகால வாஞ்சையால், 'கண்' என்பதற்குள் அருமைப்பாடு புகுந்து பொருள் செறிந்துள்ளது.

அந்த அருமைப்பாடும் வாஞ்சையும், ''oh my eye Bell'' என்று மொழிபெயர்த்தால், கொஞ்சினால் 'கண்ணே மணியே', என்ற சொற்களுக்குள் இருக்கிற அருமைப்பாடு வெளிவருவதும் அரிது அல்லவா? இப்படியாக ஒவ்வொரு மொழி அமைப்பிற்குள்ளும் அகராதியில் சுட்டப்படாத மணம் கமழ்கின்றது.

**மொழிபெயர்ப்பு** என்ற சொற்றொடரைக் காணும் போதெல்லாம் எனக்குப் பலவகையான நினைவுகள் எதிரொலிக்கும். நான் மாணவனாய்க் கண்ட வினாத்தாளில் கொடுக்கப்பட்ட மொழிபெயர்ப்புப் பகுதி நினைவில் வரும். நான் வெளியில் சென்றால், செருப்பு விற்கும் காலணி அங்காடியின் முன் வைக்கப்பட்டுள்ள விளம்பரப் பலகை முதல் அன்றாடம் பயணம் செய்யும் புகைவண்டி, பேருந்துகளில் காணும் விளம்பரங்கள், அறிவிப்புகள் வரை நினைவில் எழும். அவ்விளம்பரங்களில் ஆங்கிலம் முதலான பலமொழிச் சொற்கள் தமிழ் வடிவமாக அல்லாமல், பிறமொழி எழுத்துகள் மட்டும் பெயர்த்து எழுதப்பட்டிருக்கும். அந்த எழுத்துப் பெயர்ப்பைக் கண்டதும் எனக்குப் பாரதிதாசன் நினைவுக்கு வருவார். அடுத்தபடியாக நான்,

> இக்காலத் தமிழர்க்கு வாழ்க்கையில் பரபரப்பு மிகுதியாக உள்ளது; அமைதியாக எண்ணிக் கற்க முடிவதில்லை; வெளியுலகச் செய்திகளும் மிகுதி; அவற்றைக் கொண்டுவந்து திணிக்கும் செய்தித் தாள்கள், வானொலி, தொலைக்காட்சி, திரைப்படங்கள் முதலியவற்றின் செல்வாக்கும் மிகுதி; பலமொழி பேசுபவர்களுடனும் பல்துறை வல்லுநர்களுடனும் கலந்து பழகும் கட்டாயம் நேர்ந்துள்ளது. தாய்மொழியில் கருத்தூன்றிக் கற்கும் காலமும் வாய்ப்பும் மிகக் குறைந்துவிட்டது. பலவற்றைக் கற்றுக்கற்று மறந்து வாழ்வதால் மனிதன் ஒருசில வற்றில்தான் கவனம் செலுத்த இயலுகிறது. இத்தகையவர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது. இந்தப் பரபரப்பாக வாழும் சூழலில் தாம் கொண்டிருக்கும் கருத்துகளை எவ்வாறேனும் பிறர்க்கு உணர்த்த விரைகின்றனர். அவற்றை அழகுற வெளியிடுவது பற்றிக் கவலைப் படுவதில்லை. ஆகவே அன்றாட வாழ்விற்கேற்ற இன்றியமையாத சில துறைகளை மட்டும் நன்கு

**உணர்ந்து, மற்ற துறைகளின் நுட்பங்களையும் பாகுபாடுகளையும் புறக்கணிக்கின்றனர்.**[1]

என்று டாக்டர் மு.வ. அவர்களின் கூற்றை நினைவுபடுத்திக் கொள்வேன்.

பெரும்புலவர்கள் கையைவிட்டு விலகித் தற்போது மக்கள் மொழியாக, தலைவர்களாலும் நாளேடுகளாலும் எடுத்து விளக்கப்படும் சிறப்பைப் பெற்று வருவதால், தமிழில் சில புதிய மரபுகளும் உடன் சேர்ந்துவிட்டன. ''குடிதழீஇக்கோல் ஓச்சும்'' நம் தலைவர்கள், நாட்டில் ஏற்படவிருக்கும் பயனை எதிர்பார்த்துத் தேவையை உணர்ந்து மொழிக்குப் புத்துணர்வு ஊட்டி வருபவர்களே. தேவை அறிந்து அவர்கள் செய்யும் எழுத்து, மொழிச் சீர்திருத்தங்களால், நம் நாடு தற்போது பயன்பெற்று வருகிறது என்றே கூறலாம்.

ஆனால், தமிழ்மொழியில் சீர்திருத்தம் மேற்கொள்ளத் தடை எழுப்புவோர் பற்றி, வீரமாமுனிவர், ''இந் நாட்டவர் பழைய முறை களுக்குக் கட்டுப்பட்டு நடப்பவர்; பகுத்தறிவால் அவ்வளவாகத் தெளிவு பெற்று வாழ்பவர் அல்லர்'' என்று கூறி உள்ளார்.

இக்கூற்றில் ஓரளவு உண்மையுளது. எனினும் இதை முற்றிலும் ஏற்க முடியாது. காரணம் வீரமாமுனிவர் கொணர்ந்த எ, ஏ, ஒ, ஓ போன்ற தமிழ் எழுத்துச் சீர்திருத்தத்தைத் தமிழர் ஏற்றனர். அஃதோடு தந்தை பெரியார் கூறிய பகுத்தறிவோடு கலந்த எழுத்துச் சீர்திருத்தத்தையும் ஏற்றனர். எனவே தமிழர் முற்போக்குக் கொள்ளையினர் என்பதை அறியலாம். ''இந் நாட்டவர் பழைய முறைகளுக்குக் கட்டுப்பட்டு நடப்பவர்'' என்ற வீரமாமுனிவர் கூற்றைத் தமிழில் மரபைப் போற்றும் வகையில் ஏற்கலாம்.

தற்போது சட்டத் தமிழில் சில சொற்களையும் சொற்றொடர் களையும் முன்னோர் எப்படி சொன்னார்களோ அப்படியே நாமும் மரபைப் போற்றிக் கூறின் பொருத்தமற்றுள்ளன. இலக்கியச் சான்றோர்கூறிய முறையும் சில நேரங்களில் பொருத்தமில்லை. எ.டு. நிலக்கொடை இயக்கந் தொடங்கிய ஆச்சாரியர் வினோபா பாவே இயக்கச் சட்டத்திருத்தத்தில், 'Bhoodan Yagna' என்ற பெயரைச் சிலர் 'பூதான் யக்ஞ' சட்டம் என்றும், சிலர் 'நிலக் கொடை வேள்வி' என்றும் மொழிபெயர்த்து உள்ளனர். அந்த இயக்கத்தின் தந்தையான 'உயர்திரு ஆச்சாரியர் வினோபா பாவே' யின் ஆங்கில எழுத்திலான

---

1. 'மொழிவரலாறு' டாக்டர் மு.வ., பாரிநிலையம், சென்னை – 108.

'Shri Acharya Vinobha Bhave' என்பதை ''ஸ்ரீ ஆச்சார்யா வினோபா பாவே'' என்று எழுத்துப் பெயர்ப்புச் செய்பவருமுண்டு. அதை விடுத்து 'உயர்திரு' என்று 'Shri'க்கு மொழிபெயர்த்துவிட்டு, ''ஆச்சாரியா வினோபாபாவே அவர்கள் என்று தமிழ் மரபுப்படி எழுதுவோருமுண்டு. இவற்றில் பின்னதே சாலச்சிறந்தது எனலாம். ஆனால், இன்று எழுதும் முறை ஒன்றாகவும் ஒலிக்கும் முறை மற்றொன்றாகவும் ஆங்கிலம் இருப்பதற்குக் காரணம், அது பலமொழிகளிலிருந்தும் பல்வேறு காலங்களில் சொற்களை வரையறை இன்றிக் கடன் வாங்கியதே ஆகும். கடன் வாங்கிய போது பிற மொழிச் சொற்களை ஆங்கில ஒலிக்கு ஏற்ப இவ்வாறு அமைக்க வேண்டும் என்ற விதி வகுத்திருந்தாலும் இந்த நிலை ஏற்பட்டிருக்காது. தொல்காப்பியனார் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தமிழுக்கு,

> **வடசொற் கிளவி வடவெழுத் தொரீஇ**
> **எழுத்தொடு புணர்ந்த சொல்லாகுமே** (தொல்.சொல்.401)

என்று வகுத்துள்ளார்.

> **வடசொல் மட்டுமே தமிழில் புகும்நிலை அப்போது இருந்தமையால் தொல்காப்பியனார் அந்த ஒரு மொழியின் சொற்களுக்கு மட்டும் விதி வகுத்துள்ளார். ஆங்கில மொழியில் பிற சொற்கள் கலந்து குவிந்தபோது வரையறையோ விதியோ ஒன்றும் இல்லாமையால் இப்போது ஒலியிலும் எழுத்துமுறையிலும் குழப்பம் உள்ளது**

என்ற டாக்டர் மு.வ. அவர்களின் கருத்து இங்குக் கருதற்பாலது.

ஆங்கிலம் உலகளாவிய மொழி. ஆட்சியாளரின் செல்வாக்கைக் கொண்டு உலகில் பல நாடுகளில் கல்விமொழி யாகவும் அலுவலக மொழியாகவும் பதவிகள் பெற்று வாழ வழிசெய்யும் மொழி. நம்நாடு போந்த ஆங்கிலேயர் உச்சரிக்க இயலாது வழங்கிய Tinnevelly, Conjeevaram, Egmore, Tuticorin போன்ற சொற்களை நம்மவர் முயற்சி செய்து கற்றுக் கொள்கிறார்கள். நம் மொழியை அவரைப் போல் பேசுகிறார்கள். மொழி ஒருசிலர் கருதுவதுபோல் தனிப்பட்ட ஒருவர் பொறுப்பில் அல்லது சிலர் மேற்பார்வையில் வளர்வதன்று. பெரும்பான்மையான மக்களின் வழக்கில் வாழ்வது. இனி நம்மிடமுள்ள புதிய மரபுகளைக் காண்போம்.

## புதிய மரபு 1

பொதுவாகத் தமிழ்மொழி வளர்ச்சிக் கூறான மொழி பெயர்ப்புகளில், Each, Every என்ற ஆங்கிலச் சொற்கள் ஒருமையை உணர்த்துவன. ஆனால் தமிழில் 'ஒவ்வொரு நாளும்' என்னும் எழுவாய் ஒருமைக்கும் பன்மைக்கும் பொது. ஒருநாள், பத்துநாள் என்பவற்றில் நாள் ஒருமையாகவும் பன்மையாகவும் வருதல் போல, ஒருநாள், பலநாள் என்று நாள் இருவகையிலும் வரலாம். பன்மை தெளிவாக உணர்த்தப்பட வேண்டுமானால், பல நாள்கள் என்று கூறவேண்டும். இவ்வாறு பன்மை விகுதியாகிய 'கள்' சேர்த்தால், ஒவ்வொரு நாள்களும் என்பது பொருத்தமில்லை. இவ்வகையில் 'ஒவ்வொருநாளும்' என்பது ஒருமை என்று கூற இடம் உள்ளது.

ஆனால், ஆங்கிலத்தில் A Period of Three years என்று எழுதலாம். A என்பது சுட்டு ஒருமை, three என்றும் years என்றும் அடுத்துவருவன பன்மை. ஒரு மூன்றாண்டுக் காலஅளவு, (மூன்றாண்டுகளைக் கொண்ட ஒரு காலஅளவு) என்று தமிழில் மொழிபெயர்க்கின்றனர். இங்கே 'ஒரு' என்னும் 'ஒருமை' அடை மொழியாகும். ஒரு மூன்று ஆண்டுகள் என்பது தவறுதலாகப் படுகின்றது. ஆனால் இம்முறை ஆங்கிலத்தில் போற்றப்படுகிறது.

தமிழிலும் இதற்கு, ஒரு தொகுதியாய் ஒரு காலஅளவை உணர்த்துவதாகக் கருதி, அக் காலஅளவிற்கு அடையாக 'ஒரு' வந்ததாகக் கூறலாம் என்கிறார் டாக்டர் மு.வ.

## புதிய மரபு 2

பழைய சந்திமுறைகள் இக்காலத்தில் முன்போல் போற்றப்படுவதில்லையே என்று ஒருசிலர் குறை கூறினும் கவலை வேண்டாம். புதிய குறியீட்டு முறைகள் கொண்டு பொருளைத் தெளிவாக முன்னைய நிலையிலும் மிகத் தெளிவாக உணர்த்த முடிவதால், தமிழ் இழப்பது ஒன்றுமில்லை என்கிறார் டாக்டர் மு.வ. சட்டத்தமிழ் மொழிபெயர்ப்பின்போது, ஒரு மொழிபெயர்ப்பு நன்றாக அமைந்துள்ளதா இல்லையா என்பதை நீதிபதி சு. மகராசன், ஆங்கிலத்தில் வாசகத்தை ஒருவரையும் அதன் தமிழ் மொழி பெயர்ப்பைக் கவிஞர் வைரமுத்துவையும் உரத்த குரலில் படிக்கச் சொல்லிக்கேட்பார். அதன் விளைவைப் பல நேரங்களில் பாராட்டுவார். சில நேரங்களில் ஆங்கிலத்திலிருந்து மொழிபெயர்க்கப்பட்ட ஒரு சொல்லில் அல்லது சொற்றொடரில் அவருக்குப் பிழை உள்ளது என்று கருதினால் அப்பிழையை இன்னது என்று தெளிவாக

உணரமுடியும்வரை திரும்பத் திரும்ப உரத்த குரலில் படிக்கச் சொல்லிக் கேட்பார். பிழைகண்டு திருத்துவார். இடைஇடையே ஆங்கில வாசகத்தில் உள்ள நிறுத்தக்குறிகளுக்கு ஏற்ப வாக்கியத்தைத் தமிழில் இடம் மாற்றி அமைப்பார். முன்னது சரியாக ஒலிக்கவில்லை (It does not sound well) தற்போது சரியாகிவிட்டது என்பார்.

**புதிய மரபு : 3**

மொழியில் முழுக் காரணப் பொருத்தமும் நியாயமும் (Logic) எதிர்பார்க்க முடிவதில்லை. மனிதன் குறையுடையவன். ஆதலின் அவனுடைய படைப்பாக உள்ள மொழியும் குறையுடையதே என அமைய வேண்டியுள்ளது. அதனால் சில இடங்களில் எதிர்பாராத தவறுகள் வேரூன்றி மரபு எனப் போற்றப்படுகின்றன (டாக்டர் மு.வ.)

மொழிபெயர்ப்பில் ஒரு சொல், சட்டத்தில் என்ன பொருளில் தொடக்கத்தில் பயன்படுத்தப்பட்டதோ முடிவுவரை அதே பொருளில்தான் பயன்படுத்த வேண்டும் என்பது ஒரு பொதுவான விதி. எ.டு. statutes நிலைவிதிகள், Ordinances அவசரவிதிகள் என்பனவற்றைத் தொடக்கம் முதல் அச்சட்ட மொழிபெயர்ப்பு முடிவுவரை, இதே பொருளில்தான் பயன்படுத்த வேண்டும்.

## 7. சாராம்ச வகை மொழிபெயர்ப்பு

மொழிபெயர்ப்பை வகைப்படுத்துகின்ற நிலையிலே ஒவ்வொருவரும் அவரவரின் கருத்திற்கிணங்கச் செயல்படுகின்ற தன்மையினைக் காண்கிறோம். மொழிபெயர்ப்பியலை அதைச் செய்யும் முறைகளை வைத்துப் பீட்டர் நியூமார்க் வகைப்படுத்து கிறார். பொதுவாக மொழிபெயர்ப்பினை எழுத்துவடிவில் மேற்கொள்வதையும் வாய்மொழியாக மேற்கொள்வதையும் இருபெரும் பிரிவுகளாகக் கூறுவர். அடுத்து மொழிபெயர்ப்பினை இயந்திர கதி ஒன்றாகவும் திரைப்பட மொழி மாற்றத்தையும் ஒரு பிரிவாகவும் கருதுவர். மொழிபெயர்ப்பு வகைகளில் சாராம்ச / சுருக்கமொழி பெயர்ப்பும் ஒன்று.

### தழுவல் மொழிபெயர்ப்பு

பாரதியார் பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்களைத் தமிழில் மொழிபெயர்க்க வேண்டும் எனக் கருதினார். அதனால்தான் பாரதியின் பங்கு மொழிபெயர்ப்புத் துறையிலும் கணிசமாய்க் காணப்படுகிறது. பக்கிம் சந்திர சட்டோபாத்தியாயரின் 'வந்தேமாதரம்'

பாடல் 'ஜாதிய கீதம்' என்ற பெயரில் இருமுறை மொழிபெயர்க்கப் பட்டுள்ளது. இதைப் பற்றி விளக்கும் பாரதி, அகவலாகச் செய்த மொழிபெயர்ப்பில் நயம் தோன்றவில்லை. எனவே பல சந்தங்கள் தழுவி மொழிபெயர்த்தேன் என்கிறார்.

**சாராம்ச – தழுவல் வேறுபாடு – சுருக்கவகை மொழிபெயர்ப்பு**

மூலமொழியில் கூறப்பட்டுள்ள தகவல்களை மனத்தில் வாங்கிக் கொண்டு தேவைக்கேற்ப, முழுச் செய்தியையும் மொழிபெயர்க்காமல், வாசகர் கருத்துகளைப் புரிந்து கொள்ளும் வகையில் மொத்தச் செய்தியின் சாராம்சத்தைச் சுருக்கத்தைக் கூறும் முறை இவ்வகை மொழிபெயர்ப்பாகும்.

**தழுவல் என்றால் என்ன?**

மூலநூலிலுள்ள செய்திகளை உள்ளதை உள்ளபடி, மொழி பெயர்க்காமல், அந்நூலின் கருத்தைத் தழுவி எழுதும் நூலையே 'தழுவல்' என அழைக்கிறோம். இது பெரும்பான்மையாக இலக்கிய நூல்களில் பின்பற்றப்படுவதாகும். தழுவல்களைப் பெரும்பாலும் மொழிபெயர்ப்பாகக் கொள்ள முடியாது என்பர். காரணம் இவை முற்றிலுமாக மூலநூலைச் சார்ந்து அமைவன அன்று. மூலத்தின் கருவினை எடுத்துக் கொண்டு மற்றவற்றைத் தம் விருப்பம் போல் படைப்பாளி அமைத்துக் கொள்வார்.

தமிழ்மொழியில் முதல்முதலாக ஷேக்ஸ்பியரை அறிமுகப் படுத்தியோர் அவரது நாடகங்களை மொழிபெயர்த்தனர் என்று கூற முடியாது. தழுவல்வகையிலேதான் செய்தனர். இவர்களில் நீதிபதி சு. மகராசனும் ஒருவர்.

**பயன்கள்** (ஷேக்ஸ்பியர்)

1. பண்பாட்டுக்கேற்ப மொழிபெயர்ப்பில் மாற்றங்கள் ஏற்படும்.
2. கல்விச் சாலைகளை மையமாக வைத்து மொழிபெயர்ப்பு மேற்கொள்ளப்படுதல்.
3. பொதுமக்கள் பயனுக்காகவும் இலக்கிய மொழிபெயர்ப்புகள் வெளிவந்தன.
4. ஆங்கிலப் பழமொழிகளுக்கேற்பக் கொச்சைமொழி/மரபு தமிழ்ப் பழமொழிகள் அமைத்தல்.
5. பெயர்களைத் தமிழ்ப்படுத்துதல்.
6. அடிக்குறிப்புகள் தருதல்.
7. மூலநூலில் பகுதிகளை விட்டுவிடுதல் கூடாது.

## சுருக்கவகை மொழிபெயர்ப்பு

இது மொழிபெயர்ப்பின் ஒருவகை. மூலநூலின் பொருளினைத் தெள்ளத் தெளிவாகப் புரிந்து கொண்டு சிறிது கூட்டியும் குறைத்தும் மொழிபெயர்க்கலாம். மொழிபெயர்ப்பு என்பது கூடுவிட்டுக் கூடு பாயும் கவின்கலை என்பதை விட மொழியாக்கம் என்றே கூற வேண்டும் என்கிறார் மா. சண்முக சுப்பிரமணியம்.

மொழிபெயர்ப்புக் கவின்கலையைப் பயன்படுத்தும் முறையைப் பொறுத்து அக்கலையினை வகைப்படுத்தலாம். அதாவது மொழிபெயர்ப்பு என்ன நோக்கத்திற்காகச் செய்யப்படுகிறதோ அதைப் பொறுத்து அதனை வகைப்படுத்தலாம் என்பர் சிலர். மொழிபெயர்ப்பு மேற்கொள்ளப்படும் முறை பற்றியும் அதனை வகைப்படுத்துவர் சிலர். மற்றொரு வழியிலும் துறைமுறைப்படியும் வகைப்படுத்தலாம். இவ்வகைப்பாட்டின் குழந்தைகளுக்கான மொழிபெயர்ப்பு, திரைப்பட வசனங்கள் தொடர்பான மொழிமாற்றுப்பட மொழிபெயர்ப்பு, விவிலிய மொழிபெயர்ப்பு என்றும் வகைப்படுத்தலாம்.

இங்கே மூலநூலிலுள்ள செய்திகளை முழுமையாக மொழி பெயர்க்காமல், அதன் சாரத்தை/சாற்றினை மூலத்திலிருந்து பிழிந்தெடுத்துத் தருகின்ற மொழிபெயர்ப்பையே ‘சாராம்ச’ அல்லது சுருக்கமான (Abridgement) மொழிபெயர்ப்பு என்கிறோம். மேற்கூறிய வகை மொழிபெயர்ப்பிற்கு ஷேக்ஸ்பியரின் நாடகங்களின் மொழி பெயர்ப்பினைச் சான்று காட்டலாம். ஷேக்ஸ்பியரின் நாடகங்களைச் சிலர் கவிதை வடிவிலும் சிலர் கதை/உரைநடை வடிவிலும் மொழிபெயர்த்துள்ளனர்.

1835ஆம் ஆண்டு முதல் இந்தியாவில் ஆங்கிலம் கல்விக் கூடங்களில் பயிற்றுமொழி ஆயிற்று. கல்கத்தா இன்று கொல்கத்தா என்ற நகரம், மும்பாய், சென்னை ஆகிய முப்பெரும் நகரங்களில் 1859ஆம் ஆண்டில் பல்கலைக் கழகங்கள் தோன்றின. இதனால் ஷேக்ஸ்பியர் நாடகங்கள் கல்விச் சாலைகளில அறிமுகம் செய்யும் வாய்ப்பு இந்தியாவில் நேர்ந்தது. ஷேக்ஸ்பியரது நாடகக் கட்டமைப்பும் கருத்தாழமும் தமிழறிஞர்களைக் கவர்ந்தன. ஆனால் நாடு, மொழி, பண்பாடு ஆகியவற்றால், பெரிதும் வேறுபட்டிருக்கின்ற அந்த ஆங்கில நாடகங்களை அப்படியே மொழிபெயர்த்து வெளியிடத் தமிழர்கள் நாட்டங்கொள்ளவில்லை. தொடக்கக்காலத்தில் ஷேக்ஸ்பியரை மொழிபெயர்த்த அனைவரும் ஷேக்ஸ்பியர் படைப்பினை நாடகமாகப் பெயர்க்காமல் கதைகளை மட்டும் உள்வாங்கிக் கொண்டு சாராம்ச முறையில் / சுருக்கமான முறையில்

மொழிபெயர்த்தனர். இவ்வாறு மொழிபெயர்த்தவர்களுள், சென்னை மாகாணக்கல்வி இயக்குநருக்கு மொழிபெயர்ப்பாளராக இருந்தவரும் ஆங்கிலம்—தமிழ் அகராதி வெளியிட்ட வருமான விசுநாத பிள்ளை என்பவர் 'வெனிஸ் வணிகன்' எனும் நாடகத்தின் கதையினை மட்டும் 1872இல், ''முன்னொரு காலத்தில்'', என்ற கதை வடிவில் எழுதி வெளியிட்டார். இவரைத் தொடர்ந்து சென்னை மாகாணக் காவல்துறை ஆய்வாளர் பவானந்தம் பிள்ளை டி.எஸ்.டி.சாமி, நடேச சாஸ்திரி ஆகியோரும் சாராம்ச/சுருக்கமுறையிலான மொழி பெயர்ப்பினை மேற்கொண்டவர்கள். இவர்களின் சுருக்க/சாராம்ச முறையில் ஷேக்ஸ்பியரை மொழிபெயர்ப்பதற்கு, சார்லஸ் லேம்ப் ஆங்கிலத்தில் சிறுவர்களுக்காக எழுதிய ஷேக்ஸ்பியர் கதைச் சுருக்க நூல் நன்கு பயன்பட்டது எனலாம்.

தொடக்கக் காலத்தில் வெளியிடப்பட்ட இச்சாராம்ச முறையிலான சுருக்க மொழிபெயர்ப்புகளில், மூலத்தில் காணப்படும் சொற் சாலம், கிளைக்கதை, நாடக உத்தி, உரைநடை, பாடல்கள் ஆகியவற்றிற்கு வாய்ப்பில்லை. நாடகத் தலைப்புகளை இவர்கள் கதைத் தலைப்புகளாக 'வெனிஸ் கதை என்ற பெயர் வைத்தனர். சண்டைக்காரி சாதுவாக்கப்பட்டது' (Taming the Shoe) என்ற தலைப்பிலும் ஒரு நூல் வெளியானது.

மொழிபெயர்ப்பின் நோக்கத்தில், ''பதிவிரதா பத்தினிகள் தத்தம் கணவருக்கு அடங்கி நடக்க வேண்டும்'', என்ற நோக்கில் அந்நாடகம் கதை வடிவில் சுருக்கமாக மொழிபெயர்க்கப்பட்டதாக அம்மொழிபெயர்ப்பாளர் கூறியுள்ளார். ஷேக்ஸ்பியரை மொழி பெயர்த்தவர்கள் எந்த நோக்கத்தோடு மேற்கொண்டனர் என்பதை இதுபோன்ற முன்னுரைகளால் அறிய முடிகின்றது.

இத்தகு சாராம்ச/சுருக்கமுறையிலான மொழிபெயர்ப்புகள் அனைத்தும் சற்றொப்ப 1900ஆம் ஆண்டுகளுக்கு முற்பட்டவை. ஆகவே அவற்றின் தமிழ் நடையில் ஆங்காங்கே வடமொழியின் ஊடே தமிழும் கலந்துள்ளது. எனினும் தமிழை மட்டும் தெரிந்தவர்கள் ஷேக்ஸ்பியரை அறியும் வாய்ப்புக் கிட்டியது.

''வெனிஸ் வணிகன்'', நாடகத்தை நடிப்பதற்கென்றே இரட்டுற மொழிதல் (Pun) உத்தியைப் பயன்படுத்தியவர் வேணு கோபாலாச்சாரியார். மொழிபெயர்ப்பில் முதல் முதலாக இதைப் பயன்படுத்தினார்.

''சிம்பலின்'', நாடகத்தைச் 'சரசாங்கி' என்ற பெயரில், அக்காலத் தமிழ் நாடகமேடைகளுக்குக்கேற்ற வகையில் கணிசமான

பாடல்களை இவர் எழுதிச் சேர்த்தது மொழிபெயர்ப்பு முறையில் மூல நூலில் இல்லாதவற்றைச் சேர்த்தமுறைக்கு எடுத்துக்காட்டாகும். இவர் ஆங்கிலப் பெயர்களைத் தமிழ்ப்படுத்தியுள்ளார். இம் மொழிப்பெயர்ப்பாளர் பெயர் சலசலோசனச் செட்டியார் என்பதாகும்.

### தமிழ் நாடகத் தந்தை பம்பல் சம்பந்த முதலியார் உத்திகள்

தமிழ் நாடகத் தந்தை பம்பல் சம்பந்த முதலியார், அமலாதித் தன், வெனிசு வணிகன், விரும்பிய வண்ணமே, மகபதி ஆகிய நாடகங்களோடு 'சிம்மளநாதன்' என்னும் நாடகத்தையும் பெயர்த்தது சாராம்ச மொழிபெயர்ப்பு முறைக்குச் சிறந்த சான்றுகளாகும்.

பம்மல் சம்பந்த முதலியார் மூலநூலின் இயல்பை ஒட்டியே மொழிபெயர்த்துள்ளார். மொழிபெயர்க்க இயலாத ஆங்கிலப் பழமொழிகளுக்கேற்பத் தமிழ்ப் பழமொழிகளைப் புதிதாக அமைத்தார். எ.டு. ஹெர்குலிஸ் என்ற பெயரைப் 'பீமன்' என்றும் மாக்பெத் என்ற பெயரைப் 'மகபதி' என்றும் தமிழ்ப்படுத்தினார். நான்காம் ஹென்றி நாடகத்தின் நகைச்சுவைப் பகுதியை மட்டும் தமிழில் பெயர்த்துத் தாம் எழுதிய 'கள்வர் தலைவன்' எனும் தமிழ் நாடகத்தில் சேர்த்தார்.

ஷேக்ஸ்பியரின் Romeo and Juliet நாடகத்தை மொழிபெயர்த்த இராசகோபாலையர் தம் முன்னுரையில்,

> மூலநாடகத்தில் வரும் முத்தக் காட்சிகளையும் மது அருந்தும் நிகழ்ச்சிகளையும் எமது நாட்டு மக்கள் ஒப்புக்கொள்ளமாட்டார்கள், எனவே யான் அவற்றை நீக்கிவிட்டு, கும்மி, கோலாட்டம், ஜாத்திரை ஆகிய நிகழ்ச்சிகளை அந்த இடங்களில் சேர்த்து விட்டேன்.

என்று கருதுமாறு குறிப்பிடுகிறார். இம்முறையிலான மொழிபெயர்ப்பு உத்தி மூலத்திற்கு முரணானது. எனினும் பண்பாட்டு அடிப்படை கருதி செய்யப்பெற்ற மாற்றம் எனலாம்.

### விளக்க/அடிக்குறிப்பு உத்தி

'கலாநிலையம்' என்ற இலக்கிய வார இதழின் ஆசிரியர் சேஷாசலம், புயல், 'சூலிய சீசர்' ஆகிய நாடகங்களை நாடகமாகவே பெயர்த்தார். இவரது மொழிபெயர்ப்பு வெற்றிக்குக் காரணம் ஒருபகுதியில் பெயர்ப்பையும் அதற்கு எதிர்ப்பகுதியில் அதற்கான விளக்கக் குறிப்பையும் சரிசமமாகக் குறிப்பிட்டு இருந்தது தான். மொழிபெயர்ப்பு மரபுப்படி இவரது பெயர்ப்பு மூலநூலைப் படிக்கும் ஆர்வத்தை ஊட்டியதே பெரிய வெற்றியாகும்.

திருச்சி பெரிய நாயகம் பெயர்த்திட்ட ''ஜான் மன்னனின் வரலாறு'', முற்றும் விவிலியத் தமிழ் நடையில் அமைந்துள்ளது.

வடுவூர் துரைசாமி அய்யங்கார், லீயர் மன்னன் கதையை, 'மங்கையர் பகட்டு' என்னும் தலைப்பில் அகவற் பாவினால் பெயர்த்தது மக்களின் வரவேற்பைப் பெறவில்லை. இவரது அகவற்பா கடினமான நடையில் இருந்தது. வகையுளி மடக்கு, யமகம் போன்ற யாப்பியல் உத்திகளைக் கையாண்டுள்ளார்.

விபுலானந்த அடிகள், ஷேக்ஸ்பியர் நாடகங்களை ஒப்பிலக்கிய முறையில் ''பிரதாப ருத்தரீயம்'' போன்ற வடமொழி நாடக இலக்கணம் பற்றிய நூல்களோடு இணைத்துப் பார்த்துள்ளார். ஷேக்ஸ்பியரது தலை சிறந்த ஆண், பெண் பாத்திரங்களை வட நூன்முறையில் தலைமக்களோடு பொருத்திக் காணுகிறார். ஆயினும் நூலினை ஒட்டுமொத்தமாகக் காணும்போது கட்டமைப்புக் குறை தெரிகிறது.

### தழுவல் வகை[2]

ஷேக்ஸ்பியர் மொழிபெயர்ப்பாளராக இன்று கூறும் தகுதி படைத்தவர் சிலர். அவர்களில் ஏகாம்பர நாட்டார் மாரிக்காதை, புயல், பன்னிரண்டாம் இரவு ஆகிய நாடகங்களை இலக்கிய நயம்பட உரைநடைப்படுத்தியுள்ளார். இவரது படைப்புகளை மொழிபெயர்ப்புகள் என்பதைவிடத் தழுவல்கள் என்றே கூறலாம். மூலநூலில் பயன்படும் ஆங்கிலப் பெயர்களில் ஒலிக்குறிப்பு கெடாதவாறு, தமிழ்ப்படுத்தி யுள்ளார். காலிபன், டிரின்குலோ போன்றவை, 'கலியன்', 'திருக்கு' என்பவற்றைச் சான்றாகக் காட்டலாம். சிற்சில நாடகப் பாத்திரங்களின் பெயர்களை மொழிபெயர்த்தது போல் எழுதியுள்ளார். ஏரியல்— காத்தவராயன் பிளாரிஜல்— புட்பகாந்தன் விண்டர்ஸ் டேல் எனும் நாடகத்தை மாரிக்காதை என்று மொழிபெயர்த்துள்ளார். இதே நாடகத்தினைக் கூதிர்க் காதை என்று விபுலானந்த அடிகள் பெயரிட்டார். தமிழைச் சிறப்புப்பாடமாகப் பயின்ற கல்லூரி மாணவர்களுக்கு இவரது தழுவல் நாடகங்கள் அறுபதுகளில் பாடத்திட்டத்தில் இடம்பெற்றிருந்தன.

டாக்டர் சிதம்பரநாதன் செட்டியார், நாராயணசாமி நாயுடு, நீதிபதி சு. மகராசன் போன்ற அறிஞர் பெருமக்களும் ஷேக்ஸ்பியரின்

---

2. 'மொழிபெயர்ப்பு மரபுகள்', இந்நூலாசிரியர், பயோனியர் புத்தக வெளியீடு, சென்னை – 5, 1990.

சிற்சில நாடகங்களை மொழிபெயர்த்துள்ளனர். நீதிபதி மகராசன், 'மாக்பெத்', 'லீயர்' மன்னன் ஆகிய இருநாடகங்களைப் பெயர்த்துள்ளார்.

> **எப்படி கஷ்டப்பட்டாவது ஷேக்ஸ்பியருடைய உள்ளுணர்வைத் தமிழில் கொண்டு வந்து விட வேண்டும் என்ற ஆசை மொழிபெயர்ப்பாளருக்கு எப்போதும் இருக்க வேண்டும். இவ்வாறு தமிழாக்கம் செய்யும்போது மொழிபெயர்ப்பாளர் சில சுதந்திரங்களை (Freedom in Translation) அனுபவிக்கலாம். மூலத்தில் உள்ள சொல்லும் எழுத்தும் மொழிபெயர்ப்பாளருடைய சுதந்திரத்தைக் கட்டுப்படுத்தும் விலங்காக (Restriction of Translation) அமைந்து விடக்கூடாது**

என்ற கருத்துடையவர் நீதிபதி சு. மகராசன் மொழிபெயர்ப்பு, மூலத்தின் தழுவலாகவோ கலப்படமாகவோ மாறிவிடக் கூடாது என்கிறார்.

## மூலத்தின் சிலபகுதிகளை விட்டு விடுதல்

அரு. சோமசுந்தரம் பேரார்வத்தால் ஷேக்ஸ்பியரின் நாடகங்கள் சிலவற்றைத் தமிழில் மொழிபெயர்த்துள்ளார். தமிழ் நடையை எளிமையாக அமைத்துள்ளார். இருப்பினும் மூலநூலின் செறிவும் திட்பமும் விடுபட்டு, இவர் ஏதோ திரண்ட கருத்தைச் சாராம்ச முறையில் மொழிபெயர்த்துள்ளார். சிக்கலான மூலப்பகுதிகளைக் கஷ்டப்படாது, இவர் விட்டுவிட்டுத் தழுவல் முறையில் செய்வது மொழிபெயர்ப்பில் ஏற்பதற்கல்ல. இவர் அரிதின் முயன்று இலக்கியச் சுவை ததும்ப நாடகங்களை மொழிபெயர்த்தால் போற்றுதற் குரியதாகும்.

இதுவரை நாற்பதுக்கு மேற்பட்டோர் தமிழில் ஷேக்ஸ்பியரை மொழிபெயர்த்துள்ளனர். பெரும்பாலான வரலாற்று நாடகங்கள் உள்ளிட்ட ஏழெட்டு நாடகங்கள் இதுவரை எவராலும் மொழிபெயர்க்கப் படவில்லை. 'வெனிஸ் வணிகன்', 'ஹாம்லெட்' ஆகிய இரண்டையும் ஆறுபேருக்குமேல் மொழிபெயர்த்துள்ளனர். நாடகச் சுவையும் அந்தந்த நாடகங்களுக்கு மக்களிடம் உள்ள வரவேற்புமே அவற்றை மொழிபெயர்த்து வெளியிட ஊக்க மூட்டும் காரணிகள் எனலாம். பொதுவாக இப்பெயர்ப்புகளில் சாராம்ச முறையும் தழுவல் முறையும் அதிகமாகப் பின்பற்றப்பட்டுள்ளன.

## தழுவல் இலக்கிய மொழிபெயர்ப்பு

மூலத்திலுள்ள பொருண்மைகளை உள்ளதை உள்ளவாறு பெயர்க்காமல் அம்மூலத்தின் கருத்தைத் தழுவி எழுதும் படைப்பே 'தழுவல்' என்கிறோம். இத்தன்மை பெரும்பாலும் இலக்கியப் படைப்புகளில் காணப்படுவதாகும். இலக்கியமல்லாத சட்டம் அறிவியல் துறைகளுக்கு இதுபொருந்தாது. மொழிபெயர்ப்பின் முன் நிலைதான் தழுவல். தழுவல் என்ற வகை மூலத்தினை அடிப்படையாகக் கொண்டு படைக்கப்படுவது. இப்படைப்பு மூலத்திலிருந்து மாறுபட்டு, ஆனால் மூலக் கருத்தில் மட்டும் ஒன்று படும் ஒரு புதிய படைப்பு. இவ்வாறு அரிய உத்திகளோடு எழுதப்படும் தழுவல் படைப்புகள் மூலத்தினைப் போலவே இலக்குமொழி வாசகர்களின் வரவேற்பையும் பெறுவதால் இலக்கியத் துறையில் இது செல்வாக்குப் பெற்றுள்ளது. புரட்சிக்கவி பாரதிதாசனின் 'புரட்சிக்கவி' பில்கணர் எழுதிய பில்கணீயத்தைத் தழுவியதாகும். வடமொழியில் பதினோராம் நூற்றாண்டில் எழுந்த யாமினி கதைதான். புரட்சிக் கவியின் உதாரன்–அமுதவல்லி கதையாகப் படைக்கப் பட்டுள்ளது. பில்கணீயத்தில் யாமினி சாதாரணப் பெண்ணாகப் படைக்கப்பட்டாள். ஆனால் பாரதிதாசன் தான் சொல்ல விரும்பிய சம்பவத்திற்கு ஏற்றவகையில் அமுதவல்லியை ஒரு புரட்சிப் பெண்ணாகப் படைத்துள்ளார்.

வில்லிபாரதத்தில் இடம்பெற்றுள்ள சூத போர்ச் சருக்கத்தின் தழுவலாகப் பாரதியார் நாட்டு விடுதலையை உணர்த்தும் 'பாஞ்சாலி சபதம்' படைத்தார்.

பழநி அரங்கசாமி 'சேக்ஸ்பியர் நாடக மொழிபெயர்ப்புகள்'[3] (1989) என்ற தனது கட்டுரை ஒன்றில்

> **தஞ்சையைச் சேர்ந்த ஏகாம்பர நாட்டார் மாரிக் காதை, புயல், பன்னிரண்டாம் இரவு ஆகிய நாடகங்களை இலக்கிய நயம்பட உரைநடையில் எழுதியுள்ளார். இவரது இலக்கியப் பணியினைப் பெயர்ப்புகள் என்பதை விடத் தழுவல் நாடகங்கள் என்றே அழைக்கலாம்**

எனப் பகர்கிறார்.

---

3. பழநி அரங்கசாமி 'சேக்ஸ்பியர் நாடக மொழிபெயர்ப்புகள்'[3] (1989) தினமணி நாளிதழில் எழுதிய கட்டுரை, 1989, ப. 7.

ஆசியஜோதி கவிமணி தேசிக விநாயகம்பிள்ளை படைத்த 'ஆசியஜோதி' (The Light of Asia) என்பதையும் தழுவலாகக் கருதலாம். பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஆங்கிலக் கவிஞர் எட்வின் ஆர்னால்டு எழுதிய 'Light of Asia' என்பதை தமக்கே உரிய எளிய சொற்களைக் கொண்டு அழகாகத் தழுவிக் கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை எழுதியுள்ளார். இவரது தழுவல் பற்றிக் கூற வந்த டாக்டர் மு.வ. 'அவை அவருடைய தனிப்படைப்புப் போலவே அவ்வளவு புதுமையும் சுவையும் கலந்து விளங்குகின்றன' என்கிறார். கவிமணி அவர்களுக்குப் பெருமை சேர்த்த படைப்புகளில் ஒன்று உமர் கயாம். பாரசீகக் கவிஞர் உமார் கயாம் பாடல்களின் மூலத்தை விட ஆங்கிலத்தில் எட்வர்ட் பிட்ஸ் ஜெரால்டு மொழிபெயர்ப்பும் தழுவல் படைப்புகளுள் தலை சிறந்த ஒன்று என்பார் நீதிபதி மகராசன்.

பிட்ஸ் ஜெரால்டின் ஆங்கில மொழிபெயர்ப்பைத் தழுவி எழுதிய கவிமணிக்கு அப்பாடல்கள் பெருமை சேர்த்தன. கவிஞர் நேரடியாக ஆங்கில மொழிபெயர்ப்பிற்கு நிகராகத் தமிழில் மொழி பெயர்க்காது தழுவி எழுதியது அழகாகும். மொழிபெயர்ப்பைவிடத் தழுவலில் நுண்மாண் நுழைபுலமும் கவி இயற்றும் இயல்பும் கற்பனை வளமும் உடைய ஒரு கவிஞன் மூலத்தை விடச் சிறப்பான இலக்கியம் ஒன்றைத் தர வாய்ப்புண்டு. இந்த வாய்ப்பும் உரிமையும் சட்ட மொழிபெயர்ப்பில் கிடையா. எனவே காட்ஃபோர்டு, சேவரி போன்றோர் மூலத்தை விட்டு விலகும் தன்மையை இலக்கியத்தில் ஆதரிக்கின்றனர். குறிப்பாக ஒருபடைப்பிற்கு மொழிபெயர்ப்பு என்பது ஒரு ஆடையை அவிழ்த்து மற்றொரு மொழியை ஆடையாக அணிவது. அதன் இயல்புக்கேற்பப் பலவகை அணிகலன்களையும் இலக்குமொழி மரபிற்கேற்பச் சேர்த்து அப்படைப்பை மெருகேற்றுவது என்றே கூறலாம். கவிமணியின் உமார்கயாம் பாடல்களிலே தமிழ்க்கம்பரைக் காணலாம்.

**வெயிற்கு ஏற்ற நிழல்உண்டு**
**வீசும் தென்றல் காற்று உண்டு**
**கையில் கம்பன் கவி உண்டு**
**கலசம் நிறை அமுது உண்டு**

என்ற தழுவல்படைப்பு ''கள்வனின் காதலி'' என்னும் திரைப்படப் பாடலாகித் தமிழ்மக்கள் நெஞ்சமெல்லாம் நிறைந்த ஒன்றாகும்.

''கவிமணியின் பாடல்களைப் படிக்கும்போது மொழிபெயர்ப்பு தழுவல் என்ற எண்ணங்கள் எழுவதே இல்லை'' என்கிறார்

டாக்டர் மு.வ. இந்த இலக்கணமே சிறந்த மொழிபெயர்ப்பிற் குரியதாகும் என்கிறார் அறிஞர் மு. அருணாசலம்.

தமிழில் தழுவலும் மொழிபெயர்ப்புமாக இல்லாமல் தமிழ்நாட்டுக்கு உரியதாகவே முதல் நூலாக இடைக்காலத்தில் எழுந்த காப்பியம் பெரியபுராணம் என்கிறார் டாக்டர் மு.வ. பல்லவ அரசர்கள் தமிழ்நாட்டில் ஆண்டு வந்த காலத்தே வடமொழி நூல்களைத் தழுவித் தமிழ் நூல்கள் இயற்றுவதே தொடங்கப் பெற்றது. தமிழில் பலகாலமாக வடமொழிச் சொற்கள் சிற்சில கலந்து வந்தன. கி.பி. இரண்டாம் நூற்றாண்டுக்கு முன் சங்க காலத்தில் தமிழில் பிறமொழிக் கலப்பு இல்லை. பல்லவ ஆட்சி காலந்தொடங்கி ஆங்கிலேயர் ஆட்சிக்காலம் வரையில் காலந்தோறும் பிறமொழிச் சொற்கள் கலந்து வந்த போதிலும் இந்திய மொழிகளில் கலப்பு குறைந்த மொழி தமிழே. புலவர்கள் சிலர் கி.பி. 8ஆம் நூற்றாண்டுக்குப் பிறகு வடமொழியிலிருந்து சமய நோக்கில் தமிழில் மொழிபெயர்த்துத் தழுவியும் எழுதத் தொடங்கினர். 18ஆம் நூற்றாண்டு வரை பெரும்பகுதி பக்தி இலக்கியமே மொழிபெயர்க்கப் பட்டு வந்தது. அவற்றுள் பெரும்பான்மையானவை தழுவல்கள்.

தமிழிலக்கிய உலகில் தழுவல்கள் பலரால் படைக்கப் பட்டுள்ளன. அவர்களுள் கம்பர், மனோன்மணீயம் சுந்தரனார், இரட்சணிய யாத்திரிகம் படைத்த H.A. கிருஷ்ணப்பிள்ளை எழுத்துக்களையும் கூறலாம். தாண்டவராய முதலியாரால் கி.பி. 1826ஆம் ஆண்டில் மராத்திய மொழியிலிருந்து தமிழில் மொழிபெயர்க்கப்பட்ட ''பஞ்சதந்திரம்'' என்ற படைப்பை மொழிபெயர்ப்பாளர் விருப்பத்திற்கேற்பக் கூட்டியும் குறைத்தும் செய்யப்பட்ட தழுவல் நூலுக்கு எடுத்துக்காட்டாகக் கூறுவர்.

லேனி எனும் அறிஞர் மூலத்தின் கருத்தினைச் சுருக்குவதும் கடினமான பகுதிகளை விட்டுவிடுவதும் முறையற்ற செயலாகும் எனக் குறிப்பிடுகிறார். ஒருவரின் மொழிபெயர்ப்புத் திறனை ஆய்வு செய்வதற்கு மொழிபெயர்த்த கருத்தினை மட்டும் மூலத்தோடு ஒப்பிட்டுப் பார்க்காது அதன் உருவமும் உள்ளடக்கமும் கூட இன்றியமையாததாகும். மொழிபெயர்ப்பாளர் மோப்பம் பிடித்துச் செல்லும் நாயைப்போல மூலநூலாசிரியரின் கருத்துக் கால் வழியே செல்லாது, இவரே மூலநூலாசிரியராக மாறக் கூடாது. மூலத்தின் பகுதிகளை மொழிபெயர்ப்பில் விட்டுவிடுவதற்கும் சேர்ப்பதற்கும் மொழிபெயர்ப்பாளன் சோம்பலும் பொதுஅறிவின்மையும் காரணங்களாக இருப்பதை நடைமுறையில் நாம் காணலாம். இதுவே *தியோடர் சேவரி என்பவரின் கருத்துமாகும்.*

இலக்கிய மொழிபெயர்ப்பாளர்களில் சிலர், இலக்கியப் பகுதிகளில் வருணனைப் பகுதிகளையும் கவிநயம் செறிந்த பகுதிகளையும் விட்டுவிட்டு மூலத்தின் பொருளை மட்டும் மொழிபெயர்ப்பதைக் காண்கிறோம். இன்னும் சில இலக்கிய மொழிபெயர்ப்புகளில் மூலத்தின் சாரமே விடுபட்டுப் போவதுமுண்டு. சான்றாக, பெரும்பாணாற்றுப்படை மொழிபெயர்ப்பில் சில அடிகளை மட்டும் எடுத்துக்கூறலாம்.

**நெய்விலைக்(கு) அட்டிப் பசும்பொன் கொள்ளாள்**
**எருமை நல்லான் கருநாகு பெறூஉம்**
**மடிவாய்க் கோவலர் குடி. . . .**

என்ற அடிகள் ஆங்கிலத்தில்

**. . . selling Butter she bulls cows and**
**buffaloes happys her man and children are and**
**in joy they whistle**

என்று செய்யப்பட்ட மொழிபெயர்ப்பு ஆயர்குடியினரின் இயல்பினைச் சுட்டும். ''பசும்பொன்கொள்ளாள்'' என்ற அடி ஆங்கிலத்தில் விடுபட்டுள்ளது. முல்லை நிலத்தில் எருமைக் கன்று ஆயர்குடி மக்களுக்குப் பொன்னைக் காட்டிலும் விலைகூடியதாக இருப்பதனை மேற்சுட்டிய அடிகள் உணர்த்துகின்றன. மொழிபெயர்ப்பாளர் விட்டுவிட்டது புலப்படும்.

பழந்தமிழகத்தில் சைகை, ஒலி அளவே தொடங்கிக் கதைகள் அளவிலே தழுவல் வளர்ந்தது என்பதை ''மகாபாரதம் தமிழ்ப்படுத்தும் மதுராபுரிச் சங்கம் வைத்தும்'' எனும் சொற்றொடரால் உணர இடமுண்டு. சைவக் காப்பியமான பெருங்கதை ''பிருகத்கதா'' எனும் பைசாச மொழித்தழுவல் எனச் சிலரும் ''பிருகத் கதாமஞ்சரி'' ''கதா சாத்காரம்'' என்ற வடமொழி நூல்களைத் தழுவி இயற்றப் பட்டது எனச் சிலரும் கூறுவர். பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள் சிலவற்றிலும் பிறமொழிக் கருத்துக்களும், பழக்க வழக்கங்களும் தழுவல் வகையில் இடம்பெற்றன.

**வால்மீகியும் கம்பரும்**

முதல்முதலாகத் தொடக்கக் காலத்தில் ஆட்சி பெற்றிருந்த 'தழுவல்' தான் மொழிபெயர்ப்பின் முன்னோடி என்பதற்கு கம்பராமாயணத்தைச் சான்றாகக் காட்டுவர் சான்றோர். ஆனால்

கி.பி. 8ஆம் நூற்றாண்டு முதல் வடமொழி நூல்களைத் தழுவி, தமிழ் நூல்கள் இயற்றுவது தொடங்கப்பெற்றது என்கிறார் டாக்டர் மு.வ. தழுவல்வகையைச் சேர்ந்த கம்பராமாயணத்தை மொழி பெயர்ப்போடும் சிலர் இணைத்துக் கூறுவர்.

**மனோன்மணீயம்**

தமிழில் இலக்கியத்தரம் வாய்ந்த கவிதை நாடகமாக மனனான்மணீயத்தைக் கூறலாம். இதனைத் தத்துவப் பேராசிரியர் சுந்தரம்பிள்ளை இயற்றினார். தமிழில் நாடக நூல்கள் இல்லாதகுறையைப் போக்க ஆங்கிலத்தில் இலிட்டன் பிரபு எழுதிய "The Secret Way" என்ற கதையைத் தழுவிப் படைக்கப்பட்டது தான் மனோன்மணீயம். இதன் ஆசிரியர் கருத்து, வடிவம் என்ற படைப்பு அமைப்புகளில் இலிட்டன் பிரபுவின் கருத்தை, கதைக் கருவை மட்டுமே இவர்தழுவிக் கொண்டு தமிழ் மரபுப்படி செய்யுள் நடையில் சிறப்பாகச் செய்தாலும் இது தழுவல் வகையைச் சார்ந்ததே என்று டாக்டர் மு.வ. கூறுகிறார்.

**இரட்சணீய யாத்திரிகம்**

இந்நூலை இயற்றியதற்கான ஒரு காரணம் கூறுகிறார் கிருஷ்ண பிள்ளை. என் மனசில் முகிழ்த்த இரட்சணிய சத்தியத்தை என் சுதேசிகளான முத்தமிழ்த் துறையின் முறை போகிய உத்தமக் கவிகட்குப் பணிவாய் வற்புறுத்திக் காட்டவேண்டுமென்ற விருப்பத்தையும் என்று குறிப்பிடுவதாகும். இவர் சாமனிய எளிய மதத்தினருக்கு என்று இல்லாமல் முத்தமிழிலும் துறை போன தம் நாட்டு உத்தம கவிகளுடன் வேதத்தின் சத்தியத்தைப் பகிர்ந்து கொள்ள வேண்டும் என்னும் நோக்கினால் இயற்றினார். கூட்டியும் குறைத்தும் தமக்கு முன்னர் மொழிபெயர்த்தவர்கள் மொழியாக்கம் செய்துள்ளார் என்று சாமுவேல் குறிப்பிடுவதானல் கிருஷ்ணபிள்ளை மூலத்திலிருந்து விலகியும் மூலத்தினை ஒட்டியும் சொல்லுவதைக் கண்டறிவதற்கு முந்தைய மொழிபெயர்ப்பு தேவை என எண்ணலாம். எச்.ஏ. கிருஷ்ணபிள்ளை என்பார் ஜான்பனியன் என்னும் ஆங்கிலேயர் எழுதிய 'Pilgrims Progress' என்ற ஆங்கில நூலைத் தழுவி இந்நூலை எழுதினார். இந்நூல் ஜான் பனியன் என்பவர் எழுதிய ஆங்கில மூலத்தின் நேரடி மொழிபெயர்ப்பல்ல. சிலர் ஏற்கெனவே தமிழில் மொழி பெயர்த்துள்ளனர். கிருஷ்ணபிள்ளை கம்பரைப்போல் தமிழ் மரபு பேணாது பிறமொழிச் சொற்களையும் கொச்சை மொழிகளையும் தம் படைப்பில் கையாண்டுள்ளார் என்று சொல்லப்படுவதுண்டு.

**மண்ணியல் சிறு தேர்**

இது சுத்திரகன் என்றழைக்கப்படும் வடமொழிக் கவியரசர் யாத்தமைத்த ''மிருச்சகடிகம்'' என்னும் பிரகரண நாடகத்தின் நேர் மொழிபெயர்ப்பாகும். இந்நூலுக்கும் 'சுவப்நவாசவதத்தம்' எனும் முன்னூலுமுள்ளது. இதன் ஆங்கிலமுகவுரையில் சில விஷயங்கள் அடங்கியுள்ளன. 'மிருச்சகடிகம்' பல அறிஞர்களால் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. ஆனால் பண்டிதமணி மு.கதிரேசன் செட்டியார் தமிழைப்போல் ஆரியமும் விரும்பிப் பயின்றவர். ஆதலின் 'மண்ணியல் சிறுதேர்' எனும் பெயரில் இதுவே முதனூல் என எண்ணத்தக்க எழில் வளமும் நடைநலமும் சுவை பலவும் செறிந்தொளிரும்படி யாத்துள்ளார்.

**8. சரியான மொழிபெயர்ப்பு**

'மொழிபெயர்ப்பு' என்றால் முழுமையான அல்லது துல்லியமான மொழிபெயர்ப்பு என்றே பொருள். முழுமையான அல்லது துல்லியமான மொழிபெயர்ப்பு என்றால், ஒருமொழியில் உள்ள கருத்தினை முழுமையாக எதையும் விட்டுவிடாது கூட்டிக்குறைக்காது மற்றும் மூலத்தை விட்டு விலகாது மற்றொருமொழியில் மாற்றித் தருகின்ற அருஞ்செயலாகும். இச் செயலில் மூலநூலின் கருத்துக்கு முதலிடம் தரவேண்டுமேயன்றிச் சொற்களுக்கு அன்று. மூலத்தை விட்டு விலகுதல் கூடாது. இதுபோலச் செய்தலோ வேறு படைப்போ அன்று.

**மொழிபெயர்ப்பின் பயன்கள்**

1. மொழிபெயர்ப்பு நாடுகளிடையே நட்புறவையும் பண்பாட்டுப் பரிமாற்றத்தையும் ஏற்படுத்தப் பயன்படுவது,
2. கருத்து அறிதல், அறிவியல் முன்னேற்றம், இதனால் தொழில் முதலியன நாட்டுக்கு நாடு வளர்ச்சியுறப் பயன்படுவது,
3. உலக வரலாற்றினை அறியப் பயன்படுவது,
4. இந்திய—உலக இலக்கியங்களுக்கிடையே ஓர் உறவை/ ஒப்பியலை/ தொடர்பை வளர்த்துக் கொள்ளப் பயன்படுவது.
5. ஒரு நாட்டின் நீதிநெறிகளையும் அறிந்துகொள்ள மொழி பெயர்ப்பு பயன்படுகிறது. அறநூல்களின் பயன்பாடு புலப்படும்.

சரியான மொழிபெயர்ப்பு எது ? கருத்தோட்டம் எ.டு. சட்டம்— அறிவியல் முதலியன.

ஒரு மொழியிலுள்ள சொல், சொற்றொடர் ஆகியவற்றின் கருத்தை மற்றொரு மொழியில் தெரிவிப்பதே மொழிபெயர்ப்பாகும். மூலத்தின் விளைவை, பிரதிபலிப்பை, தாக்கத்தை மற்றொன்றின் மூலமாகக் கூடிய மட்டிலும் உருவாக்குவதே மொழிபெயர்ப்பு. அதிலும் முழுமையான பெயர்ப்பு என்கிறார் பால்வேலரி. இன்றைய உலகில் அதிகமாகப் பேசப்படுவனவாகவும் வரைமுறையற்றனவாகவும் உள்ள சில துறைகளில் மொழிபெயர்ப்பியலும் அடங்கும். ‘வில்லியம் வெர்க்மெய்ஸ்டர்’ என்பவர், மொழிபெயர்ப்புப் பற்றிக் கூறும்போது ‘மொழிபெயர்ப்பு என்பது ஒரு கருத்தை விளக்கிச் சொல்வது’ என்கிறார். மொழிபெயர்ப்பு என்பது ஒரு கவின்கலை. மற்றக் கலைகளைப் போலவே இதையும் தனிக் கவனம் எடுத்தே பயின்றாக வேண்டும். ஆங்கிலமொழிச் சொற்களுக்குப் பதிலாகத் தமிழ்ச் சொற்களை இட்டு நிரப்புவதில் மொழிபெயர்ப்புக் கவின்கலை கைவந்து விடாது. ஆனால், ஆங்கில மூலத்திலுள்ள கருத்துகளை இலக்கண இலக்கிய மொழிமரபுக்கேற்ப நல்ல தமிழில் தெளிவாகவும் துல்லியமாகவும் கூறுவதில்தான் மொழிபெயர்ப்பின் சிறப்பு உள்ளது எனச் சட்டமன்றப் பேரவை முன்னாள் செயலாளர் மா. சண்முக சுப்பிரமணியம் கூறுகிறார். உண்மையான/முழுமையான மொழிபெயர்ப்பின் நோக்கமே, மூலமொழி ஆசிரியரின் கருத்துகளை ஊன்றிப் பார்ப்பதேயன்றிச் சொற்களை மட்டும் பதம் பிரித்துப் பார்ப்பதன்று. மொழிபெயர்ப்பு என்ற கவின்கலை பரந்த பொருளில் விரிந்த எல்லையில் மேற்கொள்ளப்படுவதாகும். மொழிபெயர்ப்பு மேற்கொள்ளப்படும் நோக்கம், அதன் பயன், அதைச் செய்கின்ற காலவரம்பு ஆகியவற்றின் அடிப்படையில் அதைப் பலரும் பலவாறாகக் கூற முனைகின்றனர். மொழிபெயர்ப்பின் செறிவையும் நுட்பத்தையும் இக்காலந்தான் நமக்கு உணர்த்திற்று. இப்பணியின் செய்திறமே ஒரு மொழியிலிருந்து மற்றொரு மொழிக்கு எடுத்துக்கொண்ட ஒருபொருளை மொழிமாற்றம் செய்வதேயாகும். ஆக மொழிபெயர்ப்பு என்பது செயல் அடிப்படையில் மொழிமாற்றமே. ஒரு மொழிபெயர்ப்பில் மொழிமாற்றம் செய்யும் போது, அந்த மொழியின் மரபினைப் பாதுகாத்து அப்பணி மேற்கொள்ளப் படுதல் அந்த இலக்கு மொழிக்கு ஆக்கம் பயப்பதால், இதை மொழியாக்கம் என்றும் கூறுவர்.

மொழிபெயர்ப்பியலை இன்னும் சிலர் இலக்கிய வகையிலானது, இலக்கியவகையல்லாதது எனவும் பாகுபடுத்துவர். இலக்கிய வகைசாரா மொழிபெயர்ப்பில் சட்டம், அறிவியல் தொழில் நுட்பம் முதலானவை அடங்கும். இவை கருத்தோட்டமிக்க

துறைகளாகும். இவற்றில் மூலத்தின் கூறினை விட்டுவிடுதலோ அதில் எதையும் சேர்த்தலோ இயலாது. எடுத்துக்காட்டாக இங்கு நாம் சட்ட மொழிபெயர்ப்பை எடுத்துக்கொள்ளலாம். சட்ட மொழிபெயர்ப்பு மூவகைப்படும். சட்டமொழிபெயர்ப்பின் மூன்று வகைகளில் முதலிடம் வகிப்பது சட்ட முன்வடிவு நிலையில் மேற்கொள்ளப்படுவதாகும். அடுத்து இடம்பெறுவது, மாநில, மையச் சட்டங்களின் மொழிபெயர்ப்பாகும். இறுதியானது என்றாலும் சமுதாய மக்களோடு அதிக நேரடித் தொடர்புள்ளது. தீர்ப்புகளின், சட்ட அறிவிக்கை, விதி, துணைவிதி, ஒழுங்குமுறை விதி, சட்டச் சொற் களஞ்சியம் ஆகியவற்றின் மொழிபெயர்ப்பாகும். இம்மூவகையானும் நடைபெறும் சட்ட மொழிபெயர்ப்புகளில் சட்ட முன்வடிவு (Bill) நிலையில் நடைபெறும் மொழிபெயர்ப்பின் நடையின் தரமும், திறமும் நுட்பமானவை. இந்நிலையில் சட்ட முன்வடிவுகளின் இறுதியில் இடம்பெறும் நோக்கக் காரண விளக்கவுரை (Statement of object and reasons-SOR) சிறப்பான இடம் வகிக்கும். தமிழ் ஆட்சிமொழிச் சட்டத்தைச் செயற்படுத்தும் முகத்தான் அமைந்த இத்திட்டம் மக்களிடம் வரவேற்பைப் பெற்றுள்ளது.

மொழிபெயர்ப்புக் கொள்கைகள் பல சட்ட முன்வடிவு நிலையில் மொழிபெயர்ப்பில் பயன்படுத்தப்பட்டு ஆய்வும் சோதனையும் நடத்தப்பெற்றுள்ளன. பல வெற்றியும் கண்டுள்ளன. சட்டமுன் வடிவு சட்டமானதும் அதற்காக வனையப்படும் விதிகளின் மொழிபெயர்ப்பை மற்றொரு துறையினர் மேற்கொள்வதால், ஒருசீர்மை (Uniformity) மொழிநடை முதலியவை பேணப்படாது தரமான சட்டத் தமிழும் பாதிக்கப்படுகிறது. மொழிபெயர்ப்பு வகைகள், பலவற்றுள் முழுமையான அல்லது துல்லியமான மொழிபெயர்ப்பும் ஒன்று. மற்றவற்றை விட மிகநுட்பமும் திட்பமும் அடங்கியது. ''மொழிபெயர்ப்பில் மொழியியல் கூறு'' என்கிற புகழ் வாய்ந்த தமது கட்டுரையில் 'ரோமன் ஜேக்கப்சன்' என்பவர், 1. ஒரே மொழிக்குள் மொழிபெயர்ப்பு அல்லது பொழிப்புரை 2. மொழி இடை மொழிபெயர்ப்பு அல்லது முறையான மொழிபெயர்ப்பு 3. சைகைவகை மொழிபெயர்ப்பு என்று பாகுபடுத்திய அவரின் மூன்றுவகை மொழிபெயர்ப்புப் பிரிவுகளில் இரண்டாவதாகச் சொல்லப்பட்டதே முழுமையான அல்லது துல்லியமான மொழிபெயர்ப்பாகும். இதில் சொல்ல வேண்டிய கருத்து, மூலவாசகத்திலிருந்து இலக்குமொழிக்கு மாற்றப்படுகின்றது. மொழிபெயர்ப்பு என்பது இரண்டு வகையான நடவடிக்கைகளை உள்ளடக்குவதாகும். மூலவாசகத்தின் பொருளை நன்கு புரிந்து

கொள்ளுதல் என்பது அதிலொன்றாகும். அவ்வாறு புரிந்து கொண்டதை இலக்குமொழிக்கு மாற்றுவது இரண்டாவதாகும். சொல்லையும் பொருளையும் இருகூறாகப் பிரித்து மொழிபெயர்க்கும் கொள்கை தொல்காப்பியத்தில் மொழிபெயர்த்து அதர்ப்பட யாத்தல் என்பதால், மொழிபெயர்ப்பு வரலாற்றில் மிக முக்கியமான ஒரு கொள்கையாகும்.

## மொழிபெயர்ப்பு போலச் செய்தலோ அல்லது படைப்புக் கலையோ அன்று

இதில் திரைடன் அவர்கள் மொழிப்புரை மொழிபெயர்ப்பு முறையே மிகச் சிறந்த முறையாக இருப்பதாகக் கூறுகின்றனர். எ.டு. 1995ஆம் ஆண்டு ஆளுநர் உரையின் தமிழாக்கத்தினைக் கூறலாம். 29 பக்கங்களைக் கொண்ட ஆங்கில உரையை 44 பக்கங்களாகத் தமிழில் பொழிப்புரை போல் விளக்கிச் செய்யப்பட்ட தமிழாக்கம் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் காரசாரமான விவாதத்தை எழுப்பியது. அதன் மொழிபெயர்ப்புத்துல்லியம், மொழி மரபு குறித்தும் நிகரிகள் குறித்தும் Enviable என்பதற்குப் பொறாமைப்படத்தக்க எனும் நிகரி சரியா என்பது போன்ற விவாதங்கள் நடந்தன. மேரிஸ்னெல்ஹான்பி (1989) திரைடனுடைய மொழிபெயர்ப்புக் கொள்கையைச் சரியாக இனம் கண்டு கொண்டதைப் போன்று அது முக்கோண விதிகங்களைக் கணித்தாயும் கணக்கியல் துறை போன்று கடினமானதாக அல்லாமல், வளைந்து கொடுக்கக்கூடிய தன்மையுடையதாகும் என்கிறார்.

## மொழிபெயர்க்க இயலாத நிலை (Untranslatable)

மொழிபெயர்ப்பில் ஒரு வாசகத்தை முற்றிலும் துல்லியமாக முழுமையாக மொழிபெயர்க்க முடியுமா என்கிற, சிக்கல் பெரிதும் ஆய்வுக்குரிய தொன்றாகும். 1995ஆம் ஆண்டு ஆளுநரின் ஆங்கில உரைக்கான தமிழாக்கத்தில் 'துல்லியம்' அதாவது முழுமையான அல்லது சரியான மொழிபெயர்ப்புப் பற்றி எழுந்தவாதத்தில், மாண்புமிகு அந்நாள் பேரவைத் தலைவர் 'An Exact Translation was impossible' என்று வாதிட்டார். குயூனே என்னும் தத்துவஞானி ''முடிவான மொழிபெயர்ப்பு/முழுமையான மொழிபெயர்ப்பு இயலுமா'' என்று அவரே வினா எழுப்பி, இயலாது என மறுப்பைத் தெரிவித்தார். மொழிபெயர்ப்பின் 'முடிவில்லாத்தன்மை' என்ற கோட்பாட்டினை அவர் வகுத்துள்ளார். அவருடைய கருத்தின்படி ஆங்கிலச் சொல் 'Statement' என்ற சொல்லுக்கு என்ன பொருள் என்பதையோ,

மற்றப்படி அச்சொல்லைப் பலரும் புரிந்து கொண்டிருந்தாலுங்கூட அச்சொல் என்ன பொருள்படுகிறது என்பதையோ, சரியாகக் கூறமுடியாது என்பதேயாகும். எனவே மொழிபெயர்ப்பின் துல்லியத்தை முடிவு செய்யவே முடியாது.

இந்நூலாசிரியர் எழுதிய ''மொழிபெயர்ப்புச் சிக்கல்களும் தீர்வுகளும்'' என்ற ஆய்வு நூலுக்கு அணிந்துரை வழங்கிய முன்னாள் தமிழ்ப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் முனைவர் இ. சுந்தரமூர்த்தி

> மொழிபெயர்ப்புப்பணி எளிமையான பணியன்று, போலச் செய்வது மன்று, படைப்புக்கலையுமன்று. இருவேறு முயற்சிகளில் உருவாகும் அரியகலை. மூலப்படைப்பின் ஆழ்பொருளை உணர்ந்து படிப்போர்க்கு எளிமையாகத்தரும் இம் மொழிபெயர்ப்புப் பணியில் பல்வேறு சிக்கல்கள் உண்டு

என்கிறார்.

பேராசிரியர் இ.சுந்தரமூர்த்தி கூறிய சிக்கல்களில் மொழிபெயர்க்க இயலாத தன்மையும் ஒன்று. மொழிபெயர்ப்பில் போலச் செய்தால் அது மொழிபெயர்ப்பாகாது. மூலநூலான படைப்புத் தகுதியும் மொழிபெயர்ப்பிற்கு இல்லை. ஆகவே இருமொழி அறிவு மொழிபெயர்ப்பாளரின் பல்வேறு அனுபவ முத்திரைகள் கலந்து உருவான ஒருவகைப் படைப்பாகும். ஆண்டன்போப் போவிக் என்பவரும் ஜே.சி.கேட்ஃபோர்டு என்பவரும் இருவகையான மொழிபெயர்க்க இயலாமையைப் பற்றிக் கூறுகின்றனர். எ—டு மொழியியல்—பண்பாட்டியல் மொழியில் மொழிபெயர்க்க இயலாமை என்பது சொற்களஞ்சியத்தில் தொழில் சார்ந்த மாற்றுச் சொற்கள் இல்லாமையினால் ஏற்படுவது. மொழிபெயர்ப்புச் செய்யும் முறை கடினமானது என்பதால், நல்ல இலக்கிய ஆக்கத்தை மொழிபெயர்ப்பில் எய்துவது மிகவும் சிக்கலான செயலாகும்.

ஷேக்ஸ்பியர் படைத்த நாடகக் கோமாளிகள் சிலேடைப் புலிகளாக இருப்பார்கள். ஆங்கிலத்தில் அவர்கள் பயன்படுத்திய சிலேடைகளைத் தமிழ்ப்படுத்துவது என்பது முடியாத காரியம். எடுத்துக்காட்டாக, 'Lying' என்ற ஆங்கிலச் சொல்லிற்குப் படுத்திருத்தல், பொய் சொல்லுதல் ஆகிய இருவேறு பொருள்களைத் தரக்கூடிய ஒருசொல். தமிழில் இவ்விரு பொருள்களையும் தரக்கூடிய

ஒரே சொல் இருக்கிறதா என்று நீதிபதி மகராசன் நெடுங்காலமாகத் தேடியும் கண்டுபிடிக்க இயலவில்லை. ஆகவே 'Lying' என்ற சொல்லை வைத்துக் கொண்டு ஷேக்ஸ்பியர் சிலேடை விளையாட்டு விளையாடும்போது தமிழில் மொழிபெயர்ப்பதில் கடினமான செயலாகிறது. ஆங்கிலச் சிலேடைகளைப் போலவே, தமிழ்ச் சிலேடைகளையும் மொழிபெயர்க்க இயலவில்லை.

இதே போன்று சமயம், பண்பாட்டியலில் மொழிபெயர்க்க முடியாமை என்பது மூலவாசகத்திலுள்ளவற்றிற்கீடான தொடர்புடைய சந்தர்ப்பங்கள் தமிழில் இல்லாமையினால் ஏற்படுவதாகும். இராசகோபாலையர் மொழிபெயர்த்த ஷேக்ஸ்பியரின் ரம்யனும் ஜொலிதையும் (Romeo and Juliet) எனும் நாடகத்தில் அவர் செய்த சில மாற்றங்களைத் தமது முன்னுரையில் குறிப்பிடுகிறார். ''ஷேக்ஸ்பியரின் நாடகத்தில் வரும் முத்தக் காட்சிகளையும் மது அருந்தும் நிகழ்ச்சிகளையும் எமது நாட்டு மக்கள் ஒப்புக்கொள்ள மாட்டார்கள்; எனவே யான் அவற்றை நீக்கிவிட்டு கும்மி, கோலாட்டம், ஜாத்திரை ஆகிய நிகழச்சிகளை அந்த இடங்களில் இணைத்துவிட்டேன்'' என்று குறிப்பிடுகிறார். இது முரண்பாடான பெயர்ப்பு. மூலத்தை விட்டு விலகியது என்பதைவிட 1920களில் வெளிவந்த நூலில் எழுதப்பட்டது. அந்த நூல் இன்று மொழிபெயர்க்கப்பட்டால் மூலத்தில் உள்ளவாறே எழுதினாலும் மக்கள் விரும்புவர். இது ஏற்பட்ட பண்பாட்டு மாற்றம். ஷேக்ஸ்பியர் நூல்களில் இடம்பெறும் புராணக் கடவுள்களுக்கு ஈடான கடவுள்கள் தமிழில் இல்லை. எ—டு நெப்ட்யூனை (Neptune) வருணன் என்றும் குப்பிடை (Cupid) மன்மதன் என்றும் மொழிபெயர்க்கலாம் என்கிறார் நீதிபதி மகராசன். ஆகவே மொழிபெயர்ப்பு என்பது முழுக்க முழுக்க வெற்றிபெற இயலாத செயல்.

## மொழிபெயர்ப்பில் கூட்டவோ குறைக்கவோ செய்வது மரபன்று

மொழிபெயர்ப்பு என்பது கடினமான செயலே ஒழிய முடியாத செயல் அல்ல என்று ஓர் அறிஞர் கூறினார். சிலவேளைகளில் மூலத்தில் உள்ள சொல்லுக்குச் சொல் மொழிபெயர்த்தால், வாசகத்தின் பொருளே எதிர்மாறாக ஆகிவிடும். ஆனால் கருத்தை மொழிமாற்றம் செய்வதற்குச் சொற்கள்தான் கருவிகள். நாம் திறம்பட மொழிபெயர்க்க வேண்டும் என்றால் நீதிபதி சு.மகராசன் கூறியதுபோலச் சொற்கள் என்ற கருவிகளைச் சரியாக வைத்திருத்தல் வேண்டும்.

## வாசகத்தைப் பிரித்துப் பெயர்த்தல்

பொதுவாக வண்டிவாகனங்களை உருவாக்க வேண்டும் என்றாலும் சரி, உருவான வண்டியைப் பழுதுபார்க்க வேண்டும் என்றாலும் சரி, உதிரிச் சமான்களால் பூட்டப்பட்ட வண்டியை உதிரிகளாகப் பிரித்துக் குறித்த பணி முடிப்பது வண்டி செய்வோர் மரபு. வண்டி எப்படி பயணத்திற்கான வாகனமோ, அப்படியே மொழியும் மக்கள் தொடர்புக்கு ஒருவாகனம். அந்த வகையில் மொழி வாகனத்தில் மொழிபெயர்ப்பின்போது சிக்கல் நேரின் அந்த வாக்கியத்தை உடைத்துப் பலவாறாகப் பிரித்துத் தனித்தனியாக மொழிபெயர்க்கலாம். பின்பு அவ்வாறு தனியாக மொழிபெயர்த்த வற்றை இணைத்தும் பிணைத்தும் மொத்தமாகக் கூட்டி வாக்கியமாகச் சேர்த்தல் மொழிபெயர்ப்புச் சிக்கல் தீர்க்கும் வழியாகும். இவ்வாறு வாக்கியத்தைப் பிரித்து மொழிபெயர்க்கும்போது, சில சொற்றொடர்களைச் சேர்த்தலோ அல்லது சில சொற்களுக்கு நிகரிகள் கிடைக்க வில்லை என்பதால் குறைத்துவிடுதலோ கூடாது.

## நிகரி தரும் சிக்கல்

'நிகரி' என்ற சொல்லுக்கே ஏறத்தாழ மூலவாசகத்தின் பொருளோடு ஒத்திருப்பது என்ற பொருள். எ–டு. அரசுத் திட்டத்தில் 'Imagination' என்று குறித்தல் கூடாது. 'Farsighted' என்றே அமைக்க வேண்டும். இங்குக் கற்பனை என்பதைவிடத் 'தொலைநோக்கு' என்பதே சரியான நிகரி என்று தமிழ்நாடு சட்ட மன்றத்தில் எதிர்க்கட்சியினர் வாதிட்டனர். மொழிபெயர்ப்பு ஆய்வுகளின் 'நிகரி' என்றால் என்ன? அதனைப் பெறுவது எவ்வாறு? உண்மையிலேயே அதனைப்பெற முடியுமா? பல்வேறு வகையான நிகரிகள் எவை? என்பன போன்ற முக்கியமான கருத்துகள் கோட்பாடுகள் அரசுத் துறை மொழிபெயர்ப்புகளில் காணலாம். அரசுத் தரப்பில் பல்வேறு துறைகளில் மொழிபெயர்ப்புகள் நடைபெற்று வருகின்றன. கடந்த அரை நூற்றாண்டிற்கும் மேலாகத் தமிழை ஆட்சிமொழியாக ஏற்றபின் நாம் சட்டம், நிருவாகம் (ஆட்சி) நீதி ஆகிய முத்துறைகளிலும் 'எங்கும் தமிழ் எதிலும் தமிழ்', என்ற கோட்பாட்டின்படி சட்டத்துறை, ஆட்சித்துறை, நீதித்துறை ஆகிய இம்மூன்றிலும் தமிழை ஆட்சி மொழியாகச் செயற்படுத்தி வெற்றிகண்டு வருகின்றோம். எனவே பழைய முத்தமிழைப் போன்று நவீன முத்தமிழான சட்டத்தமிழ், அறிவியல்தமிழ், ஆட்சித்தமிழ் என்று புதிய முத்தமிழ் வரிசையில் மொழிபெயர்ப்புத் தலையாய பங்கு வகிக்கின்றது. இத்தமிழ் மூன்றும் இலக்கியத் தமிழினின்றும் சற்று மாறுபட்டது. பேரா. அ. சிதம்பரநாதன் செட்டியார், நீதி நூல்களில் இலக்கிய நயத்தைக் காண இயலாது

என்று கூறியுள்ளார். இலக்கியத் தமிழிலே நயங்காண்பது அரிது என்றால் மேற்கூறிய புதிய முத்தமிழில் மொழிநயத்திற்கோ உணர்ச்சிக்கோ சிறிதும் இடமில்லை. அரசுத்தரப்பில் நடைபெறும் சட்டம், விதி, ஆணை, கோப்புகள், கடிதங்களின் தொடர்பான மொழிபெயர்ப்புகளில் மொழிபெயர்ப்பாளர் ஒரு வாசகத்தைக் கூட்டியோ குறைத்தோ எழுத இயலாது. சட்டம், அறிவியல், ஆட்சியியல் கருத்துகளை மிகைப்படக் கூறாமலும் குன்றக் கூறாமலும் நடுநிலையில் உள்ளதை உள்ளவாறு எளிய தமிழ் நடையில் திறம்பட இயம்ப வேண்டும். இது அரசு ஆவணங்களிலும் ஆட்சி முறையிலும் முக்கியமானது. ஆட்சியில் நடை என்பது ஒரு மொழியின் பயன்பாட்டைத் தெள்ளத் தெளிவாகச் சொல்ல வந்த செய்தியைத் தொடர்புபடுத்தி அந்த அந்தச் சூழல்களுக்கு ஏற்ப அமைத்துக் கொள்ளப்படும் அல்லது எழுதப்படும் ஒரு மொழி நடை வகையாகும். மொழிபெயர்ப்பில், படிப்பதற்கேற்றவாறு எளிய தெளிவான மொழிநடையை நன்கு பழுத்த அனுபவத்தால்தான் பெறமுடியும். மொழிபெயர்ப்பாளர் அவர் எத்துறையைச் சேர்ந்தவராயினும் மொழிபெயர்ப்புச் செயல்முறைகளிலும் கொள்கைகளிலும் நன்கு ஈடுபட்டுத்தம்மை வளர்த்துக் கொள்ள வேண்டும். மொழிபெயர்ப்பில் வல்லவராக உள்ளவர் 1. சொற்களின் நிகரிகள் 2. மொழிபெயர்க்கப் பெறும் கருத்து 3. மொழிபெயர்ப்பின் நடை ஆகியவற்றை மனத்தில் இருத்திக் கொள்ள வேண்டும். காரணம், மொழிபெயர்ப்பாளருக்கும் பொறுப்புகள் சில உள. இவர் ஒரு புகைப்படக் கருவிபோன்றவர். இவர் குறைகளை நிரப்புபவர், தேவைகளை நிறைவு செய்பவர். ஆக்க முறையிலான செயல்வீரர். நீதிபதியும் கூட. இவர் தென்னை மரத்திற்கு ஈடாவார். இவர் மூலத்தின் நடையையும் பொருளையும் உணர்ந்து தம் மொழிபெயர்ப்பில் கொண்டு வரவேண்டும். ஒரு மொழிபெயர்ப்பாளர் ஒரு மூலநூலை ஒன்றுக்குப் பலமுறை படித்து அதன் பொருளையும் கருத்தையும் மனத்தில் கொண்டு பின்னர்த் தம் மொழிநடையில் எழுத வேண்டும். இதுபொதுவான வேர்நிலை விதி (Thumb Rule). ஆனால், அரசுத்துறை மொழிபெயர்ப்புகளில் மிகப்பல சமயங்களில் இஃது இயலுவதில்லை. நிலத்திலுள்ள பலவகையான நீர் ஆவியாகி வானம் சென்று பின் மழையாக மீண்டும் நிலத்தில் வந்து சேர்கிறது. அவ்வாறு வானம் பெய்த நீர், மண்ணின் வண்ணம், இயல்புக் கேற்ப மாறுபடுவது போல், மொழி பெயர்க்கப்படுகின்ற மூலவாசகத்தின் பொருளின் தன்மைக்கேற்ப மொழிபெயர்ப்பாளரின் மொழிநடையும் மாறுபடுகின்றது. படிப்பவர்களின் பாங்கையும் பண்பையும் குறித்தும் கூட மொழி நடை

மாறுபடும். ஆட்சி ஆவணங்களை மிகக் கவனமாக எளியநடையில் பெயர்க்க வேண்டும். சட்டச்சிக்கல், இரு பொருள்படும் மொழிநடை முதலியன இடம்பெறுவதைத் தவிர்த்தல் வேண்டும்.

## 9(1) கணிப்பொறி வகை மொழிபெயர்ப்பு – முன்னுரை

கணினி மொழிபெயர்ப்பு இன்றைய உலகில் மிக முக்கியமானதாகக் கருதப்படுகிறது. பல ஆண்டுகளாக மனிதனால் செய்யப்பட்ட மொழிபெயர்ப்புச் செயல்பாட்டைக் கணினியால் எவ்வாறு எளிதாகவும் விரைவாகவும் செய்யலாம் என்ற முயற்சிகள் 1950களிலேயே தொடங்கிவிட்டன. கணினி வளர்ச்சியில் ஏற்பட்ட முன்னேற்றங்கள் இயந்திர மொழிபெயர்ப்பிலும் முன்னேற்றத்தை ஏற்படுத்தியது. கணிப்பொறியை மட்டும் வைத்துக் கொண்டு மொழிபெயர்ப்புச் செய்ய இயலாது என்று புரிந்து கொள்ளப்பட்டதன் விளைவாகக் கணிப்பொறி உதவியுடன் மனித மொழிபெயர்ப்பு, மனித உதவியுடன் கணிப்பொறி மொழிபெயர்ப்பு முற்றிலும் தானியங்கி மொழிபெயர்ப்பு எனப் பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

### பயன்பாடு

1. இணையத் தளத்தில் இருக்கும் ஆங்கிலச் செய்திகளை உடனுக்குடன் மொழிபெயர்க்கக் கணினி மொழிபெயர்ப்பு பயன்படும்.
2. இன்றைய கலைவளர்ச்சிக்கு இயந்திர மொழிபெயர்ப்பு ஒருநடைமுறைச் செயல்பாட்டிற்கு மாறும் நிலையே அடிப்படை நோக்கமாகும்.
3. தகவல் பரிமாற்றத்திற்கு இயந்திர மொழிபெயர்ப்பின் பயன்பாட்டால் பன்மடங்காகப் பெருகியுள்ள தகவல்களைப் பெறலாம்.

### கணிப்பொறிவகை மொழிபெயர்ப்பின் பிரிவுகள்

மொழிபெயர்ப்பு என்றால், ஒரு மொழியில் உள்ள செய்திகளைப் பிறிதொரு மொழியில் மாற்றித்தரும் செயலாகும். இவ்வாறு மாற்றி வழங்குவதற்குப் பல்வேறு உத்திகளும் அறிவியல் தொழில் நுட்பங்களும் பயன்படுத்தப்படுகின்றன. அறிவியல் தொழில்நுட்ப வளர்ச்சியால் மனித குலத்திற்குப் பலவிதப் பயன்கள் விளைகின்றன. அவ்வாறு கிடைக்கப்பெறும் பயன்களுள் இயந்திர மொழிபெயர்ப்பும் ஒன்றாகும். இவ்வாறு இயங்கும் மொழிபெயர்ப்புத்

துறையில் மூன்று பிரிவுகள் இதுவரை காணப்படுகின்றன. அவைமுறையே :-

1. மனித உதவியுடன் மேற்கொள்ளப்படும் கணினி மொழிபெயர்ப்பு
2. கணினிப் பொறித்துணையுடன் மேற்கொள்ளப்படும் மனித மொழிபெயர்ப்பு
3. கணினி தானாகவே மொழிபெயர்க்கும் இயந்திர வகையிலானது.

முதலாவது பிரிவைச் சார்ந்த மனித உதவியுடன் நடைபெறும் இயந்திர மொழிபெயர்ப்பில், வேண்டிய தேவைகளை மனிதன் வழங்குகிறான். கணினி மொழிபெயர்க்கிறது. இன்றைய உலகில் உள்ள கணினி மொழிபெயர்ப்பு வகை, இந்தப்பிரிவைச் சார்ந்தது.

மற்றும் இரண்டாவது பிரிவான கணினி உதவியுடன் செய்யப் படும் மனித மொழிபெயர்ப்பில், மனித இன மொழிபெயர்ப்பாளருக்குத் தக்க கலைச்சொற்களையும் நுட்பங்களையும் கைகொடுத்துக் கணினி ஈடுசெய்கிறது.

ஆனால், இறுதியில் இடம்பெற்றுள்ள கணினிதானாகவே இயந்திரமொழிபெயர்ப்பை மேற்கொள்வது, தற்போது நடைமுறைக்கு உகந்தது அல்ல என்று அறிஞர்களால் உணரப்பட்டுள்ளது.

அமெரிக்காவில் உருவான System, cogns என்ற நிறுவனமும், சீனாவிலுள்ள Cult, Helta நிறுவனமும் மனித உதவியுடன் செய்யப்படும் இயந்திரக் கணினி மனித மொழிபெயர்ப்புகளுக்கு எடுத்துக்காட்டுகளாகும்.

இதுநாள்வரை தயாரிக்கப்பட்ட கணினி இயந்திரங்கள், ஐம்பதிற்கும் மேலான சொற்கள் கொண்ட அகராதியை வைத்தும் பேணி வருகின்றன.

**மனித உதவியுடன் நடைபெறும் கணினிப்பெயர்ப்பு**

மனிதன் உள்ளிடும் பகுதியைச் சீர்ப்படுத்துவது அகராதி தயாரிப்பது போன்ற பல செயல்களைப் பெரும்பாலும் கணினி உதவியுடன் மேற்கொள்ளப்படுகின்றன. ஆகவே மேற்கூறியதிலிருந்து மனித உதவியுடன் நடைபெறும் இயந்திர மொழிபெயப்பு மூன்று வகையான உட்பிரிவுகளைக் கொண்டுள்ளது நன்கு விளங்கும். அவை முறையே:

1. உள்ளிடும் வாசகம் தயாரித்தல்
(Preparation of pre-edited input text)

2. இருமொழி அகராதி தயாரித்தல்
(Preparation of bilingual dictionary)

3. அறுதிசெய் சீராக்கம்
(Post editor)

இனி ஒவ்வொன்றைப் பற்றியும் சிறிது விளக்குவோம்.

### 1. உள்ளிடும் வாசகம் தயாரித்தல் (Preparation of pre-edited input text)

கணினியில் உள்ளிடும் வாசகம் (Text) தயாரிப்பதற்கு முன் கீழ்க்கண்டவற்றைக் கண் காணித்தல் வேண்டும்:

1. மொழிபெயர்க்கப்படவுள்ள வாசகத்தைக் கணினியின் செயல்முறைக்கு ஏற்றாற்போன்று சீர்செய்து கொள்வது நலம்.
2. குறியீடு இல்லாத மொழிக்கூறுகளுக்குக் குறியீடு குறித்து, கணினியின் மொழியமைப்பிற்குத் தகுந்தாற் போன்று, சொற்களையும் சொற்றொடர்களையும் அமைத்துக் கொள்வது நலம்.
3. ஆங்கில மொழியில் உள்ள கூட்டு வாக்கியம் கலவை வாக்கியம் ஆகியவற்றிற்கு இணையாகத் தமிழ்மொழியில் சில இணைப்புக் குறியீட்டின் மூலம் இணைத்து ஒரே அலகாக (Single unit)க் கணினியில் பொருத்தமாக அமைப்பது நலம்.

### 2. இருமொழி அகராதி தயாரித்தல் (Preparation of Bilingual Dictionary)

கணினியின் பயன்பாட்டிற்கு ஏற்றவாறு இருமொழி அகராதி தயாரிக்க வேண்டும். மூல மொழியிலுள்ள சொற்களுக்கு இணையான நிகரிகளைத் தயாரித்தல் வேண்டும். இவ்வாறு செய்வது மொழிபெயர்க்க வேண்டிய பாடத்திற்கு / வாசகத்திற்கு ஏற்றதாய் / பொருத்தமாக மொழிமாற்றம் செய்ய இயல்விக்கும்.

இருமொழிஅகராதி தயாரித்தல் என்றால், மூலச் சொற்களுக்கு இணையான மாற்றுமொழிச் சொற்களில் நிகரிகளை இனங்கண்டு அதன் உட்பொருளைப் புரிந்துகொள்வதாகும். ஆகவே ஒருவர், மூலமொழியிலுள்ள வழக்காற்றுச் சொற்கள், சொற்றொடர்கள்,

மொழியியல் கூறுகள் மற்றும் இலக்கண விதிகள் முதலியவற்றை ஓர்ந்து மனதில் நிறுத்திக் கொள்வது தவிர்க்க இயலாததாகும்.

### 3. அறுதிசெய் சீராக்கம் (Post-Editor)

இச் செயல் முறையில், கணினி இருமொழி அகராதியின் துணையுடன், ஏற்ற நிகரிகளைத் தெரிவு செய்ய இயலும். மூலமொழிக் கூறுகளின் அமைப்பிற்கேற்றவாறு, இலக்குமொழிக் கூறுகள், மாற்றியமைக்கப் பெறும். அறுதிசெய் சீராக்கத்தில், துணைச் செயல் முறைகள் தயாரிக்கப்பட்டு அவை முதன்மைச் செயல்திட்டத்துடன் (Principal-programmes) பொருத்தப்பெறும். இச்செயல்முறையின் (process) போது மூன்று விதமான மாற்றங்கள் நேர்ந்திடும். அவை பின்வருமாறு:

1. பண்பாட்டு—மொழியியல் கூறுகளை அடையாளங்கண்டு அவற்றிற்கான நிகரிகள் மாற்றியமைக்கப்படும்.
2. சொற்பொருண்மையியலில் போதிய கவனம் செலுத்தப்படும். உலகம் ஏற்கும் பொருளோடு கூடிய பொருண்மையியலை இலக்குமொழிக்கு ஏற்றவாறு மாற்றிக் கொள்வது.
3. இலக்கண விதிகள் அடையாளங்காணப்பட்டு இலக்கு மொழிக்கு ஏற்றவாறு, பொருத்தமான இடங்களில் சில குறியீடு வாயிலாக மாற்றியமைக்கப்படும்.

அறிவியல் வளர்ச்சியால் ஒவ்வொரு துறையிலும் இன்றைக்குப் பல மாற்றங்களால் பல புதுமைகளை விளைவித்து வருகின்றன. கணினி மொழியியல் சொற்பொருண்மையியல் பெரிய சோதனைக் களமாகத் தலைதூக்கி வருகின்றது. மேலும் இது இயல்பான மொழிப் பகுப்பாய்வு மற்றும் ஆக்கிகள் (Analyzer and Synthesizer) உள்ளடக்கிய நன்மைகள் பல்வேறு வகைகளுக்கு இன்றியமையாத இடம்பெற்றுள்ளது. சொற்பொருண்மையியல் உளமொழியியலில் இருந்து அறிவு உருப்படுத்தும் (Knowledge Representation) மற்றும் கணினி அமைப்பு வரை விரிவான சிக்கல்களை உள்ளடக்கியுள்ளது. இப்பிரிவில் உளமொழியியல், பயன்பாட்டு மொழியியல், கணினி மொழியியல் பயன்பாட்டு விரிவாக்கம் என்று சொற்பொருண்மையியல் ஆலமரம் போல் விரிந்து பரந்து அளாவுகிறது. உளமொழியியலில் சொல் அலகுகளை அணுகுதல், சொல் அலகுகளின் வடிவமைப்புச் சொற்களுக்கும் கருத்துருக்களுக்கும் உள்ள தொடர்புகள் அலசி ஆராயப்படுகின்றன.

## 9(2) கணிப்பொறி வகை மொழிபெயர்ப்பில் அணுகுமுறைகள்

அறிவு உருப்படுத்தும் மற்றும் மொழியியல் அறிவில் உள்ளடக்குவது போன்றவை இயந்திரமொழிபெயர்ப்பு ஆய்வுகளின் பரப்பில் மேலும் கூடுதல் வளர்ச்சிக்கு ஊக்கம் தந்தது. கணிப்பொறி மொழிபெயர்ப்பிலும் இலக்கண விதிகளால் சில பிரச்சினைகள் எழுகின்றன. இருப்பினும் சில குறிப்பிட்ட இலக்கண விதிகளை வரையறுத்து அவ்விதிப்படி முறைப்படுத்த முடியும். கணிப்பொறி வாயிலாக மொழிபெயர்ப்பினைச் செய்வதற்கான மென்பொருள் (software) கீழே குறிக்கப்படும் செயல்முறைகளை உள்ளடக்கியது.

1. கணிப்பொறி மொழிபெயர்க்கும் போது மனித உதவி தேவைப்படும் சூழல்களைப் பற்றிக் குறிப்பிடுவது.
2. மொழிபெயர்ப்பு நடைபெறும்போது, எதிர்கொள்ளும் சிக்கல்களுக்கான தீர்வுகாணும் திறன்.
3. மொழிபெயர்ப்பிற்குக் கொள்கைகளும் சொற்பொருள் அகராதிக் குறியீட்டுப் பின்னிணைப்புகளும் தேவை.
4. இலக்கண விதிகளுடன் கூடிய அகராதி.
5. கணினி மொழிபெயர்ப்புத் திறன்வாய்ந்ததாக அமைய வேண்டுமாயின், மூலமொழி, இலக்குமொழி அறிவு, மேற்கொள்ளவிருக்கும் மொழிபெயர்ப்பின் நோக்கம் இலக்கண அறிவு ஆகியவை தேவை.

இச்செயல்முறைகளின் துணைகொண்டு, கணினி உதவியுடன் மொழிபெயர்க்கலாம். (Hutchins - 1986)

கடந்த சில ஆண்டுகளில் நடைபெற்ற கணினி மொழி பெயர்ப்புப் பற்றிய ஆய்வின் முடிவுகளால், இத்துறை மொழிபெயர்ப்பு ஊக்கப்படுத்தப்பட்டுள்ளது. இரண்டாம் உலகப் போருக்குப் பின் கணினி வரவால், இயந்திரமொழிபெயர்ப்புப் பற்றிய சிந்தனை தோன்றியது. இயந்திர மொழிபெயர்ப்பின் வளர்ச்சியை நான்கு காலஅளவாகப் பிரித்தும் வகுத்தும் ஆய்வு நடத்தலாம் (Hutchins-1986)

1. 1985ஆம் ஆண்டிலிருந்து கட்டுப்படுத்தும் மற்றும் இணைக்கும் கோட்பாடு (Government and Binding (GB) Theory )

2. சொல் பயன்பாட்டு முறை இலக்கணம்
(Lexical Functional Grammar (LFG))

3. கிளை இணைக்கும் இலக்கணம்
(Tree adjoining Grammar (TAG)

4. பெரிதாக்கப்பட்ட மாற்றுவலைப் பின்னல்
(Augumented Transition Network (ATN)

முதலிய புதிய இலக்கண அமைப்புகளின் அறிமுகம் இயற்கை மொழி ஆராய்ச்சியை விரிவுபடுத்தியது. மற்றும் கணினி அறிவியலில் ஏற்பட்ட தொழில்நுட்ப வளர்ச்சி இயந்திர மொழிபெயர்ப்புச் சோதனையை விரிவுபடுத்தத் தூண்டியுள்ளது. சொற் பொருண்மையியல் பகுப்பாய்வை உள்ளடக்கிய இயற்கை மொழியின் புரிதல் (Natural Language Understanding (NLU)) வேண்டிய உலகளாவிய அறிவுத்தேடலை உள்ளடக்கும்.

அறிவு உருப்படுத்தும் மற்றும் மொழியியல் அறிவில் உள்ளடக்குவது போன்றவை இயந்திர மொழிபெயர்ப்பு ஆய்வுகளின் பரப்பில் மேலும் கூடுதல் வளர்ச்சிக்குத் துணை நின்றது. தற்காலச் செயல்முறைகள் மேற்கூறிய மூன்று அணுகுமுறைகளின் மேம்பாடுகளைப் பயன்படுத்துகின்றன. முழுச் செயல்முறைகளும் பல வகையான கிளைச்செயல்முறைகளாக வகுக்கப்பட்டுச் சரியாக இடையே அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. இயந்திர மொழிபெயர்ப்பின் இவ்வேறுபட்ட காப்பியங்களை மூன்று நிலைகளில் அடக்கலாம். இவையே முன்னர்க் கூறிய இயந்திர மொழிபெயர்ப்பின் மூன்று பிரிவுகளாகும். மொழிபெயர்ப்பை விரைவாகச் செய்து முடிக்கவும் தகவல்களை வெளியிடவும் பலர் விரும்புவதால், கணினிமொழி பெயர்ப்பினைப் பற்றிய ஆய்வு போதிய அளவில் மேற்கொள்ளப்பட வேண்டும். காரணம், இன்றளவில் கணினிமொழிபெயர்ப்பு மேற்கொள்வது பற்றி ஆய்வுக்குரிய நிலையாகவே உள்ளது.

## மொழிபெயர்ப்பில் கணினியின் பங்கு

மொழிபெயர்ப்பியல் என்பது அறிவியலா? அல்லது கவின் கலையா? அது எந்தப் பிரிவைச் சார்ந்தது? எனும் வினாக்கள் முதலில் எழுகின்றன.

மொழிபெயர்ப்பியல் என்பது அறிவியல் துறையைச் சார்ந்தது எனச் சிலர் கருதுகிறார்கள். அதற்குக் காரணம் பொறி மூலம்

மொழிபெயர்ப்பு மேற்கொள்ளப்படுவதே. சில நாடுகளில் கணிப்பொறி மூலம் மொழிபெயர்ப்புச் செய்யப்படுகிறது. அமெரிக்காவில் மைக்கிரோ கைப்பொறி மூலம் ஆங்கிலத்தில் பேசுவது ஜெர்மன்–ரஷ்யன் மொழிகளில் மொழிபெயர்க்கப்படுகிறது.

ஆனால், மொழிபெயர்ப்பியல் கவின்கலைப் பிரிவையே சார்ந்தது எனலாம். வேண்டுமாயின் வருங்காலத்தில் மொழி பெயர்ப்பியல் அறிவியல் முறையில் முழுக்கச் செயல்படும் சாத்தியக் கூறுகளைக் கண்டு பிடிக்கலாம். தற்பொழுது மொழிபெயர்ப்பியல் அறிவியல் பிரிவாக மெய்ப்பிக்கப்படும் நிலை வந்த போதிலும் செயற்பாட்டில் அதிகம் இல்லை.

சிலருக்குத் தற்போது மொழிபெயர்ப்பியல் ஏன் அறிவியலாகக் கருதப்படக்கூடாது என்ற வினா எழலாம். அது அறிவியல் பிரிவைச் சார்ந்தது என்று கருதுவோருக்கு விளக்கம் தரும் முகமாக அறிவியல் சார்பான சிறப்புப்பண்புகள் என எவற்றைக் கொள்ளலாம் எனச் சிந்திக்கலாம்.

அறிவியலுக்கு எக்காலத்திற்கும் பொருந்தக்கூடிய கருத்துகள், எல்லோரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய அடிப்படைக் காரணங்கள் ஆகியன, ஒரே தன்மையாக இருக்க வேண்டும். இதன் அடிப்படையில் அமைந்ததுதான் அறிவியல்.

### ஒரே மாதிரியாக இருப்பதில்லை

மொழிபெயர்ப்பியலில் எக்காலத்திற்கும் எல்லா மொழிபெயர்ப் பாளர்களும் பயன்படுத்தும் தொழில்நுட்பங்கள், உத்திகள் ஒரே மாதிரியாக இருப்பதில்லை. காரணம் மொழிபெயர்ப்புகளில் மொழி பெயர்ப்பாளர்களின் எல்லா உணர்ச்சிகளும் ஒரே மாதிரியாக இருப்பதில்லை. அவர்கள் இடம், பொருள், காலச் சூழ்நிலை முதலிய வற்றால் மாறுபடுகின்றனர். உலகம் முழுவதும் ஒத்துக்கொள்ளக்கூடிய கருத்துரைகளும் ஆய்வுகளும் இதில் அமைந்துவிட முடியாது. மொழி பெயர்ப்பாளரின் மொழிப் புலமையை அறிவியலினால் ஆய்வு செய்ய முடியாது. ஆளுக்கு ஆள் குணங்களும் புலமைகளும் வேறுபடுகின்றன.

பலபொறிகள் மொழிபெயர்ப்புக்காக உருவாக்கப்பட்டாலும் மூலத்தின் உணர்ச்சி பாவங்களை அப்படியே அவை வெளிப்படுத்தும் என்று உறுதி கூற முடியாது. மொழிபெயர்ப்புகளின் கருப்பொருள்கள் நாட்டுக்கு நாடு, மொழிக்கு மொழி மாறுபடுகின்றன. மொழிபெயர்ப்புக் கொள்கைகளும் செயல்முறைகளும் அந்தந்த மொழியின் பயன்பாடு, பண்பாடுகளைக் கொண்டும் மக்களின் மனவளர்ச்சிக்கு ஏற்றாற் போலும் காணப்படுகின்றன.

## அறிவியல் பிரிவாக்கும் முயற்சி[4]

குறிப்பிட்ட சில மொழிபெயர்ப்புகளைக் கொண்டாவது வரையறைகள் வழங்குவதன் மூலம் மொழிபெயர்ப்பினை அறிவியல் சார்ந்த பிரிவாக மாற்ற முயற்சி மேற்கொள்ளலாம். அதாவது ஆர்க்கமிடீஸ், தாமஸ் ஆல்வா எடிசன் கண்டு பிடிப்புகள் போலத் தபால்–தந்தி–விளம்பரம் போன்றுள்ள துறைகளில் அளவான சொற்களைக் கொண்டு தேசிய–மொழிகள் அனைத்திலும் மொழிபெயர்க்க வரையறை வழங்குதல் கூடும்.

இதற்குத் தொழில் நுட்பத்துறை வல்லுநர்கள் முழுமூச்சுடன், ஆய்வில் ஈடுபட்டு வழி முறைகளைக் காணவேண்டும். நாடாளு மன்றத்தில் கணிப்பொறி மூலம் ஒரு சில மொழியில் உறுப்பினர்கள் பேசியதைப் பெரும்பாலோர் பேசும் ஆட்சிமொழியில் மொழிபெயர்க்க ஏற்பாடு செய்யலாம். இப்போது மனிதர்களே இதைச் செய்து வருகிறார்கள்.

இன்று அமெரிக்காவில் இந்த வகையான மொழிபெயர்ப்பு மேற்கொள்ளப்படுகிறது. குறிப்பிட்ட துறையைப் பொறுத்துத் தேவையான ஆங்கிலச் சொற்களுக்கு இணையான நிகரான மற்ற சீனம், பிரெஞ்சு, ரஷ்ய மொழிச் சொற்களை இயந்திரத்தில் செலுத்தித் தயார் செய்து விட்டு, தேவைப்படும் நேர்வில் அவற்றைப் பயன்படுத்திக் கொள்கிறார்கள். இம் முறை இன்னும் நம் நாட்டில் அதிகக் கவனத்தை ஈர்க்கவில்லை. ஆனால் இது எல்லாத் தொழிலுக்கும் பொருந்தும் எனக் கூறக் கூடிய நிலையில் இல்லை.

கணினி மொழிபெயர்ப்பில் தனித் "தனியாகக் குறியீடு செய்தல்" (Single entity) முறை பின்பற்றப்படுவதாகத் தோன்றுகிறது. இம்முறையில் மூலமொழிக்கும் இலக்குமொழிக்கும் இடையே மட்டும் மொழிபெயர்ப்பு நடைபெறும்.

1930ஆம் ஆண்டிலிருந்த 1954ஆம் ஆண்டு வரை மேற்கத்திய நாடுகளில் இயந்திரமொழிபெயர்ப்பில் அதிக நாட்டம் செலுத்தினர். இக்கால கட்டத்தில் சொல்லுக்குச் சொல் மொழி பெயர்ப்பு முறையில் கணினி அதிகமாகப் பயன்படுத்தப்பட்டது. 1956ஆம் ஆண்டு முதல் 1966ஆம் ஆண்டு வரையிலான கால அளவைக் கணினி மொழிபெயர்ப்பின் இரண்டாம் நிலை என்பர். இதில் மனிதனுக்குத் தேவையான எல்லாச் செயல்பாடுகளுக்கும்

---

4. மேலது, ப. 17.

கணினி தானாகவே மொழிபெயர்க்கும் பணிக்குப் பயன்படுத்தும் முயற்சி மேற்கொள்ளப்பட்டது. இதனை அமெரிக்கா, சீனா, பிரான்சு முதலிய நாடுகளிலுள்ள பல்கலைக் கழகங்கள் மற்றும் ஆய்வு நிறுவனங்களும் பயன்படுத்தி ஆராய்ச்சி மேற்கொண்டன. அமெரிக்காவில் தயாரிக்கப்பட்ட 'சிஸ்ட்ரான்' (SYSTRAN) 'லாகோஸ்' (LOGOS) என்ற நிறுவனம் மனித உதவியுடன் செய்யப்படும் கணினி பெயர்ப்புகளில் ஒன்றாகும். இதில் நேரடி மொழிபெயர்ப்பு (Direct Translation) மறைமுகமான மொழி பெயர்ப்பு (Indirect Translation) மொழிகளுக்குள் நிகழும் பெயர்ப்பு (Inter) மற்றும் மாற்றுதல் முறை (Transfer Model) ஆகிய அணுகுமுறைகள் கணினி மொழிபெயர்ப்பில் பயன்படுத்தப்படுகின்றன. ஆனால் இறுதியாகக் குறிக்கப்பெற்ற கணினி தானாகவே இயங்கும் இயந்திரப்பெயர்ப்பு ஆய்வு இன்னும் எதிர்பார்த்த முழு வெற்றியையும் வரவேற்பையும் ஆய்வாளர்களிடமும் அமெரிக்க மக்களிடமும் பெற இயலவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

**கணினி மொழிபெயர்ப்பில் இந்தியாவின் நிலை**

உலகில் கணினி மொழிபெயர்ப்பின் தேவை இரண்டாம் உலகப் போருக்குப்பின் அதிகமாக உணரப்பட்டது. இயந்திரமொழி பெயர்ப்பு அல்லது கணிப்பொறிவழி மொழிபெயர்ப்பு என அழைக்கப் படும் பல பெயர்களும் பொறிமூலம் நிகழும் மொழிமாற்றத்தையே குறிக்கின்றன.

இயந்திர மொழிபெயர்ப்பின் தேவை அதிகரித்து வருவதால், கணினி மொழியியல் என்ற ஒரு புதிய துறைப் பிரிவும் மொழியியலில் தலைதூக்கியுள்ளது. கணினி / இயந்திர மொழியியலில் சொற் பொருண்மையியல் சிறப்பான நோக்கோடு ஒரு புதிய ஆய்வுக் களமாகத் திகழ்கின்றது. மற்றும் இது இயற்கை மொழிப் பகுப்பாய்வு மேலும் ஆக்கிகள் உள்ளடக்கிய பயன்பாட்டின் பல்வேறு பிரிவுகளில் இன்றியமையாத இடம்பிடித்துள்ளது. சொற்பொருண்மையியல், இயந்திர மொழிபெயர்ப்பில் உளமொழியியலில் இருந்து அறிவு உருப்படுத்தும் மற்றும் கணினி அமைப்புவரை பரந்த பிரச்சினை களுக்குத் தீர்வுகாணும் முயற்சியில் ஈடுபட்டுள்ளது.

1930ஆம் ஆண்டு முதல் 1954ஆம் ஆண்டு வரை உள்ள கால அளவை இயந்திர மொழிபெயர்ப்பின் வரலாற்றின் தொடக்க காலம் என்பர். உலகப் போருக்குப் பின் இது பற்றிய விழிப்புணர்வு வளரவே 1956ஆம் ஆண்டு முதல் 1966ஆம் ஆண்டு வரை யுள்ளதை வளர்ச்சி நிலையில் இரண்டாம் கால அளவு என்பர். பின்னர்ச் சுணக்கமுண்டு.

இயந்திர மொழிபெயர்ப்பு கணினியுகத்தில் மிக இன்றியமையாத பொருளாக்கப்பட்டுள்ளது. 1950களிலேயே எழுந்த வளர்ச்சி சற்றுப் பின்னர்த் தளர்ச்சியுற்றது. மீண்டும் கால ஓட்டத்தில் 1985ஆம் ஆண்டில் கட்டுப்படுத்தும் மற்றும் இணைக்கும் கோட்பாடு (Government and Binding (GB) Theory) உருவெடுத்தது. இத்துறை மீண்டும் வளர்ந்தது.

இந்தியாவில் இயந்திரக் கணினிப் பெயர்ப்புகள் இதற்கான சாத்தியத்தை வெளிப்படுத்தும் "பொம்மை ஒழுங்குமுறைகளாக" (Toy systems) என்று தொடக்க நிலையில் காணப்பட்டன. 1978வரை இந்தியாவில் இது குறித்த பெரும் முயற்சி எதுவும் இல்லை. 1978இல் ஐ.ஐ.டி. கான்பூரில் உள்ள மின்னியல் தொழில்நுட்ப துறையின் முயற்சியால் மொழியியல் அடிப்படையிலான தகவல் ஒழுங்கு முறை பற்றிய தேசியக் கருத்தரங்கு (National Symbosium on Linguistic Based Information System) முதன் முதலில் நடத்தப்பட்டது. இது பலரிடம் விழிப்புணர்வை ஊட்டியது. அதன் பின்னர் 1980களில் இருந்து இந்திய மொழிகளுக்குச் சொல்லாய்வுகளும் பிற கணிப்பொறி கண்டுபிடிப்புகளும் உருவாயின. கான்பூரிலுள்ள ஐ.ஐ.டி. "GIST" என்ற பன்மொழித் தொழில் நுட்பத்தின் உருவாக்கத்தில் அக்கறை காட்டியது. இது இயந்திர மொழிபெயர்ப்பிற்கு ஊக்கமளித்தது. அது குறித்த பல திட்டங்களுக்குப் பல செயல்திட்டங்களை ஊக்குவித்தது. இந்தியாவில் மூன்று அணுகுமுறைகள் உண்டு. அவைமுறையே 1. இடைமொழி அணுகுமுறை (Inter Lingual Approach) 2. நேரடி சொல்சார் மாற்றும் அணுகுமுறை (Direct Lexical Transfer Approach) 3. கணிப்பொறி உதவியுடன் மொழிபெயர்ப்பு முயற்சிகள் (Machine Translation efforts). இவை ஐ.ஐ.டி. கான்பூரில் மேற்கொள்ளப்பட்டன.

## முடிவுரை

கணினி மொழிபெயர்ப்பு இன்றைய உலகில் மிக முக்கிய மானதாகக் கருதப்படுகிறது. கணினி வளர்ச்சியில் ஏற்பட்ட முன்னேற்றங்கள் இயந்திரமொழிபெயர்ப்பில் முன்னேற்றத்தை ஏற்படுத்தியது. கணினி மொழிபெயர்ப்பில் மூன்று பிரிவுகள் காணப் படுகின்றன. 1. மனித உதவியுடன், கணினித் துணையுடன், தானாகவே கணினி மூலமாக என்று மொழிபெயர்ப்பு மூன்று வகையில் இப்பிரிவில் மேற்கொள்ளப்படுகிறது. கணினி மொழிபெயாப்பில் அதன் அணுகுமுறைகள் இயந்திரக் கருவிகளைச் சார்ந்து

நடைபெறுகின்றன. இதில் கணினியின் பங்கு கணிசமாக உள்ளது. இந்தியாவில் இயந்திர மொழிபெயர்ப்பில் வளர்நிலை நோக்கி நகர்கின்றது எனலாம்.

## 10. ஆட்சித்துறை மற்றும் சட்டத்துறை மொழிபெயர்ப்புகள்

சட்டம், நிருவாகம் முதலியன மக்கள் வாழ்வை நெறிப்படுத்த வல்லன. அதைக் குடிமக்கள் அறியாதிருப்பது தண்டனைக்குரிய குற்றமாகும். சட்டத்தை அறியாதது தண்டனைக்குரியதே. ஆனால், அச்சட்டம் இயற்றப்பட்டிருக்கும் மொழியை அறியாதிருப்பது குற்றமன்று. அது தண்டனைக்கு உரிய குற்றமல்ல. அதாவது ''Ignorance of Law is not execusable'' என்று கூறுவர். எனவே நாட்டின் சட்டதிட்டங்களை மக்கள் அறியும் பொருட்டு ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்திலிருந்தே அந்தந்த வட்டார மொழிகளில் அறிவிப்புகள் வெளியிட வகை செய்யப்பட்டிருந்தது. இது குறிப்பாக நீதிமன்ற நடவடிக்கைகளில் பின்பற்றப்பட்டு வந்தது. 1908ஆம் ஆண்டு உரிமையியல் விசாரணை முறைச் சட்டம் முதலிய ஆங்கிலேயர் காலத்தில் இயற்றப்பட்ட சட்டங்களில், அந்தந்த வட்டார மொழிகளில் மக்களுக்கு நீதிமன்ற நடவடிக்கைகளைத் தெரிவிக்க வகை செய்யப்பட்டிருந்தது.

### பயன்பாடு

**மொழிபெயர்ப்புக்களின் பயன்பாடு** பின்வருமாறு: 1. வேற்று மொழி அறியாதவர்களுக்கு 2. பிறமொழி நூல்களைப் பயிலும் ஆர்வலர்களுக்கு 3. பிறமொழியை ஒருகாலக் கட்டத்தில் கற்றுப்பின் மறந்து விட்டவர்களுக்கு 4. குடிமக்கள் அரசாட்சி நடவடிக்கைகளை அறிந்து தவறிழைக்காது தடுப்பதற்கு.

இவ்வாறு பல பயன்பாட்டிற்காக மொழிபெயர்ப்பு மேற் கொள்ளப்படுகிறது.

### ஆட்சித்துறை முறையிலான மொழிபெயர்ப்பு வரையறை[5]

மொழிபெயர்ப்பு என்பது ஒரு கவின்கலை. ஒரு மொழியிலிருந்து மற்றொரு மொழிக்கு மொழி மாற்றம் மேற்கொள்வதைப் பொதுவாக மொழிபெயர்ப்பு என்பர். மொழிபெயர்ப்பு என்பது அடிப்படையில் ஒரு சமூக நடவடிக்கையாகும். 'சமூகம்' என நாம் குறிப்பிடுவது, சமூகம் தொடர்புடையதான ஒவ்வொன்றும் மற்றும் எல்லாமும் என்பதாகும்.

5. ஆட்சித் தமிழ், கீ. இராமலிங்கனார், மேலது.

வேறுவிதமாகச் சொன்னால், ஒன்றுக்கொன்று இணைந்து செயற்படுவதான மிக மேம்பட்ட அமைப்பையும் (அரசியல், பண்பாடு, சமயம் முதலானவை) உள்ளடக்கும். மொழிபெயர்ப்பில் மற்றொரு சொல்லான 'பொருள்' என்பதைப்பற்றிப் பற்றி நாம் காணலாம். ''பொருள்'' என்பது, பற்றி நாம் புரிந்துகொள்வது என்னவெனில், ஒரு செயலைச் செய்பவர்கள் அடையக் கருதிய அல்லது பயன் அடையக் கருதுகிற நோக்கம் அல்லது குறிக்கோள் என்பதேயாகும். ஒரு மொழியிலிருந்து மற்றொரு மொழியில் ஒருவாசகத்தை ஆக்குகின்ற தன்னிச்சையான, புலமை சார்ந்த நடவடிக்கையாக மொழிபெயர்ப்பினை நாம் உணாந்து கொள்ளும் வரையில், ''மொழிபெயர்ப்பு'', என்னும் சொல்லின் பொருளும், வீச்சும் மிகக் குறுகியதாகவும் கட்டுப்பாடு செய்யப்பட்டதாகவும் முழுமையற்ற தாகவும் – சிலநேரம் குழப்புவதாகவும் கூட ஆகிவிடும். ஐயமில்லாமல், மொழிபெயர்ப்பு என்றால், ஆட்சித்துறை உள்ளிட்ட பலதுறைகளிலும் இன்றைய நிலையில் மிக அவசியமானதாகின்றது. மூலமொழி எந்தச் செய்தியைத் தருகிறதோ, எவ்வகையான விளைவுகளை ஏற்படுத்து கின்றதோ அதன் விளைவுகளை மொழிமாற்றம் செய்யப்படும் மொழியிலும் ஏற்படுத்த வேண்டும். அதுவே ஆட்சித்துறை முறையிலான மொழிமாற்றத்தின் சிறப்பியல்பு.

ஆட்சித்துறையில் ஆங்கிலச் சொல்லைப் பயன்படுத்தும் போது, கீழுள்ளோர் ஆட்சிச் சொற்களிலும் அலுவலகக் குறிப்பினைத் தமிழில் எழுதவும் போதிய பயிற்சியினைப் பெற்றுள்ளனர். அவர்களுக்குத் தமிழில் குறிப்பெழுதுவதற்குப் பணியிடைப் பயிற்சி வழங்கப்படுகின்றது. தலைமைச் செயலகத்தில் இதற்குப் போதிய ஏற்பாடுகள் கடந்த **50** ஆண்டுகளாக அளித்து வரப்படுகின்றன. துணை நூல்களும் ஆட்சிச் சொல்லகராதி (Administrative Terms) முதலியனவும் வழங்கப்படுகின்றன. மாவட்ட அளவில் தமிழ் வளர்ச்சித் துறை இதற்கு ஆவன செய்துள்ளது.

தமிழில் கோப்புகளை வரைந்திட இன்றைய முதல்வர் ஆணையிட்டுள்ளார். ஒருதுறையில் மேலதிகாரி ஒருவர் கீழுள்ள அதிகாரியைக் கூப்பிட்டு, ''நான் திருத்தி அனுப்பிய திருத்தங்களை விட்டுவிடாது நல்ல தமிழில்தான் அலுவலகக் குறிப்புகளை எழுதி வரவேண்டும்'' என்று ஆணையிட்டார். தமிழ்மொழியில் அலுவலகக் கோப்புகளில் நல்ல தமிழில் குறிப்பெழுத ஆசைப்பட்டுக் கீழுள்ள பணியாளர் மகிழ்ச்சி அடைந்தார். உள்ளம் மகிழ்ந்தார். ஆனால், இந்த மேலதிகாரி வேற்றிடத்திற்கு மாற்றப்பட்டு மற்றொரு அதிகாரி

அங்கு வந்தமர்ந்தார். அவர் தமிழில் ஆர்வமற்றிருந்தார். அவர் எல்லாக் குறிப்புகளையும் ஆங்கிலத்தில் எழுதிச் சமர்ப்பிக்கும்படிப் பணித்தார்'' பிற மாநிலங்களைச் சேர்ந்த உயர்ந்த பதவி வகிக்கும் இந்திய ஆட்சிப்பணி (IAS) இந்தியக் காவல்பணி (IPS) அதிகாரிகள், அவர்கள் விரும்பி மாநில ஆட்சிமொழி விதிகளுக்கேற்பத் தமிழ்க் கற்றுக் கொள்கிறார்கள். தமிழர்களாய்ப் பிறந்து தமிழ்க் கற்காமல் அரசுத் துறையில் ஊழியம் செய்ய வருபவர்களும் அவர்களின் தகுதிகாண் பருவம் (Probation Period) முடிவதற்குள் ஆட்சிமொழியாம் தமிழில் தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வு ஆணையம் நடத்தும் ஆட்சி மொழித் தமிழ்த் தேர்வில் வெற்றிபெற்றால்தான் அவர்களுக்கு அடுத்த ஊதிய உயர்வு உண்டு எனத் தமிழக அரசின் விதி உள்ளது. இருப்பினும் தமிழராயுள்ள சில மேலதிகாரிகள் ஆட்சித்தமிழில் அக்கறை காட்டாதிருப்பது வருந்தத்தக்கது. தமிழன்னை ஆட்சி மொழியாகச் சில ஆண்டுகளுக்கு முன்வரை, சட்டம் நீதி, நிதித்துறை, சட்டமன்றப் பேரவை ஆகிய துறைகளில் நடை முறைக்கு வரவில்லை. ஆனால் 1984ஆம் ஆண்டிலிருந்து மேற்கூறிய துறைகளில் தமிழ் ஆட்சிமொழியாக நடைமுறைக்கு வந்துவிட்டது. இன்னும் பொறியியல், மருத்துவம் தொழில்நுட்பத் துறைகளில் 2010ஆம் கல்வி ஆண்டு முதல் தமிழ்க் கல்விமொழியாக அறிமுகம் செய்யப்பட்டுள்ளது சில மத்திய சட்டவிதிகளில் காணப்படும் தடை நீக்கப்பட்டது. ஆனால் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் மேற்கூறிய அறிவியல் துறைகளுக்கான நூல்களும் முதல் ஆண்டுகளுக்குத் தயாரிக்கப்பட்டன. இம்முயற்சி 1990களிலேயே மேற்கொள்ளப்பட்டது குறிப்பிடத்தக்கது. ஆனால் மத்திய சட்டத்திற்கான விதிகளைக் காட்டித் தடை செய்யப்பட்டது. தற்போது இல்லை. ஆனால், தமிழில் ஆட்சியை நடத்த வாய்ப்பான ஒரு துறை எது என்று கேட்டால் அது ஆட்சித்துறைதான். ஆங்கிலம் ஆட்சித்துறையில் பொருந்துவது பற்றியே வியந்து பாராட்டும் நம்மவர்களில் பலர் தமிழும் ஆட்சித்துறையில் வளர்ந்திட அக்கறை கொள்ளுதல் வேண்டும். அப்பொழுதுதான் எத்தனையோ ஆங்கிலச் சொற்களுக்குத் தமிழ்ச் சொற்கள் இன்னும் கிடைக்கவில்லையே என்ற குறை நீங்கும். தொடக்க நிலையில் ஆட்சிமொழியில் ஒரு ஆங்கிலச் சொல்லிற்குப் பல மொழிபெயர்ப்புகளையும் சொல்லாக்கங் களையும் பயன்படுத்திய காலம் போய் இன்று பல சொற்களைத் திருத்திச் செப்பம் செய்து ஆட்சிச் சொல்லகராதி பதிப்பிக்கப் பட்டுள்ளது. அரசுத்துறைகளில் மொழிபெயர்க்கப்பட வேண்டிய கடிதங்கள், கோப்புகள், அறிவிக்கைகள், அறிவிப்புகள் சட்டமன்றப் பேரவை தொடர்பான மொழிபெயர்ப்புகள் ஆகியவை தமிழகத்தின்

தலைமைச் செயலகத்தின் தமிழ் வளர்ச்சித்துறை, சட்டத்துறை அலுவலகங்கள் மூலமாகச் சட்டங்களும் முன் வடிவுகளும் குறிப்புகள் பல மொழிபெயர்க்கப்பட்டு அனுப்பப்படுகின்றன. அவற்றின் மொழிநடை தமிழில் ஆட்சி நடத்த ஏதுவாக உள்ளன. தமிழ் இணையப் பல்கலைக்கழகம் (Tamil Virtual University) ஒரு சட்டச் சொல் அகராதியை இந்நூலாசிரியர் துணையுடன் 2010இல் 10ஆம் தொகுதியாக வெளியிட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

## இம்மொழிபெயர்ப்பின் மொழிநடை

எல்.டபிள்யு டான்காக் என்பவர் நல்ல பெயர்ப்பு என்பது "மொழிபெயர்க்கப்படுகிற காலத்தில் உயிருள்ள மொழியில் செய்யப்படுவதே" என்கிறார். இக்கொள்கை உலக மொழிகள் அனைத்திற்கும் பொருந்தும்.

பொதுவாக இலக்கியங்களை மொழிபெயர்ப்பதில் மொழி பெயர்ப்பாளர்கள் எடுத்துக்கொள்ளும் சுதந்திரத்தை ஆட்சித்துறை மொழிபெயர்ப்புகளில் மொழிபெயர்க்கும் போது எடுத்துக் கொள்ள இயலாது.

ஒவ்வொரு மொழியும் அதற்கெனத் தனித்துவமான இயல்புகளைப் பெற்றிருந்தாலும் கூட, ஒருமொழியில் சொல்லக் கூடிய ஒரு செய்தியை இன்னொரு மொழியில் உறுதியாகச் சொல்லலாம் என்று நிதா மற்றும் தபார் (1969) என்னும் சிறந்த மொழிபெயர்ப்பாளர்கள் வலியுறுத்துகிறார்கள். எந்த மொழியில் நிகரி இல்லை என்பதனாலோ அல்லது தேவையான பண்பாட்டு நிகரி இல்லை என்பதாலோ ஒரு மொழிபெயர்ப்பானது புரியவில்லை என்ற நிலைக்கு உள்ளாகலாம் அல்லது அந்த மொழிபெயர்ப்பு தோல்வியாகலாம். இவற்றிற்கிடையே எழுத்து வடிவில் உள்ள, எல்லா மொழிகளிலும் காலங்காலமாக மொழிபெயர்ப்பு என்கிற செயற்பாடானது நடைபெற்றுத்தான் வருகிறது.

தொழில்நுட்பச் சொற்கள் நீங்கலாகச் சமூக அறிவியல்கள், மானிடவியல்களில் இந்தியாவின் மரபு வழியாக நீண்ட நெடுங் காலமாகக் கலைச்சொற்கள் உள்ளன. குறிப்பாகத் தத்துவம், அழகியல், கவிதையியல், மொழியியல் இலக்கியத் திறனாய்வு போன்ற துறைகளில் வடமொழிச்சொற்களே அதிகம் பயன்படுத்தப்பட்டன. இங்குள்ள சொற்கள் அனைத்தும் ஆங்கில மொழிச் சொற்களின் பொருளைப் பாதியளவே குறிப்பதாக உள்ளன. ஆங்கிலச் சொல்லான

'Term and stem' என்பவற்றைப் பாதியளவுதான் குறிக்கின்றன. அதிகமாக வளர்ந்துவரும் பொருளாதாரம், வணிகம், வணிக மேலாண்மை, சட்டத்தமிழ், ஆட்சித்தமிழ் போன்ற துறைகளில் உள்ள ஆங்கிலச் சொற்களுக்கும், சொற்றொடருக்கும் புதிய பொருள் சேர்த்தும், கொடுத்தும் வரப்படுகின்றன. அறிவியல் நுட்பக் கலைச் சொல்லாக்கத்திற்குரிய மைய அரசின் ஆணையம், இத்தகைய நேர்வுகளில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட நிகரிகளைத் (Equivalents) தருகின்றது / உருவாக்குகிறது. எ.டு. Term – சொல் அமைப்பு, stem–மையக்கூறு.

மொகலாயர் ஆட்சிக் காலத்தில் நிருவாகம் (ஆட்சித்துறை) சட்டம், வருவாய் அரசியல், கட்டடக்கலை, வணிகம் போன்ற துறைகளில் எண்ணற்ற கலைச் சொற்கள் இந்திய மொழிகளில் கலந்து விட்டன. இவை தவிர வடஇந்தியாவில் இதன் செல்வாக்கு அதிகமாகி இந்துஸ்தானி என்ற ஒரு மொழியையே உருவாக்கியது. இதுதொழில் தொடர்பான கடிதப் போக்குவரவுகளில், நடைமுறையில் அதிகமான நிகரிகளை உருவாக்கியுள்ளது. ஆங்கிலமொழியிலிருந்து தமிழில் மொழிபெயர்க்க வேண்டுமெனில் இரு மொழியினையும் நன்றாகத் தெரிந்து வைத்திருக்க வேண்டியுள்ளது. ஒரு நாட்டின் ஆட்சித் துறையில் அதுவும் ஆட்சி மொழிவேறாகவும் மக்கள் மொழி வேறாகவும் உள்ள நிலையில், செய்திகளை மக்கள் பேசும் மொழியில் கூறவும் தகவல்களைப் பரப்பவும் மொழிபெயர்ப்பு அவசியமாகிறது. நாடுகளுக்கிடையேயும் மாநிலங்களுக்கிடையேயும் நட்புறவு வளர்வதற்கு மொழிபெயர்ப்பு ஒரு முக்கியப் பங்காற்றுகிறது.

ஆட்சித்துறை மொழிநடையானது ஆட்சி ஆவணங்களில் மிகக் கவனமாக, எளிய நடையில் அமையவேண்டியுள்ளது.

ஆகவே ஆட்சித்துறை மொழிநடையில் இரட்டுரமொழிதல், வார்த்தை சாலம், சட்டச்சிக்கல் ஆகியன இடம்பெறுதல் கூடாது.

இன்று நீதிமன்றங்களின் வழக்குகள் ஆட்சித்துறையில் பெருகுவதற்கு ஆட்சித்துறை மொழிநடையும் ஒருவகையான காரணமாயிருக்கலாம் என்கின்றனர் மொழியியலாளர்கள். நீதிமன்றங்களில் உடனே அரசு ஆணைகளை எதிர்த்து மக்கள் வழக்குத் தொடர்கிறார்கள். இவ் வழக்குகளில் ஆதாரங்களான ஆட்சி ஆவணங்கள்தான் பார்வைகளாகச் சுட்டப்படுகின்றன. எனவே ஆட்சித்துறை ஆட்சி ஆவணங்களில் இடம்பெறும் மொழிநடையை ஒருமுறைக்குப் பலமுறை படித்துப் படித்து

ஆவணங்களை/ஆணைகளை வரைதலும்/ மொழிபெயர்த்தலும் வேண்டும். அரசியல் தலைவர்கள் சிலர் வழக்குகளில் சரியான வடமொழிபெயர்ப்புக் கேட்டு வாதிடுகிறார்கள். ஆட்சித்துறை மொழிபெயர்ப்பு நடைகளில் வழக்கத்தில் உள்ள சொற்களையே பயன்படுத்தி மொழிபெயர்க்க வேண்டும் என்ற விதியின்படி மக்கள் எளிதாக வாசகத்தைப் புரிந்து கொள்ள உதவுகின்றது. ஒரு சிலர் தன் வழக்கிற்கு ஆதரவாக மொழிபெயர்ப்பினைக் குறை கூறி காரணங்கூறித் தப்பித்துக் கொள்வர். ஆனால் மொழியியலாளர் பார்வையில் வழக்காற்றுச் சொற்கள், மொழிபெயர்ப்பில் பலவகையில் தமிழில் இடம்பெறுகின்றன.

ஆட்சித் துறை மொழிபெயர்ப்பில் சொல்லுக்குச் சொல் மொழிபெயர்ப்பு முறைதான் பின்பற்றப்படும் சூழல் உள்ளது. ஆங்கிலத்திலிருந்து தமிழில் மொழிபெயர்க்கும் போது வாக்கிய அமைப்பினைச் சரியாகப் புரிந்து கொண்டு தெளிவாக மொழிபெயர்க்க வேண்டும். சொல்லின பொருளை நன்றாகப் புரிந்து கொண்டு மொழிபெயர்க்க வேண்டும். வாக்கிய அமைப்பில் சிதைவோ குழப்பமோ/சிக்கலின்றி மொழிபெயர்க்க வேண்டும். மூலமொழிக்கான பொருள் பிடிபடவில்லையெனில் ஆட்சித்துறைத் தமிழ் அகராதிகளை உற்றுநோக்குதல் வேண்டும். அரசின் பல்வேறு துறைகளில் தனித்தனியே துறைச் சிறப்பு அகராதிகளும் உண்டு. எனவே மொழிபெயர்ப்பாளர் சமூகப் பொருளாதார அரசியல் சமயம் போன்றவற்றில் வழக்காற்றுச் சொற்களை அறிந்து மொழிபெயர்க்க வேண்டுவது அவசியம். பிறமொழிச் சொற்களுக்கேற்ற தமிழ்ச் சொற்களை அறிதல் அவசியம்.

## சட்ட மொழிபெயர்ப்பு – இலக்கணம்[6]

''மொழிபெயர்ப்பு என்பது பொன்னைச் செம்பாக்கும் ஓர் அரிய கவின்கலை'' என்று சர் வால்ட்டர் ஸ்காட் கூறினார். இக் கூற்றில் ஓரளவு உண்மை இருக்கத்தான் செய்கிறது. வாக்கிய அமைப்பு முறையிலே, ஆங்கிலமும் தமிழும் மிகவும் மாறுபட்டவை. நிகழ்ச்சிகள் நடந்த கால வரிசையைக் குறிக்கும் போது, ஆங்கிலம் இயல்புக்கு மாறாகப் பேசும். எடுத்துக்காட்டாக ''This morning I met the man who came from Singapore yesterday'' என்று வாக்கியத்தில் காலத்தால் முற்பட்டதை வாக்கியத்தின் பின்பகுதியிலும் காலத்தால்

6. சட்டச் சொல்லகராதி, நீதிபதி சு. மகராசனின் மொழிபெயர்ப்பு முன்னுரை, தமிழ்நாடு அரசு வெளியீடு, 1979.

பிற்பட்டதை வாக்கியத்தின் முன்பகுதியிலும் ஆங்கிலம் கூறுகிறது. ஆனால், தமிழ் மொழியோ, நிகழ்ச்சிகள் நிகழ்ந்த காலநிரல்படியே முன் நடந்ததை முன்னாலும் பின் நடந்ததைப் பின்னாலும் அமைத்துச் சொல்லும். மேற்சொன்ன தகவலை, ‘‘நேற்று சிங்கப்பூரிலிருந்து வந்தவரை நான் இன்று காலை சந்தித்தேன்'' என்று கால இயல்பு கெடாது பேசவல்லது தமிழ். ஆகவே ஆங்கிலத்திலிருக்கும் சட்டங்களைத் தமிழில் மொழிபெயர்க்கும்போது, வாக்கிய அமைப்பு முறையை நேர்மாறாக மாற்றி அமைக்க வேண்டியிருக்கிறது. ஆங்கில மூலத்திலுள்ள நீண்டு வளைந்த வாக்கியங்களை மொழிபெயர்க்கும் போது, அவற்றின் வால் பாகத்தைத் தலைப்பாகமாகவும் தலைப் பாகத்தை வால்பாகமாகவும் தமிழில் ஏறுக்கு மாறாகக் கொண்டுவர வேண்டியிருக்கிறது. மூலத்திலுள்ள கருத்தின் பாங்கும், கருத்தில் அழுத்தத்தைச் சொற்களுக்கிடையே பகிர்ந்து வைக்கும் முறையும் தமிழில் சொல்லும்போது மாறுபடுவது இயல்பு. ஆகவே சட்டத்தை மொழிபெயர்ப்பவர்கள் மிகுந்த கவனத்தோடும் விழிப்புணர்ச்சியோடும் இருக்கத் தவறினால், மூலத்தின் கருத்து சிதைந்து, பொருள் திரிந்து போகலாம்.

‘சட்டம்’ பற்றிய நூல்களை மொழிபெயர்க்க நீண்டகாலச் சட்ட நிருவாக அனுபவம் மட்டும் இருந்தால் மொழிபெயர்ப்புச் சிறப்பாக அமையாது. செம்மையான சட்டத் தமிழாக்கத்திற்கு மொழிபெயர்ப்பு அனுபவமும் இருமொழி அறிவும் தமிழில் புதிதாகச் சொற்களைப் படைக்கும் ஆற்றலும் தேவை. சட்டச்சிக்கல்களைத் தமிழில் மொழிபெயர்த்து எழுதும்போது புதுச்சொற்களைத் தமிழில் அதன் மரபுப்படியே ஆக்கவேண்டும். தமிழில் கூடச் சொல்லாக்கம் செய்கையில், எளிமை, சுருக்கம், கருதிப் பொருள் செறிந்த தமிழ் வேர்ச் சொற்களையே பயன் கருதி ஆக்க வேண்டும். இக்கட்டான கட்டங்களில் ஆங்கிலச் சொற்களை அடைப்புக் குறிக்குள் பயன்படுத்தலாம்.

உலக மக்களைப் போலவே நம் தமிழக மக்களும் சொற்களை எச்சரிக்கை இல்லாமலும் சரியான பொருள் கெடாதும் பயன்படுத்து கின்றனர். இச்சொற்களின் பொருளை அகராதிகளில் புரட்டிப் பார்த்தால் – நாம் எதை ஐயப்பாடு என்று கருதுகிறோமோ அந்த ஆங்கிலம்–தமிழ் அகராதி தொகுத்தவர் குறையும் அதுவாக இருப்பதால், துல்லியமான பொருள் பெற்ற ஐயப்பாடு அகல வழியில்லை. இதற்காக இந்நூலை எழுதியவரே ஆங்கிலம்–தமிழ் சட்ட அகராதிகள் மூன்றைப் புதிய முறையில் வெளியிட்டுள்ளார்.

சட்டத்தை மொழிபெயர்க்கும்போது சோம்பல் காரணமாகவோ அல்லது மொழிபெயர்ப்பது கடினம் என்பதாலோ மூலத்திலுள்ள தொல்லை தரும் சொல்லை அல்லது சொற்றொடரை விட்டுவிடக் கூடாது. இப்படி செய்வது பொதுவாக மொழிபெயர்ப்புச் செயல்முறையில் தவறு. சிறப்பாகச் சட்டத்தை மொழிபெயர்க்கும் போது பெருந்தவறு என்று நீதிபதி சு. மகராசன் கூறுகிறார். ஆனால் இவரே ஷேக்ஸ்பியரின் நாடகங்களை மொழிபெயர்த்தபோது சொற்களை விட்டுவிடலாம் என்கிறார். அது இலக்கியத்தில் இயலும்.

சட்ட மொழிபெயர்ப்பில் வாசகத்தைப் பிரித்து மொழி பெயர்த்தலை ஓர் உத்தியாக நீதிபதி சு. மகராசன் பயன்படுத்தி உள்ளார். சட்ட மூலத்திலுள்ள வாக்கியங்களை உடைத்துப் பிரித்து, ஒவ்வொரு அங்கத்தையும் தனித்தனியாக மொழிபெயர்த்து, பிரித்த அங்கங்களைத் தமிழ் மரபுக்கேற்றபடி மறுபடியும் சேர்த்துப் பூட்டி வாக்கியங்களை அமைக்க நேர்ந்தது. குற்ற விசாரணை முறைச் சட்டத்தை மொழிபெயர்க்கும் போது ஆங்கிலத்தில் ஒரேவாக்கியமாக அமைந்ததை, கருத்தைத் தெளிவுபடுத்தும் நோக்கத்தோடு, இரண்டு வாக்கியங்களாகத் தமிழில் சொல்ல வேண்டியிருந்தது. ஆனால் ஒரே ஒருமுறைதான் அவ்வாறு சுதந்திரம் எடுத்துக் கொண்டார் நீதிபதி சு.மகாராசன். இம்மொழிபெயர்ப்பின்போது இந்நூலாசிரியரும் நீதிபதியுடன் உடனிருந்தார்.

பேக்கன் கூறியது போல, சட்டம் மனிதனுக்குத் துல்லியத்தைக் கொடுக்கிறது ''Law maketh an exactman'' சட்டத்தமிழில் ஒரு துல்லியத்தை உருவாக்கிய பெருமை நீதிபதி சு. மகராசனைச் சார்ந்தது. சட்டக் கருத்துகளைத் தமிழில் மொழி பெயர்க்கும்போது, புதுத்தமிழ்ச் சொற்களை ஆக்காமல் இருக்க முடியாது. சொல்லாக்கம் செய்யும் போது ஒரு தமிழனுக்குக் குறிப்பால் பொருளை உணர்த்தும் சொற்களைக் கொண்டே புதுச் சொற்களைச் சட்ட மொழிபெயர்ப்பில் உருவாக்கியுள்ளார் நீதிபதி. எடுத்துக்காட்டாக 'apply to' என்ற ஆங்கிலச் சொற்றொடருக்கு 'மீது இயங்கு', என்ற தமிழ்ச் சொற்றொடரைப் பயன்படுத்தியுள்ளார். ''This Act will not apply to Kashmir'' என்ற வாக்கியத்தை இந்தச் சட்டம் காஷ்மீருக்குப் பொருந்தாது'' என்று மொழிபெயர்ப்பதைக் காட்டிலும், ''இந்தச் சட்டம் காஷ்மீர் மீது இயங்காது'' என்று மொழிபெயர்ப்பது பொருத்தமாக இருக்கும் என்கிறார் நீதிபதி.

ஒரே ஆங்கிலச் சொல் இடத்துக்குத் தகுந்தவாறு பொருள் மாறும். சொற்கள் தாம் இடம்பெறும் சூழல்நிலை, காலம் என்று

வாய்ப்புக்குத் தகுந்தபடி பொருள் மாறிவரும். எ.டு. குற்ற விசாரணை முறைச் சட்டத்தில், 'consider' என்ற சொல்லும் 'in the case of' என்ற சொற்றொடரும் பல்வேறு இடங்களில் பல்வேறு பொருள்களைக் குறிக்கின்றன. ஆகவே தமிழாக்கும்போது அச்சொற்களுக்கும் சொற்றொடர்களுக்கும் சூழ்நிலைகளுக்குத் தகுந்தவாறு பொருள் கொள்ளப்பட்டிருக்கின்றன. மொத்தத்தில் நீதபதி வழக்கொழிந்த சொற்களைத் தவிர்த்துவிட்டுப் பழகு தமிழிலேயே சட்டங்களை மொழிபெயர்த்துள்ளார். அன்று அவர் சட்ட மொழிபெயர்ப்பைக் குறை பேசியவர் இன்று பொறுப்பிருந்தும் பெரிதாகச் சட்ட மொழிபெயர்ப்பில் எதையும் சாதிக்கவில்லை. ஏன்?

## சட்டத்துறை மொழிபெயர்ப்பின் வகைகள்[7]

அறிவியல், தொழில்நுட்பம், வணிகம், சட்டம், பொது நிருவாகம் மேலாண்மை அல்லது மருத்துவம் போன்ற துறைகளில் தொடர்ச்சியாகப் புதியபுதிய சொற்களும் சொற்றொடர்களும் வளர்ந்து பெருகிக் கொண்டிருப்பதால், அந்தந்தத் துறைகளில் பயன்படும் மொழியில் அதிகம் புதியன புனைவதில் எழும் சிக்கல்களைக் காணலாம். அவை அனைத்தும் மொழிபெயர்ப்பாளர்களுக்கு அறைகூவல் விடுகின்றன. வெளிப்படையாகச் சொன்னால், வணிகவியலும் சட்டவியலும் அறிவியல், தொழில்நுட்பத் துறைகளைக் காட்டிலும் மிகவும் மரபுவழிப் பேணுபவை. வழக்காற்றுநெறி (Customary) சார்ந்தவை.

வணிகர்கள் தொழில் செய்யும் காலங்களில் வணிகப் பண்டங்களோடு தொடர்பு கொண்டிருந்தாலும் பண்டங்களைக் குறிக்கும் விவரக் குறிப்படங்கிய சொற்களை, சொற்றொடர்களை வணிகர்களின் பண்டக விலைப்பட்டியலில் குறிக்கப்படும் வெறும் பெயர்கள் மட்டுமே என்றே கருதுவர். வழக்குரைஞர்கள் மற்றும் வணிகர்களிடையே வழக்காற்றிலுள்ள சொற்றொடர்கள் எளிதாக மாற்ற மடைவதில்லை. அடுத்தபடியாக, சட்டத்துறையும் சட்டம் – ஒழுங்கு விதியின் செயற்பாட்டின் தொடர்ச்சியாகப் பேணிக்காப்பதும் அதன் போக்கில் ஏற்படும் மாற்றத்தினை எதிர்த்து முறைப்படுத்தவும் அதன் அன்றாடப் பணியாக இருப்பது அனைவரும் அறிந்த ஒன்று. இதற்கு மாறாக அறிவியல், தொழில்நுட்பத்துறைகளில் அன்றாடம் நிகழும் புதுப்புதுக் கண்டுபிடிப்புகளை நிறுவி, புதியபுதிய

---

7. சட்டச் சொல்லகராதி, நீதிபதி சு. மகராசனின் மொழிபெயர்ப்பு முன்னுரை, தமிழ்நாடு அரசு வெளியீடு, 1979, ப. 92.

இயந்திரங்களைக் கண்டு பிடித்தால்தான் அவர்கள் வாழ்வில் வளம்பெற இயலும். ஆகவே புதிய சொற்றொடர்களைப் பயன்படுத்தும் கட்டாயத்துக்கு அவர்கள் உள்ளாகிறார்கள்.

சட்டமொழிபெயர்ப்பின் நடையைப் பற்றிப் பேசுவோமானால், இலக்கிய நடையைப் போலவே இங்கும் கருத்து வேறுபாடு காணப்படுகிறது. சிலர் சட்ட மொழிபெயர்ப்புகளில் வழக்கொழிந்த தமிழ்ச் சொற்களை விடுத்து அன்றாடம் நாம் பழகும் தமிழிலேயே ஆங்கிலப் பிரவாளத்தோடும் மணிப்பிரவாளத்தோடும் எழுதுவதே சட்டப்பயிற்சியுள்ளவருக்கும் சராசரி மனிதனுக்கும் புரியும் என்பர். இன்னுஞ் சிலர், சட்டம் ஓர் அறிவியல் துறைசார்ந்த தொழில் நுட்பமானது; சட்டம் ஆங்கிலத்தில் இருந்தாலும் ஆங்கிலப் பேராசிரியர்களும் புரிந்துகொள்ள முடியுமா? சட்டமொழிவாசகமே தனிச் சிறப்புவாய்ந்த ஒன்று. எனவே அதற்கெனச் செம்மாந்த நடை வேண்டும். சட்ட மொழிபெயர்ப்பு நல்ல தூய தமிழ்ச் சொற்களின் அடிப்படையில் தான் நடைபெறவேண்டும் என்பர் சிலர்.

ஆக, சட்டத்தமிழ் வளர்ச்சியில் தரமான தமிழை வளர்க்கத் தமிழில் சொற்கள் இல்லாத போதுதான் பிறமொழிச் சொற்களைத் தேவை என்று கருதினர். சற்றொப்ப ஒன்றரை நூற்றாண்டுக்கும் மேலாகச் சில ஆங்கிலச் சொற்களும் உருதுச் சொற்களும் நீதிமன்றங்களில் பயன்படுத்தப்பட்டு வந்த காரணத்தால், தமிழர்களுக்கு அச்சொற்கள் தனிப்பட்ட கருத்துகளைக் குறிக்கும் அடையாளங்களாகவே மாறிவிட்டன. எ.டு. ''சேஷன்ஸ், உயில், ஆஜர், ஜாமீன், ஜப்தி'' முதலிய சொற்கள் தமிழோடு தமிழாக ஆகிவிட்டன. இத்தகைய சொற்களை ஒதுக்கிவிட்டு அவற்றிற்குத் தூய தமிழ்ச் சொற்களை நீதிபதி மகராசன் உருவாக்கி எழுதியிருக்கலாம். அது அவருக்கும் அவருடன் இருந்த தமிழறிஞர்களுக்கும் எளிது. ஆனால் அவ்வாறு செய்திருந்தால், பின்னர் அவர் சட்ட மொழிபெயர்ப்பில் குறைகாண்போர் வாயடைத்துப் போயிருப்பர். எனினும் சட்டத்தை மொழிபெயர்க்கும்போது, ''மொழிபெயர்ப்பு, சட்டம் பயிலும் சராசரித் தமிழனுக்காவது புரியும்படியிருக்க வேண்டும்'' என்ற நீதிபதியின் சட்டமொழிபெயர்ப்புக் கோட்பாட்டிற்கேற்பச் செயல்பட்டார். இக் கோட்பாட்டைச் சரிவர அறிந்தவர் அவர். சட்ட மொழிபெயர்ப்பினைக் குறை கூற இயலாது. சாமான்யத் தமிழர்களிடம் சட்ட மொழிபெயர்ப்புக் குழப்பத்தை ஏற்படுத்தும் என்று கருதி, அத்திசைச் சொற்களையே சட்ட மொழிபெயர்ப்புகளில் அவர் பயன்படுத்தினார். தலைமைச் செயலகத்தில் பதிவுரு எழுத்தர் ஒருவர் எழுதிய பத்திர

வாசகத்தை மாற்ற விரும்பாது அம்மொழிநடை சிறப்பானது; பத்திரப் பதிவுத் துறை சார்ந்தது என்று புகழ்மிக்கத் தமிழ்ப் பேராசிரியரும் அதையே நாடுவர்.

நீதிபதி "Admiralty jurisdiction", "Maritime Jurisdiction" என்ற சொற்றொடர்களை முறையே "கடலியல் அதிகாரவரம்பு", "நெய்தலியல் அதிகாரவரம்பு" என்று மொழிபெயர்த்துள்ளார். இதிலிருந்து தமிழின் தொன்மையான இலக்கிய மரபை ஒட்டியே மொழிபெயர்ப்பு செய்யப்பட்டிருப்பது நன்கு புலப்படும்.

எல்லா நாடுகளிலும் எல்லா மொழிகளிலும் சொற்களை எச்சரிக்கை இல்லாமலும் விழிப்புணர்வில்லாமலும் கவனமில்லாலும் சாமானிய மக்கள் பயன்படுத்துகிறார்கள். அதற்குத் தமிழ்மக்களும் விதிவிலக்கானவர் அல்லர். சொற்களுக்கு மூக்கணாங்கயிறு போட்டு நடைபழக்கத் தவறிவிட்டதன் காரணத்தால், அவை வழி தப்பிப் போய்விட்டன. வழி தப்பிப் போன சொற்களை மறுபடியும் வழிக்குக் கொண்டு வந்து, துல்லியத் தோடும் நுணுக்கத்தோடும் அவற்றைப் பேசவைப்பதும், அவற்றிற்கு நடை பழக்குவதும் சட்டத் தமிழின் கடமை. வருங்கால மரபினரின் கடமை.

## முடிவுரை

சட்ட மொழிபெயர்ப்புகளின் வகைகளாக மூன்றினைக் கூறலாம். 1. சட்டமுன்வடிவு நிலையிலான மொழிபெயர்ப்பு 2. மைய–மாநில சட்ட மொழிபெயர்ப்பு, 3. தீர்ப்புகளின் மொழிபெயர்ப்பு ஆகியவை மேற்கூறியவகைகளில் அடங்கும். இவற்றில் முதலாவதாகக் குறிக்கப்பட்ட சட்டமுன்வடிவு நிலையிலான மொழி பெயர்ப்பில் – ஒரு சட்டமுன்வடிவு (Bill) கொண்டு வரப்படுவதற்கான நோக்கக் காரணவிளக்க உரையில் மொழிபெயர்ப்பு நடை சற்று எளிமைப்படுத்தப்படும். காரணம் சட்ட மொழிபெயர்ப்பைப் படிக்கும் மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட பல அதிகாரிகள் அமைச்சர்கள் அனைவரும் சட்ட முன்வடிவின் கருத்தினை மனதில் வாங்கிக் கொள்வதற்காக அம்மொழிநடை முயற்சி எடுத்து எழுதப்படும். ஆனால் அதே வாசகம் சட்டத்திற்குள் இடம்பெறும் போது நடை வேறுபடத்தான் செய்யும். சட்ட மொழிபெயர்ப்பில் பல்வேறு மொழிபெயர்ப்புக் கொள்கைகளை இங்கே நாம் கண்டோம். அக்கொள்கைகளில் சில உலக அளவில் பலராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட கொள்கைகளும் உள்ளன.

## 11. இலக்கிய வகை மொழிபெயர்ப்பு முன்னுரை

> சில ஆண்டுகளுக்குமுன் சுஜித் முகர்ஜி என்பவர்,
>
> வருங்காலத்தில் இந்தியாவில் இலக்கிய ஆய்வில் மொழிபெயர்ப்பு துணைப் பாடமாகலாம்.[8]

என்றார். இன்று சுஜித் முகர்ஜி கூறியது போல் பள்ளியிலும் பல்கலைக் கழகத்திலும் அரசுத்துறைகளிலும் தனியார் பணிகளிலும் மொழிபெயர்ப்பு பெறுமிடம் தவிர்க்க இயலாத ஒன்றாகும். ''மொழிபெயர்ப்பு என்பது ஒரு கவின்கலை. மொழிபெயர்ப்பு என்பது வெறுமனே மொழிமாற்றம் மட்டுமல்ல; அல்லது மூலக் கருத்தையோ மூலக் கதையையோ அடிப்படையாக வைத்துத் தழுவி எழுதுவதும் அல்ல. சுருங்கச் சொன்னால், மொழிபெயர்ப்பு என்பது, ''கூடுவிட்டுக் கூடுபாயும் ஒருகலை'' என்கிறார் பிரபாகர் மேச்வி.

### பயன்பாடுகள்

1. மொழிபெயர்ப்பு அதிலும் இலக்கிய மொழிபெயர்ப்பு தமிழ் மொழி வளர்ச்சிக்கு மிகவும் பயன் தருவதாகும்.

2. தமிழ்மொழி உலக அரங்கில் நிலைத்திருக்கப் பிறமொழி நூல்கள் தமிழ்மொழியிலும் தமிழ்நூல்கள் உலகமொழிகளிலும் மொழி பெயர்க்கப்படுதல் வேண்டும்.

3. தமிழுக்குச் செம்மொழித் தகுநிலை கிடைத்துள்ள நிலையில், தமிழ் இலக்கண இலக்கிய மொழிபெயர்ப்புகள் தமிழின் தனித்திறத்தை உலகறியச் செய்யப் பயன்படும்.

### இலக்கிய வகை மொழிபெயர்ப்பு வகைகள்

தமிழாக்கம் என்பது வேற்று மொழியில் உள்ள ஒரு நூலைத் தமிழில் மொழிபெயர்த்தல் என்று பொருள். முதனூல் ஒன்றை எடுத்துத் தமிழில் அதை மொழிபெயர்க்கும்போது, வழிநூல் தமிழ் மரபுக்கு ஏற்ப அமைதல் வேண்டும். முதனூலை ஒட்டிய வழிநூல் நான்கு வகையாக அமையலாம். அந்நான்கு வகையுள், ''மொழிபெயர்த்து அதர்ப்பட யாத்தல்'', என்பது ஒருவகை. 'அதர்ப்பட யாத்தல்'என்றால், ''தமிழ் மொழியின் நெறிப்பட என்பது பொருளாகும். எனவே தமிழ் மொழியைப் பொறுத்தமட்டில் ''மொழியில் புதிதாக உருவாக்கப்பட்ட ஒருநெறியல்ல என்பது திண்ணம். இதனால் உலக

---

8. Surjit Mukherjee - Translation on Discovery and other essays. Allied Publishers Pvt. Ltd., New Delhi, 1981.

அரங்கில் பிற உலகமொழிகள் இதுபற்றிச் சிந்திக்கும் என்பதை முன்னரே கண்டோம். முன்னரே மொழிபெயர்ப்புப் பற்றிய சிந்தனை தமிழில் எழுந்துள்ளது. காலத்தால் முற்பட்ட தொல்காப்பியத்தில், நூல்களின் வகை பற்றிக் கூறிய தொல்காப்பியர், நூல்களை முதல் நூல், வழிநூல் என இரண்டாகப் பகுத்துள்ளார். இவற்றில் 'வழிநூல்' நான்கு வகைகளாகும். அவை முறையே:

**மரபுநிலை திரியா மாட்சிய வாகி**
**உரைபடும் நூல்தான் இருவகை இயல**
**முதலும் வழியுமென நுதலிய நெறியின**

**வழியின் நெறியே நால்வகைத் தாகும்**

**தொகுத்தல், விரித்தல் தொகைவிரி மொழிபெயர்த்**
**ததர்ப்பட யாத்தலோ டனைமர பினவே**

(தொல்.பொருள். 639–642–643)

பிறமொழியிலுள்ள கருத்தையோ நூலையோ பெயர்க்கும் போது தமிழ்மொழி மரபு கெடாமல் தொகுத்தும் விரித்தும் தொகை விரியாகவும் மொழிபெயர்க்கலாம் என்பதையே தொல்காப்பியம் சுட்டுகின்றது.

இத்தகைய இலக்கிய மொழிபெயர்ப்புகளில், கவிதை மொழி பெயர்ப்பு, புதினம், சிறுகதை மொழிபெயர்ப்பு, நாடகங்களின் மொழிபெயர்ப்பு சமயச் சார்பான மொழிபெயர்ப்பு என்று பல வகைகளாகப் பகுக்கலாம்.

## 1. கவிதை மொழிபெயர்ப்பு[9]

> None knows the cruel inadequacy of poetical translation like the translator.... He Understands better than others can, the significance of the position which Kalidas has won in Europe

என்று காளிதாசரின் சாகுந்தலையை மொழிபெயர்த்த கலிபோர்னியா பல்கலைக்கழகப் பேராசிரியர் A.W. Ryder என்பவர் கூறுகிறார். ஆனால் மொழி பெயர்க்க முடியாதது எதுவோ, அதுவே கவிதை என்று கவிதை இலக்கணம் கூறுவாரும் உளர். மொழிபெயர்ப்பை மூலத்திற்கு இழைக்கும் துரோகம் என்பாரும் உண்டு. எவர் கூற்று எதுவாயினும் சரி, மற்றத்துறைகளைப் போல் மொழிபெயர்ப்புத்

---

9. Confessions of a poet - Translator: William Radice - Poetry and Community - 2003, p. 129.

துறையிலும் சாதித்திருக்கும் சாதனைகளையும் அவற்றில் வெற்றிபெற அவர்கள் சந்தித்த சோதனைகளையும் சிக்கல்களையும் எவரும் மறக்க முடியுமா? இலக்கிய மொழிபெயர்ப்பு என்றதும் ஓமர்கய்யாமின் கவிதையை மொழிபெயர்த்துப் பெயர் பெற்ற ஃபிட்ஸ் ஜெரால்டின் இலக்கியப் படைப்பாளர்கள் மறக்க முடியாது. தமிழில், ஆங்கிலத்தில் எட்வர்ட் பிட்ஸ் ஜெரால்டு செய்த உமர்கய்யாம் பாடல்களைக் கவிமணி மொழிபெயர்த்துப் பெருமை தேடிக்கொண்டார் என்பதை முன்னரே கண்டோம். உமர்கய்யாமின் பாடல்களுக்கு அம்மொழி யாடையை நீக்கி மற்றொரு மொழியாடையைப் பூட்டுவதோடன்றி, அதன் இயல்புக்கேற்பப் பலவகை அணிகலன்களையும் இலக்கு மொழிக்கேற்பச் சேர்த்து, அப்படைப்பை மெருகேற்றுவது என்றே கூறலாம். எளிமை என்றால் கருத்துப் பஞ்சம் என்று அவர் பாடலில் காண இயலாது. பாடலைக் கேட்பவருக்கும் பாடுபொருளுக்கும் ஏற்ப அவர் எத்துறையிலும் பாடலைத் திறனாக இயற்றுவார்.

தற்காலத் தமிழிலக்கிய வரலாற்றிலே கவிதைப் பணியாற்றித் தமிழுக்கு ஒளியூட்டிய மூத்த தலைமுறையினரிடையே பாரதியார், தேசிக விநாயகம்பிள்ளை, பாரதிதாசன் ஆகிய மூவருக்கும் முதலிடம் உண்டு என்கிறார் டாக்டர் ம.ரா.போ. குருசாமி.[10]

அதிலும் கவிமணியின் எளிய பாடல்களின் செல்வாக்கைக் கண்டு, ஆங்கிலத்திலும் தமிழிலும் மொழிபெயர்ப்புக் கலையிலும் நல்ல தேர்ச்சி பெற்ற சிலர் பொறாமைப்படுவதும் உண்டு. ஆத்திரத்தில் கவிமணிக்கு இச்சிறப்பெல்லாம் இரசிகமணி டி.கே.சி. அன்பர் என்றும் பிதற்றுவர். பாரசீகக் கவிஞராகிய உமர்கய்யாவின் 'ருபாயத்' பாடல்கள் அரபு, ஆங்கிலம், ஜெர்மன் முதலிய உலக மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டன. எனினும் ஆங்கில மொழியில் இடம்பெற்ற பின்புதான் பல்வேறு நாட்டினரின் கவனத்தை ஈர்த்தது எனலாம். 'ருபாயத்' என்ற சொல்லுக்கு நாலடிப்பாடல் என்ற பொருளுண்டு. இது 'குவாட்ரையின்' (Quatrain) என்று ஆங்கிலத்தில் கூறுவர். ஆங்கிலம் வழியாகத் தமிழுக்குக் கவிமணி மூலம் இப்பாடல் அறிமுகமானது. உமர்கய்யாமின் பாடல்களை முதன்முதலில் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவர் ஃபிட்ஜெரால்டு. இவரின் மொழி பெயர்ப்பினை அடிப்படையாகக் கொண்டு பலர் மொழிபெயர்த்துள்ளனர். அவர்களில் கவிமணி தேசிக விநாயகம்பிள்ளை, ச.து. சுப்பிரமணி யோகியார், சாமிசிதம்பரனார் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

---

10. காணிக்கைக் கட்டுரைகள், டாக்டர் ம.ரா.போ. குருசாமி, 2009.

ஃபிட்ஜெரால்டு மொழியாக்கத்தை மூலநூலாகக் கொண்டு அவரின் எழுபத்தைந்து பாடல்களில் நாற்பத்தி மூன்று பாடல்களை மட்டும் மொழிபெயர்த்துள்ளார். ''இரண்டாயிரமாண்டுகாலத் தமிழ் இலக்கிய வரலாற்றைக்காணும் போது சூழலுக்கேற்ற உள்ளடக்கமும் உள்ளடக்கத்திற்கேற்ற வடிவ மாற்றமும் தொடர்ந்து நிகழ்ந்து கொண்டு வந்திருப்பதை உணரமுடிகிறது'' என்கிறார் அரங்கராசு.

கவிதை மொழிபெயர்ப்பைப் பயன்படுத்திக் கிறித்துவ மதப் பிரச்சாரக் கொள்கை வளர்ந்தது. ஆங்கிலேயர் இந்தியாவிற்குள் காலடி எடுத்து வைத்ததும் இங்குள்ள மக்களின் பண்பாடு பழக்க வழக்கம் சமயம் முதலான துறைகளில் காலூன்றுவதற்கு மொழிபெயர்ப்பு ஒரு கருவியாகப் பயன்பட்டது. கிறித்துவ சமயத்தைப் பரப்புவதற்காக வந்த பாதிரியார்களில் பலர் தமிழ்மொழியைக் கற்று இங்குள்ள அரிய தமிழ் நூல்களில் சிலவற்றை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தனர். மொழிவளர்ச்சியில் ஆய்வு மேற்கொண்டு சமயப் பிரச்சாரத்திற்கும் வழிவகுத்தனர். ஆகையால் கிறித்துவ சமயத்தைப் பரப்பும் நோக்கில் ஆங்கில நூலான ஜான்பனியன் (John Bunyan) எழுதிய (Pilgrims Progress) என்பதை 'இரட்சண்ய யாத்திரிகம்' என மொழிபெயர்த்தனர். ''பரதேசியின் மோட்சப் பிரயாணம்'' என்ற பெயரில் எஸ்.பவுல் என்கிற கிறித்தவர் இதனை மொழிபெயர்த்துள்ளார். இதையே யாழ்ப்பாணத்தில் ''சொற்பனம்'' என்று மொழிபெயர்த்து வெளியிட்டார்கள். ஜான்பனியனின் நூலை எஸ். பவுல் கவிதையிடையிட்ட உரைநடையாக மொழியாக்கம் செய்தார். மூலநூலின் உயிர்த்துடிப்பைக் காட்டவே இவர் இடையிடையே கவிதை நடையில் மொழிபெயர்த்துள்ளார். சுவீகரனார் என்பவர் கி.பி. 1887இல் 'முக்திவழி அம்மானை' என்று கவிதையாக மொழிபெயர்த்தார். கி.பி. 1894இல் கவிஞர் கிருஷ்ணபிள்ளை 'இரட்சண்ய யாத்திரீகம்' என்ற பெயரில் கவிதையாகவே மொழிபெயர்த்துள்ளார். கிருஷ்ணபிள்ளை, சுவீகரனார் ஆகிய இருவரும் மேற்கொண்டது 'தழுவல்' வகை சார்ந்தது. எனவே இதனை முற்றிலும் கவிதையாக மொழிபெயர்த்தவர்கள், ஐரோப்பியப் பாதிரிமார்களைக் காட்டிலும் மூலநூலை விட்டு விலகாது அதற்கு முழுமையான அல்லது துல்லியமான மொழிபெயர்ப்பு முறையைப் பின்பற்றவில்லை.

'பாரடைஸ் லாஸ்ட்' காவியத்திற்குச் 'சுவர்க்க நீக்கம்' என்ற பெயரில் கால்நடை மருத்துவரான வெள்ளக்கால் ப. சுப்பிரமணிய முதலியார் கவிதை நடையில் விருத்தப்பாவால் அமைத்துள்ளார். அதற்கான பொழிப்புரையும் இவர் எழுதியது குறிப்பிடத்தக்கது. இவர் கம்பராமாயணத்தில் அதிக ஆர்வம் கொண்டிருந்தமையால், காப்பிய மரபும் விருத்தப்பா வடிவமும் மொழிபெயர்ப்பில் முன்னுரிமை பெற்றுத் திகழ்ந்தன.

## பாரதியின் கவிதை மொழிபெயர்ப்புகள்

பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்களைத் தமிழில் மொழி பெயர்க்கும் பேரவா கொண்டவர் பாரதி. இங்கிலாந்து நாட்டின் அரசியல் நிகழ்ச்சிகளையும் அங்குள்ள குறைகண்டு எழுதப்பெற்ற திருமதி ஸ்டீல் என்பவரின் எண்ணற்ற கவிதைகளைப் பாரதியார் மொழிபெயர்த்தார்.

**தையலார் நாணிலாது**
**ஆட்சியை விரும்புவர் அவனியை யாள்வோர்**
**பொய்யுரை கூறி வணிகர்தம் பொருளைக்**
**கவர்வர். இவ்வுலகத்திறுதியின் கண்ணே**
**மக்களின் அறனெலா மயங்கி நின்றிடுமால்**
**பொருட்காப்பென்பது போய்ப் பெருங்கேடுறும்.**

விடுதலை உணர்வைப் பாரத மக்களிடையே பரப்புவதற்கு மிக வலுவான பிரச்சாரம் இது. ஆகவே பிறமொழிகளிலிருந்து தமிழுக்கும் தமிழிலிருந்து பிற மொழிகளுக்கும் மொழிபெயர்த்து இத்துறையிலும் காலூன்றியவர் பாரதி. இவர் 'ஜான்ஸ்கர்' என்பவரின் 'The Town of Let's pretend' என்பதைக் கற்பனையூர் என்று மொழிபெயர்த்துள்ளது குறிப்பிடத் தகுந்த பணியாகும். தாகூரின் ஆங்கிலக் கவிதைகளை 'நாட்டுக்கல்வி' என்று தமிழார்வலர் ஒருவர் மொழிபெயர்த்துள்ளார்.

## 2. புதின / சிறுகதை மொழிபெயர்ப்பு

உலக அரங்கில் பல்வேறு மொழிகள் தோன்றியபோதே மொழிபெயர்ப்பும் இன்றியமையாத ஒன்றாகிவிட்டது. மொழிபெயர்ப்பு மொழி வளர்ச்சிக்கு மிகவும் ஊட்டந் தருவதாகும். பிற மொழிகளில் தோன்றியுள்ள அறிவுச் செல்வங்களைத் தமிழில் மொழி பெயர்ப்பதால் தமிழ்மொழி வளம் பெறும், ஆக்கம் பெறும். அறிவியல் தமிழாக்கத்தில் நாம் சந்திக்கும் சிக்கல் ஒருவகையானது. ஆனால்

இலக்கியம், சமயம், பண்பாடு தொடர்பான மொழிபெயர்ப்புகளில் நாம் சந்திக்கும் சிக்கல் வேறுவகையானது. இலக்கியத்திலும் புதினங்களிலும் சிறுகதைகளின் மொழிபெயர்ப்புகளிலும் ஏற்படும் சிக்கல்களை ஒப்பிடுகையில் நாடகங்களிலும் கவிதைகளிலும் தனிவகையான சில பிரச்சினைகளை நாம் சந்திக்க வேண்டி உள்ளது. குறிப்பாகக் கவிதைகளை மொழிபெயர்ப்பதில் தாம் சந்தித்த, எதிர்கொண்ட சிக்கல்களைப் பற்றி யாழ்ப்பாணத்து மகாகவி உருத்திரமூர்த்தி சந்தித்தவற்றை இ. முருகையன் தம் நூலான 'மொழிபெயர்ப்பு நுட்பம்' ஓர் அறிமுகம் என்பதில் பின்வருமாறு எடுத்துக்கூறுகிறார்.

> **''சற்றெம் நிலையைச் சரிபார்த்துக் கொள்வோமே. மற்றோர் படைப்பின் மகத்துவத்தை ஆய்வோமே. உற்றார் உறவார் உணர்விற் பிறந்தவற்றைக் கற்று மகிழ்வோம்; அன்னவர்கள் களவியத்துப் பெற்ற அனுபவத்தை நம்மாற் பெயர்க்களிக்கு நற்றவத்தில் ஈடுபட்டார் நன்றே புரிகின்றார். பாட்டினையே பாட்டாய்ப் பெயர்க்கும் பணிபெரிது. மீட்டும் முதல் நூல் விளைத்தோன் அவன் பட்ட பாட்டின் வழி ஆம் பெயர்ப்பு மறுபடைப்பே. கேட்டும் உணர்ந்தும் கிறுகிறுத்தும் கண்டதை நாம் ஊட்டம் பெறுதற் குயிரோடு கொண்டு வந்து, மீட்டும் தமிழில் எனில் மிக்க நன்றி கூறோமோ"**

என்று அவர் கூறியிருப்பது நடைமுறை சார்ந்த கூற்று. ஆனால் மொழிபெயர்க்க முடியாதது எதுவோ, அதுவே கவிதை என்று கவிதை இலக்கணம் என்று **இலூஷன் அன்ட் ரியலிட்டி** என்ற நூலில் அதன் ஆசிரியர் கிறிஸ்டோவர் கோட்வெல் என்பவர் ஓர் உண்மையை ஓரளவு எடுத்துக்கூறியுள்ளார். அதாவது கிறிஸ்டோஃபர் சொல்ல வருவது என்னவெனில் மூலக் கவிதை தந்த அனுபவத்தை எந்த நல்ல மொழிபெயர்ப்பும் அளிக்க இயலாது. இதற்கான காரணங்கள் பல. இதுதான் கோட்வெல் கூறவந்த செய்தி. எனினும் கவிதைகளை மொழிபெயர்ப்பாகவும் தழுவியும் பலர் எழுதத்தான் செய்கிறார்கள் என்ற உண்மையை நாம் மறுக்க முடியாது.

அடுத்துப் புதினம் 'சிறுகதை/மொழிபெயர்ப்புகள்' பற்றிப் பார்ப்போம். புதினம், சிறுகதை என்றாலே வயது வேறுபாடில்லாது

அனைவரும் விரும்பும் இலக்கிய வகையாகும். அந்த வகையில் கவிதையைவிட இதற்கு ஒருபடி வாசகர் வட்டம் பெரிது என்றே கூறவேண்டும். கதையில் வாழ்க்கை அனுபவங்களை அவரவர் கோணத்தில் பலரும் சித்திரிக்கிறார்கள். அவரவர் அனுபவங்களோடு கற்பனையையும் கலந்து சுவைபடப் படைக்கப்படுவன புதினமும் சிறுகதைகளும்.

ஜேன் ஆயர், சார்லஸ் டிக்கன்ஸ், வால்டர் ஸ்கடை, மார்க்சிம் கார்க்கி போன்றோரின் ஒப்பற்ற புதினங்கள் பல தமிழில் மொழிபெயர்க்கப் பெற்றுள்ளன. புதினங்களில் ஆளப்படும் பழமொழி, மரபுத்தொடர், உவமைகள் ஆகியவற்றை அவற்றிற்கீடான தமிழ்ச் சொற்களால் தக்க நிகரிகளைக் கொண்டு எளிய நடையில் மொழிபெயர்ப்பது வாசகர்களின் ஆர்வத்தை அதிகரிக்கும்.

## பழமொழிகள்

மொழிபெயர்ப்பு என்றால், சிந்தனை – சூழலுக் கேற்ற பொருட்செறிவு எதுவுமின்றி, தம்மனம்போல் ஓர் ஆங்கிலச் சொல்லுக்கு ஒரு தமிழ்ச் சொல்லை இட்டு நிரப்புவது அல்ல. ஆங்கில மூலத்திலுள்ள சொல்லைப் பாாத்து, அதற்கு நேரான தமிழ்ச் சொல்லைப் பெய்துவிடுவதும் அல்ல. அது மிகவும் பொறுப்புள்ள ஒரு பணி. இலக்கிய மொழிபெயர்ப்பிற்கு இரு மொழிப்புலமை தேவை. ஆனால் கவிதையை மொழிபெயர்க்கக் கற்பனை தேவை. ஆனால் மேடைப்பேச்சு அல்லது நேருக்கு நேரான சொற்பொழிவினையும் பழமொழிகளையும் மொழிபெயர்ப்பதற்குப் பலதரப்பட்ட அனுபவமும், மொழிபெயர்ப்பில் தேர்ச்சியும் தேவை. பழமொழிகளை மொழிபெயர்க்கும் போது மொழி மரபினை அறிந்து மொழிபெயர்ப்புச் செய்யலாம்.

பல மேனாட்டு அறிஞர்கள் நம் பழமொழிகளைக் கற்றுத் தேர்ந்து அவற்றில் உள்ள கருத்தினை அறிந்து பலரும் இதன் பயனைப் பெறக் கருதித் தொகுத்தனர். அத்துடன் அவற்றுக்கு இணையாகத் தம் மொழிகளில் உள்ள பழமொழிகளையும் சேர்த்து பழமொழித் திரட்டாகப் பல நூல்களை வெளியிட்டனர். தமிழில் பழமொழி நானூறு, பழமொழி விளக்கம் முதலிய நூல்கள் உள்ளன.

ஹெர்மன் ஜென்சன் என்பவர் 1897ஆம் ஆண்டு நம் தமிழ்ப் பழமொழிகளுக்கு இணையான ஆங்கிலப் பழமொழிகளைத் தொகுத்து நூலாகப் பதிப்பித்தார். இதே போன்று தமிழறிஞரான திருமணம் செல்வக்கேசவராய முதலியார் அவர்கள் தமிழ்ப்

பழமொழிகளுக்கு இணையான ஆங்கிலப் பழமொழிகளைக் கொடுத்து 1903இல் பதிப்பித்தார். சில எடுத்துக்காட்டுகளைக் கீழே காணலாம்.

அகத்தின் அழகு முகத்தில் தெரியும்
The face is index to the mind
The beauty of the mind appears in the face

அக்கரைக்கு இக்கரை பச்சை
தூரத்துப் பச்சை கண்ணுக்குக் குளிர்ச்சி
Distance lands enchantment to the view
Far folks fare well. Far touls have fair feathers

இவ்வாறு மரபுச் சொற்கள், வழக்குச் சொற்கள், உறவுமுறைச் சொற்கள் எனப் புதினங்கள்/சிறுகதைகளில் எடுத்தாளப் படுவனவற்றையும் நாம் கவனமாக மொழிபெயர்க்க வேண்டும்.

**புதினம் கரித்துண்டும் மொழிபெயர்ப்பும்**

தமிழில் 'கரித்துண்டு' புதின ஆசிரியர் டாக்டர் மு.வ. அவர்கள் உலகறிந்த மிகப் பெரிய தமிழறிஞர். அவர் எண்பதற்கும் மேலான நூல்களைப் படைத்தவர். 13 புதினங்களை எழுதினார். அவற்றில் கரித்துண்டு ஒரு சிறந்த புதினம். இப்புதினத்தில் அதன் ஆசிரியர் வறுமை, கல்லாமை, தேர்தல், வாக்குரிமை, மக்களாட்சி, மாநில அதிகாரம், தொழில் நிலவரம், வேலைவாய்ப்பின்மை, கைத்தொழில், கைத்தறி, குடிசைவாழ் மக்கள் நிலை, அகதிகளாகத் தமிழர் படும்பாடு முதலியவற்றைச் சித்திரிக்கிறார். இதை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவர் தலைமைச் செயலக மொழிபெயர்ப்புத் துறையின் முன்னாள் துணை இயக்குநர் கு. பாலசுப்பிரமணியன். இவர் முப்பது ஆண்டுகளுக்கும் மேலாக மொழிபெயர்ப்புக் கடலில் நீந்தித் திளைத்தவர். சிறந்த மொழி பெயர்ப்பிற்கு எடுத்துக்காட்டாகத் தமிழிலிருந்து ஆங்கிலத்திற்குக் கரித்துண்டை மொழிபெயர்த்த பெருமைக்குரிய இவர் இன்னும் பல ஆங்கிலப் புதினங்களைத் தமிழில் மொழிபெயர்த்து அளித்தவர்.

ஏதேனும் ஒரு சிறந்த மன விளைவை, பயனைப் படிப்போர் உள்ளத்தில் பதிவிக்க வேண்டும் என்னும் ஒரு சிந்தனையுடன் படைப்பாளி ஏதேனுமொரு சிறுகதையைப் படைக்கலாம். இத்தகைய

சிறுகதையைப் படைத்தல் எளிதன்று. எனவேதான் புதினத்திலும் சிறுகதையே சிறந்தது என்று திறனாய்வாளர் டாக்டர் தா.வே. வீராசாமி கூறுகிறார்.

சிறுகதையின் அமைப்பு முறையைப் படைப்பாளன் முதலில் தீர்மானித்தல் வேண்டும். தன்மையில் வைத்தும் சிறந்த சிறுகதை எழுதலாம். ஓரிரு பாத்திர உரையாடல் மூலமாகவும் சிறுகதையை அமைக்கலாம். இதற்கு எ.டு. ஜெயகாந்தனின் 'பிணக்கு' எனும் சிறுகதையினைக் கூறலாம். சிறுகதைகளில் வினை நவில் சிறுகதை (Story of plot), பண்போர்ப்புச் சிறுகதை (Story of Character) மனப்பாட்டுச் சிறுகதை (Story of impression) என மூன்று வகைகளைக் கூறலாம் என்கிறார் டாக்டர் ம.ரா.போ. குருசாமி. வினை நவில் சிறுகதை, ஒரு குறிப்பிட்ட நிகழ்ச்சியைப் பற்றிப் படைப்பது; பண்போர்ப்புச் சிறுகதை, ஏதேனும் ஒரு குறிக்கத்தக்க பண்புப் பகுதியைப்பற்றிப் படைப்பது. மனப்பாட்டுச் சிறுகதை, படிப்போர் உள்ளத்தில் எழுத்துகளின் கருத்துத்தாக்கம் ஏற்படுமாறு படைப்பது. புதினத்தில் கதை—நிகழ்கலை அளவுக்கு மேற்பட்ட தொலை நோக்கோடு கதை மாந்தர்கள் அமைக்கப்படுவர். எ.டு. டாக்டர் மு.வ.வின் கரித்துண்டு.

## 3. நாடகங்களின் மொழிபெயர்ப்பு

பிறமொழிப் புதினம், சிறுகதை, நாடகங்களை மொழிபெயர்ப்பதிலும் சிக்கல்கள் இல்லாமல் இல்லை. இப்படைப்பிலக்கியங்களில் இடம்பெறும் உரையாடல்கள் கதைப்பாத்திரங்களுக்கு ஏற்ப அமையும். நாடகத்தை மொழிபெயர்க்கும்போது மொழிபெயர்ப்பாளருக்கு அடிப்படையான சில பிரச்சினைகள் இருக்கத்தான் செய்கின்றன. நாடகத்தில் கதை மாந்தர்களின் உரையாடல்களில் பழமொழிகள், மரபுத் தொடர்கள், வழக்காற்றுச் சொற்கள் பேச்சு நடையில் இடம்பெறும். வழக்குகளின் சூழல், பண்பாடு வாசகங்களின் இயல்பு ஆகியவற்றை மொழிபெயர்ப்பாளர்கள் தக்க சிரத்தையுடன் முயற்சியும் பயிற்சியும் பெற்றுத்தான் மொழிபெயர்ப்பைச் சிறந்த முறையில் முடிக்க வேண்டும். நாடகங்களை மொழிபெயர்க்கையில் தமிழில் நடைமுறையிலுள்ள பல்வேறு வட்டார வழக்குகளை நன்கு அறிந்து கவனத்துடன் மேற்கொள்ள வேண்டும். இவற்றை எடுத்த எடுப்பில் சரளமாக மொழிபெயர்த்து விட முடியாது. சில வட்டார வழக்குகளை அடியிட்டோ பிறைக் கோட்டிற்குள் அமைத்தோ வாசகர் தெளிவுறுமாறு பெயர்த்தல் வேண்டும்.

நாடகங்களையும் கதைகளையும் மொழிபெயர்க்கையில் உறவுமுறைப் பெயர்கள் சிக்கல்களை விளைவிப்பதுண்டு. ஒருமொழியில் உள்ள உறவுமுறைப் பெயர் ஒன்று, மற்றொரு மொழியில் இல்லாதிருக்கலாம். இவற்றைச் சரியான நிகரிகண்டு மொழிபெயர்ப்பது அரிய செயல். இருப்பினும் இத்தனைச் சிக்கல்களையும் தாண்டித்தான் கதைகளும் நாடகங்களும் மொழிமாற்றத்திற்கு உட்படுகின்றன.

## மொழிபெயர்ப்பு நாடகங்கள்

மகாகவி காளிதாசனுடைய வடமொழி நாடகங்கள் பல தமிழில் மொழிமாற்றம் செய்யப்பட்டுள்ளன. சாகுந்தலம், மேகசந்தேசம், இரகுவம்சம் முதலிய நாடகங்களை இங்கே எடுத்துக்காட்டலாம். சாகுந்தலம் நாடகத்தைத் தமிழில் மறைமலை அடிகள், ஆர். இராகவ அய்யங்கார், கே. சந்தானம் ஆகியோர் மொழி பெயர்த்துள்ளனர். சாகுந்தலம் நாடக மொழிபெயர்ப்பில் மறைமலை அடிகள் இலக்கிய நயத்துடன் மொழிபெயர்த்துள்ளார். இராகவ அய்யங்கார் கதியாக இலக்கியத் தரமுடனும் கலை அழகுடனும் மொழிபெயர்த்துள்ளார்.

வடமொழியில் சிறப்பு வாய்ந்த நாடகங்களில் ஒன்றான ‘மிருச்சகடிகம்’ என்பதைப் பலபேர் மொழிபெயர்த்திருப்பினும் பண்டித மணி மு. கதிரேசன் செட்டியாரின் மொழிபெயர்ப்பு பலரின் பாராட்டைப் பெற்றுப் பல்கலைக்கழக அளவில் பாடநூலாகவும் வைக்கப்பட்டது. அவர் ‘மிருச்சகடிகம்’ என்பதை ‘மண்ணியல் சிறுதேர்’ என்று பெயரிட்டுப் பெயர்த்தார். இந்நூலாசிரியரின் மொழி பெயர்ப்புத்துறை ஈடுபாட்டிற்குப் பண்டிதமணியின் ‘மண்ணியல் சிறுதேர்’ மொழிபெயர்ப்பும் ஒரு காரணம். இக்கதை தெலுங்கில் ‘வசந்தசேனா’ என்னும் தலைப்பில் திரைப்படமாக வெளிவந்தது.

புரட்சிக்கவி பாரதிதாசனின் ‘புரட்சிக் கவி’ பில்கணர் எழுதிய பில்கணியத்தைத் தழுவியதாகும். வடமொழியில் பதினோராம் நூற்றாண்டில் எழுந்த யாமினி கதைதான், புரட்சிக்கவியின் உதாரன் அமுதவல்லி கதையாகப் படைக்கப்பட்டுள்ளது. பில்கணீயத்தில் யாமினி சாதாரணப் பெண்ணாகப் படைக்கப்பட்டாள். ஆனால் பாரதிதாசன், தான் சொல்ல விரும்பிய சமத்துவ கருத்திற்கேற்ப அமுதவல்லி பாத்திரத்தை ஒரு புரட்சிப் பெண்ணாகப் படைத்துள்ளார்.

வில்லிபாரதத்தில் இடம்பெற்றுள்ள சூது போர்ச் சருக்கத்தின் தழுவலாகப் பாரதியின் நாட்டு விடுதலையை உணர்த்தும் பாஞ்சாலி சபதம் படைக்கப்பட்டது.

மேலை நாட்டாரின் கதைகள் பலவற்றைப் புதுமைப்பித்தன் உள்ளிட்ட பலரும் தமிழில் மொழிபெயர்த்துள்ளனர்.

நாடகங்களைப் பொறுத்தவரையில் ஷேக்ஸ்பியரின் நாடகங்கள் அறிஞர் பலரால் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. பழநி அரங்கசாமி, ''ஷேக்ஸ்பியர் நாடக மொழிபெயர்ப்புகள்'' (1989) எனும் தனது கட்டுரையில், ஷேக்ஸ்பியர் நாடகங்கள் பலவற்றை மொழிபெயர்த்த அறிஞர்கள் பலரின் மொழிபெயர்ப்புகளை அலசி ஆராய்ந்துள்ளார். எ.டு. பம்மல் சம்பந்த முதலியார் மொழிபெயர்த்த அமலாதித்தன் என்பது ஷேக்ஸ்பியரின் ஹாம்லெட் நாடகத்தைத் தழுவியது. இதைக் கருவாகக் கொண்டு 'மனோகரா' என்ற தழுவல் நாடகம் முதலியாரால் மொழிபெயர்க்கப்பட்டுப் படைத்துப் பெயர் பெற உதவியது. இதே கதை முதல்வர் கலைஞர் கைவண்ணத்தால் நடிகர் திலகம் சிவாஜிகணேசன் நடித்த மனோகரா என்ற மாபெரும் பெற்றித் திரைப்படமாகியது. இவர் ஷேக்ஸ்பியரின் ஜூலியஸ் சீசர், ஆஸ்யூலைக் இட் நாடகங்களை, சிம்மபுரி வீரன், விரும்பிய விதமே, மகபதி, வாணிபுர வணிகன் என்று ஆங்கில நாடகத்தின் உட்பொருள், பெயர் முதலியவற்றைத் தமிழ் மரபுக்கு ஏற்றபடி மொழிபெயர்த்தார்.

இவரை அடுத்து நீதிபதி சு. மகராசன் ஹாம்லெட், மேக்பத், கிங் லீயர் ஆகிய ஷேக்ஸ்பியரின் நாடகங்களைத் தமிழில் மொழி மாற்றம் செய்தார். அவர் இந்நாடகங்களை மொழிபெயர்த்த போது எத்தனையோ கடினமான பிரச்சினைகளைச் சமாளிக்க வேண்டி யிருந்ததாக, ''மொழிபெயர்ப்பது எப்படி?''[11] என்று தாம் எழுதிய கட்டுரை ஒன்றில் விளக்கியுள்ளார். தான்பட்ட அனுபவங்களை, கற்ற பாடங்களை மற்ற மொழிபெயர்ப்பாளர்களும் கண்டு பயன்பெறுவர் என்று கருதியே தான் மேற்கூறிய ஆய்வுக் கட்டுரையை எழுதியதாகக் கூறுகிறார்.

ஷேக்ஸ்பியரைத் தமிழில் மொழிபெயர்த்துவிட்டு, மொழிபெயர்ப்பை மூலத்தோடு ஒத்துப்பார்த்தபோது, தான் கீழ்க்கண்ட முடிபுகளுக்கு வந்ததாக நீதிபதி கூறுகிறார்.

> மூலத்திலுள்ள விஷயத்தில் 99.9 சதவீதம் மொழி பெயர்ப்பில் இறங்கிவிட்டது. ஷேக்ஸ்பியருடைய பாவங்களில் 80 விழுக்காடு தமிழில் இறங்கி யிருக்கிறது; ஷேக்ஸ்பியருடைய கவிதையின்

11. மேலது, ப. 11.

நிழலில் 20 சதவீதம் மொழிபெயர்ப்பில் வந்திருக்கிறது

என்கிறார்.

நல்ல வேளையாக ஷேக்ஸ்பியர் அவருடைய நாடகங்கள் மூலம் மொழிபெயர்க்க முடியாத தத்துவங்களை மாத்திரம் கொடுக்கவில்லை.

மனித வாழ்விலுள்ள இன்பதுன்பங்கள், எண்ணற்ற காட்சிகள், விதியின் கம்பீர நடை முதலியன மொழிபெயர்க்கக் கூடியன. இவற்றை யெல்லாம் பற்றியும் ஷேக்ஸ்பியர் பாடி யிருக்கிறார். அவர் கதாசிரியனாய், நூல் புலவராய், தத்துவ ஞானியாய், கலைஞராய் இருந்து சொல்லும் பொருள்கள் பல மொழிபெயர்க்கக் கூடியவை. அவர் கையாளும் நாடக உத்திகளும் தந்திரங்களும் தமிழ்ப்படுத்தக் கூடியவைதான் என்கிறார் நீதிபதி. ஷேக்ஸ்பியரை மொழிபெயர்த்த நீதிபதி சு. மகராசன் தாம் கடைப்பிடித்த கொள்கைகளையும் அக்கட்டுரையில் கூறுகிறார். அவை முறையே:-

1. ஷேக்ஸ்பியரின் உள்ளுணர்வைக் கொணரும் முயற்சி வேண்டும்.
2. இலக்கிய மொழிபெயர்ப்பில் சுதந்திரத்தை அனுபவிக்கலாம்.
3. மூலத்துக்கு உண்மையோடு இருக்க வேண்டும்.
4. சில சமயம் மூலச் சொற்களைச் சொல்லுக்குச் சொல் மொழிபெயர்க்காது விட்டுவிட நேரிடும்.
5. சொற்கள் வெறும் அடையாளங்களே.
6. பண்பாட்டுக்கு ஏற்றவாறு மொழிபெயர்த்தல்.
7. சிலேடையைத் தமிழ்ப்படுத்த முடியாது. இதே போல் ஆங்கிலத்திலும் சிக்கல்தான்.
8. வாக்கியங்களைப் பிரித்து மொழிபெயர்த்தல்.
9. பிறமொழிச் சொற்களின் பயன்பாடு.

## முடிவுரை

அடுத்து மேலைநாட்டு ஆங்கில நூல்களைப் பின்பற்றித் தமிழில் படைக்கப்பட்ட நாடகங்களில் சிறந்தது மனோன்மணீயம்.

தமிழில் இலக்கியத் தரம் வாய்ந்த கவிதை நாடகமாக மனோன்மணீயத்தைக் கூறலாம். இதனைத் தத்துவப் பேராசிரியர் சுந்தரம் பிள்ளை இயற்றினார். தமிழில் நாடக நூல்கள் இல்லாத குறையைப் போக்க, ஆங்கிலத்தில் இலிட்டன் பிரபு எழுதிய 'The Secret Way' என்ற கதையைத் தழுவிப் படைக்கப்பட்டதுதான் மனோன்மணீயம். பேராசிரியர் சுந்தரம் பிள்ளை, கருத்து, வடிவம் என்ற படைப்பு அமைப்புகளில் இலிட்டன் பிரபுவின் கருத்தை, அதாவது கதைக் கருவை மட்டுமே, இவர் தழுவிக் கொண்டு, தமிழ் மரபுப்படி செய்யுள் நடையில் இயற்றப்பட்ட முதல் நூலைப் போல் சிறப்பாகச் செய்தாலும், இது தழுவல் வகையைச் சேர்ந்ததே என்று டாக்டர் மு.வ. கூறுகிறார்.

**ஆங்கிலத்தில் மிருச்சகடிகம்.** இது சூத்திரகன் என்று அழைக்கப்படும் வடமொழிக் கவியரசர் யாத்தமைத்த 'மிருச்சகடிகம்' எனும் பிராகிருத நாடகத்தின் நேர் மொழிபெயர்ப்பாகும். இந் நூலுக்கு, 'சுவப்நவாசவதத்தம்' எனும் முதனூலுள்ளது. இதன் ஆங்கில முகவுரையில் சில விஷயங்கள் உள்ளன. வடமொழி அறியாதவர்கள் ஆங்கில மொழிபெயர்ப்பைப் படித்தறியலாம். ''மிருச்சகடிகம்'', பல அறிஞர்களால், ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. இதன் ஆங்கில வடமொழி பெயர்ப்புகளைப் படித்தறிந்த சோமசுந்தர பாரதியார், இம் மொழிபெயர்ப்புகள் பாராட்டும்படி இல்லை என்ற கருத்தைக் கூறியுள்ளார்.

## 12. அறிவியல் வகை மொழிபெயர்ப்பு அமைப்பு: முன்னுரை

மொழிபெயர்ப்புகள் தற்போது துறைதோறும் நடந்தேறி வருகின்றன. இன்றைய காலச்சூழலில் தமிழ் வளர்ச்சிக்கு அதிகமாகத் தேவைப்படுவன அறிவியல், தொழில்நுட்பம், அரசியல், சமூக, சட்டம் முதலிய அறிவியல் துறைகள் பற்றிய மொழிபெயர்ப்பே ஆகும். இவற்றைப் பொறுத்தவரையில், அவ்வத்துறை சார்ந்த பொருத்தமான கலைச்சொல் நிகரிகளைப் பெறுவதில்தான் பெரும் சிக்கல்கள் எழுகின்றன. தக்க கலைச்சொற்கள் கிடைக்கப் பெற்றால்தான் ஒப்பீட்டளவில் எளிதாக, வேகமாக, துல்லியமான மொழிபெயர்ப்புப் பணிகளை மேற்கொள்ள இயலும்.

1. மொழிபெயர்ப்பின் போது சொற்களை ஆக்கவும் கடன் வாங்கவும் செய்யலாம். இவை இலக்கு மொழியில் போதிய கலைச் சொற்கள் இல்லாத போதுதான் நிகழும்.

2. மொழிபெயர்ப்பின் போது, தமிழ் மொழியில் நிலைத்துவிட்ட சொல்லுக்கும் சொற்றொடருக்கும் எதிரான சொல்லையோ சொற்றொடரையோ பயன்படுத்துவது மொழிமரபல்ல.

3. புலவர் நடைக்கும் பாமரத் தமிழ் நடைக்கும் இடைப்பட்ட தொரு சராசரித் தமிழனுக்குப் புரியும் வகையில் அறிவியல் மொழிநடை வேண்டும்.

4. அறிவியல், தொழில்நுட்பத் துறைகளில் மூலத்தின் பகுதி எதையும் விட்டுவிடுதல் ஆகாது.

## அறிவியல் வகை மொழிபெயர்ப்பு – விளக்கம்

வாய்மொழி வாயிலாக நிகழும் செய்திப் பரிமாற்றத்திற்கும் எழுத்து வழி வாயிலான செய்திப் பெயர்ப்பிற்கும் தனித்தனியே மொழிமாற்று உத்திகள் ஆய்வில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவற்றுள்ளும் சட்டம், பொறியியல், தொழில்நுட்பம் முதலிய துறைகளில் உள்ள மூலநூல்களை மொழிபெயர்ப்பதற்கு வெவ்வேறு செயல்முறைகள் பின்பற்றப்படுகின்றன. ஒவ்வொரு துறைக்கேற்பத் தனக்கென ஒரு குறிப்பிட்ட நடை அமைத்துக் கொள்ள வேண்டியுள்ளது. ‘அறிவியல் மொழி’ என்பது ஒரு குறிப்பிட்ட நோக்கத்திற்கான சிறப்பு மொழியாகும். மொழிபெயர்ப்புகள் பலவற்றில் சட்டம், மருத்துவம், அறிவியல் போன்ற துறை நூல்களை மொழிபெயர்ப்பதற்கும் இலக்கிய நூல்களை மொழிபெயர்ப்பதற்கும் வெவ்வேறு நடை பின்பற்றப்படுகின்றது. அறிவியல் மொழிபெயர்ப்பு, அடிப்படையில் மூன்று பிரிவுகளையுடையது. அவை முறையே 1. ஒலியியல் பிரிவு 2. சொல்லியல் பிரிவு மற்றும் 3. இலக்கணப் பிரிவு. இம்மூன்று பிரிவுகளும் உலக மொழிகளின் மூன்று அடிப்படை அமைப்புகளைக் கொண்டவை. அறிவியல் மொழிபெயர்ப்பில் இம் மூன்று பிரிவுகளையும் நாம் சிறப்பாகப் பயன்படுத்த வேண்டியுள்ளது.

## அறிவியல் நூல்களை மொழிபெயர்ப்பது எப்படி?

அறிவியல் செய்திகளை மொழிபெயர்க்கையில் மிகவும் கவனத்துடன் செயல் படவேண்டும். மொழிபெயர்க்கப்படும் மொழி மரபுகளை ஒட்டியே அறிவியல் மொழிபெயர்ப்பு அமைதல் வேண்டும். இது மொழிபெயர்ப்பாளரின் அடிப்படைத் தகுதி. மொழிபெயர்ப்பின் பகுதிகளை விட்டுவிட்டு மொழிபெயர்த்தல் அறிவியல் துறைக்குப் பொருந்தாது. மொழிபெயர்ப்பில் எதையும் விடாது மொழிபெயர்ப்பதே அறிவியல் மொழிபெயர்ப்பாகும். அறிவியல் மொழிபெயர்ப்பில்

சொற்களை மூலமொழியிலிருந்து இலக்கு மொழிக்கு மாற்றும் போது, சொற்களை ஆக்கவும் கடன் வாங்கவும் செய்யலாம். இவை இலக்குமொழியில் போதிய சொற்கள் இல்லாத போது நிகழும். சொற்களை நேரடியாகக் கடன் வாங்குதல் ஒருமுறை. இதன் விளைவாக ஒரு மொழிக்குள் புது ஒலியன்களும் புது எழுத்துகளும் புகுந்திடும் வாய்ப்புள்ளது. அறிவியல் மொழிபெயர்ப்பில் கலைச் சொற்களை உருவாக்குதல் இருமுறையில் சந்திக்கும் வாய்ப்புண்டு.

மூல நூலில் காணப்படும் புதுச்சொற்களை எடுத்துரைக்கவும் இலக்குமொழியில் உள்ள சொற்பஞ்சத்தைப் போக்குவதற்காகவும் மூலமொழி, இலக்கு மொழிச் சொற்களைக் கலந்து புதுச் சொல் உருவாக்குதல், புதுக்கருத்துகளைத் தெரிவிக்க இலக்குமொழியில் இருகூறுகளைச் சேர்த்துச் சொல்லாக்கம் செய்தல்.

## அறிவியல் தமிழ்

தமிழ் அறிவியல் தொழில்நுட்ப நூல்கள் அதிகம் வெளியாகாமல் இருப்பதற்குக் காரணம் நம் தமிழில் கலைச் சொற்கள் அதிகமாக இல்லாத குறையெனப் பலர் கடந்த அரைநூற்றாண்டாகக் கூறுவர். ஆனால், இன்றைய நிலையில் உலகப் புகழ்பெற்ற தொழில்நுட்பத் துறைப் பேராசிரியர்கள் சிலர் முனைப்போடு முன்னின்று அறிவியல் தமிழ் என்ற பிரிவையே தமிழில் வளர்த்து வரும்போது, தமிழில் கலைச் சொற்கள் இல்லை என்ற குறையை ஒருவாறு தவிர்க்கலாம்.

## அறிவியல் மொழிபெயர்ப்பின் கூறுகள் பின்வருமாறு

அறிவியல் மொழிபெயர்ப்பில் பின்வரும் கூறுகள் முக்கிய இடம்பெறுகின்றன:

1. அறிவியலில் கருத்துகளுக்கே முதலிடம் என்பார் பேரா. அ. சிதம்பரநாதன்.

2. அறிவியலில் ஒரு கருத்தைக் கூட்டிக்குறைத்துச் சொல்ல முடியாது. உள்ளதை உள்ளபடியே கூறவேண்டும் என்கிறார் நீதிபதி மகராசன்.

3. அறிவியல் கலைச்சொற்களை மொழிபெயர்க்கையில் அவற்றின் வேர்ச்சொற்களைக் காணவேண்டும் என்பார் பாவாணர்.

4. அறிவியல் சொல்லாக்கத்தில் பிற மொழிக்கலப்புத் தவிர்க்க இயலாதது என்பார் டாக்டர் ம.ரா. போ. குருசாமி.
5. அறிவியல் கலைச் சொற்கள் துல்லியமான பொருளை உணர்த்த வேண்டும் என்பார் டாக்டர் குழந்தைசாமி.

தமிழக அரசு முதல்முதலில் **1931–32**ஆம் ஆண்டில் கலைச் சொற்கள் சிலவற்றை வெளியிட்டது. 'அறிவு' என்பது என்னவெனில், ''எப்பொருள் எத்தன்மைத்தாயினும், அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு'' என்பர் தமிழ்ச் சான்றோர். எப்பொருளாயினும் அப்பொருட்கள் நின்று அம்மெய்ம்மையை உணர்வது அறிவு. அறிவியற் செய்திகளைத் தமிழ்மொழியில் விளக்கமாக எடுத்துரைக்க முடியுமா? என்று இன்னும் சிலர் எழுதியும் பேசியும் வருகிறார்கள். இக்கருத்து இன்றளவில் பயனற்றது. கால ஓட்டத்திற்கேற்பத் தமிழ் தன்னை வளப்படுத்தி வருகின்றது. ஒரு செய்தியை விளக்கப் போதிய சொல் இலக்கு மொழியில் இல்லை எனில், தற்போது உடனே அதற்கீடான சொல்லை உருவாக்கும் வழிவகைகள் காணப்பட்டுள்ளன. இந்திய விடுதலைக்குப்பின் தமிழில் அறிவியல் தொழில் நுட்ப வளர்ச்சி கணிசமாக அதிகரித்துள்ளது என்றே கூறலாம். இன்று நிலவும் சூழலில் தமிழில் அறிவியல் – சட்டம், மருத்துவக் கலைச் சொற்கள் தேவைக்கேற்பப் பல துறையினரால் உருவாக்கப்பட்டு வருகின்றன. அறிவியல் செய்திகள் பல வழி வகைகளில் தமிழில் பரவிவருகின்றன. இவற்றில் மொழிபெயர்ப்பின் பங்கும் பெரிதாக உள்ளது. தமிழ் இலக்கிய மொழித்துறைகள், மக்கள் தொடர்புச் சாதனங்கள் வார, திங்கள், நாள் இதழ்கள் இவற்றில் பெருந்துணை புரிகின்றன. இவற்றிற்கிடையே அறிவியல் மொழிபெயர்ப்பில் அணுகு முறைகள் வேறுபடினும், கருத்துப் பரிமாற்றத்திற்கு இவைகளின் பங்கு குறிப்பிடத்தக்கது.

## 12.1 (அ) தொழில்நுட்பம் பற்றிய மொழிபெயர்ப்பு

அறிவியல் மொழிபெயர்ப்புகள் பல கிளைகளைக் கொண்டிலங்குவன. அறிவியலும் தொழில்நுட்பமும் ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்குக் கருவி மட்டுமல்ல. இன்றைய சமுதாய வாழ்வின் ஒவ்வொரு கூறினையும் தொடும் பிரிவாகும்.

அறிவியல் தொழில்நுட்பம் பற்றிய மொழிபெயர்ப்பு படித்தவர்களுக்கு மட்டுமல்லாது, கிராமிய மக்களுக்கும் பாமர மக்களுக்கும் பயன்படும் முறையில் அமைந்துள்ளதை இன்று நாம்

காணலாம். புதிய தொழில்நுட்பச் செய்திகளைத் தமிழில் அறிந்து கொண்டு அவைகளைத் தம் வாழ்வில் அன்றாடம் மக்கள் கடைப்பிடிக்கத் தொடங்கிவிட்டனர். இன்று அறிவியல் தமிழ் வளர்ச்சியில் கிராமிய மக்களும் தொழில்நுட்ப அறிவைப் பெற்றுத் தம் வாழ்வை முன்னேற்றி வருகிறவர்கள் பலர். பொதுமக்கள் பலரும் பலதொழில்களில் உள்ள நுட்பத்தைக் கற்றுக் கொள்ள விரும்புகிறார்கள். இதையே நம் தேச பிதா காந்திஜியும் தேசத்திற்குப் பயன்படாத அறிவியல் அறிவு பயனற்றது என்று கூறினார். அவர் கிராம மக்களிடம் அக்கறை கொண்டு 'இராட்டை' எனும் கருவியை அறிமுகம் செய்து அதைப் பெரும் இயக்கமாக வளர்த்துத் தேசத்தின் பொருளாதார வளத்தைப் பெருக்க உதவினார். இன்று கிராம மக்கள், ஊரக வளர்ச்சியில் அறிவியல் தொழில்நுட்பங்களின் பங்கினைக் கற்றோர் மற்றோர் வாயிலாக மொழிபெயர்த்து மக்கள் தம் தொழிலை வளர்த்து வருகிறார்கள். இவர்கள் இன்று

1. சாண எரிவாயு பற்றிய தொழில் நுட்பம்
2. சூரிய அடுப்பு முறையின் தொழில் நுட்பம்
3. இறால் வளர்ப்பின் தொழில் நுட்பம்
4. காளான் வளர்ப்பின் தொழில் நுட்பம்
5. தேனீ வளர்ப்பின் தொழில் நுட்பம்
6. பட்டுப்பூச்சி வளர்ப்பின் தொழில் நுட்பம்
7. கோழி வளர்ப்பின் தொழில் நுட்பம்
8. பட்டாசுத் தொழில் நுட்பம்
9. தீப்பெட்டித் தொழில் நுட்பம்

என்று கிராம மக்கள் பல அறிவியல் செய்திகளைப் பிறர் மொழிபெயர்த்துக் கூறும்போது, நன்கு பயிற்சி பெற்றுத் தம் வாழ்வில் பலதொழில் செய்து முன்னேறி வருகிறார்கள்.

இங்கு வாசகர்கள் உற்றுக் கவனிக்க வேண்டியது என்ன வெனில், இலக்கிய மொழிபெயர்ப்பு ஏற்படுத்தும் சமுதாய வளர்ச்சியை விட அறிவியல் தொழில் நுட்ப மொழிபெயர்ப்பு மனிதனின் உழைப்பு, வாழ்விற்கு உடனடியாகப் பயன்படுவதாக உள்ளது. அறிவியல் தொழில்நுட்ப மொழிபெயர்ப்பு எவருக்காக மொழிபெயர்க்கப்படுகிறது என்பது முக்கியமானது. இம்முறையில் மொழிநடை இரண்டாம் நிலையினதே.

எவருக்காக மொழிபெயர்க்கப்படுகிறது? மாணவர்களுக் காகவா? ஆய்வாளர்களுக்காகவா? அல்லது அன்றாடம் பொருளீட்டிப் பிழைக்கும்பொது மக்களுக்காகவா? என்பதைப் பொறுத்து, தொழில்நுட்ப மொழிபெயர்ப்பின் சிறப்பு அமைகிறது.

பாமர மக்களிடம் கிராமத்தில் தொழில்நுட்ப மொழி பெயர்ப்பால், அறிவியல் அறிவை வளர்ப்பது என்பது சாமானியமான செயலன்று. இதற்கு அடிப்படையாக அமைவது அம்மக்களின் கல்வித் தரம், அனுபவ அறிவு, வயது, சுற்றுப்புறச் சூழலின் தன்மை, தேவை என்பன போன்ற பல செய்திகளைப் பகுத்தாய்ந்து செயல்படுத்தல் வேண்டும். மக்களின் அன்றாட வாழ்வில் பெரும்பாலான மக்களுக்குத் தேவையான தொழில்நுட்பக் கருத்துகளை, அவர்களுக்கு உடனடியாகப் பயன் தரும் கருத்துகளை, உரிய நேரத்தில் உரிய முறையில் உரியவர் மூலம் மொழிபெயர்த்துத் தொழில் நுட்ப அறிவைத் தொகுத்து, அவர் மனப்போக்கை அறிந்து தந்தால், மொழிபெயர்ப்பாளர் வெற்றி பெறலாம்.

## 12.1(ஆ) மக்கள் தகவல் தொடர்பியலுக்கான மொழிபெயர்ப்பு

இன்று 'மக்கள் தகவல் தொடர்பியல்', என்பதை ஆங்கிலத்தில் Mass Communication என்று கூறுவர். Communis என்பது Common (பொது) எனப் பொருள்படும் இலத்தீன் சொல். பொதுவாக்குதல் (To make common) பகிர்ந்தளித்தல் (To share) எனப் பொருள் கூறுவர் துறைவல்லார். இவ்வாறு பகிர்ந்தளிக்கும் போது, பொதுமை உணர்வு மக்களிடம் வேரூன்றுகிறது என்று டென்னிஸ் மக்குயில் (Denis Mcquil - 1969) கூறுகிறார். மக்கள் தம் எண்ணங்களையும் கருத்துகளையும் பங்கிட்டுக்கொள்ளத் தகவல் தொடர்பியல் துணை செய்கிறது. ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்து வாழவேண்டும். அறம் செய்யும் விருப்பத்தை உண்டாக்குகிறது. ஓர் சமுதாயத்திற்கும் மற்றொரு சமுதாயத்திற் கிடையே உறவை வளர்க்க உதவுகின்றது.

'மக்கள் தகவல்தொடர்பு' என்றால் தொழில்துறை சார்ந்து, நிறுவன அமைப்புடைய தொழில் நுட்பத் திறனின் துணையோடு சமுதாய மக்களுக்கு அளிப்பதற்காகப் பொதுத்தகவல்களைத் தொகுத்தளிக்கும் துறையே, இந்த 'மக்கள் தகவல் தொடர்பியலாகும்' என்பது அறிஞர் கூறும் பொருள். மக்களுக்குரிய பொதுத் தகவல்களைத் தொகுத்தளிக்கும்போது, இரு இன்றியமையாத கோட்பாடுகளை, குறிக்கோள்களை மனத்திற்குக் கொள்ள வேண்டும் என்று வீப் (Wiebe - 1952) கூறுகிறார். அவை:

1. தயாரிக்கும் தகவல்கள், எளிய முறையில் அனைத்துப் பிரிவு மக்களுக்கும் சென்றடையுமாறு கவனம் செலுத்தவேண்டும்.
2. இவ்வாறு தொகுக்கப்பட்ட தகவல்கள், மிகவும் குறைந்த பணச் செலவில் உரிய வரை எட்ட வழி செய்ய வேண்டும்.

'மக்கள் தகவல் தொடர்பியலின்', சிறப்பு என்னவெனில், குறைந்த செலவில் நிறைந்த பெருமளவிலான தகவல்களைப் பெரும் பான்மையான மக்கள் பெறச் செய்வதாகும்.

மேயிர் (Meier) (1956) என்பவர் தகவல் தொடர்பினைப் பின்வருமாறு வகுத்துரைக்கிறார் அது முறையே:

1. ஒருவருக்கொருவர் நேரடியாகக் கொள்ளும் தொடர்பு எ.டு. சமுதாயத்தில் உறவினர் வழி நடைபெறும் நிகழ்ச்சிகள். திருமணம், சாவு முதலியன.
2. படிப்பதன் வாயிலாகக் கொள்ளும் தகவல் தொடர்பு
3. மனிதனும் இயந்திரமும் கொள்ளும் தகவல் தொடர்பு எ.டு. பலவகையான மின்கருவிகள் மூலம் பெறுவது
4. மக்கள் கருவிகள் துணைகொண்டு ஏற்படும் தொடர்பு. எ.டு. தந்தி, தொலைபேசி, வானொலி, கைபேசி முதலியன.
5. முழுக்க முழுக்க இயந்திர மயமான தகவல் தொடர்பு (Automation)

## தகவல் தொடர்பின் அடிப்படைகள்

ஹெரால்ட் லாஸ்வெல் (Herald Losswell) (1948) என்பவர், தகவல் தொடர்பியலின் ஆதாரங்களாகப் பின்வருவனவற்றைக் குறிப்பிடுகிறார்.

1. சொல்வது யார்? (Who says)
2. எதன் மூலம் சொல்கிறார்? (in what channel)
3. எப்படி சொல்கிறார்? (How)
4. யாருக்குச் சொல்கிறார்? (To whom)
5. அதன் விளைவு என்ன? (with what effect)

இந்த ஆதாரங்களின் மூலமாகத் தகவல் பரிமாற்றத்துக்கு, அனுப்புவர் (Sender-who) செய்தி (message- what) பின்னூட்டு அல்லது எதிர்விளைவு (Feed back: effect) என்பவை முக்கியமானவை.

## தகவல்தொடர்பின் பொது இயல்புகள்

'மக்கள் தகவல் தொடர்பு', என்பது பொது நலம் சார்ந்த ஒன்று. எளிதாக மக்களைச் சென்றடையும் வாய்ப்புடையது. புதிது புதிதாக நிமிடம் விட்டு நிமிடத்தில் தகவல்கள் வருகின்றன. பல்வேறு சாதனங்களைக் கொண்டு பெரும்பாலான மனித சமுதாயத்திற்கு அதிக அளவில் தகவல்களைக் குறைந்த செலவில் வழங்குவதே மக்கள் தகவல் தொடர்பியலின் நோக்கும் குறிக்கோளுமாகும் என்பதை ஏற்கெனவே கண்டோம்.

## தகவலால் மக்கள் அடையும் பயன்கள்

'எரிவது விளக்கு', என்றாலும் தூண்டுவதற்கு ஒருவர் வேண்டும் என்பது, பழமொழி. மக்களைத் தகவல்கள் சிந்திக்கத் தூண்டுகிறது. தகவல்கள் எத்தகைய பயன்களை உண்டு பண்ணின என்பதே அதன் செயற்பாட்டில் வெற்றியாகும். தகவல்கள் மக்களிடையே ஐந்து வகையான பயன்களை உண்டாக்கியுள்ளன என்று வேப்லஸ் பெரில்சன் (Waples Berelson-1940) என்பவர் கண்டறிந்துள்ளார். அவை முறையே:

1. காரணகாரணியத் தூண்டல் விளைவு (Instrumental Effect)
2. கௌரவ விளைவு (Prestige effect)
3. மீண்டும் மீண்டும் நினைவூட்டும் விளைவு (Re-inforcement effect)
4. முருகியல் உணர்வைப் பெருக்கும் விளைவு (Enrichment of aesthetic experience)
5. மாற்றுணர்வு விளைவு (Respite effect)

## 12.1(இ) தகவல் சாதனங்களின் பணிகள்

இங்கே தகவல் சாதனங்கள் என்பவை, 12:2 (இ) பத்திரிகைத் துறை, வானொலி 12:2 ஈ) தொலைக்காட்சி – திரைப்படம் முதலியனவாகும்.

இன்றைய நவயுகத்தின் வளர்ச்சியிலும் மனித சமுதாயத்தின் வளர்ச்சியிலும் அன்றாட வாழ்விலும் மேற்கூறிய பத்திரிகைத் துறை, வானொலி, தொலைக்காட்சி, திரைப்படம் விளம்பரம் முதலிய சாதனங்கள் மிகவும் முக்கியப் பங்கு வகிக்கின்றன.

ஒரு மொழியின் அடிப்படைப் பணி, தகவல்களைப் பரிமாறிக் கொள்ளவும், கருத்துகளை விளக்கவும் துணை செய்யும் கருவியாகப்

பயன்படுவதேயாகும். அந்த வகையில் ஆய்ந்து பார்த்தால் தகவல் சாதனங்களுக்கும் மொழிக்கும் உள்ள தொடர்பு பிரிக்க முடியாத ஒன்று என்பது நன்கு விளங்கும். இதை மக்கள் பலரும் ஏற்பர்.

'மக்கள் தகவல் தொடர்பியல்' துறையிலுள்ள சாதனங்களின் பணியை ஹெரால்டு லாஸ்வெல் ( 1967, Herald Losswell) என்பவர் பின்வருமாறு விவரிக்கிறார்.

1. சுற்றுப்புறச் சூழலைக் கண்காணித்தல் (Surveillance of Environment/watcher) எ.டு. நம்மைச் சுற்றியுள்ள உலக நடப்பு வானிலை அறிக்கை முதலியன.
2. ஒட்டுமொத்தமாகச் சமூகத்தின் ஒருமித்த கருத்தைத் தயாரித்தல் (Surveillance of Environment/watcher) எ.டு. தலையங்கம், வாசகர் கடிதம், மன்றம், பொதுக்கூட்டம் முதலியன.
3. சமுதாயப் பழக்கவழக்கங்களை வருங்கால வாரிசுகளுக்குக் காத்தளித்தல் (Transmission of Social Heritage) எ.டு. சடங்குகள், ஆசாரக்கோவை, மரபுகள், வழிபாட்டு முறைகள், குடும்ப உறவு முறைகள் முதலியன.
4. கேளிக்கை வழிக் களிப்பூட்டுதல் (Entertainment) எ.டு. நகைச்சுவை நேரம், அசத்தப் போவதுயாரு, கார்ட்டூன், திரைப்படப் பாடல்கள் முதலியன. இதில் அறிவூட்டலையும் உள்ளடக்கும்.

நம் தமிழ்மொழியைப் பொறுத்தவரையில், 12:2 (இ) பத்திரிகைத் துறை, வானொலி முதலான தகவல் சாதனங்களின் மொழிபெயர்ப்பில் நிலை எப்படி இருக்கிறது, எதிர்நோக்கும் சிக்கல்களும் தீர்வும் யாவை என்பதையே இங்கே நாம் காணவிருக்கிறோம்.

முதலில் பத்திரிகைத் துறையைக் கவனிப்போம். மக்கள் தகவல் தொடர்புச் சாதனங்களுள் பத்திரிகைத்துறை உள்ளிட்டவற்றை அச்சுவழிச் சாதனங்கள் (Print Media) என்கின்றனர். இவை துறை ரீதியாக மூப்புடையவை. மூத்தவை. இவை நீண்ட நெடியவரலாறு படைத்தவை.

அச்சுவழிச் சாதனங்களில், குறிப்பாக நாளேடுகளும், கிழமை, திங்கள், இதழ்களும் நன்கு வளர்ச்சியடைந்துள்ளன. மக்களின் பெருத்த ஆதரவையும் பெற்றுள்ளன. தமிழகத்தில் தமிழ்மொழி

இதழ்கள் சில முன்னேறியிருக்கின்றன. வார இதழ்களில் ஆனந்த விகடன், குமுதம், குங்குமம் மாத இதழாகக் கலைக்கதிர், செந்தமிழ்ச் செல்வி, இதழ்களில் தினசரியாகத் தினமணி, தினத்தந்தி, தினகரன் மற்றும் தினமலர் ஆகியவற்றின் வளாச்சி பிரமிக்கத்தக்கதாகும்.

செய்திப்பரப்பு வளர்ச்சிக்கேற்பத் தமிழ்ப் பத்திரிகைத் துறையின் மொழிபெயர்ப்பு செப்பம் அடைந்திருக்கிறதா என்றால், நாம் முழுமன நிறைவோடு கூறும் அளவில் பத்திரிகைத்துறையின் மொழிநடை செம்மைபெறவில்லை என்றுதான் கூறவேண்டும்.

சுப்பிரமணிய பாரதியார், திரு.வி.க. வரதராஜுலு நாயுடு, டி.எஸ். சொக்கலிங்கம் போன்ற பெரியவர்கள் பத்திரிகைத் துறையின் சொல்லாக்கத்திற்கும், தமிழ்ப் பத்திரிகைத்துறை வாசகர்களுக்கும் எந்தச் செய்திகளையும் எளிதாக விளங்கும்படி செய்வதற்கும் மொழி பெயர்ப்பிலும் அற்புதமான பணி ஆற்றியிருக்கிறார்கள். இன்று இத்துறையில் வழக்கிலுள்ள புரியும்படியான பல சொற்களுக்கும் சொற்றொடர்களுக்கும் அவர்களில் இப்பெரியவர்களின் பங்களிப்பு முனைப்பான முயற்சிகளாலும் பயிற்சிகளாலும் நிலைபேறுபெற்றவை. அச்சொற்கள் இத்துறையில் தரப்படுத்தப்பட்டுவிட்டன. இன்று பத்திரிகைகளில் செய்திகளை எழுதுவதிலும் அளிப்பதிலும் பிழைகள், சோம்பல், கவனக்குறைவு, விரைவு போன்றவற்றால் செய்திகள் தப்பும் தவறுமாக இடம்பெறுகின்றன. செய்தியாளர் சொற்களுக்கும் சொற்றொடர்களுக்கும் இருமொழிப்புலமை இன்றி, பிறரை நம்பியிருந்தாலோ, அடுத்த நபரைக் கேட்டு எழுதினாலோ தவறு நேர்வதற்கு வாய்ப்புண்டு. அதிகச் செய்திகளைத் தருவதாலும் பகட்டான மிடுக்கான சொற்களையும் சொற்றொடர்களையும் மொழிபெயர்ப்பில் பயன்படுத்தினாலும் தப்பு நேர்வதற்கு வாய்ப்புண்டு. குறுகிய காலத்தில் நிகழும் செய்தி மொழிபெயர்ப்புகளும் ஒரு காரணம்.

வளர்ந்துவரும் . அறிவியல் தொழில் நுட்பத்திற்கேற்பவும் நாளிதழ்களின் தேவைக்கேற்பவும் பல புதிய சொற்களைச் செய்தியாளர்கள் படைக்கின்றனர். எடுத்துக்காட்டாகச் ‘சட்டமறுப்பு’, ‘ஒத்துழையாமை’, ‘அறப்போர்’ போன்ற சொற்கள் இன்று நமக்குப் பழகிய இயல்பான சொற்களாகிவிட்டன. ஆனால் இவற்றை நமக்குப் படைத்தளித்த திரு.வி.க. போன்ற தமிழ்த் தேசியத் தலைவர்களின் தொடக்ககாலப் புதுச்சொல்லாக்கப் பணிகளை (Neologoisim) இங்கு நினைவுகூர்தல் வேண்டும். அந்தத் தொடக்க நாளில் தேசப்பற்றோடு தமிழ்மொழிப்பற்றுடன் அவர்கள் மாதிரி முனைப்பான, மனப்பூர்வமான சொல்லாக்கப்பணி தமிழ்ப் பத்திரிகைத் துறையில் இப்பொழுது

எதிர்பார்த்த அளவில் நடைபெறவில்லை என்றே தோன்றுகின்றது. திரு.வி.க. 'தேசபக்தன்' இதழில் முதன்முதலில் கையாண்டவை இச்சொற்கள். எ.டு. Civil-Disobedience – சட்டமறுப்பு Non-cooperation- ஒத்துழையாமை Dharma – அறப்போர்.

நாள்தோறும் நாளிதழ்களில் நடைபெறும் பணி, மொழிபெயர்ப்பு எனலாம். பெரும்பாலும் உலக நாடுகள் பலவற்றிலிருந்தும் ஆங்கிலத்தில் செய்திகளைப் பெற்று மொழிபெயர்த்தே செய்திகள் சேகரிக்கப்படுகின்றன என்பது அறிந்த ஒன்று. இம்மொழிபெயர்ப்பின் போது பலவகையான சிக்கல்கள் எழத்தான் செய்கின்றன. வாசகர்களுக்கு அறிமுகமற்ற சொற்களையோ, ஒருபொருளைச் சுட்டும் வெவ்வேறு சொற்களையோ ஒரே நாளிதழில் மொழிபெயர்க்கையில், செய்தியாளர் கையாளும்போது வாசகர்கள் குழப்பத்திற்கு ஆளாக நேரிடும். இதழியலைப்பற்றி நாளிதழில் கட்டுரை வரைபவர், date line, dead line, loose, page cripping, lead என்று பத்திரிகைத் துறைக் கலைச்சொற்களை அதிகம் பெற்று வரைவதால் பலருக்குப் புரிவதில்லை.

'பாமாலின்' (Palmolein) என்ற சமையல் எண்ணெய்யை மக்கள், 'பாமாயில்' என்றே அழைக்கின்றனர். மொழிபெயர்ப்பின் போது, தமிழ்மொழியில் மக்கள் வழக்கில் 'பாமாயில்' என்று நிலைத்து விட்ட சொல்லையும் பிறசொற்றொடர்களையும் மாற்றி அதற்கெதிரான 'பாமாலின்' என்பதைப் பயன்படுத்துவது மொழிமரபல்ல என்கிறார் டாக்டர் ம.ரா.போ. குருசாமி. அடுத்து ஆங்கிலச் சொற்களைத் தமிழ் நாளிதழ்களில் அவசர அவசரமாகச் செய்தியை முந்தித் தரும் நோக்கில், அப்படி அப்படியே பயன்படுத்துகின்றனர். அவற்றிற்கான ஆங்கில விரிவாக்கத்தை அளிப்பதில்லை. எ.டு. 'AIDS in TamilNadu' என்ற ஆங்கிலச் செய்தியைத் தமிழ் நாளிதழ்கள், 'தமிழ்நாட்டில் எய்ட்ஸ் நோய்கண்டுபிடிப்பு' என்று மொழியாக்கம் செய்து பதிப்பிக்கின்றனர். (AIDS : Acquired Immune Deficiency Syndrome) என்று அதற்கான முறையான விளக்கத்தை அவை அளிப்பதில்லை. மாறாக தகாத உடலுறவு கொள்வதால் ஏற்படுகின்ற எய்ட்ஸ் நோய் என்று மேலோட்டமான விளக்கத்தையே அவை அளித்து வருகின்றன. இவற்றை விரிவஞ்சி இத்துடன் நிறுத்தலாம்.

இதே சிக்கல்கள் வானொலி, தொலைக்காட்சி, திரைப்படம், விளம்பரம் ஆகியவற்றின் செய்திப் பிரிவுகளும் நாளும் ஒரே மாதிரியாக எதிர்நோக்குகின்றன என்றால் மிகையாகாது.

**வானொலி :** தொலைதூர மக்கள் தொடர்புச் சாதனங்களுள் வானொலி முதலிடம் பெற்றுள்ளது. நவீனத் தொலைதூரத் தகவல்

தொடர்புச் சாதனங்களின் வரலாறு 1844ஆம் ஆண்டு முதல் தொடங்குகிறது. மோர்ஸ் என்பவர் மின்கம்பிகளின் வழியாகச் செய்திகளைக் குறியீடுகளாக மாற்றி அனுப்பலாம் எனக் கண்டுபிடித்தார்.

வானொலியின் ஒலிபரப்பின் தொடக்கத்திலும் தொடர்ச்சி யிலும் தமிழகத்திற்குக் குறிப்பிடத்தக்க பங்கு உண்டு. இந்தியாவிலேயே முதன் முதலாக 1924இல் மேத் திங்களில் சென்னை மாகாணத்தில் வானொலி செயற்படத் தொடங்கியது. ஒலிபரப்பில் தமிழ் மொழிக்குப் போதிய இடம்தரப்பட்டது. உலக நாடுகள் பலவும் பல்வேறு நாட்டு மக்களுக்காக அவரவர்கள் மொழியின் பன்னாட்டுச் சேவை ஒலிபரப்பை நடத்தி வருகின்றன. இந்தியாவிலும் 1939இல் பன்னாட்டுச் சேவை ஒலிபரப்புத் தொடங்கியது. வானொலி ஒலிபரப்புகள் பலவகைப்படும். அவைமுறையே :

1. செய்தி ஒலிபரப்புகள் (News Bulletins). இதில் இருபிரிவுகள் இந்தியாவில் உண்டு (i) தலைநகரான புதுதில்லியிலிருந்து ஒலிபரப்பப்படும் செய்தி அறிக்கைகள். (ii) மாவட்டத் தலை நகர்களிலிருந்து ஒலிபரப்பப்படும் மாநிலச் செய்திகள் (Regional News). அன்று முதல் இன்றுவரை இருமுறை ஒருநாளுக்கு வானொலிச் செய்திகள் ஒலிபரப்பாகின்றன.

வானொலிச் செய்தி மொழிபெயர்ப்பில் செய்திக்கு முக்கியத்துவமே உண்டு. வானொலி மொழிபெயர்ப்பிற்கும் பத்திரிகை மொழிபெயர்ப்பிற்கும் வேறுபாடுகள் உள்ளன. பத்திரிகைகளில் அரசியல், அறிவியல் சமுதாயம் தொடர்பானவற்றை மொழி பெயர்க்கையில் பல பத்திகளாகக் கூட்டிக் குறைத்துச் செய்யலாம். ஆனால் வானொலியில் மணித்துளிகளுக்கே பெரிய எதிர்பார்ப்பு. குறித்த நேரத்திற்குள் செய்தியைக் கூறவேண்டும். இக்கால எல்லையை மனத்தில் கொண்டுதான் மொழிபெயர்க்க வேண்டும். வானொலிச் செய்திகள், பலவாக இருப்பதால் ஒன்றுக்கொன்று தொடர்பற்றவை. இதன் தமிழ்மொழிநடை பல பெட்டிகளை இணைத்த இரயில் போல் உள்ளது. எனவே முக்கியமான செய்திகளை மட்டுமே கூறுவது நோக்கமாகும். தேவையற்ற விளக்கங்களையும் அனைவரும் அறிந்தவற்றைக் கூறியது கூறலாகச் சொல்லவேண்டியதில்லை. 'காலம் பொன் போன்றது' என்றால் இங்கே மிகை ஆகாது. செய்திகளைச் சுற்றி வளைக்காமல், நேரடியாகச் சொல்ல வந்ததைச் சொல்லத் தெரிய வேண்டும். அதுவும் பொதுமக்கள் வழக்கில் அவர்

தம் மனத்தில் தைக்குமாறு கூற வேண்டும். வானொலி மொழி நடையில் இலக்கிய நயம், வருணனை தேவையில்லை. வானொலி உரையில் 'குருடர்' என்று கூறாது, 'பார்வையற்றோர்', என்றோ அல்லது ஊனமுற்றோர் என்றோ அல்லது மாற்றுத்திறனாளிகள் என்றோதான் தற்போது கூற வேண்டும். நாட்டின் அமைதிக்குப் பங்கம் ஏற்படுத்தும் செய்திகளையும் சாதி உணர்வினைத் தூண்டும் செய்திகளையும், அரசைக்குறை கூறும் வாசகங்களையும், மற்றவர் மனதைப் புண்படுத்தும் செய்திகளையும் வானொலி மொழிபெயர்ப்பில் இடம்பெற அனுமதியில்லை.

செய்தியாளரின் மொழிநடை அழகைவிட, வானொலியில் செய்தி வாசிப்பவர் உரையாற்றுபவர்க்கு நல்ல குரல்வளம் தேவை. ஆகவே வானொலியில் மொழிபெயர்ப்பு அதைத் தொடக்கம் முதல் முடிவுவரை கேட்பவர் அதில் கவனம் செலுத்துமாறு அமைதல் வேண்டும். அன்றாட உலக அறிவை, நாட்டு நடப்பை மக்கள் அறிய உதவ வேண்டும்.

வானொலியில் செய்தி ஒலிபரப்பினைப் போன்று, கல்வி ஒலிபரப்பு, அஞ்சல் வழிக் கல்வி ஒலிபரப்பு, கிராம ஒலிபரப்பு என்று பல வகையுண்டு. வானொலியில் உரைகள், கலந்துரையாடல், நேர்காணல், நேயர்நேரம், எதிரொலி, ஒலிச்சித்திரங்கள், நாடகங்கள் என்று அனைத்தும் தமிழ்மொழி, இன, நாடு சமுதாயத்தோடு தொடர்புடையவை.

இதே போன்று தொலைக்காட்சியிலும் மேற்கூறிய ஒளிபரப்புகள், நிகழ்ச்சி நிரல்கள் உண்டு. இந்தியா சுதந்திரம் பெற்ற பொழுது ஆறு வானொலி நிலையங்களே இருந்தன. இரண்டு தமிழகத்தில் சென்னையிலும், திருச்சியிலும் தொடங்கப்பட்டன. திருச்சியில் வானொலி நிலையத்தைத் தொடங்கி வைத்த (16.5.1939) அப்போதைய சென்னை மாகாண முதலமைச்சராயிருந்த மூதறிஞர் இராஜாஜி ஆற்றிய உரையில்,

> வானொலியால் நாடு முழுவதும் மகிழ்ச்சியைப் பரப்பலாம். மகிழ்ச்சி என்பது உயிருக்கு அடையாளம். மகிழ்ச்சியே ஆத்மாவின் சொரூபம். மகிழ்ச்சியில்லா ஊர் உயிரற்ற ஊராகும். ஒவ்வொரு கிராமத்திலும் மகிழ்ச்சியைப் பரப்ப இந்த வானொலி நல்ல இயந்திரமாகும்

என்றார்.

## 12:1(ஈ) தொலைக்காட்சியும் திரைப்படமும்

இன்றைய அறிவியல் – தொழில்நுட்ப வளர்ச்சியில் கண்ணுக்கும் கருத்துக்கும் விருந்தளித்துக் களிப்பூட்டும் சாதனம் தொலைக்காட்சி. சில நேரங்களில் குழந்தைகளுக்கும் பெரியவர் களுக்கும் தொல்லைக்காட்சிகளாகவும் மாறிவிடும் நிகழ்ச்சிகளும் அதில் உண்டு. இதன் வருகைக்குப்பின் உலகமே, ஒரு குடைக்கீழ் குக்கிராமமாகிவிட்டது போன்ற நிலை உருவாகிவிட்டது. இந்தியாவில் முதன்முதலாக யுனெஸ்கோ உதவியுடனும் அமெரிக்காவின் ஆதரவுடனும் 15.10.1959இல் புதுதில்லி நிலையத்திலிருந்து தொலைக்காட்சி ஒளிபரப்பு தொடங்கியது. அறிமுகமான குறுகிய காலத்திற்குள் இது எதிர்பாராத பெரிய வளர்ச்சியைக் கண்டது. 1972இல் மும்பாயிலும் 1975இல் சென்னையிலும் கொல்கத்தாவிலும் தொடங்கப்பட்டது. தகவல் தொடர்பினைத் துணைக்கோளின் மூலம் இந்தியக் கிராம வளர்ச்சிக்குப் பயன்படுத்த இந்திய அரசு முயற்சி செய்தது. துணைக் கோளின் மூலம் ஒரே நேரத்தில் இருமொழிகளில் செய்திகளை அனுப்பியது. சிறுவர் கல்வி, விவசாயம், உடல்நலம், தாய்சேய் நலம் முதலிய துறைகள் தொடர்பான செய்திகள் ஒளிபரப்பாயின.

### கல்வி ஒளிபரப்பும் செய்தி ஒளிபரப்பும்

வானொலி, தொலைக்காட்சி ஆகிய அரசு சார்புள்ள மக்கள் தகவல் தொடர்பியல் சாதனங்களின் முக்கியப்பணி அறிவூட்டல். இதனால் அறிவூட்டலைத் தலையாய பணியாகக் கொண்ட கல்வி ஒளிபரப்பு முக்கிய இடம்பெற்றது. செய்தியை வழங்குவதில் இது பிற சாதனங்களில் முதலிடம் பெறுகிறது. நேரடியாகவும் உடனடியாகவும் செய்திகளை ஒளிபரப்புவதில் இதற்கு நிகர் இதுதான். செய்தி ஒளிபரப்பிலும் கல்வி ஒளிபரப்பிலும் தகவல் சாதனங்களிடையே தொலைக்காட்சி தனிமதிப்புப் பெற்றுள்ளது. தொலைக்காட்சி அரசின் கட்டுப்பாட்டில் இயங்குவதால் செய்திகள் ஒருதலைப்பட்சமாக உள்ளன என்று ஒரு குறை அதன் மீது சில ஆண்டுகளுக்கு முன்வரை இருந்தது. உலகில் உள்ள பல வல்லரசுகளில் ரஷ்யா, சீனா போன்ற பெரிய நாடுகள் தனியார் தொலைக்காட்சி ஒளிபரப்பிற்குத் தனியுரிமை அளிக்கவில்லை. இதே நிலைதான் சிங்கப்பூர், மலேசியாவிலும் கூட நிலவுகிறது. ஆனால் தொழில்நுட்ப வளர்ச்சி வெகுவாக வளர்ந்து வரும் நேரத்தில் இந்தியாவில் புற்றீசல்கள் போல் தனியார் தொலைக்காட்சி நிறுவனங்கள் கம்பிவடத்

தொலைக்காட்சி (Cable TV) வசதி என்று தனியார் நிறுவனங்களுக்கு இந்தியா முழு சுதந்திரம் வழங்கி உள்ளது இங்கே குறிப்பிடத்தக்கது.

எனவே தொலைக்காட்சி தனியார் நிறுவனங்களும் விளம்பரப் பலவகைத் தனியார் நிறுவனங்களும் இந்தியாவில் நன்கு பொருளீட்டி வளமாக வாழ வழிசெய்து உள்ளது இந்தியா. தொலைக்காட்சி நிகழ்ச்சி தயாரிப்பவர்களும் விளம்பரதாரர்களும் சிலர் பணமீட்டும் காமதேனுவாக இத்தொழிலைக் கருதுகின்றனர். இதில் விளம்பரங்கள் சொற் சிக்கனத்தோடு அமைதல் வேண்டும். ஓரிரு காட்சிகளே இடம்பெறுதல் வேண்டும். கண்களுக்குப் பாதிப்பு ஏற்படுத்தும் முறையில் பற்பல காட்சி அமைப்புகளைப் பளிச்பளிச் சென்று மாற்றுதல் கூடாது. தமிழக அரசு கம்பிவடத் தொலைக்காட்சி விளம்பர நிகழ்ச்சிகளின் பொருள்களைக் கட்டுப்படுத்தும் வகையில் ஒரு சட்டத்தையே இயற்றும் அளவில், இதன் வளர்ச்சியும் வருமானமும் பெருகியுள்ளது. புதுப்புது நவீன உத்திகள் விளம்பரங்களில் கையாளப்படுகின்றன என்றும் புதுமையாய் விளங்க வேண்டும் விளம்பரத்தில் விற்பனைக்கான பொருளைப் பரிந்துரை செய்பவர்கள் பெரும்பாலும் திரையுலகப் பிரமுகர்களாகவே உள்ளனர். விளம்பரங்களில் பாத்திரம் ஏற்பவர்கள் மகிழ்ச்சியூட்டும் சுற்றுப்புறச் சூழலில் புன்னகை தவழும் இனிய முகத்துடன் காட்சி தருகிறார்கள். இவர்கள் பேசும் தமிழும் சொற்செட்டும் சுவையும் கூடியதாக உள்ளது. தமிழர் பண்பாடு வரலாற்றுப் பின்புலத்தோடு விளங்குகிறது. எ.டு. ''போத்தீஸ் நிறுவனம்'', நடிகர் சத்தியராஜ், நடிகை சீதா குழுவினர் இடம்பெறும் பட்டுச்சேலைகளுக்கான ஆடித்தள்ளுபடி விளம்பரம். வானொலியின் இடத்தினைத் தொலைக்காட்சி பிடித்துள்ளது. நாளிதழ்களுக்குப் போட்டியாகத் தொலைக்காட்சி முக்கியத்துவம் கொண்டு உள்ளது.

## திரைப்படங்கள்

மக்கள் தொடர்புச் சாதனம் அல்லது வெகுசன தொடர்புச் சாதனம் என்று Mass Media வைக் கூறுவார்கள். முதன் முதலாகப் பத்திரிகைத் துறை, பின்னர் வானொலி, தொலைக்காட்சி அடுத்துத் திரைப்படம் என்று சிறப்பானவற்றைக் கூறலாம். பல மொழி பேசும் இந்தியா போன்ற ஒரு பெரிய நாட்டில் வாழும் மக்கள் தயார் செய்யும் இலக்கிய, நாடக, பொழுதுபோக்கு அம்சங்கள் கொண்டவற்றையும் அறிவியல் சார்ந்த பிறவற்றையும் பலரும் அறிந்து பயன்பெற உதவுவது இச்சாதனம். ''விளம்பரத்தால் வரும் வாழ்வு நிரந்தரமாகாது'' என்று

கவியரசு கண்ணதாசன், பாடினாலுங் கூட, பலரும் முகங்காட்ட வழி செய்தது—செய்வது இதுவே.

தியோடர் சேவரி என்பவர், தம் நூலான ''மொழிபெயர்ப்புக் கலை'' என்பதில் மொழிபெயர்ப்பைத் துறைதோறும் பிரித்து வகைப்படுத்தும்போது **1.** விளம்பரத்துக்கான மொழிபெயர்ப்பு, **2.** அறிவியல் மொழிபெயர்ப்பு, **3.** இலக்கிய மொழிபெயர்ப்பு எனச் சிறப்பான பிரிவுகள் பற்றிப் பேசுகிறார். விளம்பரம் சார்ந்த கலை வகையிலான மக்கள் தொடர்புச் சாதன மொழிபெயர்ப்பு இந்தியாவில் பெரும் வளர்ச்சி பெற்று வருகிறது. ''மக்கள் தகவல் தொடர்பியல்'' சாதனங்கள் அனைத்திலும் விளம்பரம் பெரும்பங்கு கொள்கின்றது. பத்திரிகை, வானொலி, தொலைக்காட்சி, திரைப்படம் ஆகிய இந் நான்கும் அறிவியலின் பயனால் விளைந்த சாதனங்கள். இவற்றில் தமிழ் இலக்கியம், நாட்டு நடப்பைக் காட்டும் நாடகம், செய்திகள், அறிவியல் சாதனைகள், மக்களின் பண்பாட்டு நிகழ்ச்சிகள் ஒரு மொழியில் தயார் செய்யப்பட்டு மற்ற மொழிகளிலும் மொழிபெயர்த்து ஒலிபரப்பும் செய்யப்பட்டு வருகின்றன. இவற்றில் கணிசமான அளவில் மொழிபெயர்ப்பு பயன்படுகிறது. காலை, மாலை வேளை களில் செய்திகள் மூலமாக மொழிபெயர்ப்பு இடம்பெறும். நாடக விழாக்களில், ஆண்டு தோறும் வானொலியில் நாடகங்கள் மொழி பெயர்த்து வழங்கப்படுகின்றன. இதனால் தேசிய ஒருமைப்பாடு ஏற்பட வழி பிறக்கிறது.

திரைப்படங்கள் வாயிலாகப் பிற மொழிப் படங்களைத் தொலைக்காட்சியில் காணும்போது இந்தியப் பண்பாட்டின் ஒற்றுமை புலப்படுகிறது. மொழிப்பற்று, நாட்டுப் பண்பாடு, ஒற்றுமை, மனிதநேயம் வளர வித்திடப் பெறுகிறது. பலமொழித் திரைப்படங்களைக் காணும்போது இந்திய மொழிகளிடையே நிலவும் ஒற்றுமையும் அவற்றின் தனிச்சிறப்பும் புலப்படுகின்றன. மொழிச் சிக்கல்களும் தெளிவாகின்றன. இந்திமொழி திரைப்படங்களைவிட, தென்னிந்திய மொழிப் படங்களில் மொழிபெயர்ப்பும் வாசகமும் எளிதாக விளங்குகின்றன. இவற்றை மொழிபெயர்ப்பு இல்லாமல் கூட, நாம் காணமுடியும். காரணம், தமிழ்மொழியோடு தொடர்புள்ள கிளை மொழிகள் என்பதால் தென்னிந்திய மொழிப் படங்களில் கதாபாத்திரங்கள் பேசும் ஒலிவடிவ வாய் அசைப்பை ஒட்டி நாம் புரிந்துகொள்ள முடிகின்றது. மலையாள மொழிப்படத்தில் சற்றொப்ப **40** முதல் **50** விழுக்காடு தமிழ்ச் சொற்கள் உள்ளன. ஏறத்தாழ தெலுங்கு மொழிப்படங்களிலும் இவ்வாறுதான் உள்ளன. ஆனால்,

நாம் தெலுங்கு மலையாளத் திரைப்படங்களை எளிதில் புரிந்து பார்ப்பதைவிடக் கன்னட மொழிப்படம் பார்ப்பது சற்றுக் கடினம். இதற்குக் காரணம், தமிழ்ச் சொற்களைவிட வடமொழிக் கலப்பு, கன்னட மொழிப் படங்களில் அதிகம் காணப்படுவதே. ஆனால் இதைவிடக் கடினமானது வடமொழியை முழுக்க முழுக்கச் சார்ந்துள்ள இந்தி போன்ற பிறமொழிப் படங்கள். அதிலும் அசாமி, ஒரியா, வங்காளம் போன்ற மொழிகளின் ஒலி ஒன்று போலிருப்பதில்லை. அவற்றிற்குக் கண்டிப்பாக ஆங்கிலத் துணை தேவை. திரைப்படங் களின் வசனங்களை மத்தியத் திரைத் தணிக்கைக் குழுவிற்கு அனுப்புகையில், அவற்றின் மொழிபெயர்ப்புகளைச் செய்வதற்கென்றே மும்பாய், சென்னை ஆகிய நகரங்களில் சில மொழிபெயர்ப்பு நிறுவனங்கள் உள்ளன. பொதுவாக, 'திரைமொழியென – ஒரு புதுமொழி திரைப்படத்திற்கு உருவாகிவிட்டபடியால், சராசரி மக்கள் பிறமொழிப் படங்களையும் விரும்பிப் பார்க்கிறார்கள். முன்பெல்லாம் திரைப்படத்தில் கதைக்கும் வசனங்களுக்கும் மிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது போல், தற்போதில்லை. இப்போது கேமிராவும் இசை என்ற பெயரால் பின்னணி ஒலியும் பெரும்பங்கு வகிக்கின்றன. எனவே, திரைப்படம் பார்க்கும் அன்பர்களுக்கு மொழி ஒருபெரிய பிரச்சினையன்று. ஆனால் இசை, சொல் நலம் இல்லை.

இந்திய மொழித் திரைப்படங்களில், இந்தி தவிர்த்த பிறமொழித் திரைப்படங்களுக்கே மதியம் 1.30 மணி அளவில் ஒளிபரப்புகையில் ஆங்கில வாசகம் Sub-Titlingஇல் மொழிபெயர்த்துக் கொடுக்கின்றனர்.

திரைப்படத்தின் வசனமொழி ஒரு கதம்ப மாலையாகிவிட்டது. இதில் பலமொழிச் சொற்கள் கலக்கின்றன. எடுத்துக்காட்டாக 'இராமானுஜாசாரியார்' என்று இயக்குநர் ஜி.வி. அய்யர் இயக்கிய படம் தமிழில் ஒளிபரப்பானாலும், எவரும் இயக்குநர் ஏ.பி. நாகராசன் தமிழில் தயாரித்த பக்திப்படம் போல இரசிக்க முடியவில்லை. இயக்குநர் ஜி.வி. அய்யர் சமஸ்கிருதத்தில் ஆதிசங்கரரையும் கன்னடத்தில் மத்துவாசாரியாரையும் தமிழில் இராமானுஜாசாரியாரையும் திரைப்படமாகப் பக்திப் பரவசத்தில் எடுத்துவிட்டாலும் மன நிறைவளிக்கவில்லை. சமஸ்கிருதத்தில் ஒளிபரப்பான ஜி.வி. அய்யரின் ஆதிசங்கரர் திரைப்படத்தைவிட மாலையாள மொழியில் ஒளிபரப்பான ஆதிசங்கரர் பார்க்கும் படியும் காதுக்கு இனிய ஒலி நயத்தோடும் இருந்தது. இந்தியில் வெளியான பாரதிராஜாவின் படங்களில் ஒருசில வரவேற்கப்படாததற்கு மொழிபெயர்ப்பும் ஒரு காரணம் எனக் கூறப்படுகிறது.

## திரைப்பட மொழிபெயர்ப்பு[12]

தமிழ் நாட்டில் Dubbing செய்து முன்பு எடுத்தவர்கள்கூடத் தற்போது மொழிமாற்று வசனங்களை எழுதியே தமிழிலிருந்து பிறமொழிகளிலும், பிறமொழிகளிலிருந்து தமிழிலும் திரைப்படம் தயாரிக்கின்றனர். இத்தொழிலில் திரைப்படமொழிபெயர்ப்பை நெடுங்காலமாகச் செய்பவர் குயிலன். அவரைச் சென்னை வானொலியில் **9.6.1986**இல் மன்னர்மன்னன் நேர்காணல் செய்தபோது, ''திரைப்படங்களை மொழிமாற்றம் செய்கையில் கதாபாத்திரங்களின் வாயசைப்பு ஒலி வடிவிற்கேற்பத் தமிழ்ச் சொற்களைக் கையாள வேண்டும்'' என்கிறார். இது திரைப்பட மொழிபெயர்ப்பில் ஒருமுறையாகும். இந்திய மொழிகளில் தயாரிக்கப்படும் பலமொழித் திரைப்படங்களின் வசனங்களின் சுருக்கம், பாடல்களின் மொழிபெயர்ப்பு முதலியவற்றைத் தயாரித்து மத்திய அரசின் தணிக்கைக் கட்டுப்பாட்டு அலுவலகத்திற்கு அனுப்புவதிலும் மொழி பெயர்ப்பிற்குப் பெரும் பங்குள்ளது.

பிரேம் சந்த் என்ற நாவலாசிரியர் இந்தியில் எழுதிய நாவல், வங்கமொழியைச் சார்ந்த பெயர் பெற்ற மிருனால் சென் என்பவரால் 'தெலுங்குமொழியில்' 'ஒக ஊரிக் கதா' என்ற பெயரில் ஒரு திரைப்படமாக இயக்கப்பட்டது. இது மும்மொழி இணைப்பாகும்.

## பிறமொழித் திரைப்படங்களில் தமிழ்ச்சொற்கள்

தமிழ்ச் சொற்களான பாரியாள், அன்னம், மாப்பு, கள்ளன், கள்ளி, அங்காடி, திங்கள், தறுவாய், அச்சன் முதலியன தெலுங்கு, கன்னடம், மலையாளப் படங்களில் அதிகமாகப் பயன்படுவதை அறியலாம். 'மண்டி' என்ற தமிழ்ச் சொல்லின் பெயரில் ஒட்டி ஷியாம் பெனகல் என்ற இயக்குநர் 'சிலப்பதிகார–மணிமேகலைக்' கதையை இந்தியில் திரைப்படமாகவே தயாரித்துள்ளது குறிப்பிடத்தக்கது. இவர் இந்தியில் வசனத்தைத் தானே எழுதிவிடுகிறார். அம்மா, ஆவ், மாமா முதலிய தமிழ் உறவு முறைச் சொற்களும் பலமொழிப் படங்களில் பயன்படுவதைக் காணலாம். மகள்–பேட்டி மகன்–பேட்டா, தாத்தா–தாதா, பாட்டி–தாதி என வழங்கப்படுவதைத் தொடர்ந்து பிறமொழித் திரைப்படம் பார்ப்போர் அறியலாம். இந்திய மக்களின் பண்டைய கிராமக் கலைக் கூறுகளான கதக்களி, பரத நாட்டியம், குச்சிப்புடி முதலிய

---

12. ஆட்சி மொழியும் மொழிபெயர்ப்பும், முனைவர் வீ. சந்திரன், பாரி நிலையம், சென்னை – 108, 1990.

நாட்டுப்புறக்கலைகள், கர்நாடக இசை, திருவிழாக்கள் முதலான இந்தியா நெடுகிலும் பல மாநிலங்களில் நிகழும் மரபுகள், சடங்குகள், பழக்கவழக்கங்களை, நம் பண்பாட்டு வேற்றுமைக் கிடையிலான ஒற்றுமைகளை இம்மக்கள் தகவல் தொடர்புச் சாதனம் வாயிலாக மொழிபெயர்க்கப்படும் வசனங்கள் விளக்குவதைக் காணலாம்.

மக்கள் தகவல் தொடர்புச் சாதனங்களுக்கான மொழி பெயர்ப்பாளர்களின் பயன்பாட்டிற்கென்று அத் துறைசார் சொற்கள், மரபுத் தொடர்கள், சொற்றொடர்கள் அடங்கிய ஒரு கையேடு அல்லது அகராதி வெளியிடப்படுதல் வேண்டும். தகவல் தொடர்பாக அத்துறைச் சாதனங்களுக்கான மொழிமாற்றத்தகு சொற்களும் சொற்றொடர்களும் கணக்கற்றுக் காணப்படுகின்றன. அவற்றைத் தொகுத்து நூல் வடிவில் மொழிபெயர்ப்பாளர்களுக்கு உதவியாக வெளியிடலாம். இது தொடர்பான சிக்கல்கள் முதல் கட்டமாகும்.

இரண்டாம் நிலையில் சொற்களஞ்சியங்களின் மொழி பெயர்ப்பில் ஒருசீர்மை அல்லது ஒருமைப்பாடு (Uniformity) இல்லை. பிறநாடுகளில் வழங்கும் தமிழ் மொழிபெயர்ப்புகளிலும் சரி, தமிழகத்தில் வழங்கும் சாதனங்களுக்கான மொழிபெயர்ப்புச் சொற்களிலும்சரி ஒருமித்த கருத்தில்லை. நாளிதழ்கள் ஒரு வகையாகவும் வானொலி, தொலைக்காட்சி ஒருவகையாகவும் சொற்களை மொழிபெயர்த்துப் பயன்படுத்துகின்றன.

## முடிவுரை

மக்கள் தகவல் தொடர்பியல் சாதனங்களுக்கான மொழிபெயர்ப்பில் தமிழகத்தைப் பொறுத்து நல்ல விழிப்புணர்ச்சி உள்ளது. பல்கலைக்கழகங்கள் பலவற்றில் குறிப்பாக மதுரைப் பல்கலைக்கழகம், அண்ணாமலைப் பல்கலைக்கழகம், தமிழ்நாடு திறந்த நிலைப்பல்கலைக்கழகம் தமிழ் இணையப் பல்கலைக்கழகம் என்று பலவற்றில் 'மக்கள் தொடர்புச்சாதன' மொழிபெயர்ப்புப் பற்றிய பாடம் திட்டமிடப்பட்ட அளவிலும் பாடத்திட்டம் உள்ளது. அது தனித் தாளாகவும் தேர்வு நடத்தப்படுகிறது. இன்று முறையான தமிழ்ப் பயிற்சி உள்ளவர்களும் தகவல் சாதனங்களின் முக்கியப் பொறுப்பு வகிக்கிறார்கள். ஆங்கிலம், தமிழ் ஆகிய இருமொழிப் புலமை உடையோர் பணி அமர்த்தப்பட்டிருக்கிறார்கள். இத்துறையில் பலர் ஆய்வேடுகளும் சமர்ப்பித்துள்ளனர். ஆகவே சாதனங்களின் மொழிபெயர்ப்பு தமிழ்மொழியை வளர்க்கப் பெரிதும் பயன்படுகின்றது.

# 4. மொழிபெயர்ப்பில் கலைச் சொல்லாக்கம்

## முன்னுரை

கால வளர்ச்சிக்கேற்பக் கலைச் சொல்லாக்கம் இன்றியமையாதது. இது மொழிபெயர்ப்புக் கவின்கலையின் ஒருவகைப் பணியாகும். பிற துறைகளைவிட அறிவியல் – தொழில்நுட்பத் துறைகளிலும் சட்ட நிருவாகத்துறைகளிலும் நிகழும் சொல்லாக்கம் முற்றிலும் சற்று நுண்மையானது. அறிவியல்–தொழில்நுட்பத் துறைகள் உலகளாவிய வளர்ச்சியின் சின்னங்கள். இவற்றில் சில பொதுவான நெறிமுறைகள் உள்ளன. தமிழ்மொழி வரலாற்றில் தொல்காப்பியர், பவணந்தியார் முதலிய இலக்கண வியலாளர்கள் இதுபற்றிக் கூறுவர். அதே நேரம் மேலை நாடுகளில் சொல்லாக்கம் விரைவாக வளர்ந்து வருகின்றது.

## 13. கலைச் சொல்லாக்கம் : வரலாறு

கலைச்சொல் அல்லது துறை வழக்குச் சொல் என்பது, ஓர் துறை சார்ந்த ஆய்வின் போதோ (அ) கல்வியின் போதோ, அத்துறைசார் சிறப்புக் கருத்துகளை நுட்பமாக வரையறுத்துத் தனிப்பொருளை விளக்கும் சொல்லாகும். மொழி தொடர்பாக இலக்கண நூல்களில் பயிலப்படும் உயிர், மெய், உயிர்மெய், திணை, பால், எண், இடம் வேற்றுமை – உருபு தொகை, உத்தி என்று வருவன அனைத்தும் கலைச்சொற்களே. அவ்வாறே நீதி நூல்களில் நாண், பழி, அறம், பொருள், இன்பம், வீடு, தவம், ஒழுக்கம் என்பனவும் கலைச்சொல் என்ற வகையைச் சேர்ந்தவையே.

> **ஒரு மொழியில் இல்லாத சொல்லுக்கு மற்றொரு மொழியிலிருந்து நேரடியாகச் சொற்களைப் பெற்று அவற்றை மொழிபெயர்க்கலாம் அல்லது அம்மொழியிலுள்ள பழஞ்சொற்களுக்குப் புதுப்பொருளில் பயன்படுத்தலாம் அல்லது அறிவியல்–தொழில்நுட்பப் பணிக்கு ஏற்றவாறு கடன் பெறலாம்**

என்ற நிலையே கலைச்சொல்லாக்கமாகும். இக்கலையில் ஒரு மொழியின் தனிப்பண்புகளை வெளிக்கொணரக் காரணமாய் இருப்பது மொழிபெயர்ப்பு என்கிறார் டாக்டர் ம.ரா.போ. குருசாமி.

புதிதாக, ஒரு மொழியில் ஆக்கப்படும் சொல், அம்மொழியின் மரபுக் கேற்ப அமைதல் வேண்டும். மொழிமரபுக்கு மாறான சொல், மொழிவளர்ச்சியில் தடைக்கற்களாக அமையும். இவ்வாறு புதிதாக ஆக்கமுறும் சொற்கள், அம்மொழியில் நீடித்து நிற்பதில்லை. மூல மொழி வேர்ச்சொற்களை அடிப்படையாகக் கொண்டு, இலக்கு மொழியில் நிகரிகளை முன்னொட்டுப் பின்னொட்டுச் சேர்த்துத் தேவைக்கேற்பப் புதிய சொற்களைச் சட்டம், அறிவியல்–தொழில் நுட்பப் பிரிவுகளில் உருவாக்குவது காலந்தோறும் தமிழ் மொழிபெயர்ப்பில் நிகழும் செயலே.

பண்டைய நாட்களில் தமிழில் வழக்கிலிருந்த சொற்கள், அக்காலக் கட்டத்திற்குப் போதுமானவையாக இருந்தன. ஆனால் இன்றைய சூழலில் சட்டம், அறிவியல் – தொழில்நுட்பத் துறைகளில் அதிகமான வளர்ச்சிக்கு ஈடுகட்ட வேண்டி உள்ளது. எனவே, கால வெள்ளத்தில் தமிழில் புதுப்புதுச் சொற்கள் உருவானவுடன் பழைய சொற்கள் வழக்கொழிந்துவிட்டன. தமிழ்ச் சொற்கள் பல ஆள்வாரற்றுத் தூர்ந்து போயின. அவ்வாறு தூர்ந்து போன சொற்களை மீண்டும் பழக்கத்துக்குக் கொண்டு வந்தால் தமிழில் கலைச் சொற்களின் பற்றாக்குறையைக் கணிசமான அளவில் குறைக்கலாம். தமிழில் வழக்கில் உலாவும் சொற்கள், இலக்கியங்களில் ஆளப்பட்டுள்ள சொற்கள், தமிழ், அகர முதலியவைகளில் ஆக்கப்பட்ட சொற்கள், போன்ற வற்றையும் அவை உருவான சூழலையும் நோக்கினால், கீழ்க்கண்ட சில நோக்கங்கள் சொல்லாக்கக் கலையில் உலகில் பலராலும் ஏற்கப்பட்டவை எனத் தெரிகின்றது. அவை முறையே:

1. வடிவில் சிறந்ததாக இருத்தல்
2. எல்லோரும் எளிதில் விளங்கும்படி இருத்தல்
3. தமிழின் ஒலிக்குறிப்புக்கு ஏற்ப அமைத்தல்
4. தமிழ்ச் சொல்லாக இருத்தல்
5. குறித்த சில நேர்வுகளில் கடன் வாங்குதல்
6. கலைச் சொல்லாக்கம் முதலியன

கலைச்சொல்லாக்கம் என்பதை, துறைசார்ந்த சொற்களை உருவாக்கும் கலை என்று அறிஞர் பலரும் கூறுவர். தமிழ் மொழி, இலக்கியம் எவ்வளவோ வளமானது என்று நாம் சொல்லிக் கொண்டாலும் இன்றும் தமிழ்நாட்டில் வெளியாகும் சட்டம் அறிவியல் தொழில்நுட்ப நூல்களில் பல மொழிபெயர்ப்புகளாகத்தான் உள்ளன. பத்திரிகைத் தொழிலில் பெரும்பகுதி மொழிபெயர்ப்புதான். கலைச் சொல்லாக்கத் துறையில் நடைபெறும் பொது முயற்சிகள் தகவல்துறை, சாதனத்துறைக்கு ஓரளவு மட்டுமே பயன்படுகின்றன.

**தனித்தமிழ் – மணிப்பிரவாளம்**

சொல்லாக்கத்தில் தனித்த தமிழ் அன்பர்களுக்கும் மணிப்பிரவாள மறுமலர்ச்சியாளர்களுக்கும் இடையேயான மோதுதலும் கருத்து வேறுபாடுகளும் தகவல் சாதனங்களில் எதிர்நோக்கும் சிக்கல் என்று கூறலாம். செய்திகளைப் புரிகின்ற எளிய தமிழ் நடையில் எழுதுவது பத்திரிகைகளின் கடமை எனலாம். தனித்தமிழ், மணிப்பிரவாளக் கருத்து வேறுபாடுகளை மறந்து இருபிரிவினர்களும் வடதுருவம் தென்துருவம் என்று ஆளுக்கொரு திசையில் சொற்களைப் பயன்படுத்த முன்வராது எளிய, மக்களிடையே வழக்கிலுள்ள இனிய சொற்களைப் பயன்படுத்த முன்வருதல் நலம். விவாகமுகூர்த்தம், சஷ்டியப்தபூர்த்தி போன்ற மணிப்பிரவாளகாலம் மலையேறிவிட்டது. அபேட்சகர் போன்ற நெடுவழக்குள்ள சொற்களைக் கூட 'வேட்பாளர்' என்று நல்ல தமிழ்ச் சொல்லால் மக்கள் பெரு வழக்காகக் கையாளுகின்றனர். வளரும் தமிழில் இம் மாறுதல்கள் இயற்கை. இன்னும் பல ஆங்கிலச் சொற்களைத் தமிழில் சரிவரமொழிபெயர்க்க இயலாத நிலை இருப்பதை நாம் ஏடுகளிலும், வானொலி, தொலைக்காட்சிகளின் மொழிநடையிலும் காணலாம். Civil Supplies, Civil Criminal Cases, Public முதலிய தொடர்கள் மக்களோடு ஒட்டியும் ஒட்டாமலும் உள்ளது. சொல்லாக்கக் கலையில் நாளுக்கு நாள் அறைகூவல் வந்து கொண்டுதான் உள்ளது. Technical and Scientific Translation இல் Technical என்னும் சொல்லும் மொழி பெயர்ப்பில் அதன் உட்பொருளை விளக்க வொண்ணாது தலைவலியாக உள்ளது. "It is only a Technicality" என்ற தொடரை நாம் எப்படி மொழிபெயர்ப்பது? பல்துறை சார்ந்த மொழிபெயர்ப் பாளர்கள், மொழியிலாளர்களின் கூட்டு முயற்சி மூலமாகவே இத்தகைய முட்டுக்கட்டைகளைத் தவிர்க்கலாம்.

> **ஆங்கிலம்–தமிழ் அகராதிகளில் ஆங்கிலச் சட்டச் சொற்களுக்கான மொழிபெயர்ப்புகள், அளித்துள்ள பொருள் பல துல்லிய மற்றவை களாயிருக்கின்றன. சட்டப் பயிற்சியைக் காட்டிலும் இலக்கியப் பயிற்சியே அதிக முடையவர்கள் அத்தகைய அகராதிகளைத் தயார் செய்திருக்கிறபடியால் அவ்வகராதி களில் கண்ட பொருள்கள் அனைத்தையும் அப்படியே பயன்படுத்திக்கொள்ள முடிய வில்லை. ஆங்கிலச் சட்டக் கருத்துகளை நன்கு ஆராய்ந்து அவற்றிற்கு உரிய தமிழ்ச்**

**சொற்களைக் கண்டுபிடிப்பதில் அதிகமாக உழைக்க வேண்டியிருக்கிறது**

என்று நீதிபதி சு. மகராசன் கூறுகிறார்.

''ஆக்கம்'' என்பதற்கு மேன்மேலும் படைத்தல், உருவாக்குதல் என்றும் பொருள் கொள்ளலாம். தமிழில் வள்ளுவர் திருவாய் மலர்ந்தருளிய சில குறள் வெண்பாக்களில்,

**ஆக்கமும் கேடும் அதனால் வருதலால்**
**காத்தோம்பல் சொல்லின்கண் சோர்வு**

என்றும்,

**திறன் அறிந்து சொல்லுக சொல்லை, அறனும்**
**பொருளும் அதனினூஉங் இல்லை**

என்றும்

**சொல்லுக சொல்லைப் பிறிதோர் சொல்அச்சொல்லை**
**வெல்லுஞ்சொல் இன்மை அறிந்து**

என்றும் அவர் கூறியுள்ள கருத்துகள் 'சொல்லாக்கக் கலைக்கு' மிகவும் இன்றியமையாதன. சீன ஞானி கன்பூஷியசும் இன்றியமையாத சொல்லையே 'ஷிங்மிங்' (Ching ming) என்றார். பிரஞ்சு ஆசிரியர் ஃப்ளோபேரும் (Flaubort) அதை 'மோஷீஸ்த்' (Motjuste) என்றார்.

**அறிவியல்—தொழில்நுட்ப இலக்கியங்களைத் தமிழில் உருவாக்குவதை ஒரு சாதாரண மொழிபெயர்ப்பாகவே பலரும் கருதுகின்றனர். எனவே, ஒவ்வொரு அறிவுத்துறையிலும் பயன்படுத்தப்படும் கலைச்சொற்கள் அல்லது துறைச்சொற்களுக்கு இணையான தமிழ்ச் சொற்களை உருவாக்கிவிடுவோமானால், ஒவ்வொரு துறையிலும் தமிழ் நூல்கள் உருவாகிவிடும் என்று பலரும் நம்புகின்றனர். நம்மை எதிர் நோக்கியிருக்கும் பணியை நாம் சரியாக எடைபோடவில்லை. அறிவியல் தமிழை உருவாக்குவது இயன்ற பணியே யாயினும் அதுபலரும் நினைப்பது போல எளிய பணியன்று. வெறும்—மொழிபெயர்ப்புப் பணியும் அல்ல**

என்று அறிவியல் தமிழறிஞர் வா.செ. குழந்தைசாமி[1] குறிப்பிடும் கருத்தும் ஆழ்ந்து சிந்திக்கத்தக்கது.

இன்று ஓர்ந்து மொழிபெயர்ப்பாகவோ கூட்டுச் சொல்லாகவோ படைக்கப்படும், ஆக்கப்படும் கலைச்சொற்கள் காலப்போக்கில் இயல்பால் தமிழ்ச் சொல்லாகவே அறிந்தேற்கப்படும் (Recognition) நிலையும் உண்டு.

### சட்டச் சொல்லாக்கம் : நீதிபதி சு. மகராசன்

ஆங்கிலச் சொற்களுக்கு நேரான புதிய தமிழ்ச் சொற்களை ஆக்குவதற்குமுன் சாமானிய மக்களிடையே உரிய சொற்கள் ஆட்சியில் இருக்கின்றனவா என்பதைத் தீர விசாரித்து, அவ்வாறு ஆட்சியில் சொல்லொன்றும் இல்லையென்று தெரிந்த பின்னரே, நீதிபதி சு. மகராசன் சட்டத்துறையில் சொல்லாக்கம் செய்வதில் ஈடுபடுவார். குருட்டுத் துணிச்சலோடு சொல்லாக்கத்தில் அவர் ஒருபோதும் இறங்கியதில்லை. இதற்கு எடுத்துக்காட்டுகள் சிலவற்றை நாம் காணலாம். ''Cable of Wooden anchor'' என்ற ஆங்கிலச் சொற்றொடரை மொழிபெயர்க்கையில், அந்தச் சொற்றொடருக்கு ''மரநங்கூறக்கயிறு'' என்று, சென்னைப் பல்கலைக்கழகம் வெளியிட்ட ஆங்கிலம்–தமிழ் அகராதியில் பொருள் தரப்பட்டிருந்தது. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேலாகப் பல வெளிநாடுகளோடு கடல்வழி, வாணிகம் மேற்கொண்டிருந்த தமிழன் இச்சொற்றொடரை அறியாதிருப்பானா? என்ற ஐயப்பாடு எழுந்தது. அதன் காரணமாக, மொழிபெயர்ப்பாளர் ஒருவரைக் கடலில் மீன்பிடிப்போரைப் பார்த்து, இதற்காகத் தனிவழக்கு ஏதும், பரதவர்களிடம் பழக்கத்தில் உள்ளதா என்று நேரடியாகக் களப்பணியில் ஈடுபட்டார் நீதிபதி. அவ்வாறு செய்த களத்தாய்வில், நங்கூரத்தைப் பிணிக்கும் கயிற்றை – மீனவர்கள், ''சீனிக்கயிறு'' என்று அழைப்பதாக அறிந்து, அதையே, மொழிபெயர்ப்பில் பயன்படுத்தினார் நீதிபதி. இதைப் போலவே, மதுவிலக்குச் சட்டத்தை மொழிபெயர்க்கையில், மதுவிலக்குத்துறை அதிகாரிகளின் துணையுடனும், வனச் சட்டத்தை மொழிபெயர்க்கும் போது, வனத் துறை அலுவலர்களின் உதவியாலும், மீன்வளத்துறைச் சட்டத்தை மொழிபெயர்க்கையில் மீன்வளத்துறை இயக்குநரின் உதவியுடனும் அந்தந்தத் துறையில் தமிழ் மக்களால் பயன் படுத்தப்படுகிற துறைச் சொற்களின் தமிழ் மக்கள் வழக்கைத் தேடிக் கண்டுபிடித்துப் பயன்படுத்தப்பெற்றன. அவற்றுள், ''wash'' என்பதைச் சாமானியத் தமிழர்கள், ''ஊறல்'' என்றும், 'கலக்கல்' என்றும் கூறுகிறார்கள். தமிழ் மக்களுடைய நாவில் நடமாடிக்

1. அறிவியல் தமிழ், முனைவர் வா.செ. குழந்தைசாமி, பாரதி பதிப்பகம், சென்னை.

கொண்டிருக்கும் இத்தகைய சொற்களுக்குள்ள ஆற்றல், புதிதாக ஆக்கப்படும் கலைச்சொற்களுக்குக் கிடையாது என்பதை உணர்ந்தே 'மக்கள் வழக்கில்' உள்ள சொற்களைத் தேடிக் கண்டுபிடிப்பதில் அவர் மிகுந்த அக்கறை காட்டினார். வேறு போக்கு இல்லை என்ற போதுதான், நீதிபதி சொல்லாக்கக் கலையின் துணையை நாடினார்.

அவ்வாறு சொல்லாக்கம் மேற்கொள்ளும்போதும், தமிழர்களின் காதுக்கும் உள்ளத்துக்கும் இணங்கும் வகையிலும் தமிழ் மரபை ஒட்டியுமே கலைச் சொற்கள் புதிதாகப் படைக்கப்பட்டன. பிங்கல நிகண்டில், 'சொல்லுதல்' என்ற குறுந்தலைப்பில் 22 சொற்கள் கொண்ட ஒரு பட்டியல் அளிக்கப்பட்டுள்ளது. இப்பட்டியலை உற்று நோக்கும் போது, சொல்லும் முறையை

> **22 நுண்ணிய வகைகளாகப் பிரித்து, ஒவ்வொரு வகைக்கும் ஒருதனிச் சொல்லை ஆக்கி, ஒருவகைக்கும் இன்னொரு வகைக்கும் இடையேயுள்ள மயிரிழை போன்ற நுண்ணிய வேறுபாட்டையும், நுட்பத்தையும் காட்டி, கருத்துத் தெளிவையும் சொல் ஆட்சி முறையையும் தமிழர்கள் வளர்த்திருக்கிறார்கள்**

என்று தெரிகிறது.

> **இயம்பல், விரித்தல், மொழிதல், விளம்பல், பகர்தல், பன்னல், தவிறல், கத்துதல், உரைத்தல், கூறல், வழங்கல், குயிலல், புகலல், பேசல், நொடிதல், பிறழ்தல், பறைதல், செப்பல், அதிர்த்தல், பணித்தல், சொற்றல், ஆடல், சொல்லுதல் என்ப**

என்பது பிங்கல நிகண்டிலுள்ள 2009ஆம் சூத்திரம்.

அதே போன்று கீழ்க் காணும் ஆங்கிலச் சொற்கள் ஒரே கருத்தைச் சொல்வது போல் தென்பட்டாலும் உண்மையில் நுண்ணிய கருத்து வேறுபாடுகளைக் கொண்டவை:

(i) Vitiate, invalidate and render null and voild;

(ii) Irregular, illegal and invalid

(iii) vacate, setaside, cancel, annul, reverse, modify and reverse

(iv) motive and intention;

(v) consideration, deliberation and examination.

மேற்கண்ட தொகுப்புகள் ஒவ்வொன்றிலும் உள்ள ஆங்கிலச் சொற்களின் பொருள் வேறுபாடுகளைக் குறிக்கக் கூடிய உரிய தமிழ்ச் சொற்களை நாம் புதிதாகத் தான் ‘கலைச்சொல்லாக்கம்’ முறையில் காணவேண்டும். மொத்தத்தில் வழக்கொழிந்த சொற்களைத் தேடிப் புதுப்பொருளில் ஆளலாம். பழகு தமிழில் மொழி பெயர்ப்பது நல்லது. நாம் கலைச்சொற்களை உருவாக்கும் போதோ படைக்கும்போதோ தமிழ் மக்களிடம் வழக்கில் இருக்கும் சொற்களையும் உன்னிப்பாகக் கவனித்தல் வேண்டும். அடுத்து, தமிழ் இலக்கியச் சொற்கள், தமிழ் அகரமுதலி முதலியவற்றை முன்னிறுத்திப் பார்க்கலாம்.

கலைச்சொல்லாக்கம் மேற்கொள்ளும்போது, அறிஞர்கள் பலரும் பலவகையான நெறிகளையும் முறைகளையும் பின்பற்றுவர்.

## அயல்நாட்டுக் கலைச் சொல்லாக்க முறை

1898இல் ஆஸ்திரியாவில் பிறந்தவர் பொறியியல் அறிஞர் யூஜின் ஊஸ்டர். இவர் 1931இல் பன்னாட்டுத் தொழில் நுட்பக் கலைச் சொற்களைத் தரப்படுத்துதல் (International Standardisation of Technical Terms) என்ற நூலை எழுதினார். இவர் கலைச் சொல்லாக்க நெறிமுறைகளைப்பற்றியும் அவற்றைத் தரப்படுத்துவது பற்றியும் பல நூல்களும் எழுதினார். அவர் கூறும், கலைச் சொல்லாக்கத்தின் மூன்று முக்கியப் பணிகள் பின்வருமாறு:

1. கலைச்சொல் பணியில் பன்னாட்டு அளவில் தரப்படுத்தப் பட்ட கொள்கைகளைப் பின்பற்றுதல்.
2. இதற்காகப் பன்னாட்டு ஒருங்கிணைப்பு மையம் நிறுவுதல்.
3. கலைச் சொல் கொள்கைகளை ஆய்வு நிலை மற்றும் கல்விப் பணிகளுக்காக உருவாக்குதல்.

இவருடைய நூல் காரணமாக, 1951இல் கலைச்சொல் நிறுவனம் உருவானது. இது பன்னாட்டுத் தரப்படுத்தும் நிறுவனமான (ISO - International Organisation for Standardization) கீழ் பணியாற்றியது. இது கலைச்சொல்லாக்கத்தில் கீழ்க்கண்ட அடிப்படைத் தகவல்கள் அடங்கியது.

| | | |
|---|---|---|
| ISO/R | 1087 | கலைச்சொல் கொள்கைகளின் சொற்றொகுப்பைக் கொண்டது. |
| ISO/R | 704 | கலைச்சொல் கோட்பாடுகள் தொடர்பானவை |
| ISO/R | 860 | |
| ISO/R | 919 | கலைச்சொல்லாக் கலையின் இலக்கணங்களைக் கொண்டது |
| ISO/R | 1149 | கலைச்சொல் அகராதி உருவாக்கும் வழிவகைகள் பற்றியது |

| | | |
|---|---|---|
| ISO/R | 639 | நாடுகள், மொழிகள், நிறுவனங்கள் |
| ISO/R | 1951 | ஆகியவற்றின் குறியீடுகளும் சொல் அட்டவணையைப் பயன்படுத்தும் வழிகாட்டுதல்களைக் கொண்டது. |

ஊஸ்டரின் முயற்சியால் பன்னாட்டுக் கலைச்சொல் தகவல் மையம் (Interterm-International information centre for Terminology) என்ற நிறுவனம் அமைக்கப்பட்டது. இது கலைச் சொல் செயல்பாடுகளுக்கான பன்னாட்டு ஒருங்கமைப்புக் குழுவின் (ICCA-International Co-ordination Committee for Terminolygical Activities) கீழ் இயங்கியது.

''பன்னாட்டுக் கலைச் சொற்கள்'' என்ற ஆய்வு நூலில் ஊஸ்டர் கலைச்சொல்லாக்கக் கலை பற்றிய தம் கருத்துகளையும் கொள்கைகளையும் வெளியிட்டார். இந்நூலில் அவர்

1. கலைச் சொல்லாக்க நெறிமுறைகள்
2. கலைச் சொல்லாக்கத் தேர்வு முறைகள்
3. கலைச் சொல்லாக்கத்தை ஆவணமாக்குதல்
4. கலைச் சொல்லாக்க ஒலிபெயர்ப்புக் குறியீடுகள்
5. அகரவரிசை விதிகள்

முதலியவற்றை மிகவும் சிறப்பாகப் பல கட்டுரைகள், நூல்கள் வழி நெறிப்படுத்தினார். எனவே இவரைத் தொழில்நுட்பக் கலைச் சொல்லாக்கத்தின் தந்தை என்றனர்.

கலைச் சொல்லாக்கத்தில் இன்று 65 நாடுகள் நாட்டங் கொண்டு செயல்படுகின்றன. இப்பணியில் 278 நிறுவனங்கள் ஈடுபட்டுள்ளன. இந்த நிறுவனங்களில் மொழிபெயர்ப்பாளர்கள், மொழி இயலாரும் கலைச்சொல்லியக் களஞ்சியத்தாரும் ஒருங்கிணைந்து செயல்படுகின்றனர். சொற்களஞ்சியம் தயாரிப்பதில் கலைச் சொல்லாக்கமும் மொழிபெயர்ப்பும் ஒருமுக்கியப் பங்கு பெறுகின்றன. இப்பணியில் கோட்பாடுகள், முறைகள் அனுபவத்தின் மூலம் கண்டறிதல் ஆகியன மொழியியலாளர்களின் பணியில் மிக எளிதாகக் காணலாம். எனினும் மொழிபெயர்ப்புச் செய்வதும் அகராதி தயாரித்தலும் தனித்துவம் பெற்ற மொழியியலாளர்களால் மட்டுமே அரிதாக மேற்கொள்ளப்படும் செயல் என்று கொள்ளமுடியாது. ஆனால், அவற்றைத் தொடர்புள்ள பயிற்சிக் களங்களைச் சேர்ந்தவர்கள் மட்டுமல்லாமல், அப்பயிற்சிக் களங்களுக்குத் துளியேனும் தொடர்பில்லாதவர்கள் கூட மேற்கொள்வதை நாம் காணலாம். எடுத்துக்காட்டாகப் புகழ்பெற்ற ரோஜெட்ஸ் தேசாரஸ் என்னும் அகராதித் தொகுப்பினைத் தயாரித்தவர் மருத்துவராகப் பணியாற்றிய

டாக்டர் பீட்டர் மார்க் என்பது குறிப்பிடத்தக்கது. மனிதன் எழுத்து மூலமாகச் செய்திப் பரிமாற்றம் செய்து கொள்ள முனைந்த பழங்காலத்துச் செயல்களாக இவை அமைந்து உள்ளன. அனைத்துச் சமூகங்களிலும் மொழிபெயர்ப்பாளர்களும் சொற்களஞ்சியக் கலை இயலாளர்களும், குறிப்பாக இருமொழியில் தேர்ச்சி பெற்ற சொற்களஞ்சியக் கலை இயலாளர்கள் மரபு சார்ந்த முறையில் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறார்கள். அவர்களின் படைப்புகள் வெளியிடப் பட்டவுடன் வசதி வாய்ந்த கருவிகளாக நாம் பெற்றிருக்கிறோம்.

**நன்னூல் கூறும் வரையறை**

மொழிபெயர்ப்பானது, கவின்கலையா அல்லது திறன் வாய்ந்த பணியா அல்லது அறிவியலா என்பது குறித்து ஏற்கெனவே நாம் விவாதித்துள்ளோம். அவை தொடர்பாகச் சில நூல்களும் கட்டுரை களையும் நாம் வெளியில் படிக்கலாம். சொற்களஞ்சியக் கலையியலாளர் ஒருவர், ‘மொழிபெயர்ப்பு’ என்னும் பெயர்ச்சொல்லுடன் அல்லது ‘மொழிபெயர்ப்பைச் செய்வதற்கு’ என்னும் வினைச்சொல்லுடன் நடு நிலையில் நின்று அறிவியல் சார்ந்து நியாயமானதொரு கருத்திலிருந்து ‘மொழிபெயர்ப்பை’ மதிப்பிட்டால் அதைக் கலை என்றே கூறுவார். மொழிபெயர்ப்பில், ஒரு மூலமொழியிலுள்ள சில வாக்கியங்களில் அடங்கிய சொற்களுக்குச் சமமான சொற்களைக் கொண்டு தயாரிக்கப்படுவது என்று பொருள்வரையறை கூறலாம். ஆனால் மொழிபெயர்ப்பில் சொற்களைக் கையாளும் முறைகளே தனிதான்.

**குன்றக் கூறல், மிகைபடக் கூறல்,**
**கூறியது கூறல், மாறுகொளக் கூறல்**
**வழூஉச்சொல் புணர்த்தல், மயங்க வைத்தல்,**
**வெற்றெனத் தொடுத்தல், மற்றொன்று விரித்தல்,**
**சென்றுதேய்ந் திறுதல், நின்றுபய னின்மை,**
**என்றிவை ஈரைங்குற்றம் நூற்கே**

என்ற நன்னூல் பொதுப் பாயிரச் செய்யுளில் பவணந்தியார், சொல்லாட்சிக் குற்றங்களாக வழூஉச் சொல்—புணர்த்தல், வெற்றெனத் தொடுத்தல், நின்று பயனின்மை என்னும் மூன்றையும் குறித்தமையாலும்,

**சுருங்கச் சொல்லல், விளங்க வைத்தல்,**
**நவின்றோர்க்கினிமை, நன்மொழி புணர்த்தல்,**
**ஓசையுடைமை, ஆழமுடைதாதல்**
**முறையின் வைப்பே, உலக மலையாமை**
**விழுமியது பயத்தல், விளங்குதா ரணத்தது**
**ஆகுதல் நூலிற் கழககெனும் பத்தே**

என்னும் அந்நூல் பாயிரச்செய்யுள் பிறிதொன்றில் அவர் சொல்லாட்சி அழகுகளாக நன்மொழி—புணர்த்தல், ஓசையுடைமை, ஆழமுடைத்தாதல், என்னும் மூன்றையும் குறித்தமையானும் முப்பத்திரண்டு உத்திகளில் தொடர்ச் சொற்—புணர்த்தல் என்னும் மூன்றையும் அவர் குறித்தமையாலும், மொழிபெயர்ப்பாளர்களின் சொல்லாட்சித் திறனோடு இக்கருத்துகள் ஒப்புநோக்கத்தக்கன.

அன்றாட வாழ்வில் மொழியானது தொடர்பு கொள்ளும் நோக்கங்களுக்குப் பொதுவாகப் பயன்படுகிறது. நம் உணர்வினை ஓரளவு வெளியிடும் வடிகாலாக மொழி அமைகிறது. நாம் நாள்தோறும் உரையாடவும், கவனிக்கவும் வாதிடவும் நட்புக் கொள்ளவும் வாக்குறுதியளிக்கவும் உறுதி மொழியேற்கவும் இவை போன்ற திரைப்படம், கலை நிகழ்ச்சிகள் முதலியவற்றில் இன்றும் எத்தனை எத்தனையோ செயல்களுக்கு மொழியைப் பயன்படுத்துகிறோம். இருப்பினும், இவை நீங்கலாக இன்னும் பல தனிச் செய்களுக்கும் நோக்கங்களுக்கும் கூட, தனியாகச் சிறப்பாக மொழியைப் பயன்படுத்துகிறோம். நாம் மொழியை ஒப்பந்தம் செய்யவும், தொழில், வணிகவகையிலும் மொழிவழியே சட்ட நடவடிக்கைகளை நடத்தவும் வங்கித் தொழில் மேற்கொள்ளவும் காவல்காக்கவும் தொலைத் தொடர்பு கொள்ளவும் மக்களுடன் உறவுகொள்ளவும் அதை ஆண்டு நாம் எண்ணியதை எண்ணியாங்கு எய்துகிறோம்.

## சொற்பொருள் மாற்றம்

அத்தகைய தனிநோக்கங்களுக்காக ஒரு மொழியைப் பயன்படுத்தும் போது, அம்மொழியானது அகராதி வகையில் புதியன புனைந்து சொற்றொடரியல், நடை, சொற்களஞ்சிய வகையில் பல மாற்றங்களுக்குள்ளாக நேரிடுகின்றது. இதற்குக் காரணம் என்னவெனில், அத்தகைய தனிப்பயன்பாட்டின் விளைவாக, (Language for Special Purpose) ஒரு மொழியில் சில தேவைகள் காலத்தால் வலியுறுத்தப்படுகின்றன. இப்போது கலைச்சொல்லாக்கத் திலும் மொழிவளர்ச்சியிலும் மொழிபெயர்ப்புப்பணி பெரும்பங்கு வகிக்கின்றது.

‘சொல்லாக்கக் கலை’ மிகவும் நுட்பம் உடையது. அதில் சொல் மிகவும் வலுவானது. சொல்லாற்றல் உடையவரை இகல் வெல்லல் எவர்க்கும் அரிது. சில செய்திகளை முறைப்படிப் பேசத் தெரியாதவர் களும் மேடைப் பேச்சிற்கு ஆசைப்படும் காலம் இது. கல்லாதவர்கள் பிறர் திறம்படப் பேசுவது கண்டு இன்புறுவர். ‘சொல்லாக்கக் கலை’ தொல்காப்பியர் காலம் முதல் ‘கிளவியாக்கமாக’ உருவெடுத்தது. தொல்காப்பியர் “காலந்தோறும்

புதுச்சொற்கள் பிறக்கும், அவை ஏற்றுக் கொள்ளப்படவேண்டியவை'' என்று கூறியுள்ளார். எ.டு. 'கடிசொல்லில்லை காலத்துப் படினே' (தொல்.சொல். எச் நூ.56). பவணந்தியாரும் 'சொல்லாக்கக் கலை' பற்றிக் கருதியதால், நன்னூலில், பதவியலை எழுதினார். அவர் ஒரெழுத்தொருமொழி, தொடரெழுத்தொருமொழி பற்றிக் கூறினார். தொல்காப்பியரின் அடியொற்றி அவரும் நூலின் புறனடையாகப் புதுச் சொல்லாக்கத்திற்கு வரவேற்புத் தரும் முறையில் 'புதியன புகுதல் வழுவல' என்று சொன்னார் (நன்.462).

## தமிழில் சொல்லாக்கக்கலை

இவ்வாறாகச் 'சொல்லாக்கக்கலை'[2] தமிழில் நெடுங்காலமாக வழக்கில் இருப்பதை அறியலாம்.

> **புதிய சொற்கள் தேவைப்படும்பொழுது தொகையை ஆக்கிக் கொள்வதும் தமிழில் நெடுங்காலமாகக் கையாளப்பட்டு வந்த உத்தியாகும். இப்படி இரு பெயர்த்தொகையும் பல்பெயர்த்தொகுதியும் உருவாவதிலுள்ள இன்றியமையாத சில விதிமுறைகளைக் கண்டறிந்து தொகைகளை உருவாக்கினால்தான் அவை நிலைபெற்று வாழ்வு பெறும்**

என்கிறார் அறிஞர் பொற்கோ. ஆகவேதான் தக்க தமிழ்ச் சொற்கள் இல்லை என்பதால்தான், ஆங்கிலச் சொற்களையும் வழக்கில் தமிழோடு ஆங்கிலச் சொற்களையும் வழக்கில் தமிழோடு பழகிவிட்ட பிற சொற்களையும் சட்டத்தில் பயன்படுத்துவதாக நீதிபதி சு. மகராசன் கூறினார்.

> **பல நூற்றாண்டுகளாக அயல்மொழிகளே தமிழ்நாட்டு நீதிமன்றங்களில் தீர்ப்புமொழிகளாக இருந்துவிட்ட படியாலும், நூற்றுக்கணக்கான ஆண்டுகளாக நுணுக்கமான சட்டச்சொற்களைச் சொல்வதற்கு நாம் தமிழைப் பயன்படுத்தாமலே போய்விட்டபடியாலும் முற்கூறிய பிங்கலச் சூத்திரம் 2009இல் கண்டவை போன்ற ஆயிரக் கணக்கான நொய்தின் நொய்யத் தமிழ்ச் சொற்கள், துருப்பிடித்துப்போய், பொருள் கெட்டும், இழிந்தும், பயனற்றுப் போய்விட்டன. ஆகவே சொல்வளத்திற்கிடையே, சொற்பஞ்சத்தால் அல்லாடுகிறோம் நாம். புதுச்சொற்களை இரவல் வாங்குவதற்கு முன், அல்லது புதுச்சொற்களை**

---

2. Theories of Translation - University of Hyderabad, 1999.

> **உண்டாக்குவதற்கு முன் நமது கருவூலத்தில் பயன்படுத்தப்படாமல் வெறிதே கிடக்கும் பொருள் பொதிந்த சொற்களைப் பயன்படுத்த முனைந்திருக்கிறோம்.**

என்கிறார் நீதிபதி.[3] எ.டு. 'Assertion' என்பதை 'அறைதல்' என்றும் 'Declaration' என்பதை 'விளம்புதல்' என்றும் 'Pronouncement of Judgement' என்பதைத் 'தீர்ப்புப் பகர்தல்'' என்றும் மொழிபெயர்த்துத் துருவேறிப் போன தமிழ்ச் சொற்களைத் துலக்கி, விளக்கமுறச் செய்திருக்கிறார் நீதிபதி. மேற்சொன்ன பொருள்களிலே நீதிபதிகளும் வழக்குரைஞர் களும் மேற்சொன்ன சொற்களைப் பயன்படுத்துவார்களேயானால், இடைக்காலத்தே திமிறி அலைந்த சொற்களை அடக்கி, மூக்கணாங்கயிறு போட்டு, நடை பழக்கி, சொகுசாகக் கருத்துச் சவாரி செய்ய அவற்றைப் பயன்படுத்திய பெருமை அவர்களுக்குக் கிடைக்கும். சிலரிடம் சொல்லாக்கம் இயல்பாகவே அமைந்திருக்கும். சிலர் முயன்றுபெறுவர்.

## 14. கலைச்சொல்லாக்க இயல்பான நடைமுறை

தமிழ்மொழியில் சொல்லாக்கம் பழங்காலந்தொட்டே நடந்தேறி வந்திருக்கிறது. சொல்லாக்கத்திற்கான உத்திகள் பின்வருமாறு:

1. பழந்தமிழ் நூல்களிலுள்ள கலைச்சொற்களைத் தொகுத்துக் காலத் தேவைக்கேற்பப் பொருள் மாற்றிச் சொற்களைப் பயன்படுத்துதல்.
2. உலக வழக்கை அப்படியே பின்பற்றுதல். இக்கருத்து உலக அளவில் பலராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.
3. பேச்சு வழக்கில் இடம்பெற்றுள்ள அன்றாடப் பழகுதமிழ்ச் சொற்களை வைத்துப் பயன்படுத்துதல்
4. நாட்டுப்புறப் பாடல்களிலிருந்தும் திரைப்பட நாளிதழ்களின் துணைகொள்ளுதலும் ஆக்கந்தரும்.
5. பிறமொழிச் சொற்களைக் கடன்வாங்குதல்
6. பிறமொழி ஆட்சித்துறை முதலிய துறைகளின் சொற்களை மொழிபெயர்த்தல்.
7. இலக்கியம் அது பழமையாயினும் தற்காலமாயினும் அவற்றில் தமிழ்ச் சொற்கள் இல்லாதபோதும் வழக்கிலும் காண இயலாத போதும் வேறுவழியின்றிப் புதுச்சொற்களை உருவாக்குதல். இந்திய அரசு அறிவியல் தொழில்நுட்பச் சொல்லாக்கத்திற்காக ஒருகுழுவை அமைத்துள்ளதையும் கவனத்தில் கொள்ளுதல்.

---

3. சட்டச் சொல்லகராதி – 1979 – நீதிபதி சு. மகராசனின் முன்னுரை, தமிழ்நாடு அரசு சட்ட ஆட்சிமொழி ஆணையம், சென்னை.

## காலத்தின் போக்கு

செல்வநிலை, பொருளாதார வளர்ச்சி முதலியவற்றைப் போன்றே, மொழிவளமும் வளர்ச்சியும் ஒரு நாட்டில் நிகழும் புதுப்புது அறிவியல் தொழில்நுட்பக் கண்டுபிடிப்புகளுக்கேற்ப வளர்ந்த வண்ணம் உள்ளன. பழந்தமிழரின் வாழ்வில் நிலவிய மொழி, அன்றைய சூழலுக்கு ஏற்றதாய் இருந்தது. ஆனால், இன்றைய காலக்கட்டத்தில் பழந்தமிழின் கலைச்சொற்களை அளவாக வைத்திருப்பது. மொழிவளர்ச்சிக்குத் தடையாக உள்ளது. இன்று உலகம் மிகவும் சுருங்கி ஒரு கிராமம் போல் தோன்றும் அளவில் உலகமயமாக்கலில், அறிவியல் தொழில்நுட்பக் கல்வி நாள்தோறும் மின்னல் வேகத்தில் வளர்ச்சி அடைந்து வருகிறது. காலந்தோறும் உலக மொழி வரலாற்றில், புதுப்புதுச் சொற்கள் படைக்கப்படுகின்றன. இயந்திர மயமான வாழ்வில் கண்டுபிடிப்புகள் சில அந்த அந்த விஞ்ஞானிகளின் பெயரால் அழைக்கப்படுகின்றன. புதுச்சொற்களின் வரவால் பழஞ்சொற்கள் தலைமறைவாகிவிடுகின்றன. இதனால் பழைய சொற்கள் வழக்கொழிந்து போகின்றன. சொற்பஞ்சத்தைப் போக்கப் பழைய சொற்களுக்குப் புதுப்பொருள் கொடுத்துப் பயன் படுத்தப்படுகின்றன. பிறமொழியினரின் புதிய கருத்துகளைப் பெற மொழிபெயர்ப்புப் பயன்படுகின்றது. சில சொற்களைக் கடன் வாங்கவும் நேரிடுகின்றது. மொழிபெயர்க்காமலும் கடன்வாங்காமலும் சில வேளைகளில், புதிய சொற்களை ஏற்கும் மனப்பக்குவத்தில் சொல்லாக்கம் மேற்கொள்ளப்படுகின்றது. தொல்காப்பியர், அவ்வாறு பிறமொழிச் சொற்களை, தமிழ் மரபிற்கு ஏற்பப் பெயர்த்து ஏற்க வேண்டும் என்னும் நோக்கினை வலியுறுத்துகிறார்.

## மொழிபெயர்ப்பாளருக்கான கலைச்சொல்லாக்கச் செயற்பாடு

மொழிபெயர்ப்பின் இன்றியமையாமையைப் பாரதி கவிதையிலும் கட்டுரையிலும் வற்புறுத்தினார். பாரதிதாசனும் வெளி நாட்டுப் புதுக்கருத்துகளைத் தமிழில் பெயர்த்துச் செந்தமிழைச் செழுந்தமிழாய்ச் செய்ய வேண்டுமென வலியுறுத்தினார்.

மொழிபெயர்ப்பாளர் மூலமொழி ஆசிரியர் மீது மதிப்பும் மரியாதையும் கொண்டிருக்க வேண்டும். அவர் மீது ஆன்மீக வழி உணர்வில் ஒன்ற வேண்டும். அதைத்தான் கூடுவிட்டுக் கூடுபாய்தல் என்றனர். மொழிபெயர்ப்பாளர் சமகாலத்தவராக இருப்பின், மூலநூல் ஆசிரியரை நேர்காணல் செய்தல் வேண்டும். அப்போதுதான் சில சொற்களின் பயன்பாட்டிற்கான உட்பொருளை விளங்கிக் கொள்ள வேண்டிய நிலையை எய்தலாம். எ.டு. டால்ஸ்டாய்க்கும் மொழி பெயர்ப்பாளரான ஜல்மெர்மௌடு (Aylmer Maude) க்கும் இடையே

உள்ள உறவாகும். காண்டேகருக்கும் கா.ஸ்ரீ.ஸ்ரீக்கும் இருந்த நட்புறவு, தகழி சிவசங்கரன் பிள்ளைக்கும், சுந்தரராமசாமிக்கும் இடையே நிலவிய பழக்கம். மொழிபெயர்ப்பாளர் மூல ஆசிரியருடனும் அவர் எழுத்துடனும் தன்னை ஐக்கியப்படுத்திக் கொள்ளவேண்டும். மூல நூலாசிரியர் எந்தச் சூழ்நிலையில் அதை எழுதியிருக்கக்கூடும் என்பதை நேரடியாகவோ மறைமுகமாகவோ அவ்வாசகத்தின் சூழற் பொருளை உணர்ந்து கொள்ளும் வாய்ப்பு கிடைக்கும். மொழிபெயர்ப் பாளர் இருமொழிகளுக்கும் ஒரு பாலமாவார். இருமொழிப் பண்பாடுகளையும் பழக்கவழக்கங்களையும் ஈடுபாட்டோடு அறிந்திருக்க வேண்டும். அவர், மொழிபெயர்ப்பில் வெற்றிபெற, ஒரு படைப்பாளராகவும் இருத்தல் நல்லது. தொழில், துறை அறிவும் கண்டிப்பாக வேண்டும்.

சட்டத்துறையில் செயல்படும் தமிழ்ப்பிரிவு என்ற சட்ட மொழிபெயர்ப்புப் பிரிவு—தலைமைச் செயலகத்தில் சட்டத்துறையில் இருப்பதால்தான், அவ்வப்போது நேரும் சந்தேகங்களை, அச் சட்டத்தை ஆங்கிலத்தில் வரையும் அதிகாரிகளுடன் கலந்து பேசும் வாய்ப்புள்ளது. இதுவும் அத்துறையில் ஒரு செயலரின் கீழ்ப் பணியாற்றுகின்றது. நெருக்கடியான நேர்வுகளில் இரவுபகலாகச் சட்ட முன்வடிவைத் தயார் செய்து குறுகிய காலத்திற்குள் அதைச் சட்டமன்றப் பேரவையில் ஆங்கிலச் சட்ட முன்வடிவோடு அறிமுகம் செய்ய நேரிடுவது இயற்கையாகும். அப்போது சட்ட மொழி பெயர்ப்பாளர்களுக்கான கலைச்சொற்கள் தனியே தேவைப்படு கின்றன. அப்போது சட்டச்சொற் களஞ்சியத்தின் இன்றியமையாமை பல நேரங்களில் உணரப்பட்டுள்ளது.

> **உயர்கல்வியைத் தாய்மொழிவழி அளிப்ப தற்கான தேவைகளில் முதற்கட்டம் கலைச் சொல்லாம் எனலாம். கலைச்சொற்களும் தொகுக்கப்பட்டுள்ளன. வழக்கு மன்றங் களிலும் ஆட்சித் துறைகள் பலவற்றிலும் தமிழ்மொழியின் பயன்பாடு பெருகி வருகின்றது என்பது மனநிறைவும், மகிழ்ச்சியும் அளிக் கின்றது. இவ்வளர்ச்சியில் கலைச்சொல் உருவாக்க வேண்டிய தேவையை உணர்கிறோம்**

என்கிறார் சட்டப் பல்கலைக்கழகத் துணைவேந்தர்.[4]

---

4. கலைச்சொல் பேரகராதி, தொகுதி 10, சட்டவியல், தமிழ் இணையப் பல்கலைக்கழகம், (Tamil Virtual University) 2010.

சட்ட மொழிபெயர்ப்பாளர்களுக்கான கலைச்சொல்லாக்கத்தில் கீழ்க்கண்ட துணை நூல்கள் தேவைப்படுகின்றன. அவை முறையே:

1. திருத்தச் சட்ட முன்வடிவு என்றால், முதன்மைத் தாய்ச் சட்டத்தின் மூலப்படிகள்.
2. ஆங்கிலத்திலுள்ள சட்ட அகராதி. அது தீர்ப்புக்களுடன் கூடியது.
3. ஆங்கிலம்—தமிழ்ச்சட்டச் சொல் அகராதி.
4. பிற இலக்கிய வழி தமிழ்—தமிழ் அகராதிகள்.
5. துறையினர் அகராதி – இவை நீங்கலாக
6. துறையில் அச் சட்ட முன்வடிவிற்கான அதிகாரியுடன் கலந்து பேசுதல்.

எடுத்துக்காட்டாக Tamil Nadu Prohibition of Ragging Bill 1998இல் 'Ragging' என்ற சொல்லிற்கான சொல்லாக்கம் பற்றிய ஆய்வு குறிப்பிடத்தக்கது. தமிழ்நாடு கேலிவதைத் தடுப்புச் சட்ட முன்வடிவு 1998இல் நிறைவேற்றப்பட்டது. இச்சட்டத்தில் இடம்பெற்ற 'Ragging' என்ற சொல்லிற்கான மொழிபெயர்ப்பு ''கேலிவதை'' என்பதாகும். இச்சொல்லாக்கத்தை 2005இல் மதுரையிலுள்ள ஒரு (போக்குவரத்துத் துறை) மனமகிழ் மன்றத்தினர் தவறு என்றும், அதற்குக் 'கொல்குறும்பு' என்று வள்ளுவர் 735 என்ற குறளில் கையாண்ட சொல்லே பொருத்தமானது என்றும் ஆலோசனை கூறிச் சட்டத்துறைக்கு ஒரு கடிதம் வந்தது. சட்டத்துறையில் மைய மாநிலச் சட்டங்களை மொழிபெயர்ப்பதற்கு என்று மற்றொரு சட்ட மொழிபெயர்ப்புப் பிரிவிற்குக் கடிதம் சென்றது. அங்குள்ள சிலர் அந்த ஆலோசனையை ஏற்று அச்சட்டம் மீண்டும் அச்சாகும்போது திருத்திக் கொள்வதாகக் கூறி மறுமொழி எழுதி, சட்டத்துறைச் செயலாளரின் ஒப்புதலுக்கு அனுப்பினர். மேற்கூறிய சட்டம், சட்ட முன்வடிவு நிலையில் தமிழ்ப்பிரிவு எனும் சட்டத்துறை மொழிபெயர்ப்புப் பிரிவும் தனித்தியங்கும் பிரிவாகச் செய்யப்பட்டது. அங்குள்ள அப்போதைய இயக்குநராயிருந்த இந்நூலாசிரியர் சட்ட மொழிபெயர்ப்பில் முனைவர் (பிஎச்.டி.) பட்டம் பெற்றவராதலால், அக்கோப்பினை மறு ஆய்வு செய்தார்.

'Ragging' கேலிவதை என்பதன் சூழல் ஆராயப்பட்டது.

**பல்குழுவும் பாழ்செய்யும் உட்பகையும் வேந்தலைக்கும்**
**கொல்குறும்பும் இல்லது நாடு** (குறள். 735)

'வேந்து அலைக்கும் கொல்குறும்பும்' – ''நாட்டிற்குள்ளிருந்து சமயம் வாய்க்கும்போதெல்லாம் போராலும் கொள்ளையாலும்

அரசனையும் குடிகளையுந் துன்புறுத்தும் அடங்காச் சிற்றரண் தலைவரும்'' என்று தமிழ் ஞாயிறு பாவாணர் அக்குறளுக்கு எழுதிய தமிழ் மரபுரை எடுத்துக்காட்டப்பட்டது. ஆனால், இங்கு 'Ragging' கல்லூரி வளாகத்திற்குள் முதுநிலை மாணவர்கள், புதிதாக வரும் முதலாண்டு மாணாக்கர்களை நோக்கிச் செய்யும் கேலி, கிண்டல், நையாண்டியாகும். அது எல்லை மீறும்போது எங்கோ ஒருசில இடங்களில் ஒருசில நேரங்களில் வன்முறையில் முடிகிறது.

இரண்டாயிரம் ஆண்டுக்கு முன் இக்கருத்தே இருக்கும் வாய்ப்பில்லை. இதைவிட இன்னும் ஒருமுக்கியக் குறிப்பு என்ன வென்றால், 'Ragging' என்பதற்குப் 'பகடிவதை' என்று அரசு ஆட்சிச் சொல்லகராதியில் பொருள் கூறப்பட்டுள்ளது. ப.233 (1983) ஆனால் 'பகடிவதை' என்பது யாழ்ப்பாணத்து வழக்கு. இதைக் கண்ணுற்ற தற்போதைய மாண்புமிகு நிதி அமைச்சரும் அப்போதைய கல்வி அமைச்சருமான மதிப்பிற்குரிய பேரா. க. அன்பழகனார் அவர்கள் 'Ragging' என்பதற்கு முதலில் கல்வித் துறையினரை அழைத்துப் 'பகடி'வதையை மாற்றி வரும்படிப் பணித்தார். அப்போது 'Ragging' என்பதற்கான ஆங்கில அகராதி, சட்ட அகராதிகள் தமிழ்–தமிழ் அகராதிகள் முதலியன ஒப்பிட்டு ஆய்வு நடத்தப்பட்டது. கல்வித்துறை உயர் அதிகாரிகளுடன் இந்நூலாசிரியர் கலந்து பேசியதில் 'கேலிவதை' என்ற முடிவு, ஒருமனதாக அனைவராலும் ஏற்கப்பட்டது.

இதே போன்று இன்னும் எத்தனையோ நிகழ்வுகளைச் 'சட்டச் சொல்லாக்கம்' குறித்து இங்கு எழுதலாம். ஆனால் விரிவு அஞ்சி ஓர் எடுத்துக்காட்டுடன் முடிக்கலாம்.

ஹைதராபாத் மத்தியப் பல்கலைக் கழகத்தில், முதுகலைப் பட்டயத்திற்கான பாடத்திட்டத்தில் 'Lexicon for translators'[5] என்ற தலைப்பின்கீழ் ஒரு தாள் தேர்வுக்காகப் பாடத்திட்டத்தில் உள்ளது இங்குக் குறிப்பிடத்தக்கது. 'English for writers and Translators' என்ற ஒரு நூல் இராபின் மாபர்சன் (Robin mapherson) என்ற தலைப்பில் எமரால்டு வெளியீட்டாளர்கள் வெளியிட்டதைக் கண்டேன். ஆக தனியாரும் பல்கலைக்கழகங்களும் மொழிபெயர்ப்பாளர்களை ஒரு பொருட்டாக எண்ணுவதைக் கண்டு மகிழ்ந்தேன். நீதிபதி மகராசன் Law Lexicon–1979 என்பதைச் சட்ட மொழிபெயர்ப்பாளர்களுக் காகவே உருவாக்கினார் எனலாம்.

## கல்வி மொழிக்கான கலைச்சொல்லாக்கச் செயற்பாடு

ஒரு நாட்டில் ஆள்வோரது மொழி ஆற்றலும் மதிப்பும் பெற்று விளங்குவது உலக வரலாற்று உண்மை. மூவேந்தர்களின் ஆட்சிக்

5. Hyderabad University, 1994, P.G. Diploma as DTS.

காலத்தில் ஏற்பட்ட தமிழ்வளர்ச்சியையும் தமிழில் நூல்கள் பெருகி யுள்ளதையும் காணும் அதே நேரத்தில், பிற்கால முகமதியர், ஐரோப்பியர் ஆகியோர் ஆண்டகாலத்தும் தமிழ்வளர்ச்சிக் குன்றிய நிலைக்குத் தள்ளப்பட்டதை நாம் அறிவோம். ஆள்பவர் மொழி வலுவானது என்பதற்கு ஒரு சான்று ஆங்கில மொழியின் வளர்ச்சியாகும். ஆரியர்கள் தமிழகம் புகுந்து சமயத் தொழில் காரணமாக அரசர்களுடன் பிணைத்துக் கொண்டு செல்வாக்குப் பெற்றனர். மூவேந்தர்களின் சரிவும் களப்பிரர், பல்லவர், தெலுங்கர், கன்னடர் வளர்ச்சியும் தமிழ் தளர்ச்சியுறக் காரணமாயின என்பர். எனவே சங்ககாலத்தில் பிறமொழிச் சொற்களின் கலப்பு விகிதம் இரண்டே விழுக்காட்டு அளவில் இருந்தது. சங்கம் மருவிய காலத்திலும் களப்பிரர் காலத்திலும் அதன்பின் 6ஆம், 7ஆம் நூற்றாண்டிடுகளில் சமணர் பௌத்த சமயங்களின் எழுச்சியால் 5,6 விழுக்காடாக உயர்ந்து மணிப்பிரவாள நடையும் தலை தூக்கியது. பிறமொழிச் சொற்களின் ஆட்சி விகிதமும் அதிகரித்தது. மொகலாயப் பேரரசுகள் மற்றும் ஐரோப்பியர் வருகையால் ஆட்சித்துறைகளிலும் நீதித்துறையிலும் ஜாமீன், ஜப்தி, பிராது போன்ற பிறமொழிச் சொற்களும் ஷெசன்ஸ், கோர்ட்டு, அப்பீல், சிவில் முதலிய ஆங்கிலச் சொற்களும் புதிதாக நுழைந்தன. மக்களிடம் வழக்கில் நிலைத்துவிட்டன.

1835 முதல் மெக்காலேயின் ஆங்கிலவழிக் கல்வித் திட்டத்தால் ஆங்கிலமொழி தவிர்க்க இயலாத கல்வித்துறையிலும் ஆட்சித்துறையிலும் ஆட்சிமொழியாக இந்தியாவில் நிலைத்துவிட்டது.

தமிழர் நாகரிகம், மொழி, பண்பாடு முதலியவற்றைப் பேணிக் காக்கத் தனித்தமிழ் இயக்கத்தை மறைமலை அடிகள் தோற்றுவித்தார். மொழிப் பயன்பாட்டில் தமிழ்ச் சொற்களை மட்டும் பயன்படுத்துவதுடன் முக்கியமான மாற்று மொழி மூலங்களைத் தமிழில் ஏற்க மறுப்பது தனித்தமிழ் இயக்கத்தின் கொள்கை. புரியாத சமஸ்கிருதம் முதலிய பிறமொழிச் சொற்களுக்கு எதிரானது இவ்வியக்கம்.[6] தனித்தமிழ் இயக்கம் மொழி வளர்ச்சியில் திட்ட மிடுதலின் ஒரு கூறாக விளங்கியது என்கிறார் ஹேகன் (1966:53). சமஸ்கிருத மொழிக்கு எதிராகப் பல நடவடிக்கைகளும் எடுக்கப் பெற்றன. பல சமஸ்கிருதப் பெயர்கள் தமிழ்ப் பெயர்களாக மாற்றப்பட்டன. சமஸ்கிருத சொற்களை வெகுவாகச் சுமந்து வெளிவந்த பழைய நூல்களில் புதிய பதிப்புகளில் அவற்றிற்குப் பதிலாகப் புதிய தமிழ்ச்சொற்கள் இடம்பெற்றன. எ.டு. சுவாமி வேதாசலம், மறைமலை அடிகள். இது போன்ற தமிழ் – சமஸ்கிருதப் போராட்டம் கலைச்சொல் வரலாற்றில் தொடங்கி, அது அனைத்துத் துறைகளுக்கும் பரவியது. இத்தனித் தமிழ் தாக்கம்/

---

6. தனித்தமிழ் மாட்சி, மறைமலையடிகள், மணிவாசகர் பதிப்பகம், 2000.

இயக்கத்தின் செல்வாக்குச் சட்ட மொழிபெயர்ப்புகளையும் பாதித்தது. சட்ட மொழிபெயர்ப்பிலும் காணலாம். இதற்காக 1982இல் அன்றைய முதல்வர் ஒரு மடலாணை வெளியிட்டார்.

தமிழரின் கலைச்சொல்லாக்க வரலாறு நீண்ட நெடிய காலந்தொட்டு வளர்ந்து வலுப்பெற்றுள்ளது. தமிழில், புதிய கருத்துகள் மொழியில் நுழையும்போது, அதற்கேற்ற சொற்களை ஆக்க வேண்டிய கட்டாயம் தொல்காப்பியம் காலந்தொட்டுத் தொடர்வதாகும். எ.டு. சமயக் கருத்துகள் புதிதாக வந்தபோது அன்று புதுச் சொற்களும் உருவாயின. எ.டு. அறவாழி—தர்ம சக்கரம் போன்ற சொற்கள் இங்ஙனம் உருவாயின. இலக்கண ஆசிரியர்களும் தமிழ்மொழி மரபினின்று மாறாத வகையில் ஒலிபெயர்க்க வேண்டுமென்ற கொள்கை உடையவர்களாயினர். இச்சூழலில் கலைச் சொல்லாக்கத்தில் பலவகை உத்திகளை அவர்கள் மேற்கொண்டனர். எ.டு. பகுதி விகுதி அதாவது அதை இலக்கண மொழியியலில் முன்னொட்டுப் பின்னொட்டுச் சேர்த்தல், தொகைகளை ஆக்குதல், தொடர்களைக் கூட்டுச் சொற்களாகப் படைத்தல், ஒலிபெயர்த்தல் போன்றவை அவை. கலைச்சொல்லாக்க அடிப்படை விதிகளில் ஒலிபெயர்ப்பு விதிகளைத் தந்தனர். 12ஆம் நூற்றாண்டிற்குப் பின் தமிழில் சமஸ்கிருத நூல்களின் மொழிபெயர்ப்பு அதிகரித்தது. தமிழ் மரபுக்கேற்ப லட்சுமி இலக்குமியாகவும் பிரம்மன்—பிரமனாகவும் ஒலிமாற்றம் பெற்றனர். கம்பர் காவியத்தில் ராமன், இராமனாகவும் விபீஷணன், விபீடணன் ஆகவும் பெயர் மாற்றம் ஏற்றனர். இவ்வாறாகச் சங்க காலந்தொட்டு இன்றைய நிலையிலும் தமிழர் மொழிப் பயன்பாட்டிற்கேற்பக் கலைச் சொல்லாக்கத்தைத் தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றனர்.

சமூக மொழியியலார், மொழித்திட்டமிடுதலில் 'புதுமை யாக்கம்', அறிவாக்கம் ஆகிய சொற்களை அதிகமாக ஏற்கின்றனர். அதாவது கல்வித்துறைகளில் கலைச்சொற்களை ஆக்கித் தற்காலத் தேவைக்கு ஈடு கட்டுதல் அதை மொழிமேம்பாடு என்ற புதுமையாக்கம் (modernization) என்பர் பெர்கூசன் (1966:306). இப்புதுமையாக்கம் என்பது, இன்று மொழித்திட்டமிடுதலில், அறிவியல் புதுமைக் கருத்துகளைக் குறிக்கின்றது. பிராக் பிரிவினர் இதைக் கூர் அறிவாக்கம் (Intellectualization) என்ற சொல்லைப் பயன்படுத்துவர். ஆக விரிந்த பொருளில் 'அறிவாக்கம்' என்ற சொல்லும் குறுகிய பொருளில் 'புதுமையாக்கம்' என்ற சொல்லும் பயன்படுத்தப்படு கின்றன. இப்புதுமையாக்க நோக்கத்தில் கலைச்சொல்லாக்க முயற்சிகள் புத்துணர்ச்சி பெற்றுள்ளன.

கலைச் சொல்லாக்குநர்கள் தத்தம் நாட்டைச் சேர்ந்த மொழிக் கொள்கைகளுக்கும் மொழித்திறனுக்கும் ஏற்றாற்போல், கலைச்

சொல்லாக்க நெறிமுறைகளை மேற்கொண்டு வந்துள்ளனர். இந்தியாவில் மைய அரசு—மும்மொழிக் கொள்கையையும் தமிழ்நாடு மாநில அரசு இருமொழிக் கொள்கையையும் பின்பற்றி வருகின்றன. இங்குக் கலைச்சொல்லாக்கம் மேற்கூறிய இருபெரும் பிரிவுகளுக்குள் அடங்கும். இந்தியாவில் கலைச்சொல்லாக்கம் (அ) இந்திய மயமாக்கம் (Indianization) (ஆ) மேலைமயமாக்கம் ஆகிய மேற்கூறியவற்றில், இந்தியமயமாக்கலின் பிரிவினர் எவர், மேலைமயமாக்கல் என்ற பிரிவினர் எவர் என்று கேட்டால், இந்தியமயமாக்கக் கொள்கையினைப் பின்பற்றுவோர் ஒருபுறம், சமஸ்கிருதத்திலும் தமிழிலும் கலைச்சொற்களை உண்டாக்க விழைவோராவர். அதே வேளையில் ஆங்கிலம் அல்லது ஆங்கிலம் மூலம் அறியக்கிடக்கும் ஐரோப்பிய மொழிச் சொற்களுக்கு முதன்மை அளித்துத் தம் சொல்லாக்கங்களை மேற்கொள்வோர் மறுபுறம் உள்ளனர்.

மேற்கூறிய இந்தியமயமாக்கல் கொள்கையின் தாக்கம் சட்டமொழிபெயர்ப்பையும் சட்டக் கலைச்சொல்லாக்கத்தையும் விட்டு வைக்கவில்லை. இந்திய அரசு சட்டச் சொற்களஞ்சியத்தை உருவாக்குகையில் சமஸ்கிருத வேர்ச்சொற்களை அடிப்படையாகக் கொண்டு சொல்லாக்கம் செய்யவும் வழக்கிலுள்ள சமஸ்கிருத சொற்களைச் சட்ட மொழிபெயர்ப்புகளில் ஏற்றும் செயல்படுமாறு ஆணை பிறப்பித்தது. ஆனால் தமிழ்நாடு அரசு அதற்கு மறுப்புத் தெரிவித்துவிட்டது. கல்வித்துறையிலும் நீதி மற்றும் சட்டத் துறையிலும் சமஸ்கிருதச் சொற்களை ஏற்க மறுத்துவிட்டனர். காரணம் மைய அரசு Law என்பதை விதி என்றே இந்தி சமஸ்கிருத இந்துஸ்தானி போன்ற மொழிகள் பயன்படுத்தும்போது தமிழ்நாட்டில் Rule என்றாலே விதி என்று பயன்படுத்துவதால், மக்கள் குழப்பம் அடைவர் என்று தன் நிலையை எடுத்து விளக்கியது. மைய அரசும் ஒப்புக்கொண்டது என்று முன்னாள் சட்டமன்றச் செயலாளர் மா. சண்முகசுப்பிரமணியம் ‘சட்டத் தமிழ் வளர்ச்சி’ என்ற தமது ஆய்வுக்கட்டுரையில் எழுதியுள்ளார்.[7] இந்தியமயமாக்கல் கொள்கையில் தாய்மொழி வழிக்கல்வி, ஆங்கிலம் படித்தவரின் வளர்ச்சி ஆகியவை முக்கியக் காரணங்களாயின. பயிற்றுமொழி அதுவும் தாய்மொழியாக இருக்க வேண்டும் என்பது இந்தியமயமாக்கத்திற்குரிய பல காரணங்களுள் ஒன்றாகும். கிறித்துவ மதத்தைப் பரப்பும் முயற்சியில் கிறித்துவப் பாதிரியார்கள் தமிழ்மொழியைக் கற்றுத் தமிழ் மக்களில் பலரைக் கிறித்தவராக்கும் முயற்சியில் வெற்றிகண்டதும் ஒரு காரணம். அதுபோலவே, மேல்நாட்டினர் வெளியிடும் அறிவியல்—

7. சென்னைப் பல்கலைக் கழக வெளியீடு, 1978.

தொழில் நுட்பக் கருத்துகளைத் தமிழில் கற்பித்தால் நல்ல பலன் பெறலாம் என்று சாமுவேல் கிரீன் நம்பினார். இவர் பயன்படுத்திய கலைச்சொற்களில் இந்தியமயமாக்கல் கொள்கையின் பிரதிபலிப்பு ஊடுருவி உள்ளது. 1888ஆம் ஆண்டில் சாமுவேல் கிரீன் மதுரைப் பசு மலைக் கல்லூரியில் 'மானிட மர்மசாஸ்திரம்' என்ற தலைப்பில் அவர் ஆற்றிய தமிழ்ச் சொற்பொழிவே பின்னர் விரிவுபடுத்தி 1921இல் ரங்கூனில் பெரிய நூலாக வெளியிட்டார்.

1938 ஆண்டுவரை தமிழகத்தில் உயர்கல்வியில் ஆங்கில மொழியில்தான் பாடப்பயிற்று மொழியாகப் பள்ளிகளிலும் உயிர் நிலையில் விளங்கியது. இராஜாஜி முதலமைச்சராக 1939இல் இருந்த போது உயர்நிலைப்பள்ளிகளில் தமிழ் பயிற்சி மொழியாக்கப்பட்டது. முதல் கட்டமாகக் கலைப் பாடங்களையும் பின்னர் இரண்டாவது கட்டமாக அறிவியல் பாடங்களையும் தமிழில் கற்பித்தனர். 1941ஆம் ஆண்டு பள்ளி இறுதித் தேர்வு தமிழில் எழுத அனுமதிக்கப்பெற்றது. அதுவரையில் பள்ளிகளில் ஆங்கில மொழி பயிற்றுமொழியாகும். தமிழ்ப் பயிற்று மொழியானவுடன் கல்வித் துறைக்கான பல பிரிவுகளில் தமிழில் நூல்கள் வெளிவரத் தொடங்கின. இவற்றில் பெரும்பாலான நூல்கள் மொழிபெயர்ப்பாகவே இருந்தன. 1940களில் தேசபிதா மாகாத்மா, கவிஞர் இரவிந்திரநாத் தாகூர் போன்றோர் உயர்கல்வியில் தாய்மொழிக் கல்வி பற்றிய கருத்துகளை எழுதி வந்தனர். 1937ஆம் ஆண்டு முதல் தமிழ்நாடு அரசு, தமிழிலும் சட்டம் உட்பட்ட எல்லாச் செய்திகளையும் தமிழ்நாடு அரசிதழில் வெளியிட்டு வருகின்றது. தமிழக அரசு முதன்முதலாக 1931–32ஆம் ஆண்டில் கலைச் சொற்கள் சிலவற்றை வெளியிட்டது. 1946இல் அமைச்சராகப் பணியாற்றிய அவினாசிலிங்கம் செட்டியார் 'நல்ல தமிழ்ச் சொற்கள்' வெளிவர முயற்சி எடுத்துக் கொண்டார். 1948–1949ஆம் ஆண்டு வாக்கில் அவினாசிலிங்கம் அவர்களின் முயற்சியால் இடைநிலை வகுப்பு வரை (Intermediate Course counsel) தமிழ், பயிற்சி மொழி ஆக்கப்பட்டது. 1956இல் தமிழ்நாடு அரசு தமிழ் ஆட்சி மொழிச் சட்டத்தை நிறைவேற்றியது.[8] இந்திய விடுதலைக்குப்பின் உயர் கல்வியில் தாய்மொழி அல்லது மாநில மொழியில் பயிற்று மொழியாக மாறியது. அன்றைய அரசும் தாய்மொழிக் கல்வியில் ஆர்வம் காட்டியது சட்டத்திலும் பேரா. பழனிச்சாமி 'சர்வதேசச் சட்டம்' என்ற நூலை தமிழில் வெளியிட்டார்.

> **புது விஷயங்களுக்கு அந்த விஷயங்களோடு வந்த அன்னிய பாஷைப் பெயர்களை வைத்துக் கொள்வதும், போதிப்பதும் நலம். புதிதாக**

8. பழனியப்பா பிரதர்ஸ் வெளியிட்டனர்.

> வந்திருக்கும் பொருள்களுக்குப் புதுப்பொருள் கஷ்டப்பட்டு உண்டாக்கி அலைய வேண்டிய தில்லை. பொதுமக்களுக்குப் புதுப்பெயர்களால் ஒன்றும் இலாபம் கிடையாது. புதுப்பெயர்களை உண்டாக்கினாலும் அவை நிதானமாகத்தான் வழக்கில் வரும். இரண்டும் கூடவே நடைபெறலாம். ஆனால் பரிபாஷைப் பதங்கள் பிரச்னை வேறு, விஷயத்தை விளக்கிச் சொல்லித்தருவது என்ற மொழியின் மூலம் எழுகின்ற பிரச்சனை வேறு. அதாவது பொருள்களின் பெயர்களை பரிபாஷைகளை ஆங்கிலத்தில் வைத்துக்கொண்டு தமிழிலேயே பாடம் சொல்லித்தர முடியும். . . . .இடையில் வரும் ஆங்கிலச் சொல்லைப் பற்றிக் கவலை இல்லை.

என்று மூதறிஞர் இராஜாஜி கூறியுள்ளார். சேலத்தில் இராஜ கோபாலாச்சாரியார் 1916இல் 'தமிழ் சாஸ்திர பரிபாஷைச் சங்கம்' என்ற ஒன்றை அறிவியல் கலைச் சொல்லாக்க நோக்கில் வெளியிட்டார் என்பது பாரதியாரின் கட்டுரைகள் வாயிலாகத் தெரிகின்றது.

> ஒரு சில ஆங்கிலச் சொற்களுக்கு நேரான தமிழ்ச் சொற்கள் தோன்றா, இடர்ப்பாடுகள் ஏற்படலாம். நேரான தமிழ்ச் சொற்கள் கிடைக்காத பொழுது, வேற்றுமொழிச் சொற்களையே பயன்படுத்தலாம். நாளடைவில் நல்ல தமிழ்க் கலைச் சொற்கள் தோன்றித் தமிழ் அறிவு நூல்களை வளப்படுத்தும் (கடன்பெறும் வழிமுறை, முன்னாள் முதல்வர் எம். பக்தவச்சலம், கலைக்கதிர், 1956, டிசம்பர், ப.8)

> . . . . . . அனைத்துலகக் கலைச்சொற்களைப் பயன்படுத்துவதுதான் இப்போதுள்ள ஒரே வழி. ஆசிரியர்களுக்கும் அவை கொண்டு கற்பித்தல் எளிதாம். தமிழில் நூல் இல்லாதபொழுது ஆங்கில நூல்களையே நம்பி வாழும் மாணவரும், பிறரும் இக் கலைச்சொற்களை அறிவதால் ஆங்கில நூல்களைக் கற்பதும் தெளிவாகிவிடும். தமிழில் எழுதும் மாணவர்க்கு இயல்பாகிவிடும். தமிழில் நூல்கள் வரும் வரையிலும் காத்திருக்கவும் வேண்டாம். கலைச்சொற்களை அறிவது என்பதுதான் கலைத் துறையில் ஆழ்ந்துவருவதன்

பயன் எனக் கண்டமையால், அவற்றின் எண்ணிக்கையை, அறிவைக் குறைத்தால் அன்றிக் குறைக்க முடியாது. அவை நீங்கலான பிற சொற்களைத் தமிழில் எழுதுவதுதான் இங்கு மாணவர் காணும் எளிமை. இந்த எளிமையைத் தான் மாணவர்கள் எதிர்பார்க்கின்றனர்.

கல்லூரிக்குரிய நூல்களில் விஞ்ஞானம் இப்படித் தான் எந்த மொழியிலும் மணிப்பிரவாளமாக அமையமுடியும். கலைச் சொற்கள் பெருக்கல் வாய்ப்பாட்டில் வரும் எண்கள் போன்றவை. ஆதலின் அவை உலகப் பொதுமொழி எனலாம். ஆனால், விஞ்ஞானத்தைப் பொதுமக்கள் அறியும் வகையில் விளக்குவது என்பது வேறு. இங்கே மணிப்பிரவாளம் வரவேண்டுவது இல்லை. நல்ல இனிய, எளிய தமிழில் எழுதிவருவதே ஆகும். ஆனால் இந்த முயற்சியினையும் கல்லூரி வகுப்பு நூல்கள் எழுதும் முயற்சியினையும் ஒன்றெனு எண்ணிக் குழப்புதல் ஆகாது

என்கிறார் சட்டத் தமிழறிஞர் தெ.பொ.மீ. கலைச்சொற்கள் தமிழில் கண்டுபிடிக்கத் தனிக்குழு ஒன்று ஏற்படுத்தப்பட்டது. அதே குழுவில் தமிழின் பகைவர்களையும் கணிசமான முறையில் சேர்த்திருந்தார்கள். உருப்பட்டதா முயற்சி? காட்சி என்றது சரியல்லவாம்; காக்ஷி என்று போட வேண்டுமாம். ஆட்சி என்றது சரியல்லவாம் ஆக்ஷி என்று போட வேண்டுமாம். மாட்சி, சூழ்ச்சி, சாட்சி என்பன பிழையாம். இத்தகைய பாழ்படுத்தும் உட்பகை இந்நாட்டில் இருந்துகொண்டுதான் இருக்கிறது.

விஞ்ஞானச் சொற்களும் கலைச்சொற்களும் ஆங்கிலத்தில் இருக்கின்றன என்று சொல்லவரும் அறிஞர்கள், அச்சொற்கள் ஆங்கிலத்தில் எப்போது தோன்றின என்பதை எண்ணிப் பார்ப்பதில்லை. ஏன் புதுப்பெயர்களும் பொருள்களும் ஆங்கிலத்தில்மட்டும்தான் கிடைக்குமா? தமிழில் விஞ்ஞானச் சொற்கள், கலைச்சொற்கள் கிட்ட மாட்டா என்று சொல்லுவோர் ‘ஆட்டுக்குட்டி’ என்பது ‘ஆஷ்குக் குஷ்டி’ என்று ஆகாதா என்று தவங்கிடக்கும் கூட்டத்தாராகத்தான் இருக்க முடியும்.

தமிழ்வான் கலைச் சொல் மழைபொழியும்
தமிழ்க்கடல் விஞ்ஞானச் சொல்முத்துச் சொரியும்
தமிழர் வாழ்வு மேம்படும்’’

(புரட்சிக் கவிஞர் பாரதிதாசன், கலைக்கதிர் 1956, டிசம்பர்)

என்று கூறினார்.

**நம் தாய்மொழியில் அறிவியல் பாடங்களைக் கற்பிக்கும்பொழுது, ஆங்கிலத்துணையை நாடலாம். நம்மொழியிலே யாவற்றையும் கற்பிக்கத்தக்க நிலைமை ஏற்பட்டவுடன் ஆங்கிலத்தை விட்டு விடலாம். தாய்மொழியை ஒதுக்கிவிட்டு, வேறு மொழியில் அறிவியலைக் கற்று முதன்மை யடைந்து விளங்கும் நாடு ஒன்றேனும் உலகில் உண்டா? ஆகவே நமக்கு உரிய வழி தாய்மொழி வாயிலாகக் கற்றலே யாகும். இதுபற்றிக் கருத்துவேற்றுமை ஏற்பட இடமேயில்லை. நூல்களும் கலைச் சொற்களும் போதியனவாய் இல்லை என்ற குறையைப் படிப்படியாக நீக்கலாமேயொழிய உடனே நீக்குதல் முடியாது**

என்கிறார் பண்டிதர் கா.பொ. இரத்தினம் (கலைக்கதிர், 1956, டிசம்பர்.)

**15(1) ஆட்சித்துறைக்கான கலைச்சொல்லாக்க நடைமுறை**

ஆட்சித்துறையில் ஆங்கிலச் சொல்லைப் பயன்படுத்தும்போது ஆங்கிலத்தை மாதிரி தமிழ்மொழி பொருந்தாது என்று இன்றும் சிலர் கூறுவர்.

**மற்றமொழிகளில் கையாண்டுவரும் கலைச் சொற்களை நாம் பயன்படுத்திக் கொள்வது மிகத் தேவை. அவற்றை மொழிபெயர்ப்பது எளிதல்ல. மேலும் மொழிபெயர்த்த சொற்கள் அவ்விலாகாவிலுள்ள ஆங்கில நூல்களைக் கற்பதற்கு வசதி அளியாமலிருக்கும்**

என்கிறார் பேரா. கே.கே. பிள்ளை (கலைக்கதிர், டிசம்பர், 1956).

தமிழகத்தின் தலைமைச் செயலகம் முதல் மாவட்ட நிருவாகம் வரை முதலில் சில மாவட்ட அளவில் சோதனை ஓட்ட அடிப்படையில் ஆட்சித்துறையில் தமிழ் அறிமுகம் செய்யப்பட்டது. அதன் பொருட்டுப் பல்வேறு துறைகளுக்கான கோப்புகள், கடிதங்கள், அரசு ஆணைகள் தொடர்பானவை மொழிபெயர்க்கப்பட்டன. தமிழ் வளர்ச்சித்துறை ஒன்று தொடங்கப்பட்டது. அது பல்வேறு துறைகளின் விதிமுறைகள், படிவங்கள் ஆகியவற்றை மொழிபெயர்த்தளித்தது. ஆங்கிலச் சொற்களுக்கு இணையான தமிழ்ச் சொற்களையும் இத்துறை ஆக்கித்தந்தது.

1956இல், தமிழ்நாட்டில் ஆட்சிமொழிச் சட்டம் நிறைவேறியது. அதன் செயற்பாடாக 1957இல் ஆட்சிமொழிக் குழுவை அரசு அமைத்தது. ஆட்சிமொழிச் சட்டத்தை விரைவாக நடைமுறைப்

படுத்தும் வழிமுறைகளுக்கு வகைசெய்வது அதன் நோக்கமாகும்.[9] ஆட்சிமொழிக் குழுவில்;

1. என். வெங்கடேசுவரன் (1957–63)
2. சி.ஏ. இராமகிருட்டிணன் (1963–65)
3. வி.கார்த்திகேயன் (1965–68)

ஆகியோர் இடம்பெற்றிருந்தனர். இக்குழுவே பின்னர்த் தமிழ் வளர்ச்சி இயக்கமாக மாற வழிவகுத்தது. இதன்கீழ்த் தமிழ் வளர்ச்சி மன்றம் மற்றும் ஆராய்ச்சி மன்றம், தமிழ்ப்புத்தக வெளியீட்டுக் கழகம் அமைந்தன. 16.1.1958 முதல் தமிழ்நாடு அலுவலகங்களில் தமிழ் ஆட்சிமொழியானது. 1976–82களில் நீதிமன்றங்களிலும் 1.5.1966இல் விடுபட்ட சட்டம், நிதி மற்றும் நீதித்துறையில் மாவட்ட அளவிலும் தமிழ் ஆட்சிமொழியானது. மாநிலத்திலுள்ள அலுவலங்களில் தமிழ் ஆட்சி மொழித்திடம் செம்மையாக நடைபெறுவதைக் கவனிக்கத் தனி அலுவலர் அமர்த்தப்பட்டார். ஆட்சிச்சொல் அகராதி ஒன்றைச் சென்னை மாகாணத் தமிழ்ச்சங்கம் வாயிலாக இ.மு. சுப்பிரமணியம் பிள்ளைத் தயாரித்து அளித்தார். அதன் அடிப்படையில் ஆட்சிக் கலைச் சொற்கள் தொகுத்து, அரசு வெளியிட்டு, அது இன்றும் ஆறாம் பதிப்பாக வெளிவந்துள்ளது. 1965–66இல் சட்ட மொழிபெயர்ப் பிற்காக, தமிழ்நாடு (சட்ட) ஆட்சிமொழி ஆணையம் அமைக்கப் பட்டது. இந்த ஆணையம் மூலமாகச் சட்டத்துறையிலும் சட்டச் சொல்லகராதி 1968இல் வெளியிடப்பட்டது. அதன் மறுபதிப்பு 1983இல் வெளிவந்தது. அதன்பின் நாளது தேதி வரையிலான சட்டச் சொல்லகராதி இல்லை. அரசும் அதற்கான முயற்சியை மேற் கொள்ளவில்லை. 2010 சூனில் தமிழ் இணையப் பல்கலைக்கழகம் இந்த ஆய்வாளரையும் ஒரு வல்லுநராகக் கருதி அவர் உதவியுடன் 10ஆம் தொகுதியில் சட்டவியலுக்காக ஓர் அகராதியை வெளி யிட்டது. 1984 முதல் சட்டமன்றத்தில் ஆங்கிலச் சட்டமுன் வடிவோடு தமிழிலும் மொழிபெயர்த்து ஆயிரத்திற்கும் மேலான சட்ட முன்வடிவுகள் தமிழில் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் நிறைவேறி உள்ளன. 1973–74 முதல் சட்டக்கல்வி தமிழில் வழங்கப்பட்டு வருகின்றது. ஆனால் நல்ல பாடநூல்கள் போதிய அளவில் நாளது தேதி வரை அரசுத் தரப்பில் வெளிவரவில்லை.

ஆட்சிமொழி தொடர்பாக அரசு பல ஆணைகளையும் குறிப்பிட்ட மடல்களையும் (Memo) அலுவல் முறைசாராக் குறிப்பு களையும் (U.O. Note) வெளியிட்டது. ஆனால், அவற்றில் 85 விழுக்காடு ஆங்கிலத்திலிருந்தது. அதில் பின்வரும் பொருள் நிரல் காணப்பட்டது:

9. ஆட்சித் தமிழ், கீ. இராமலிங்கனார், 1977, சென்னைப் பல்கலைக்கழக அறக்கட்டளைச் சொற்பொழிவு.

1. அரசு அலுவலகங்களில் தமிழை ஆட்சி மொழியாகச் செயல்படுத்துதல்.
2. தட்டெழுத்தர், தட்டச்சு பற்றியது.
3. தமிழ் சுருக்கெழுத்து தொடர்பானது.
4. தமிழ் மொழியில் பயிற்சியும் தேர்வும்.
5. பணியமர்த்துதல்.
6. ஆய்வறிக்கை, முன்னேற்ற அறிக்கை.
7. நூல்களும் படிவங்களும் மொழிபெயர்த்தல்.
8. தலைமைச் செயலகத்தில் தமிழை ஆட்சிமொழி ஆக்குதல்.
9. சிறந்த வரைவுகளுக்குப் பரிசும் சான்றிதழும் வழங்குதல்.
10. நீதி மன்றங்களில் தமிழை நடைமுறைப்படுத்துதல்.
11. தமிழில் கையொப்பமிடல்.
12. எழுத்துச் சீர்திருத்தம்.
13. சாலை, தெரு, முதலியவற்றிற்குத் தமிழில் பெயரிடல் முதலியன.

மேற்கூறிய மொழித் திட்டமிடுதலின் காரணமாக அரசு தமிழ் வளர்ச்சியில் அதிக அக்கறை கொண்டது என்பது உறுதி.

7–9–1967இல் தமிழக அரசின் முதலமைச்சரான அறிஞர் சி.என். அண்ணாதுரை, மதுரைப் பல்கலைக் கழகப் பட்டமளிப்பு விழாவில் ‘‘தமிழ் ஆட்சி மொழியாக, எல்லாத் துறைகள் திகழ்வதற்கான சூழ்நிலையை உருவாக்குவதில் வெற்றி பெற்றிட எல்லாருடைய நல்லார்வமும் நிரம்பத் தேவை’’ என்று கேட்டுக் கொண்டார்.

> **ஆட்சித் துறையில் எல்லாப் பிரிவுகளிலும் தமிழையே பயன்படுத்த வேண்டும் என்பதே அரசின் நோக்கம். ஆனால், எதிர்பார்த்த அளவு வேகமாக இப்பணி நடக்கவில்லை. ஏனெனில் சில அலுவலர்களுக்குத் தமிழ் மொழி தெரியவில்லை. எனவே அலுவலர்கள் போதுமான தமிழறிவு பெறும்படிச் செய்ய அரசாங்கம் திட்டமிட்டுள்ளது. இனிச் சட்டப் பேரவையில் வைக்கப்படும் கோப்புகளும் குறிப்புகளும் தமிழிலேயேயிருக்க வேண்டுமென அரசாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது**

என்று 5.12.1978இல் முதல்வர் எம்.ஜி.ஆர். அறிவித்தார். இதை இன்றைய முதல்வரும் வற்புறுத்தியுள்ளார்.

தமிழை ஆட்சிமொழி ஆக்கும் நோக்குடன் செயல்படும் தமிழ் வளர்ச்சி இயக்ககம், பல தமிழ் ஆட்சிமொழி வளர்ச்சி தொடர்பான பணிகளுக்கிடையே தமிழ் ஆட்சிச் சொல் அகராதியைப் புதுப்பித்துத் தொடர்ந்து வெளியிட்டு வருவதாகும். ஆட்சி மொழியாகத் தமிழைப் பயன்படுத்துவதற்கு நான்கு நிலைகளிலான செயல்திட்டம் வகுக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. பொது மக்களுக்கு எழுதப்படும் அனைத்துக் கடிதங்களுக்கும் தமிழிலேயே மறுமொழி/ ஆணை பிறப்பித்தல் கட்டாயமாக்கப்பட்டுள்ளது. முதல்நிலை 1963ஆம் ஆண்டில் செயற்படுத்தப்பட்டது. இரண்டாம், மூன்றாம் நிலைகள் முறையே 1965, 1969 ஆகிய ஆண்டுகளில் நிறைவேற்றப் பட்டன. நான்காம் நிலை 1971ஆம் ஆண்டு முதல் அரசு செயலகத் துறைகளுக்கு எழுதப்படும் கடிதங்களுக்குத் தமிழில் மறுமொழி தெரிவிக்கப்படுதல் வேண்டும் என்பது நிறைவேறியது.

சில அலுவலகங்களில், தமிழ் வளர்ச்சித் திட்டம் செயல்படாத தற்கு, அதன் தலைமைப் பொறுப்பு வகிக்கும் இந்திய ஆட்சிப்பணி, இந்தியக் காவல் பணி அலுவலர்களுக்குத் தமிழ் தெரியாதது என அறியப்பட்டது. அத்தகைய அலுவலர்களின் பயிற்சிக்காலத்திலேயே போதிய தமிழ்க் கற்பிக்கும் திட்டம் வகுக்கப்பட்டது. இதற்கான பாடநூலையும் தக்க ஆசிரியர்கள் மூலம் தயாரித்துத் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வு ஆணையம் மொழித் தேர்வும் நடத்துகிறது. பல காலமாகப் பணியிலுள்ள தமிழ் அறியாத அரசுப் பணியாளர் களுக்கு மொழிப்பயிற்சி அளிக்கும் திட்டமும் தமிழக அரசால் நிறைவேற்றப்பட்டு வருகிறது. தலைமைச் செயலகத்தில் பணி இடையே அடிப்படை மொழிப்பயிற்சிகளும் (Foundation courses) வகுப்புகளும் நடைபெறுகின்றன. ஆட்சிமொழித் தேர்வு என்ற பெயரில் தமிழில் போதிய தேர்ச்சி இல்லாதவர்களின் பட்டியல் தயாரிக்கப்பட்டு, அவர்கள் தமிழில் வரைவுகளைச் செய்வதற்கும் மொழிபெயர்ப்பதற்கும் தேர்வுகள் நடத்தும் முறையை அரசு கடைப்பிடித்து வருகிறது. இவர்களின் தகுதிகாண் பருவத்திற்குள் (Probation Period) இத்தேர்வில் தமிழில் வெற்றிபெறாதவர்களுக்கு ஊதிய உயர்வு நிறுத்தப்படும் நிலையும் உள்ளது.

ஆட்சித்துறைக் கலைச்சொல்லாக்கத்தில் ஆங்கிலச் சொல்லுக்கு அகராதிகள், கலைக் களஞ்சியங்கள் காட்டும் பொருளைக் கொண்டு கலைச்சொல்லாக்கம் செய்வது சில

நேரங்களில் பொருத்தமாக வருவதில்லை. கலைச் சொல்லாக்கம் என்றால், மொழிபெயர்ப்பு, ஒலிபெயர்ப்பு, புதிதாக உருவாக்குதல் என்று மூன்று வகையான முறைகளை, ஆட்சித்துறை மொழிபெயர்ப்பாளர்களும் கலைச் சொல்லாக்குநர்களும் கையாண்டு வருதல் என்று பொருள்படும். ஆட்சித்துறைக் கலைச்சொல்லாக்க வரலாற்றில், மொகலாயர், ஆங்கிலேயர் வழிவந்த பிறமொழிச் சொற்களின் தாக்கம், தனித் தமிழ் இயக்க வளர்ச்சி யால் குறைந்து தமிழில் நல்ல ஆட்சிச் சொற்கள் உருவாகியுள்ளது கண்டு பெரும்பாலும் மக்கள் ஆதரவு பெருகியது.

## 15(2) பொதுமக்களுக்கான கலைச்சொல்லாக்க விளக்கம்

கலைச்சொற்களைப் படைப்போர், மொழித்திறனைப் பொறுத்தே கலைச்சொல்லாக்கம் நடைபெறுகிறது. இதற்கு அந்த அந்தக் காலமொழி நிலையும் மக்களின் மொழித் தரமும் ஆகியவையும் மிக முக்கிய இடம்பெறுகின்றன.

> **முனிவர்களும் சித்தர்களும் மக்கள் எளிதில் அறியாத வடமொழியிலும் தமிழிலும் தத்துவ ஞானங்களைப் படைத்தனர். ஆனால் அதே தத்துவ ஞானத்தைப் புத்தர் மக்கள் வழக்கில் இருந்த பாலிமொழியில் தெரிவித்தார். அப்போது சில சொற்கள் மட்டும் குறியீட்டுச் சொற்களாக வடமொழியிலோ, அதன் சிதைவிலோ இருக்கும். ஆனால், கருத்து களைக் கூறும் மொழிகள் பேச்சுமொழியாகிய பாலி மொழியில் இருக்கும். இந்த முறையைப் பிற நாடுகளிலும் காண்கிறோம்**
>
> (கலைக்கதிர், 1956, டிசம்பர்)

என்றும்,

> **விஞ்ஞானக் கலைச்சொற்களைத் தூய்மையான தமிழிலேயே போதிக்க வேண்டும் என்பது நமது அவா. அது நல்லது தான். ஆனால் செயல் முறையில் வருமா என்பது ஒருபெருத்த கேள்வி. சில ஆண்டுகளுக்கு முன்னர் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் விஞ்ஞான நூல்களை முற்றும் மொழிபெயர்த்தார்கள். அவை எம்மட்டும் பயன்பட்டன என்பதுதான் மிகச்**

சிக்கலான கேள்வி. தமிழ்க் கல்விக்குத் தனித்தமிழ்தான் வேண்டும். அதில் வடமொழி, பிறமொழி இவைகளைக் கலப்பது சரியன்று. ஆனால் வெளியிலிருந்து வரும் விஞ்ஞானத்திற்கு வெளிமொழிகள்தான் தக்க பயன்தரும். ஆனால், நாட்டில் இளைஞர் களுக்கு எளிதில் உணர்த்துவதற்கு மணிப்பிரவாளமே பயன்படும்.

என்றும்,

புதிய கருத்துக்களைக் குறிக்கும் சொற்கள் தமிழில் இல்லை என்று வருந்த வேண்டாம். அந்தக் குறையைப் போக்கப் புதிய சொற்களை ஆக்குதலும் வேண்டாம். அது தவறு ஆகும். விஞ்ஞானம் வளர்ந்த மேல்நாடுகளிலெல்லாம் விஞ்ஞானக் கருத்துகளைக் குறிக்கும் சொற்களைப் பல நூற்றாண்டுகளாக ஆய்ந்து அமைத்து அவைகளையே பின்பற்றுகின்றனர். அவர்கள் முடிவுசெய்து அந்தக் குறியீட்டுச் சொற் களையே (International Terms) நாமும் பின்பற்றுவது நன்மை பயப்பதாகும். எ.டு. Electron என்பதை 'எலெக்ட்ரான்' என்றே ஆங்கிலம், பிரெஞ்சு, செர்மன், ரஷ்யன் போன்ற மொழி வழங்கும் நாடுகளிலெல்லாம் குறிக்கப்படுகிறது. 'Hydrogen' என்பதும் அவ்வாறே குறிக்கப்படும். அவ்விதம் இல்லாமல், எலெக்ட்ரான் மின்னணு என்றும் ஹைட்ரஜன் என்பதை 'நீரகம்' என்றும் குறிப்பதனால் நன்மையில்லை

என்றும் கோவைக்கிழார் கூறுகிறார்.

## திசைச்சொற்கள்

நம் மொழியில் கற்று அறிவு பெற்ற மாணவர் பிற நாட்டாருக்கு அவரவர் துறையில் அவர்களுடைய கருத்துகளை எளிதில் தெரிவிக்கவும் பிறருடைய கருத்துகளை இவர்கள் அறிவதற்கும், ஆராய்ச்சியில்

(Research) ஈடுபடுவதற்கும், நம் நாட்டு அறிஞர்கள் பிறநாடுகளிலும் பலதுறைகளிலும் பணியாற்றுவதற்கும் நாம் வகை செய்ய வேண்டுமானால், உலகோர் ஒப்புக்கொண்ட கலைச்சொற்களையே வைத்துக் கொண்டு நமது இளைஞர்களுக்குக் கல்வி வழங்க வேண்டும். இவ்வாறு பிறசொற்கள் தமிழில் கலப்பதால் தமிழ் மாசுறும் என்று அச்சம் வேண்டியதில்லை. அச்சொற்கள் எல்லாம் திசைச் சொற்களின் பாற்படும்

(கலைக்கதிர், ப.70–71 1956. டிசம்பர்)

என்கிறார் பேரா. ஶ்ரீராமன்.

தமிழில் கலைச்சொற்களை உண்டாக்கி அம்மொழியை வளர்ப்பது என்பது ஒருநிலை. அம்மொழியைப் போதனைக் கருவியாக்குவது என்பது மற்றொரு நிலை. பின்னதை மேற் கொண்டால், முன்னது தானே நிகழும். அவ்வாறு செய்யாது, 'கலைச்சொற்கள் இல்லையே' என்று கையை விரிப்பது தெளிந்தோர் செயலாக மாட்டாது.

தொடக்கத்தில் இன்று வழங்கும் அனைத் துலகக் கலைச்சொற்களை, ஆங்கிலத்தில் உள்ளது போலவே அப்படியே ஏற்றுக்கொண்டு விடவேண்டும். நாளடைவில் அவை மாற வேண்டிய நிலை ஏற்பட்டால் அப்பொழுது மாறிக் கொள்ளட்டும்.

தமிழ் மரபு: ஆனால், அப்படி கலைச்சொற்களை ஏற்றுக்கொள்ளும்போது, ஒன்றை நன்கு மனதில் பதிய வைத்துக்கொள்ள வேண்டும். தமிழ்மொழி மரபுக்கேற்ப அச்சொற்களைத் தழுவிக்கொள்ள வேண்டும் என்பதுதான் அது. உதாரணமாக:

1. Hearing - ஈரங்கி
2. Summon - சமன்
3. Serve - சார்வுசெய்

4. Bank - வங்கி – பாங்கு
5. Motor - மோட்டார்
6. Cement - சிமிட்டி/சிமிந்து
7. Lantern - லாந்தர்/லாந்தரணை
8. Almirah - அலமாரி
9. Kettle - கேத்தல்
10. Bottle - போத்தல்

இவையெல்லாம் மக்களால் இயல்பாகவே அமைத்துக் கொள்ளப்பட்டவை. இன்று வெகு வழக்கமாய் எங்கணும் பயிலப்படுகின்றன என்று மக்களுக்கான கலைச்சொல்லாக்கம் பற்றிப் பேசுகிறார், அறிஞர் சா. கணேசன்

(கலைக்கதிர், ப.74–76, டிசம்பர், 1956)

இன்னும் ஓர் எ.டு. பிறநாடுகளிலிருந்து புதிது புதிதாகக் கண்டுபிடிக்கப்படும் விஞ்ஞானக் கருவிகள், எந்த நாட்டில் கண்டுபிடிக்கப் பட்டனவோ, அந்த நாட்டுக்குரிய மொழியில் பெயர்தாங்கி நம் தமிழ்நாட்டுக்கு வருகின்றன. சான்றாக 'ஏரோப்ளேன்', மேல்நாட்டில் கண்டுபிடிக்கப்பட்டது. அதை நம் நாட்டில் 'ஆகாய விமானம்', என்ற பெயரால் அழைக் கின்றனர். ஆகாய விமானம் என்பது தமிழ்ச் சொல் அல்ல, வடமொழிச் சொல்; தமிழில் 'வானூர்தி' என்றே அழைத்தல் வேண்டும். இப்படிச் சொன்னால், குறுகிய மொழிப்பற்று என்று குறை கூறுகின்றனர். ஆனால், 'ஏரோப்ளேன்' என்ற ஆங்கிலச் சொல்லானது, ஆகாயவிமானம் என்று வடமொழியில் பெயர்க்கப்படுவதில் குறுகிய மொழிப்பற்று இல்லையானால், அதை 'வானூர்தி' என்று தமிழில் அழைப்பது மட்டும் எப்படிக் குறுகிய புத்தியாகும்?

(இன்பத்தமிழ்) ஏரோப்ளேன் – ஆகாய விமானம் – வானூர்தி என்கிறார் சிலம்புச் செல்வர் ம.பொ.சி.

**தமிழில் விஞ்ஞானக் கல்வி – விதிகள்**

1. புதிய கலைச்சொல் ஒன்றைப் பயன்படுத்தும்போது முதல் முறையில் ஆங்கிலத்திலும் அதைப் (பிறைக் குறிக்குள்) எழுதி பின்னர் அதே சொல்வரும் பொழுதெல்லாம் தனியே தமிழ்ச் சொல்லை மட்டும் குறிப்பிடுவதும் ஒரு நல்ல முறை.

2. **மொழிபெயர்ப்பில் நூல் எழுதும் முறை :** வெளிநாட்டார் விஞ்ஞான நூல்களை எழுதும் முறையையும் இங்கே தெரிவிப்பது பொருந்தும். உரிய நூலுக்குத் தொடர்புடைய விஞ்ஞானப் பகுதியை அறிந்தவர் ஒருவரும், மொழித் துறையில் பயிற்சியுடைய ஒருவரும் ஆகிய இருவரும் சேர்ந்து கூட்டாகவே இத்தகைய நூல்களை எழுதுவது வழக்கம். இந்த முறையைத் தமிழ் எழுத்தாளர்களும் பின்பற்றினால் தான் தமிழில் வெளிவரும் விஞ்ஞான நூல்கள் சிறப்பாக அமையும்.

3. **முக்கிய நோக்கம் :** விஞ்ஞானக் கருத்து, படிப்பவருக்குத் தெரிய வேண்டும் என்பதுதான் முக்கிய நோக்கமாக இருக்க வேண்டும்.

4. **நடை அழகு முக்கியமல்ல :** இலக்கியச் சிறப்பையோ நடை அழகையோ பெரிதாக எண்ணிக் கருத்து விளக்கம் தடைப்பட விடலாகாது.

5. **மக்கள் மொழி :** மேனாடுகளில் விஞ்ஞான நூல்கள் இருவகையாக எழுதப்படுகின்றன. அக்ஸ்லி, திண்டால் திரைடன் போன்றவர்கள், பொதுமக்களுக்காக எளிய நடையில் அந்தந்த மொழியில் அமைக்கப்பெற்ற கலைச் சொற்களுடன் விஞ்ஞான நூல்களை எழுதுகின்றார்கள். இதனால் வேற்று மொழி அறிவில்லாத மக்களும் விஞ்ஞான அறிவு பெற வழி ஏற்பட்டிருக்கிறது.

6. **ஆய்வுநடை – உலகக் கலைச்சொல்**

   மற்றொரு வகையான நூல்கள் மாணவர்க்கும் ஆராய்ச்சியாளர் களுக்கும் பயன்படும் வகையில் எழுதப்பெறுகின்றன. இவ்வகை நூல்களில் பல நாடுகளிலும் வழங்கும் பொதுவான கலைச் சொற்களை (International Technial Terms) பயன்படுத்தப் படுகின்றன. இவ்வகைக் கலைச்சொற்களோடு விஞ்ஞானம் படித்த மாணவர்கள் பிற்காலத்தில் வேற்று மொழிகளில் வெளிவரும் ஆராய்ச்சி நூல்களைப் படிப்பது எளிதாகும்.

7. **புதுப்பெயர்கள் ஆக்கம்:** விஞ்ஞான நூல்கள் தமிழில் மேலும் பெருகுவதற்கு இடராக இருப்பது நம் மொழியில் கலைச் சொற்கள் இல்லாமையேயாகும். உரிய பொருள் நம் நாட்டில் கண்டுபிடிக்கப்படும்போது அல்லது தோன்றும் போது ஏற்ற சொற்களும் அமைந்துவிடும். நம் நாட்டில் கண்டறியப் படாத பொருள்களுக்குப் பல சொற்களைச் சேர்த்தே புதுப்பெயர்களை ஆக்க வேண்டும். 'நெய்' என்னும் பொருள் நம் நாட்டில் இருக்கிறது; மேலைநாடுகளில் இத்தகைய ஒருபொருள் இல்லை. குளிர் நிறைந்த நாடுகளாக இருப்பதால், அங்கு 'நெய்' வேண்டுவதில்லை அல்லவா? பொருள் இல்லாததால், 'நெய்' என்னுஞ்சொல்லும் அந்த நாடுகளில் இல்லை. எ.டு. Ghee என்னும் சொல் பிற்காலத்தில் ஏற்பட்டது. அது வெளிநாடுகளில் வழக்கில் இல்லை. அந்த நாட்டு மக்கள், 'வெண்ணெய்' அறிவார்கள் ஆதலால் நெய்யைக் குறிப்பதற்கு உருக்கிய வெண்ணெய் (Melted Butter) என்றே அவர்கள் இன்றும் சொல்லி வருகிறார்கள். அதே போன்று Milk – பால் என அறிந்தவர் மோரை, Butter Milk என்று கூறினர். முருங்கைக்காய் மேனாட்டில் இல்லை; எனவே அதற்கு ஆங்கில மொழியில் சொல் இல்லை. அதன் உருவத்தைப் பார்த்து (பறைத்தடி – Drumstick) என்று ஆங்கிலத்தில் பெயரிட்டனர். இவ்வாறே வெண்டைக்காய்; அதன் உருவத்தால் பெண்விரல் Lady's finger ஆயிற்று.

8. ஆகையால் நம் நாட்டில் கலைச்சொற்களை ஆக்கும் போது தமிழ் மட்டுமே அறிந்த மக்களுக்குப் புரியும்படி நாம் கலைச் சொற்களை அமைப்பதே அறிவுடைய செயல் ஆகும். எ.டு. 'ஆக்சிஜன்' என்றோ 'கான்ஸ்டிடுவன்ட் அசெம்பிளி' (Constituent Assembly) என்றோ எழுதினால், இச்சொற்கள் ஆங்கிலம் அறிந்த தமிழ் மக்களுக்கு மட்டுமே பயன்படும் அன்றோ.

8. பிறமொழிச் சொற்களைப் பயன்படுத்துவதைக் குறைத்தல், அந்த இடத்தில் தானாகவே நம்மொழியில் கலைச் சொற்கள் அமைந்துவிடும். இது இந்தோனேசியாவில் அனுபவம் வாயிலாகக் கண்டறிந்த உண்மை. அந்த நாட்டில் 1942–45 வரை சப்பானியருடைய ஆட்சி நடை பெற்றது. அப்போது டச்சு, ஆங்கிலம் ஆகிய மொழிகள் தடை செய்யப் பட்டிருந்தன. அதன் பயனாக அந்த மூன்று ஆண்டுகளில்

இந்தோனேசிய மொழி வளர்ச்சி அடைந்தது. டச்சு மொழியில் வழங்கிய சொற்களுக்குப் பொருத்தமான சொற்கள் இந்தோனேசிய மொழியிலும் அமைந்தன என்று சோமலே மொழிகிறார் (கலைக் கதிர், ப.79–8, டிசம்பர், 1956)3

## சட்டத் தமிழாக்க நோக்கம்

சட்டங்களை மொழிபெயர்க்கும்போது, கீழ்க்கண்ட குறிக்கோள் களைக் கருத்தில் கொண்டிருந்தார் நீதிபதி சு. மகராசன்:

1. மொழிபெயர்ப்பு, சட்டம் பயிலும் சராசரி தமிழனுக்காவது புரியும்படி யிருக்கவேண்டும்;
2. நுணுக்கமான சட்டக்கருத்துகளிலிருக்கும் திருகு முறுகல்களைத் தவிர்க்க முடியாது என்றாலும், கருத்துகளைத் தமிழ்ச் சொல்லிலேயே சொல்லும்போது, சொல்லில் சிக்கல் விழாமலும் அதன்மூலம் குழப்பம் ஏற்படாமலும் தவிர்க்க முயன்றிருக்கிறார்;
3. தெளிவைத் தியாகம் செய்யாமல், சொற்களுக்குச் செறிவைக் கொடுக்க முனைந்திருக்கிறார்.

சட்டமொழிபெயர்ப்பில் வழக்கொழிந்த சொற்களைத் தவிர்த்துவிட்டு, பழகு தமிழிலேயே இம் மொழிபெயர்ப்புகளைச் செய்துள்ளார். (தமிழாக்கம் ஒருவிளக்கவுரை – தமிழ்நாடு (சட்டத்துறை) ஆட்சி மொழி ஆணையம் – 1976).

சட்டச் சொற்பொருட்களஞ்சியம்,

> **இத்தகைய அகாரதிகளைப் பற்றி எழக்கூடிய தவறான கருத்துக்களை முதற்கண் நீக்குவது அவசியமாகும். சட்டச்சொற்கள் சாதாரண மக்களும் உணர்ந்து கொள்ளத்தக்க எளிமை யாய் இருக்க வேண்டுமென்பதில்லை. பல சட்டச்சொற்கள் அவற்றின் ஏகப்பொருளில் பொது மக்களால் பயன்படுத்தப்படலாமா ணாலும், பொது மனிதன் அவற்றை எப்போதும் முற்றிலும் சரியான பொருளில் வழங்க வேண்டுமென்பதில்லை. எனவே எளிதில் புரிந்து கொள்ளக்கூடிய சொற்களையே உருவாக்க வேண்டுமென்ற முயற்சி..... உறுதியான அடிப்படையாக அமையாது**
>
> (சட்டச் சொற்பொருட் களஞ்சியம் – முதற் பகுதி A – H 7–4–1967)

என்கிறார் முன்னாள் தலைமை நீதிபதி மா. அனந்த நாராயணன்.

### முடிவுரை

மேற்கூறிய இரு நீதிபதிகளின் சட்ட மொழிபெயர்ப்பிற்கான சொல்லாக்கக் கொள்கை பற்றிய செய்தி நன்கு கவனிக்கத்தக்கது.

பொதுமக்களுக்கான கலைச் சொல்லாக்க முயற்சி சட்டம், அறிவியல், தொழில்நுட்பத் தொழிலில் எவ்வாறு அமைய வேண்டும் என்பதற்கான அணுகுமுறையே இக்கட்டுரைப் பிரிவு.

## 16. கலைச் சொல்லாக்க விதிமுறைகள் – முன்னுரை

இயல்பாகவே ஒவ்வொரு மொழியிலும் புதிய சொற்களைப் படைப்பதற்கு இருவழிகள் காணப்பட்டுள்ளன. இது மொழியில் மட்டுமல்லாது, மனித வளர்ச்சி நிலைகளில் அகவளர்ச்சி, புற வளர்ச்சி என்று மானிடஇயலார் பகுத்துக்காட்டுவர். 1) அகவளர்ச்சி என்பது தமிழ்மொழியைப் பொறுத்த மட்டில், உள்நிலை சொந்தக் கூறுகளைக் கொண்டு புதிய சொற்களை உருவாக்குதல். இதை உள்நிலை ஆக்கம் என்பர். தமிழ் மக்களால் உருவாக்கப்பட்ட கருத்துகளையும் அறிவியல் கண்டுபிடிப்புகளையும் சுட்டுவதாகும். 2) புற வளர்ச்சி என்பது பிறநாட்டினர் அல்லது பிற மொழிபெயர் தேயத்தாரின் கருத்துகளையும் கருவிகளையும் கடன் பெறுவது. இதை மொழியில் கடன்வாங்குதல் என்பர். சொல்லாக்குநர்களின் உலகில் மூன்று பிரிவினர் உண்டு. முதல் வகையினர் உள்நிலை ஆக்கத்தில் தாய்மொழிக்குள்ளேயே கலைச்சொற்களை ஆக்க விழைவோர். இரண்டாம் வகையின் உள்நிலை ஆக்கத்தையும்கடன் வாங்குதலையும் ஏற்பவர்கள். மூன்றாம் வகை/பிரிவினர் அயல்மொழிக் கலைச் சொற்களை அப்படியே கடன்வாங்கி ஆளும் மனத்தினர்.

சொல்லாக்கம், மூன்று விதிமுறைகளின் கீழ் அமைவது 1. மொழிபெயர்ப்பு ஆக்கம் 2. புதுச்சொல் ஆக்கம் 3. ஒலிபெயர்ப்பு ஆக்கம்

### விதிமுறைகள்

மேற்கூறிய மூன்று விதிமுறைகளின்படி சட்டம், அறிவியல், தொழில்நுட்பம் ஆகிய துறைகளும் கலைச்சொற்களை உருவாக்குவதற்கு முனைப்புடன் செயல்படுகின்றன.

சொல்லாக்கத்தில் பின்வரும் நெறிமுறைகள் பின்பற்றப் படுதலை நாம் இன்று நடைமுறையில் பலதுறைகளில் கண்கூடாகக் காணலாம்.

1. உலக வழக்குச் சொற்களைத் தவிர்த்தல் கூடாது.
2. சொல்லாக்கத்தில் கடன் வாங்குதல் உலக அளவில் ஏற்புடையது.
3. பழந்தமிழ் இலக்கியங்களை ஆய்ந்து
   அ. இன்றைய தேவைக்கேற்பப் பயனுள்ளவற்றைத் தொகுத்தல்.
   ஆ. தற்கால இலக்கியங்களில் குறிப்பாகத் திரைப்படப்பாடல் முதலியவற்றிலிருந்து சொற்களைத் தொகுத்தல்.
4. மக்கள் தொடர்பியல் சாதனங்கள் வழி அறிமுகமான சொற்களைத் தொகுத்தல்.
5. பிறமொழித் துறைச் சொற்களை மொழிபெயர்த்தல்.
6. வேறுவழியில்லாத போது புதுச் சொற்களை உருவாக்குதல்.
7. நாட்டுப்புறப் பாடல்கள் மற்றும் வட்டாரப் பேச்சு வழக்குச் சொற்களிலிருந்து கலைச்சொற்களைத் தொகுத்தல்.

## 16:1 அயல்நாடுகளில் கலைச் சொல்லாக்கப் பணி

'கலைச் சொல்லாக்கம்' என்பது தமிழில் புதிதன்று. காலந்தோறும் தமிழில் பிறமொழிச் சொற்கள் கலந்து மணப்பிரவாள நடையை உருவாக்கியது. 1847இல் யாழ்ப்பாணத்தில் ஒரு மருத்துவக் கல்லூரி நிறுவப்பட்டுத் தமிழ் வழி மருத்துவம் கற்பிக்கப்பட்டது. அதில் பேராசிரியரான டாக்டர் சாமுவேல் ஃபிஷ்கிரீன் மனுஷ அங்காதிபாதம், கெமிஸ்தம் என்று Human Anatomy, Chemistry ஆகிய ஆங்கில நூல்களைத் தமிழில் மொழிபெயர்த்தார். மேலும் உடலியல் கலைச் சொற்கள் (Physilogical Vocabulary) மருத்துவக் கலைச் சொற்கள் (Vocabulary of materia medica) ஆகிய இரு கலைச்சொல் அகரமுதலிகளையும் வெளியிட்டார். அவர்தாம் இயற்றிய மொழிபெயர்ப்புகளில் பின்வரும் நெறிமுறைகளைச் சொல்லாக்கத்தில் பயன்படுத்தினார்.

1. வழக்கில் அச்சொல் உண்டா என்று கவனிக்க வேண்டும்.
2. தனிச்சொற்களை இணைத்துத் தொகைச் சொற்களாக்கவும்.
3. பின்னொட்டு முன்னொட்டுச் சேர்ந்துச் சொல்லாக்கவும்.
4. ஒரு பகுதியான முன்னொட்டுடன் சேர்த்து வேறுபடுத்தவும்.
5. மூலநூலான ஆங்கிலத்தில் பயனுள்ள கலைச்சொல்லைத் தெரிவு செய்யவும்.

6. ஒரு பொருள் பல சொற்களும், ஒரு மொழிக்குப் பல பொருள் சொற்களும் இனங்களையும், அடையாளங் காணவும்,

7. ஆங்கில வாக்கியங்களைப் பிரித்து மொழிபெயர்க்கவும்,

8. முழுமையான/சரியான தமிழ்ச்சொல் தமிழில் இல்லாவிட்டால், பின்கண்ட சில விதிகளுக்குட்பட்டு, பிறமொழியான சமஸ்கிருதத்தில் தெரிவு செய்யவும்.

   i. ஆங்கிலம் சமஸ்கிருத அகராதியில் பார்த்து அதிலே தெரிந்து தெரிவு செய்யவும்.

   ii. சமஸ்கிருத – ஆங்கில அகராதியில் தக்க சொல்லைத் தேடவும்.

   iii. இவ்விரண்டு அகராதிகளையும் ஒப்பிட்டு ஆய்வு செய்து தக்க சொல்லைத் தெரிவு செய்யவும்.

   iv. பெயர்ச் சொற்களுக்கு உரிய சொல் இல்லாதவிடத்து, அப்பொருளில் ஒன்றை உள்ளடக்கிக் கொள்ளவும்.

v. தமிழ்ச் சொற்களில் சிலவற்றை இணைத்துச் சேர்த்து ஓர் சொல் உருவாக்கவும்.

vi. பின்னொட்டு முன்னொட்டுப் பகுதி விகுதி சேர்த்து ஓர் சொல்லாக்கம் மேற்கொள்ளவும்.

vii. ஆங்கில மூலநூலில் சிறந்த பயனுள்ள சொல்லைத் தேர்ந்தெடுக்கவும்.

viii. தமிழ் சமஸ்கிருதச் சொற்றொடர்களைத் தேவையான இடத்தில் சேர்த்து வழங்கவும்.

ix. மூல ஆங்கிலத் தொடர்களை வெவ்வேறாய்ப் பிரித்து மொழிபெயர்த்து அதற்குச் சரியான தொடர்மொழியாய் தமிழில் இணைக்கவும்.

**பல்துறை அறிஞர்களின் சொல்லாக்க விதிமுறைகள்**

**1. அறிஞர் ஜி.ஆர். தாமோதரன்**

> **கலைச்சொற்களைத் தமிழில் ஆக்காமல், அப்படியே வைத்துக் கொள்வது நல்லது. கலைச் சொற்களை எந்தக் குறிப்பிட்ட மொழிக்கு உரியனவாகத் தேவையில்லை.**

> உலகம் முழுவதிலும் ஒரே கலைச் சொல் தொகுதி இருப்பது அயல்நாடுகளில் மேற்படிப்புப் படிக்க உதவும்.

2. தமிழறிஞர் ஞா. தேவநேயப் பாவாணர்

> எல்லாக் கலைநூற் குறியீடுகளையும் தக்க அறிஞரைக் கொண்டு தமிழில் ஆக்கிக் கொள்வதே சிறப்பு. தமிழ் என்னும் பெயரால் பிறமொழிச் சொற்களை ஆள்வது, அறியாமையும் அடிமைத்தனமும் ஆகும். தமிழ் என்பது தனித்தமிழே. கலவை மொழியை விரும்புவார் தமிழ்ப்பற்று உண்மையானதன்று

என்று அண்ணாமலைப் பல்கலைக் கழக—திராவிடமொழி ஆராய்சித் துறை வாசகர் ஞா. தேவநேயப் பாவாணர் கூறியுள்ளார். (கலைக்கதிர், டிசம்பர், 1956)

3. மேனாள் அரசவைக் கவிஞர் நாமக்கல் வை. இராமலிங்கம் பிள்ளை

> விஞ்ஞானத்திற்கு வேண்டிய கலைச்சொற்கள் பிரதேச மொழியில் இல்லை என்பதற்காகக் காத்திருக்காமல், தகுந்தகாலச் சொற்கள் பிரதேச மொழியில் உருவாகிற வரைக்கும் ஆங்கிலச் சொற்களையே உபயோகிக்கலாம். . . . . காலப்போக்கில் இச்சொற்களுக்குச் சரியான தமிழ்ச் சொற்கள் பழக்கத்துக்கு வரலாம். உதாரணமாக 'ரேடியோ' என்ற ஆங்கிலச் சொல்லுக்குச் சரியான பதமாக 'வானொலி' என்று வழங்கி வருகிற இந்த 'வானொலி' என்ற சொல் விஞ்ஞான அறிவுக்குப் பொருந்தியதா யமைந்திருக்கிறது
>
> (ப.24–25) கலைக்கதிர், டிசம்பர் 1956

என்று கூறியுள்ளார்.

4. டாக்டர் மு.வ. – கடன் வாங்குதல்

> விஞ்ஞானப் பாடங்களுக்கு உரிய கலைச் சொற்கள் தமிழில் இல்லாத – போதியனவாக இல்லாத – காரணத்தால், ஆங்கிலத்திலேயே

> கற்பிக்க வேண்டும் எனச் சிலர் கூறுகின்றனர். கலைச்சொற்கள் எல்லாம் ஆங்கிலச்சொற்கள் அல்ல; ஆங்கிலமும் அவற்றுள் பெரும்பாலான வற்றைக் கடன் வாங்கியே பயன்படுத்துகிறது. நாமும் இப்போது அவ்வாறே செய்யலாம். கலைச் சொற்கள் இல்லாத காரணத்தால் தமிழில் கற்பித்தல் முடியாது என்றும் கூடாது என்றும் எண்ணுவது பொருந்தாது. பாடப் புத்தகங்கள் இல்லை என்ற காரணத்தாலும் இந் நிலையை நீட்டிக்கக் கூடாது. இதுவரையில் தமிழில் பாடப்புத்தகங்கள் ஏற்படாத காரணம் இரண்டு 1. தேவை இல்லை 2. திறமை இல்லை. கல்லூரிகளில் தமிழில் கற்பித்தலை இன்று தொடங்கித் தேவையை ஏற்படுத்தி, திறமையை வளர்க்க வேண்டும். பொறியியல் (Engineering) முதலான எந்தக் கல்லூரியிலும் இந்த முறையைக் கையாண்டால்தான், ஒரு மொழியை அறிவுமொழியாக்க முடியும்; அந்த மொழியால் நாட்டு மக்களும் பயன்படமுடியும்.

என்று கூறியுள்ளதைக் கவனிக்க.

5. டாக்டர் இராஜம்மாள் தேவதாஸ்

> விஞ்ஞானம், தொழிற் கல்வி முதலிய பிரிவுகளில் கலைச்சொற்களிற் பெரும் பகுதி ஆங்கிலத்திலிருந்து பிறந்தன. தாய்மொழியில் எல்லாப் பருவங்களிலும் கல்வி கற்பிப்ப தென்று ஒரு திட்டவட்டமான முடிவு செய்து அதை நடைமுறைக்குக் கொண்டுவர வேண்டிய முயற்சிகள் செய்யும்பொழுது இன்று ஆங்கிலத்தைக் கைவிட்டுவிட்டால், புத்தகங்களுக்கு எங்கு செல்வது, கலைச் சொற்களுக்கு என்ன செய்வது என்ற தயக்கங்கள் தாமாகவே தீரும். ஆனால், சோவியத் ரஷ்யாவிலுள்ள குடியரசுகளில் 58 மொழிகளிற் பாடம் கற்பிக்கப்படுகிறதென்றால், நமது நாட்டின் நிலைமை அவ்வளவு சிரமமான தல்லவே (ப. 72–73 கலைக்கதிர், டிசம்பர், 1956)

என்கிறார்.

**6. பேரா. ரா.பி. சேதுப்பிள்ளை (1.3.1946)**

> **கலைச்சொற்களை ஆக்கும் பணியில் இப்பொழுதே தமிழறிஞர் தலைப்படல் வேண்டும். கலைச் சொல்லாக்கம் வேகமாகச் செய்யக்கூடிய வேலையன்று. பல்லாற்றானும் பழுதறப் ஆராய்ந்து, தமிழின் நீர்மைக்கு ஏற்றவாறு கலைச்சொல்லைக் காணுதலே தமிழ்மொழிக்கு ஆக்கம் தருவதாகும்.**

சொல்லின் செல்வர் அவர்களின் 'Words and their Significance' என்று பெயரிட்டுச் சென்னைப் பல்கலைக்கழகம் வெளியிட்ட நூலில் சொல்லாட்சி பற்றி அவர் சிறப்பாகப் படைத்துள்ளார். 'ரா.பி.சே' என்றாலே 'ஊரும் பேரும்' என்ற நூலே பலர் கண் முன் நிற்கும். தமிழ் மொழியின் சொல்லாக்க நிலையை இவர் பலகட்டுரைகளிலும் நூல்களிலும் விவரித்துள்ளார்.

**அறிஞர் பா.வே. மாணிக்க நாயக்கரின் சொல்லாக்க முறைகள்**

இவர் பல ஆங்கிலச் சொற்களுக்கும் சொற்றொடர்களுக்கும் நல்ல தமிழ் நிகரிகளைக் கொடுத்த பெருமைக் குரியவர். இவரின் கலைச்சொல்லாக்க நெறிமுறைகள் பின்வருமாறு:

1. கலைச்சொற்கள் வெறும் குறியீடாகவோ ஒருபுடை விளக்கமாகவோ அமைதல் கூடாது. அவை அறிவியல் நெறியின் பாற்பட்டனவாக ஆக்கப்படுதல் வேண்டும்.

2. கலைச்சொல்லாக்கத்தில் வினை அடிப்படைச் சொற்களையே (Verbal roots) இன்றியமையாதன என்பது குறிப்பிடத் தகுந்தனவாகும்.

தமிழுக்குத் தொண்டாற்றிய விபுலானந்த அடிகள், 1956இல் கலைச்சொல்லாக்க மாநாட்டிற்குத் தலைமை தாங்கி உரையாற்றிய போது சொல்லாக்க நெறிகளைக் கீழ்க்கண்டவாறு வகைப் படுத்தினார்:

1. பிங்கலம், திவாகரம், சூடாமணி ஆகிய நிகண்டுகளில் கண்டுள்ள பதங்களைக் கையாளுதல்.

2. ஓரினப் பொருள்களைக் குறிக்கும் தமிழ்ச் சொற்களை வழக்காற்றிற்கேற்ப ஒருவிகுதி பின்னொட்டுடன் அமைத்தல் வேண்டும். முரண்பாடான இனச் சொற்களை ஒருபிரிவாக அமைத்தல் வேண்டும்.

3. தமிழறிஞர்களால் தமிழில் உருவாக்கப்பட்ட சமஸ்கிருதச் சொற்களை ஏற்றல் வேண்டும்.

4. யாழ்ப்பாணத்தில் சாமுவேல் கிரீன் பின்பற்றிய சொற்களை ஏற்றல் வேண்டும்.

**7. தமிழறிஞர் பாவாணர் கண்ட சொல்லாக்க விதிமுறைகள்**

முன்பகுதியில், இந்தப்பிரிவில் இவரின் மொழிக் கொள்கையைக் கண்டோம். அதை ஒட்டி அவருடைய சொல்லாக்க விதிமுறைகள் வருமாறு:

1. விகுதி தற்போது மொழியியலில் அது பின்னொட்டு எனப்படுகிறது. பின்னொட்டால் ஆக்குவது – (Bacteria– குச்சு+சில் = குச்சில்)
2. நேர்சொல் தெரிவு (Mail) – அஞ்சல்
3. மொழிபெயர்ப்புவழிப் படைத்தல் (Duodenum - பன்னிறம்)
4. வேர்ப்பொருள் சொல் ஆக்கம் – Pen – (தூவி) தூவல் சீவல் பாக்கினைச் சீவிச் சீவி தயாரிப்பதால் அதற்குச் சீவல் ஆகியது.
5. சிறப்புச்சொல் – நிகரி – Cycle - ஈருளி – மிதிவண்டி
6. ஒலிபெயர்ப்பு: Electron - எலெக்ட்ரான்

**8. ஸ்ரீராம கிருஷ்ண விஜயம் ஆசிரியர் சுவாமி பரமாத்மாநந்தர் (ப.53–58) கலைக்கதிர், டிசம்பர், 1956):**

நாடு சுதந்திரம் அடைந்தபின், தமிழகத்திற் பல பகுதிகளிலும் தாய்மொழிக் கல்வியில் எழுந்த அவா தழைத்தோங்கலாயிற்று. அதில் ஓரளவு வெற்றியும் தலைகாட்டலாயது. பாரத நாடு முழுவதற்கும் இந்தி பொதுமொழியாகும். இந்தியில் ஆக்கும் கலைச் சொற்களையே தமிழிலும் பயன்படுத்தும்படி மத்திய அரசு விரும்பியது. ஆங்கிலத்தில் உள்ள கலைச் சொற்களையும் சற்று மாற்றிப் பயன்படுத்தலாம் என்ற கருத்தும் நிலவியது. இத்தகைய ஒன்றுக்கொன்று வேறுபட்ட கருத்துக்களால் விளைந்த சச்ரவுக்கட்சிடையே தமிழில் கலைச் சொல்லாக்க முயற்சி தடைப்பட்டும், ஊக்குவாரின்றியும் புறக்கணிப்புக்கு இடனாயிற்று.

**விடை காண்பதற்குரிய வினாக்கள்**

1. பொதுவாகத் தமிழ்மொழிக்கு முக்கியத்துவம் அளித்தல் இன்றியமையாததா?

2. சில துறைகளில் ஆங்கிலச் சொற்கட்கு ஏற்ற கலைச் சொற்களைத் தமிழில் ஆக்குங்கால், ஆங்கில மொழி யினின்றோ, இந்திமொழியினின்றோ, தமிழ்மொழியினின்றோ, எம்மொழியினின்று அவற்றை அமைத்தல் நன்று?

3. இக்காலத்தே உலக அரங்கிலே ஓயாது, நிகழும் விஞ்ஞான அறிவுப் போட்டியிலும் முன் செல்லுமாறு யாம் வல்லாராதல் இயலுமா?

## சிந்தனைக்குரிய விடைகள்

1. தமிழ்மொழியைத் தற்காலத்திற்குரிய கருத்துகள் பலவற்றையும் வெளியிடுவதற்கு ஏற்றவாறு அதனை அமைத்தலும் தமிழர்க்குரிய கடமையாகும். தமிழ் மொழியை வளம்படுத்தப் பிற மொழிகளின்றும் சிறந்த இலக்கிய நூல்களையும் கலைநூல்களையும் மொழிபெயர்த்தல் வேண்டும்; தமிழ் மொழியிலுள்ள சிறந்த நூல்களைப் பிறமொழிகளில் பெயர்த்து, அம்மொழியின் பெருமையை உலகம் உணரச் செய்தல் வேண்டும். இக்கடமைகளை நிறைவேற்ற அம்மொழிக்கு முதன்மை அளிக்கப்படல் வேண்டும்.

## கலைச் சொற்களை அமைக்கும் விதிமுறைகள்

ஆங்கில மொழிக்கேற்ற கலைச்சொற்களை ஏற்றவாறு தமிழ்ப் படுத்துதலே தமிழில் கலைச்சொல் அமைக்கும் முயற்சிக்கு உயிர்நிலையாகும். கலைச்சொற்களைத் தமிழில் அமைக்குங்கால், சிற்சில சிறந்த கொள்கைகளைப் பின்பற்றல் அனைவர்க்கும் பெருநலம் பயக்கத்தக்கதாகும்:

1. சொற்கள் சுருங்கிய எழுத்துக்களை உடையனவாய், பொருள் விளக்கத்தை எளிதேதரும் காரணப் பெயர்களாய் அமைதல் வேண்டும்.
2. மயங்க வைத்தல், என்னும் குற்றத்திற்கு ஆளாகாதனவாய் அமைதல் நன்று.
3. கற்போரது நிலையில் நின்று நோக்கி, அவர்கட்கு வருத்தத்தைக் குறைக்கும் ஏதுக்களைப் பயன்படுத்தி நன்கு செய்தல் வேண்டும்.
4. உலக வழக்கிலுள்ள சொற்களை மிகுதியாகவும் இலக்கிய வழக்கிலுள்ளவற்றை அருமையாகவும் கையாளவேண்டும்.
5. தமிழ் மரபுகளைப் பின்பற்ற வேண்டும்.

6. சொற்கள் இயன்ற அளவு ஆங்கில மொழிகளை ஒலியால் நினைவுறுத்துமாறு அமைதல், பின்னர் ஆங்கிலத்தில் விஞ்ஞானங் கற்க விரும்புவார்க்குப் பெருவசதியளிக்கும் (எ.டு. Sulphuric – கந்ததிக – Sulphurous – கந்தச, Ion – அயனி)

7. மொழிபெயர்க்க வேண்டாம்

   மூல அளவுகளைக் குறிக்கும் ஆங்கில மொழிகள், எல்லா நாடுகட்கும் பொதுவானவையாலும், சிலசமயம் பிரபல விஞ்ஞானிகளின் பெயர்களால் அமைவதாலும், அவற்றை மொழிபெயர்த்தல் நன்மை பயக்காது. (எ.டு. Metre – Volt: Amphere முதலியன)

8. சொற்கள் இடுகுறிப் பெயர்களாகயமையா; காரணப் பெயர்களாதல் இயன்ற வரை நன்று.

9. வழக்கிலுள்ள வடமொழிச் சொற்களையும் திசைச் சொற்களையும் வேண்டுங்கால் பயன்படுத்திக் கொள்ளல் கருத்துக்களை எளிதே தெளிவாக்கும்.

10. கடன்வாங்காமை நன்று : இன்றியமையாமை கருதியல்லாது, இந்திமொழியினின்றோ, ஆங்கில மொழியினின்றோ சொற்களைக் கடன்வாங்காமை நன்று. தமிழ்ச் சொற்களையே தெரிந்தெடுத்தல் மேன்மை தரும்.

11. கலைச் சொல்லாக்க முறையைத் தமிழ் மொழியிலே விளக்கும் சிறுநூல்களையும் இயற்றல் வேண்டும். இதனால், ஆர்வங்கொண்ட மாணவர்க்கு இவற்றை வாசித்தறிந்தபின் ஆங்கிலத்தின் மூலம் பின்பு அத்துறைகளில் அறிவைப்பெற இரண்டு மூன்று மாதங்கட்கு மேல் வேண்டியிராது. அவசியமாயின் கல்லூரிகளில் அதற்கென ஒரு பாடத்திட்டம் அமைத்தலும் நன்று.

இன்னும் சுமார் கால் நூற்றாண்டளவும் ஆங்கிலமொழியின் உதவி சிறுபான்மையோர்க்கு அவசியமெனக் கருதப்படுதல் இயல்பே. அதனை வெறுத்தலோ ஊக்காது கைவிடுதலோ வேண்டா. தமிழில் விஞ்ஞானம் முதலிய பாடங்களைப் போதிக்கும் முயற்சியைத் தீவிரமாக்கவும் பலவகையான ஏற்பாடுகளைத் தமிழ்நாட்டு அரசியல் அதிகாரிகள் இயற்ற முனைதல் வேண்டும். தமிழ் நாடெங்கும் தமிழ் முழங்குதல் வேண்டும். நுண்மாண் நுழைபுலமுடையோர் எழுதிய விஞ்ஞானம் முதலிய நூல்களையும் பெயர்த்தெழுத வேண்டும்.

ஆயினும் வடமொழியிலோ, ஆங்கிலத்திலோ, இந்தியிலோ வெறுப்புக்கும் எள்ளவும் இடந்தரலாகாது.

**9. பாரதியாரின் விதிமுறைகள்**

> **பௌதீக சாஸ்திரங்கள் கற்றுக்கொடுப்பதில் மிகவும் தெளிவான எளிய நடையில் பிள்ளைக்கு மிகவும் சுலபமாக விளங்கும்படி சொல்லிக் கொடுக்க வேண்டும். இயன்ற இடத்திலெல்லாம் பதார்த்தங்களுக்குத் தமிழ்ப் பெயர்களையே உபயோகப்படுத்த வேண்டும். தமிழ்ச் சொற்கள் அகப்படாவிட்டால் சமஸ்கிருதப் பதங்களை வழங்கலாம். இந்த இரண்டு பாஷைகளிலும் பெயர்கள் அகப்படாத இடத்தில் இங்கிலீஷ் பதங்களை உபயோகப் படுத்தலாம்.**
>
> **வேறுவேறு பாஷைகள் கற்பாய் – நீ**
> **வீட்டுவார்த்தை கற்கிலாய் போ போ**

என்கிறார் பாரதியார்.

**நாவலர் ச. சோமசுந்தர பாரதியாரின் சொல்லாக்க விதிமுறைகள்**

1. முன் அறியாத பொருள்களும் கருத்தும் எழுங்கால், பழைய நம்மொழிகளில் அததற்குரிய புதிய சொற்களைப் படைத்தல் வேண்டும்.

   இதுவரை இல்லாப் புதுக்கருத்தும் கலைகளும் உலகில் நிலவுகின்றன. பூத பௌதிகங்களும் தனிப்பொருள், கூட்டுப்பொருள்களும் நாள்தோறும் நாட்டில் எண்ணவும் பண்ணவும் ஏற்படுகின்றன. அவற்றிற்கெல்லாம் பழைய நம்மொழிகளின் உரிச்சொல் முதனிலை உள்ளன கொண்டு, புதிய சொற்களைப் புனைய இயலுமேல் அவ்வாறு அவற்றை அமைத்துக் கொள்ளலாம்.

2. அஃதியலாதெனில் வடசொல், திசைச்சொல், வாய்ப்புக் கொள்ளலாம்.

3. பிறமொழிச் சொற்கள் அயல்நாட்டுப் பிறமொழிச் சொற்களும் வேண்டுமிடங்களில் வாங்கிவழங்கலாம்.

4. பிறமொழிச் சொற்களை எடுத்தாளுகையில், தமிழ் எழுத்தியல், மொழிமரபு எதுவும் பிறழாமல் மாற்றி வழங்கலாம்.

மொழிஇயல் மரபொடு முழுதும் முரண, எழுத்தையும் சொல்லையும் புகுத்தல் வழுவாகும். அப்படி செய்வது தமிழை வதைத்து ஒரு புதுமொழி படைப்பதாகும்.

5. அன்றியும் புதிதாய் ஆக்கியும் இரவலாய் வாங்கியும், தமிழில் கூட்டும் சொற்களைப் பெயர், வினை, உரி, இடை வகைகளாக்கிப் பிரிக்கவும், திரிக்கவும் பெருக்கி விரிக்கவும் ஏற்ற முறையில் அமைத்தல் வேண்டும்.

6. ஆக்கச் சொற்பொருட் போக்கில், அதன் தொடர்புடைய புதிய கருத்து எழுமேயானால், அச் சொல்லடியாய் அப்புதுக் கருத்தைச் சுட்டுதற்கான சொல்லும், பிறக்கத் தக்கவாறு அதனைச் சிந்தித்து அமையச் செய்வது நல்லது.

7. **மொழியியல்:** எவ்வகையானும் தமிழ்மொழிஇயலின் தகவிகவாமல் புதிய சொற்களைப் புகுத்துதல் வேண்டும். அன்றேல் வளரும் தொழில்களும் உள்ளமும் உணர்வும் இனிக்கச் செய்யும் கலைகளும் அறிவும் வளம்பெற மாட்டா.

8. **மொழிபெயர்ப்பு:** ஆங்கிலம், பிரஞ்சு, செர்மனி முதலிய பிற மொழிகளில் திறம்பட எழுதிய அறிவு நூல் அனைத்தையும் மொழிபெயர்த்து உதவுதல் முதற் பெருவேலை. மொழிகள் இரண்டிலும் சொல்லின் திட்பமும் பொருளின் நுட்பமும் சேர்ந்து, சீர்தூக்கி ஒளிரும் நடை ஒட்பமுடைய அறிஞரைப் பிறமொழி நூல்களைப் பொருள் பெயராமல், மொழிபெயர்த்து உதவத் தூண்டுதல் வேண்டும்.

9. **புதிய நூல்கள்:** இன்னும் நூலறிவும் மதிநுட்பமும் சாலச் சிறந்த மேதைகள், துணிந்திங்கு ஆராய்ந்து தெரிந்த அரும்பொருள் பற்றி அவர்களைக் கொண்டு புதிய நூல்களை ஆக்குதல் வேண்டும்.

## 11. ஆட்சிமொழிக் காவலர் கீ. இராமலிங்கனாரின் கலைச் சொல்லாக்க நெறிமுறைகள்

1958இல் இவர் தமிழ் ஆட்சிமொழிச் செயற்பாட்டில் தனி அலுவலராக அமர்த்தப்பட்டவர். ஆட்சித் துறையில் தமிழ் வளம் கொழிக்கப்பாடுபட்டவர். இந்நூலாசிரியர் இவரின் ஆட்சித் தமிழின் ஆளுந்திறன் பற்றி ஒருநூல் படைத்துள்ளார். நெறிமுறைகள்:

1. தமிழ்ச் சொல்லாக இருக்க வேண்டும்.
2. பொருள் பொருத்தமுடையதாக அமைய வேண்டும்.

3. வடிவில் சிறியதாக இருத்தல் வேண்டும்.
4. ஓசை நயமுள்ளதாக இருத்தல் வேண்டு.
5. தமிழ் இலக்கண மரபுக்கு மாறாய் இருத்தல் கூடாது.

இவர் ஆட்சித்தமிழில் முன்னோடி. இவர் ஆட்சித்துறைத் தமிழ், தமிழில் எழுதுவோம் முதலிய நூல்களில் ஆட்சித் தமிழ் உருவாக்கம் பற்றிய கருத்துகளைக் கூறியுள்ளார்.

**12. டாக்டர் பொற்கோ, இவர் தமிழ் இலக்கண உலகில் புதிய பாதை காண்பவர். அவர் கூறும் கலைச்சொல்லாக்க நெறிமுறைகளைக் காண்போம்.**

1. சொல்லிணைச் சொல்லாக்கம் எ.டு. கரும்பலகை
2. விகுதிகள் எனும் நவீனப் பின்னொட்டுச் சொல்லாக்கம் உரிமம்.
3. ஒப்பொலிச் சொல்லாக்கம் எ.டு. பாங்கியர் - Banker.
4. வேர்ச் சொல்லாக்கம்
5. பிறவகைச் சொல்லாக்கம் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.
   i. பிறழ்ந்தவர் சொல்லாக்கம் எ.டு. புன்னகைத்தான்.
   ii. குறைத்து மொழிச் சொல்லாக்கம் எ–டு. புறநானூறு – புறம்.
   iii. மழலை மொழிச் சொல்லாக்கம் – இது ஓர் அரிய கலை. இது உளவியல்சார் புடையதுமாகும்.
   iv. ஒட்டு நிலைச் சொல்லாக்கம் எ.டு பகர்ந்தான்–புகன்றான்–பகன்றான்.
   v. முதலெழுத்துச் சொல்லாக்கம் எ.டு. ஐ.நா. அமைப்பு.

**13. பேரா. தி. கோவிந்தராசனின் சொல்லாக்க நெறிமுறைகள்**

இவர் சேலம் நகராண்மைக் கல்லூரியில் கணிதப் பேராசிரியராய்ப் பணிபுரிந்தவர் (ப.77–78. கலைக்கதிர், டிசம்பர், 1956).

கல்லூரிப் படிப்பு, தமிழ்மொழி வாயிலாகக் கற்பிக்க இன்றியமையாத சொற் செல்வமும் சொல்லாக்கமும் குறிப்பிட்ட காலவரையறைக் குள்ளாகத் தமிழில் மலைபோல் வளரவேண்டும்.

1. நுண்மையும் செழுமையும் பொருந்தியிருந்தும் வழக்கழிந்து போன பல தமிழ்ச் சொற்கள் புத்துயிர் பெற்று வாழ வேண்டும்.

2. எல்லா விஞ்ஞானத் துறைகளிலும் உள்ள சொற்களுக்கு நேரடியான தூயதமிழச் சொற்களைப் புலவர் பெருமக்களும் தமிழார்வங் கொண்ட பலதுறைப் பேராசிரியர்களும் ஒன்று கூடி ஒழுங்கு படுத்தித் தமிழ் நாட்டுக்குக் காணிக்கையாகத் தரவேண்டும். அதாவது கூட்டுத்தவமுயற்சி வேண்டும்.

3. **கலைச்சொல் அகராதி**: நன்றாகப் பரிசீலனை செய்து, அரசாங்கத்தாரும் பல்கலைக் கழகத் தலைவர்களும் நல்லது என்று ஒருங்கே ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒருகலைச் சொல் அகராதி (ஆங்கிலம்–தமிழ்) தயாரித்தல் வேண்டும்.

4. **உலகக் குறியீடுகள்**: விஞ்ஞானத்திலே உலக மக்கள் எல்லோரும் ஒப்புக் கொள்கின்ற ஆங்கிலம், பிரஞ்சு, கீரேக்க, இலத்தீன் குறியீடுகள் அப்படியே, தமிழில் ஆக்கப்படும் விஞ்ஞான நூல்களில் அமைய வேண்டும்.

5. **தூய தமிழ்ச் சொற்கள்** : தமிழிலே விஞ்ஞானத் துறை நூல்கள் ஆக்கும்போது தூயதமிழ்ச் சொற்களைப் பயன்படுத்த வேண்டும்.

**14. டாக்டர் அ. சிதம்பரநாதன்**

1. **கொள்ளுதலும் தள்ளுதலும்** : கலைச்சொற்களை அவரவர் விருப்பம்போல் உண்டாக்கி வெளியிட்டால், நாளடைவில் தக்கவற்றைக் கொண்டு மற்றவற்றைத் தள்ளலாம் எனச் சிலர் கூறுவர். அது ஆகாது. இம்முறை முடிவுசெய்ய வேண்டிய காலத்தைத் தள்ளிவைப்பதாக இருக்குமேயன்றி வேறன்று. இவ்வாறு அவரவர் விருப்பத்திற்கு விடுவதால் மாணவரும் ஆசிரியரும் தேர்வாளரும் தடுமாற்றம் அடைவர். ஆதலால், ஒரு நெறிப்படுவதே உரியதாகும்.

2. **கனியிருப்பக் காய்கவர்ந்தற்று** : கடன்வாங்க வேண்டாம். தாய்மொழியிலேயே கிடைக்கக்கூடிய சொற்கள் இருக்கும் பொழுதும், நம் நாட்டுப் பொருள்களைப் பற்றிப் பேசும்பொழுதும் பிறமொழிச் சொற்களைக் கடன் வாங்கக் கூடாது. உதாரணமாக இரும்பு, பொன், வெள்ளி, அணு ஆகியவை நாம் அறியாதன அல்ல. இப்பொருள்களைக் கூற லோஹ, சோண, சண்டி, ஜௌஹ என்ற இந்துஸ்தானி சொற்களையோ, iron, gold, silver, atom என்ற ஆங்கிலச் சொற்களையோ கடன்வாங்குதல் கூடாது.

3. **ஆங்கிலச் சொற்களை ஏற்கலாம்:** மொழி பெயர்க்க வேண்டாம். நாம் அறியாத பொருள்கள் பிறதேசங்களிற் கண்டு பிடிக்கப்பட்ட பொருள்கள் ஆகியவற்றின் பெயரை ஆங்கிலத்தில்

உள்ளபடியே ஏற்றுக்கொள்ளுதல் தக்கதே. சோடியம், பொட்டேஷியம் போன்ற இரசாயனப் பண்டங்கள், பெயரையோ கால்டைட் போன்ற தாதுப் பொருளின் பெயர்களையோ மொழிபெயர்க்கப் பெருமுயற்சிகள் வேண்டாம். அவற்றிற்கு உரியனவாகக் கடுந்தமிழிலோ சமக்கிருத வழியே மக்கட்குப் புரியாத தமிழிலோ மொழிபெயர்ப்பதைவிட ஆங்கிலச் சொற்களை அப்படியே, வைத்துக் கொண்டால், உயர்தரக் கல்விகற்று மேலை நாடுகளில ஆராய்ச்சியை மாணவாகள் மேற்கொள்ளலாம்.

**4. உலகப் பொதுச் சொற்களை ஏற்க:** கிராம், வோல்ட்டு போன்ற அளக்கும் அலகுகளும் (Units) அப்படியே இருக்கலாம். இச்சொற்கள் ஆங்கிலச் சொற்கள் அல்ல. உலகப் பொதுச் சொற்கள் ஆம். குறியீடுகள் பிறவற்றிற்காக நிற்கும் அறிகுறிகளேயன்றி வேறுமொழி ஆகிவிடமாட்டா.

**5. மொழிபெயர்ப்பும் தேவை:** ஆனால் பொருள்களின் தன்மைகள், குணங்கள் ஆகியவற்றைத் தெரிவிக்குஞ் சொற்களும் செய்முறைகளைத் தெரிவிக்குஞ் சொற்களும் தமிழிலேயே அமைதல் வேண்டும். உதாரணமாக – matter பொருள் என்றும் Force விசை என்றும், Energy ஆற்றல் எனவும் மொழிபெயர்த்திடப்பட வேண்டும். அவ்வாறே combustion, distillation, radiation, conduction ஆகிய முறைகள் எளிதில், காய்ச்சி வடித்தல், கதிர்விடல், கடத்துதல் என்றவாறு மொழிபெயர்க்கப் படவேண்டும். கணிதக் குறியீட்டு முறையாகிய Sine. dx. Ax முதலியவற்றை மொழிபெயர்க்காது, கணித வகைப் படங்களின் பெயராகிய Line, Curve, Triangle, quard angle, polygon முதலியவற்றைக் கோடு, வளைவு, முக்கோணம், நாற் கோணம், பல்கோணம் என மொழிபெயர்க்க வேண்டும்.

**6. வழக்கிலுள்ள சொற்களை ஏற்கலாம்:** எனவே, நம் தாய்மொழியில் முன்னரே வழக்கில் உள்ளனவாய் இருப்பனவும் ஐயந் திரிபின்றிப் பொதுவாக எல்லோருக்கும் விளங்கக் கூடியனவாய் இருப்பனவும் ஆகிய சொற்களை அப்படியே வைத்துக் கொள்ளல் வேண்டும்.

**7. மொழிபெயர்ப்புகளை மேற்கொள்ளச் செய்வது அரசின்கடன்:** வழக்கிலுள்ள சொற்களை ஏற்று நல்ல புத்தகங்களை ஆக்க அறிஞர்கள் முன் வரவேண்டும். ஒவ்வொரு பொருளைப் பற்றியும் உள்ள முக்கியமான புத்தகங்களுள் தேர்ந்த நல்ல புத்தகத்தை மொழிபெயர்க்குமாறும், பொது மக்களுக்கு விளங்கும் மொழியில் எழுதுமாறும் தூண்டுவது அரசாங்கத்தின் கடன்.

## 15. டாக்டர் வா.செ. குழந்தைசாமியின் சொல்லாக்க விதிமுறைகள்

இவர் அறிவியல் தமிழ் என்ற நூலில் தமது சொல்லாக்கத் திற்கான கொள்கைகளைப் பின்வருமாறு விளக்குகிறார்.

1. ஒருசொல்லின் வேர்ச் சொல்லை மனத்திற் கொண்டு புதிய சொற்களை உருவாக்குதல் வேண்டும்.
2. புதுச்சொற்களைப் படைக்கும்போது, அவை தனிச் சொற்களாக இருக்குமாறு கவனம் எடுக்க வேண்டும்.
3. ஒரு சொல்லிற்கு வேர்ச்சொல்லைக் கண்டுபிடித்தால், அதன் அடிப்படையில் இன்னும் சில சொற்களை உருவாக்க வகைகாணுதல் வேண்டும்.
4. சொல்லின் நுட்பமான, துல்லியமான வேறுபாடுகள் சொல்லாக்கத்தில் அமைதல் வேண்டும்.
5. தொழில்நுட்பக் கலைஞர்களும் அறிவியலாளர்களும் ஒருபுறமிருக்க மொழித்துறைக்காரர்கள் மட்டும் முன்னோடியாகச் சொல்லாக்கத்தில் ஈடுபடுவது தவிர்க்கப் படுதல் வேண்டும் என்ற கொள்கையை வலியுறுத்துகிறார்.

## 16. டாக்டர் இராதா செல்லப்பனின் சொல்லாக்க விதிமுறைகள் பின்வருமாறு:

1. சொற்கள் எளிதான முறையில் ஆக்கப்படுதல் வேண்டும்.
2. கலைச்சொற்களைத் தெரிவு செய்வதில், நிகண்டுகளையும் நாட்டு நடப்பினையும் அனுசரித்து மேற்கொள்ள வேண்டும்.
3. நீளமான சொற்களையும் சொற்றொடர்களையும் கூடிய விரைவில் தள்ளுதல் வேண்டும்.
4. பிறமொழிச் சொற்களுக்குத் தமிழில் நிகரிகளைச் சரியாகத் தேர்ந்தெடுத்துப் பயன்படுத்துதல் வேண்டும்.
5. சொற்கள் வினைச் சொற்கள், பெயர்ச் சொற்களின் வடிவில் விரிவாக்கம் பெரும்வகையில் ஏற்றதாக இருக்க வேண்டும்.
6. ஆங்கிலத்தில் நுட்பமான வேறுபாடுடைய சொற்களுக்கு நிகராகத் தமிழ் நிகரிகளைத் தெரிந்தெடுத்து ஆள வேண்டும்.
7. பகுதி விகுதி சேர்த்துக் கூட்டுச் சொற்களாக எளிதாகப் புதிய சொற்களை ஆக்குதல் கூடும்.

## 17. பேரா. டாக்டர் ம.ரா.போ. குருசாமியின் சொல்லாக்கச் செயல்முறைகள்

1. மொழிபெயர்ப்பில் மூலவாசகத்தை ஒன்றுக்குப் பல முறை மனந்தோய்ந்து படிக்க வேண்டும்.
2. அவ்வாறு படிக்கும் போது கடினமானதென்று தோன்றும் சொற்களைக் குறித்துக் கொள்ள வேண்டும்.
3. உலகளாவிய கலைச்சொற்களை அப்படியே ஏற்றுக் கொள்ள வேண்டும்.
4. மொழிபெயர்ப்பின் போது, தமிழ் மொழியில் மக்கள் வழக்கில் நிலைத்து விட்ட சொல்லுக்கும் சொற்றொடருக்கும் எதிரான சொல்லையோ சொற்றொடரையோ, பயன்படுத்துவது மொழிமரபல்ல.
5. புலவர் நடைக்கும் பாமரத் தமிழ் நடைக்கும் இடைப்பட்டதொரு தரமான தமிழில் கலைச் சொற்களைத் தெரிவு செய்தல் வேண்டும்.
6. அறிவியல், தொழில்நுட்பம்–சட்டம் போன்ற துறைச் சொற்களையும் மரபு அறிந்து பயன்படுத்த வேண்டும்.
7. தெளிவைக் கருதி, பிறமொழிச் சொற்களை, கலைச் சொல்லாக்கத்தில் ஏற்கலாம்.
8. புதிய மரபுகளைப் படைக்கும் போதுதான் நாம் காலத்தோடு போட்டியிட்டு வளர்ச்சி பெற்றவர் ஆவோம். எ–டு பின்னொட்டு முன்னொட்டுச் சேர்த்துச் சொல்லாக்குதல்.
9. அறிவியல்–தகவல் தொடர்புச் சாதன நூல்களில் ஆங்கிலம் முதலிய பிறமொழிகளின் சொற்களை ஏற்கலாம்.

ஆயின் மொழிவளர்ச்சிக்குத் தடையாக இருக்கும் சொற்களும் நடையும் தாமே காலப்போக்கில் வலுவிழந்து விடும் என்கிறார் பேராசிரியர். இவர் ‘கலைக்கதிர்’ திங்கள் இதழின் தொடக்க காலத்தில் சில ஆண்டுகள் ஆசிரியர் பொறுப்பேற்றிருந்தார். எ.டு. டிசம்பர் 1956இல் தமிழ்வழிக்கல்வி, கலைச்சொல்லாக்கம் தொடர்பாக இந்நூலில் இடம்பெற்ற பலரின் கருத்துகளைக் கேட்டு வாங்கிக் கலைக்கதிரில் வெளியிட்ட பெருமைக்குரியவர். அக் கருத்துகள் பொன்னேபோல் போற்றத்தக்கவை என்றால் மிகையாகாது.

### முடிவுரை

சொல்லாக்கம், புதுச்சொல்லாக்கம், ஒலிபெயர்ப்பு ஆக்கம், மொழி ஆக்கம் என மூன்று வகைகளின் கீழ் நடைபெறுவதாகும்.

## துணைநூல்கள்

1. அறிவியல்தமிழ், முனைவர் வா.செ. குழந்தைசாமி, 1995.

2. இக்காலத்தமிழ், முத்துச்சண்முகன், முத்துப் பதிப்பகம், மதுரை – 19, 1997.

3. மொழிபெயர்ப்பு மரபுகள், பயனியர் பதிப்பகம், சென்னை–5, 1990.

4. ஆட்சிமொழியும் மொழிபெயர்ப்பும், பாரிநிலையம், சென்னை–108, 1990.

5. மொழிபெயர்ப்புக்கொள்கைகள், பாரிநிலையம், சென்னை–108, 2002.

6. மொழிபெயர்ப்பு அணுகுமுறைகள். அமுத நிலையம், சென்னை –14. 2004.

7. சட்டமொழிபெயர்ப்புக் கொள்கைகளும் செயல்முறைகளும் (முனைவர் பட்ட ஆய்வேடு), புத்தகப் பூங்கா, சென்னை–14.

8. மொழிபெயர்ப்புச் சிக்கல்களும் தீர்வுகளும், இராஜகுமாரி பதிப்பகம், சென்னை – 14, 1999.

9. தினமணியில் செய்தி மொழிபெயர்ப்பு, வே. சசிகலா, விஜயா பதிப்பகம், கோவை, 1985.

10. கலைச்சொல்லாக்கம், முனைவர் இராதாசெல்லப்பன், 2006

11. காணிக்கைக் கட்டுரைகள், முனைவர் ம.ரா.போ. குருசாமி, பழனியப்பா பிரதர்ஸ், சென்னை – 14, 2001.

12. சட்டத்தமிழ், மா. சண்முகசுப்பிரமணியன், சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழக வெளியீடு, 1967.

### அகராதிகள்

13. ஆட்சிச் சொல்லகராதி, அரசு வெளியீடு, 1983.

14. தமிழ்நாடு அரசு வெளியீடு, 1979.

15. சட்டச் சொல் அகராதி, 1968.

## ஆங்கில நூல்கள்


16. Bell, Roger, T., Translation and Translating Theory and Practice - Applied Linguistics and Language Study, London, Longman, 1991.

17. Catford J.C., Linguistic Theory of Translation, Oxford University Press, London, 1965.

18. Eguene A. Nida, Towards the Science of Translating, London, 1964.

19. Jacobson, Roman, On Linguistics Aspects of Translation, Cambridge Harvard University Press, 1969.

20. V.V.S. Aiyar, The Kural - English Translation, Pavai Publications, 2007.

21. William Radice, Poetry and Community, Chronicle Books, New Delhi, 2003.

# உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
# சென்னை - 600 113
## அண்மை வெளியீடுகள்

| | ரூ.பை. |
|---|---|
| திருப்புகழ் ஒளிநெறி பகுதி - I | 90.00 |
| திருப்புகழ் ஒளிநெறி பகுதி - II | 90.00 |
| திருப்புகழ் ஒளிநெறி பகுதி - III | 80.00 |
| தொல்காப்பியம்-சொல்லதிகார மூலமும் சேனாவரையருரையும் | 200.00 |
| தொல்காப்பியம்-பொருளதிகார மூலமும் நச்சினார்க்கினியர் உரையும் | 325.00 |
| தொல்காப்பியம் - பொருளதிகார மூலமும் பேராசிரியர் உரையும் | 300.00 |
| Economic Heritage of the Tamils | 115.00 |
| மலேசியத் தமிழரும் தமிழும் | 100.00 |
| தமிழ்ப் புனைகதைகளில் உளவியல் | 35.00 |
| தமிழியல் ஆய்வுச் சிந்தனைகள் - தொல்லியல், வரலாறு, சமூகவியல் | 100.00 |
| கதைப் பாடல்களில் கட்டுப்பாட்டு மீறல்கள் | 95.00 |
| Bibliography on Translations | 175.00 |
| திராவிட மொழி இலக்கியங்கள் | 200.00 |
| தமிழ்ச்சொற் பிறப்பாராய்ச்சி | 45.00 |
| மொழி பெயர்ப்பியல் | 45.00 |
| சி.வை. தாமோதரம்பிள்ளை | 40.00 |
| சொல்லிலக்கணக் கோட்பாடு தொல்காப்பியம் - முதல் பகுதி | 70.00 |
| இசுலாமியச் சிற்றிலக்கியங்கள் | 40.00 |
| பாவாணர் கடவுள் நம்பிக்கையும் சமயச் சால்பும் | 30.00 |
| மகளிர் முன்னேற்றத்தில் "அவள் விகடன்" இதழின் பங்களிப்பு | 35.00 |
| தமிழர் நாட்டு விளையாட்டுகள் | 95.00 |
| தமிழர் பழக்க வழக்கங்களும் நம்பிக்கைகளும் | 120.00 |
| மீனவர் சமுதாய நாட்டுப்புறப் பாடல்கள் | 35.00 |
| A Course in Modern Standard Tamil | 65.00 |
| இசை மருத்துவம் | 45.00 |
| கம்பன் களஞ்சியம் | 550.00 |
| குலோத்துங்கன் பார்வையில் சமுதாயம் | 70.00 |
| நவீன நாடகங்களும் ஊடகங்களும் | 50.00 |
| மனிதப் புனிதர் கக்கன் | 110.00 |
| மூவர் தமிழ் – மூன்று பார்வைகள் | 50.00 |
| காமன்வெல்த் நாடுகளின் கவிதைகள் | 100.00 |
| அறிஞர்களின் பார்வையில் பேரறிஞர் அண்ணா | 145.00 |

---

**668 மொழிபெயர்ப்பு ஒரு கவின் கலை** **75.00**